
ராஜாம்பாள
(துப்பறியும் நாவல்)
ஜே. ஆர். ரங்கராஜு

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# பதிப்புரை

ஆங்கில இலக்கியத்தில் துப்பறியும் கதைகளுக்கும் நாவலுக்கும் தனி இடம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. புகழ் பெற்ற 'ஸ்டிராண்டு' என்னும் ஆங்கிலப் பத்திரிகையின் மூலம் அற்புதமான துப்பறியும் கதைகளை எழுதியவர் கானன் டாயில். அவருடைய துப்பறியும் நிபுணன் ஷெர்லாக் ஹோம்ஸைப்போல மறக்க முடியாத பாத்திரத்தை யாருமே சிருஷ்டித்ததில்லை. மாணவர்கள் முதல் வயதானவர்கள் வரையில் எல்லோருக்கும் உற்சாகத்தை ஊட்டும் ஷெர்லாக் ஹோம்ஸைப் போலவே தமிழ்நாட்டிலும் துப்பறியும் கோவிந்தன் என்னும் பெயர் அமைந்துவிட்டது.

தமிழ் நாவல்கள் படித்தவர்களின் நெஞ்சை விட்டு நீங்காத இடம் பெற்றுவிட்ட கோவிந்தனைப் படைத்த பிரம்மா ஸ்ரீ. ஜே. ஆர். ரங்கராஜு. அவர் எழுதிய நாவல்கள் பல பதிப்புக்கள் அச்சாகி மக்களுக்கு இன்பமூட்டியிருக்கின்றன. சந்திரகாந்தா, இராஜாம்பாள், மோகனசுந்தரம் போன்ற நாவல்கள் சினிமாவின் மூலமாகவும் புகழைப் பெற்றிருக்கின்றன. ஸ்ரீ ஜகதாபி ரகுபதி ரங்கராஜு—ஆம், இந்த நீண்ட பெயரையே ஜே. ஆர். ரங்கராஜு என்று அழைக்கிறோம்—எழுதிய இந்த நாவல்கள் பல வருடங்கள் மறு பதிப்பு ஆகாமல் இருந்தன. இப்பொழுது அவற்றை நாங்கள் ஒவ்வொன்றாக வெளியிட எண்ணியிருக்கிறோம். இது முதல் புத்தகம்.

—பதிப்பாளர்

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்திரீ புருஷ சம்பாஷணை | ... 1 |
| 2. | சாஸ்திரியின் உயில் | ... 19 |
| 3. | ஜோஸ்யத் தரகர்கள் | ... 23 |
| 4. | போலீஸ் அநியாயங்கள் | ... 38 |
| 5. | இராஜாம்பாளும் சாமிநாத சாஸ்திரியும் | ... 56 |
| 6. | கல்யாண ஏற்பாடுகள் | ... 62 |
| 7. | ஒரு கோரமான கொலை | ... 71 |
| 8. | கோவிந்தனும் கோபாலனும் | ... 82 |
| 9. | விசாரணை | ... 100 |
| 10. | குடுகுடுப்பைக்காரன் | ... 119 |
| 11. | மோகினி | ... 127 |
| 12. | தாய்க்கிழவி | ... 140 |
| 13. | செஷன்ஸ் கோர்ட்டு | ... 148 |
| 14. | கோவிந்தன் விவரித்துச் சொல்லல் | ... 183 |

# இராஜாம்பாள்

## 1. ஸ்திரீ புருஷ சம்பாஷணை

"என்ன! அதற்குள்ளாகத் தூங்கிவிட்டீர்கள், இன்னும் எட்டு மணி அடிக்கவில்லையே. ஆனாலும் தூக்கம் உங்களுக்கென்றுதான் அஸ்தமிக்குமுன் வந்துவிடுகிறதோ?'' என்று தன் பர்த்தாவாகிய சாமிநாத சாஸ்திரியை எழுப்பி, கனகவல்லி கேட்டாள்.

**சாமிநாத சாஸ்திரி:** நான் தூங்கின பிற்பாடு என்னைத் தொந்தரவு செய்யாதே என்று உனக்கு நயத்திலும் பயத்திலும் பல முறை சொல்லியும் கவனியாமல் ராட்சசியைப்போல் பன்னிரண்டு மணிக்கு மேல் என்னை எழுப்பிப் பொழுது விடிகிறவரையில் ஏதாவது ஊர் வம்பு பேசுவதே உனக்கு வழக்கமாயிருக்கிறது. இந்தச் சனியன் எப்போது தொலையுமோ! அன்றல்லவோ நான் சுகப்படப்போகிறேன்?

**கனகவல்லி:** ஆமாம், என்னைப் பார்த்தால் உங்களுக்கு ராட்சசியாக மாத்திரமா தோன்றும்? பேய் பிசாசுகளைப்போல் கூடத் தோன்றும். நான் தொலைந்த பிற்பாடுதான் உங்களுக்கு நற்காலம் பிறக்கப்போகிறதென்று இதோடு ஆயிரந் தரத்திற்குமேல் சொல்லியிருக்கிறீர்கள். நான் இருந்தால் என்ன? இறந்தால் என்ன? எப்படியாவது உங்கள் கண்முன்பாகச் செத்துப்போக வேண்டுமென்று எத்தனையோ தரம் உத்தேசித்தேன். இந்தப் பாழும் பிள்ளையின் பாசமானது அப்படிச் செய்ய விடவில்லை. மேலும், அதை எப்படியாவது தொலைத்துக்கொண்டு மாண்டுபோனால் உங்களுக்குப் பழி உண்டாகுமே என்ற வருத்தந்தான் என்னை இப்படியும் அப்படியும் போகவிடவில்லை. என்மேல் எள்ளளவாவது பிரியமிருந்தால் நீங்கள் இப்படி எல்லாம் பேசுவீர்களா? உங்களுடைய பிரியமெல்லாம் வேறு இடத்தில் இருக்கிறது. அவளை நினைத்துக்கொண்டு தூங்கும்போது

எழுப்பிவிட்டால் இப்படிக் கோபம் வருகிறது. உங்களை நொந்துகொள்வதில் என்ன பலன்? நான் பாவி; ஜன்மம் எடுத்த நேரம் அப்படிப்பட்டது.

**சாமிநாத சாஸ்திரி:** 'நான் தூங்கும்போது எழுப்பாதே' என்று பல முறை சொல்லியிருந்தும் நீ எழுப்பினதற்கு நான் சிறிது கோபித்துக்கொண்டால் ஊரிலில்லாத மூட்டையெல்லாம் அளக்கிறாய்! என்னிடம் பேச வேண்டிய காரியமிருந்தால் நீ பகலெல்லாம் பேசக் கூடாதா? போகட்டும்; இரவு ஒன்பது மணிக்குள்ளாகச் சொல்லக்கூடாதா? தூங்கும் வரையில் காத்திருந்து அதையே ஒரு விரதமாய் வைத்துக்கொண்டு ஏண்டி இப்படி எழுப்பித் தொலைக்கிறாய்?

**கனகவல்லி:** உங்களுக்குத்தான் வெட்கமென்பது கொஞ்சமாவது கிடையாது. வீட்டில் உள்ளவர்களெல்லாம் விழித்துக்கொண் டிருக்கும்போது உங்களிடம் பேச எனக்கு வெட்கமாயிருக்கிறது. மேலும் பார்ப்பவர்கள் தாம் என்ன சொல்வார்கள்?

**சாமிநாத சாஸ்திரி:** ஆறு பிள்ளைகள் பெற்ற பிற்பாடு கூட அகமுடையானிடம் பேச என்னடி வெட்கம்? உலகத்திலே அகமுடையானும் பெண்சாதியும் பேசுவதில்லையோ? நாம்தானா அதிசயமாய்ப் பேசுகிறோம்?

**கனகவல்லி:** தற்காலத்துப் பெண்களைப்போல் அகமுடையான் துடைக்குமேல் துடைபோட்டுப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, யார் வந்தாலும் இல்லை, யார் போனாலும் இல்லை, அகமுடையானோடு சிரித்து விளையாடிக்கொண் டிருக்கச் சொல்லுகிறீர்கள். அதற்கெல்லாம் நான் ஆளல்ல. அப்பேர்ப்பட்ட சிறுக்கி ஒருத்தியைப் பார்த்து உங்களுக்குக் கல்யாணம் செய்திருக்க வேண்டும். நீங்கள் இப்பேர்ப்பட்டவர்களென்று தெரிந்தால் என் தகப்பனார் என்னை உங்களுக்குக் கல்யாணஞ் செய்தே கொடுத்திருக்க மாட்டாரே.

**சாமிநாத சாஸ்திரி:** ஏண்டி! என் வாயைக் கிளப்பினால் நான் கெட்டவனாயிருப்பேன். உன் தகப்பனார் உன்னை வைத்துக்கொண்டு தேடாத இடமெல்லாந் தேடி, ஓடாத இடமெல்லாம் ஓடி, வேண்டாத இடமெல்லாம் வேண்டி, கடைசியாக எனக்குக் கல்யாணம் செய்து

கொடுத்ததை மறந்துவிட்டாயோ? நாராயண சாஸ்திரி சொத்துக்காரன்தான், ஆனால் குடியனென்று நிறுத்தி விட்டார். நாராயண சாஸ்திரியை விட நம் பந்துக்க ளில் சொத்துக்காரன் எவன் இருக்கிறான்? நான் நாராயண சாஸ்திரியைவிடச் சொத்திலும் புத்தியிலும் வாசிப் பிலும் உயர்ந்தவனென்றுதானே உன் தகப்பனார் கெஞ் சாதவர்களை யெல்லாங் கெஞ்சி, இல்லாத பொல்லாத பொய் புளுகுகளைச் சொல்லி உன்னை என் தலையில் கொண்டுவந்து கட்டினார்?

**கனகவல்லி:** ஆமாம்; நீங்கள் நாராயண சாஸ்தி ரியை விட அதிகப் புத்திசாலிதான். உங்களுடைய புத்தி சாலித்தனம் எதில் ஓடுகிறதென்று சொல்லட்டுமா? நன்றாய்ச் சம்பாத்தியம் செய்கிறீர்கள். வடை பாய சத்துடன் சாப்பிடுகிறீர்கள். நல்ல துணிகளைக் கட்டு கிறீர்கள். ஏழைகளுக்குச் சாப்பாடு போடுகிறீர்கள். அவர்களுக்குப் பொருளுதவி செய்கிறீர்கள். இவ்வளவு தான் உங்களுக்குத் தெரியும். அதற்குமேல் உங்களுக் குத் தெரியாது. அந்தக் குடிகார நாராயண சாஸ்திரி அவன் பெண்சாதியை வைத்திருக்கிறதில் ஆயிரத்தில் ஒரு பங்கு என்னை நீங்கள் வைத்திருக்கிறீர்களா? அவன் பெண்சாதிக்கு, ரவை ஜடைபில்லை, தலைநாகம், கெம்பு அட்டிகை, வைரம் இழைத்த காசுமாலை, வைர ஒட்டியா ணம்முதல், வைரத்தில் ஒரு ஜதை, பச்சையில் ஒரு செட்டு, கெம்பில் ஒரு ஜதை ஆக மூன்று செட்டுகள் செய்து கொடுத்திருக்கிறான். நீங்கள் எனக்குக் கட்டின தாலியை விட வேறே காசத்தனை நகை செய்து போட்டீர்களா? எங்கே, கை மடக்குங்கள், பார்ப்போம்!

**சாமிநாத சாஸ்திரி:** நாராயண சாஸ்திரி புத்திசாலி என்று நீயும் உன்னைப்போலொத்த சர்வ மூடாத்மாக்க ளும் மெச்சிக்கொள்வீர்களே யல்லாது புத்திசாலியா யிருப்பவர்கள் வருத்தத்தைத்தான் அடைவார்கள். அவனுக்கு ஐம்பது லட்சம் ரூபாய் பிதுரார்ஜித சொத்துக் கிடைத்தது. அதில் தற்காலத்தில் என்ன மீதி வைத்தி ருக்கிறான்? பெண்சாதிக்குப் போட்டிருக்கும் நகைகளும் குடியிருக்கும் வீடுந்தானே மிச்சம்? நகைகளும் வீடும் சேர்ந்து சுமார் இரண்டு லட்சம் ரூபாய் பெறலாம். மீதி

நாற்பத்தெட்டு லட்ச ரூபாய் போன போக்கென்ன? நான்கு வருஷ காலத்தில் நாற்பத்தெட்டு லட்ச ரூபாய் செலவுசெய்த பிரபுவுக்கு இனி இந்த இரண்டு லட்ச ரூபாய் எவ்வளவு நாளைக்கு நிற்கப்போகிறதோ தெரிய வில்லை. இனி அவனுக்குக் குடிப்பதற்கும் வீண் ஜம்பங் கள் செய்வதற்கும் செலவுக்குப் பணந் தேவை. வேறு வழி இல்லாததால் நகைகளை விற்றுத்தானே செலவு செய்யவேண்டும்? மேலும் லட்சம், இரண்டு லட்ச மென்று நகைகளை வாங்கி வைத்திருப்பதால் என்ன பலன்? வட்டி முடக்கந்தானே? இரண்டு லட்ச ரூபாய்க் கும் நிலம் வாங்கிவிட்டால் திருடனாலும் அடிக்க முடி யாது. மாதம் குறைந்தது ஐந்நூறு ரூபாய் வருமானம் வரும். ஜீவிக்கச் சக்தியில்லாத ஏழை ஜனங்களுக்கு அதைப் பங்கிட்டுக் கொடுத்தால் அதனால் எவ்வளவு அநுகூல மென்று பார்த்தாயா? ஒரு குடும்பத்திற்குக் கால்வயிற் றுக் கஞ்சிக்காகிலும் பத்து ரூபாய் வீதங் கொடுத்தால் ஐம்பது குடும்பங்கள் பிழைக்குமே! அதை விட்டு நீ இரண்டு லட்ச ரூபாய் பெறுமான நகைகள் போட்டுக் கொண்டிருப்பதால் வரும் பலன் என்ன? எந்தச் சமயத் தில் திருடர்கள் நமது வீட்டிற் புகுந்து நகைகளைத் திரு டிக்கொண்டு போய்விடுவார்களோ என்னும் பயத்தால் இராத்திரி முழுவதும் மொட்டுமொட்டென்று விழித்துக் கொண்டு காவல் இருக்கவேண்டியதுதான். பக்கத்தில் நாய் குலைத்துவிட்டால், திருடர்கள் வந்திருப்பார்கள் என்ற பயத்தால் வீட்டில் உள்ளவர்களை எல்லாம் எழுப்ப வேண்டும். அப்படி எழுப்புவதால் உன் தூக்கம் மாத்தி ரங் கெடுவதன்றி எல்லாருடைய தூக்கத்தையும் கெடுக் கத்தான் வேண்டிவரும். மேலும் ஓர் ஊர் விட்டு இன்னோர் ஊருக்குப் பிரயாணம் போனால் நகைகள் யார் போட்டுக்கொண் டிருக்கிறார்களோ அவர்களைத்தான் திருடன் பலமாய்ப் புடைப்பான். சில சமயங்களில் திருட வந்தவன் மானபங்கமும் செய்து போவதும் உண்டு.

**கனகவல்லி:** நகை போட்டுக்கொண் டிருந்தால் தான் திருட வருவான்போல் இருக்கிறது. இல்லாவிட்டால் திருட வரமாட்டானோ?

**சாமிநாத சாஸ்திரி:** அடி முட்டாளே! கேள், திருடர்கள் துப்பில்லாமல் சாதாரணமாய்த் திருட வரமாட்டார்கள். எவ்வளவு நகைகள் இருக்குமென்றும், ரொக்கம் எவ்வளவு அகப்படுமென்றும், வெள்ளிப் பாத்திரங்கள் எவ்வளவு இருக்குமென்றும் கணக்கு வைத்துக்கொண்டு தான் திருட வருவார்கள். நகை இல்லாத வீட்டில் திருடர் புகுவதே அதிக அபூர்வம். எவனோ கஞ்சிக்கில்லாதவன் தான் அப்படிச் செய்வான். அப்போது யாராவது ஒரு குழந்தை எழுந்து யார் என்று அதட்டினாலும் அப்பேர்ப் பட்ட திருடன் இருந்த இடம் தெரியாமல் ஓடிவிடுவான். ஆனால் நகைகள் ரூபாய்கள் முதலானவை அதிகமாயுள்ள இடங்களில் திருட வருகிறவன் அப்படிப் போகமாட்டான். சரியாய் நாற்பது அல்லது ஐம்பது ஆட்களைத் திரட்டிக் கொண்டு வந்து கதவைத் தட்டுவான். திறந்தால் ஆயிற்று; இல்லாவிட்டால் எப்படியாவது கதவைத் திறக்கும்படி செய்து, சொந்த வீட்டைப்போல் நுழைந்து அகப்பட்டதை எல்லாஞ் சுற்றிக்கொண்டு ரொக்கம் முதலானவை இருக்கும் இடத்தைச் சொல்லச்சொல்லி அடிப்பான். சொல்லாவிட்டால் பந்தத்தைக் கொளுத்திக்கொண்டு சுடுவான்.

**கனகவல்லி:** சரி, அது எக்கேடாவது கெட்டுப்போகிறது; நீங்கள்தான் நகைகள் செய்து போடுவதில்லை என்று கங்கணங் கட்டிக்கொண் டிருக்கிறீர்கள். மாதம் மாதம் ஏன் ஏழைகளுக்கெல்லாம் ஐந்து பத்துக் கொடுக்கிறீர்கள்? அதனால் வரும் நன்மை என்ன?

**சாமிநாத சாஸ்திரி:** நாம் ஐந்து பத்துக் கொடுப்பது நமக்கொரு பொருட்டல்ல. ஆனால் நம்மிடம் அதை வாங்கிக்கொண்டு போகிறவர்களுக்கோ அது பூராச் சாப்பாட்டைக் கொடுக்கிறது.

''வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பின்
தூங்குங் களிறோ துயருறா—ஆங்கதுகொண்
டூரும் எறும்பிங் கொருகோடி உய்யுமால்
ஆருங் கிளையோ டயின்று.''

**கனகவல்லி:** ஏதோ தடதடவென்று பாசுரஞ் சொல்லிவிட்டீர்கள். அது என்னவென்றே எனக்குத் தெரியவில்லை.

**சாமிநாத சாஸ்திரி:** நீ படித்திருந்தாலல்லவோ உனக்குத் தெரியப்போகிறது! முட்டாளுக்கு என்ன தெரியும்? ஆகையால் சொல்லுகிறேன் கேள். கோவில்களில் அல்லது அரண்மனைகளில் யானைகளை வைத்துக்கொண்டிருக்கிறார்களே, அவர்கள் அந்த யானைகளுக்கு நித்தியம் கால் கோணி அல்லது அரைக் கோணி அரிசி வைப்பது வழக்கம். அந்த யானையானது சாப்பிடும்போது ஒரு கவளத்தைச் சிந்திவிட்டால் அதனால் அதற்குக் கெடுதி உண்டோ? அல்லது விசனம் அடையுமோ? அடையாது. ஆனால் சிந்தின அரிசியோ லட்சக்கணக்கான எறும்புகளுக்கு முழு வயிற்றுக்கு ஆகாரமாகிறது. யானைக்கு அற்பமானது எறும்புகளுக்குப் பூர்த்தியான ஆகாரம். அதைப்போல் உனக்கு அற்பமான ஐந்து அல்லது பத்து ரூபாய் ஏழைகளுக்குப் பிரமாதம். ஆகையால் ஒவ்வொருவரும் அவர்கள் சக்திக்குத் தகுந்த அளவு ஜீவிக்கச் சக்தியில்லாத தம் பந்துக்களுக்கோ அல்லது கூன், குருடு, நொண்டி முதலானவர்களுக்கோ தர்மம் செய்யவேண்டும். அவரவர்கள் வயிறு வளர்ப்பது பெரிதல்ல. கேவலம் நாயும் எப்படியாவது தன் வயிற்றை நிரப்பிக்கொள்ளுகிறது. தங்கள் சக்திக்கு ஏற்றபடி யார் தர்மம் செய்யவில்லையோ அவர் நாயினும் கேடுகெட்ட நாய்க்குச் சமானமே தவிர மனுஷ ஜன்மத்தில் சேர்க்கையல்ல.

**கனகவல்லி:** யானை சிந்தும் அரிசி எறும்புகளுக்குத் தீனியாவது வாஸ்தவமே; ஆனால் யானையானது எவ்வளவு பருமனாயிருக்கிறது! எறும்போ எவ்வளவு சிறிதாயிருக்கிறது! மனுஷரெல்லாம் ஏறக்குறைய ஒரே அளவாய்த்தானே இருக்கிறார்கள்? இதில் நீங்கள் சொன்ன உபமானம் எப்படிப் பொருந்தும்?

**சாமிநாத சாஸ்திரி:** சபாஷ்! நன்றாய்ச் சொன்னாய். இப்படிப்பட்ட சர்வமுட்டாளாகிய உனக்கு நான் சொல்வது செவிடன் காதில் சங்கு ஊதுவதைப்போல் இருக்குமே தவிர வேறே சிறிதாவது உபகாரத்தைத் தராது. இப்படிப் பேசிக்கொண்டிருந்தால் காலை ஆறு மணிவரை நீ வீண்பேச்சுகள் பேசிக்கொண்டுதான் இருப்பாய். இப்பொழுதே மணி ஒன்று அடித்தாய்விட்டது. ஏதாவது

சமாசாரம் இருந்தால் சொல்லு. இல்லாவிட்டால் படுத்து நித்திரை செய்வோம்.

**கனகவல்லி:** சமாசாரம் இல்லாமலா நீங்கள் கட்டாயமாய்த் திட்டுவீர்களென்று தெரிந்தும் உங்களை வந்து எழுப்பினேன்?

**சாமிநாத சாஸ்திரி:** இப்பொழுது சொல்லித்தான் நடக்கவேண்டியது என்றல் ஜல்தியாய்ச் சொல்லித் தொலை. இல்லாவிடில் நாளைக்குப் பேசிக்கொள்வோம்; எனக்குத் தூக்கம் வருகிறது.

**கனகவல்லி:** நீங்கள் எனக்குக் கட்டின தாலியை விட எள்ளத்தனை நகையாவது செய்து போடவில்லை என்பதைக் குறித்து இந்த ஊரெல்லாம் சிரிக்காமற் சிரிக்கிறது. அது போகட்டும். நீங்கள் சம்பாத்தியஞ் செய்து பணத்தை மூட்டை மூட்டையாய்க் கொண்டு வருகிறீர்கள். இந்தா, உன் செலவுக்கு வைத்துக்கொள் என்று ஒரு செம்பாலடித்த காசு இதுவரையில் கொடுத்தீர்களா?

**சாமிநாத சாஸ்திரி:** ஏண்டி! இப்படிப் போது போக்குகிறய்? இத்தோடு பல தரம் இந்த விஷயத்தைக் குறித்துக் கேட்டிருக்கிறய்; நானும் ஒவ்வொரு தரமும் காரணம் சொல்லியிருக்கிறேனே. உனக்கு வேண்டிய சாமான்களை நீ எப்போது கேட்கிறயோ அப்போதெல்லாம், அவசியமானவற்றை நான் வாங்கிக்கொண்டு வந்து கொடுக்கும்போது உனக்குப் பணம் காசு எதற்கு?

**கனகவல்லி:** ஆமாம், எனக்குச் சாமான்கள் வாங்கிக்கொடுப்பதில் நீங்கள் தவறுவதே கிடையாது. அந்த ஜம்பத்தை அப்படிக் கட்டுங்கள். என் தாயோடு கூடப் பிறந்த சித்தி மகள் குழந்தை பெற்றள். அந்தக் குழந்தைக்கு வெல்வெட் பாவாடை தைத்துக் கொடுக்கச் சொன்னேன்; நீங்கள் வாங்கித் தைத்துக் கொடுத்துவிட்டுத்தானே மறு காரியம் பார்த்தீர்கள்?

**சாமிநாத சாஸ்திரி:** உன்னுடைய முட்டாள்தனத்திற்குச் சுவரில் போய் முட்டிக்கொண்டாலும் தீராது. இப்போது பிறந்த குழந்தைக்குப் பாவாடை ஏதுக்கு?

அது கட்டிக்கொள்ளுமா? அதற்கு இன்னும் சரியாய் ஒரு மாதம் ஆகவில்லையே!

**கனகவல்லி:** நன்ருய்ச் சொன்னீர்கள்! இன்னும் ஒரு மாசம் ஆகவில்லையா? கார்த்திகை மாசம் ஒன்று, மார்கழி மாசம் இரண்டு, இப்போது பிறந்த தை மாசம் மூன்று; ஆக மூன்றுமாச காலம் ஆகிவிட்டதே.

**சாமிநாத சாஸ்திரி:** கார்த்திகை மாசம் 30உ குழந்தை பிறந்தது. இன்று தைமாதம் 3உ ஆயிற்று. ஒரு மாதமும் நாலு நாளும் ஆயிற்று. நீ மூன்று மாதம் கணக்குச் சொல்லிவிட்டாய். போகட்டும், நீ சொன்னபடி மூன்று மாதம் ஆனல்தான் என்ன? அது பாவாடை கட்டிக் கொள்ளுமா? அது கட்டிக்கொள்ளக்கூடிய வயசு வரும் போது எனக்கு வாங்கிக் கொடுக்கத் தெரியும். இந்த முப்பத்து நான்கு நாளைக்குள் அது ஆறு தரஞ் செத்து ஆறு தரம் பிழைத்தது. அதற்குப் பாவாடை கட்டிக் கொள்ளக்கூடிய வயசு வருகிறவரைக்கும் அது சாகிறதோ பிழைக்கிறதோ, யார் பார்த்தார்கள்?

**கனகவல்லி:** நீங்கள் ஒரு பாவாடை வாங்கிக் கொடுக்க வேண்டுமே, அதில் உங்கள் பணம் செலவாகி விடுமே என்ற வருத்தத்தால் அந்தப் பிள்ளை செத்துப் போக வேண்டுமென்று சுவாமியைப் பிரார்த்திக்கிறீர்கள். இந்தப் பாழும் பணத்தை நீங்கள் செத்த பிற்பாடு உங்களுடைய தலையிலேயே கட்டி அனுப்பப்போகிருர்கள் போல் இருக்கிறது. மகராஜனுய் அப்படியே கட்டிக் கொண்டு போங்கள்; நீங்கள் பாவாடை வாங்கிக் கொடுக்கவும் வேண்டாம், குழந்தை சாகவேண்டு மென்று பிரார்த்திக்கவும் வேண்டாம். இம்மாதிரி கெட்ட எண்ணம் மனத்தில் இருப்பதனுல்தான் தங்கப் பதுமைகளைப்போல் ஐந்து பிள்ளைகளைக் குழியில் வைத்து விட்டுச் செக்கடி முண்டம்போல் உட்கார்ந்துகொண் டிருக்கிறீர்கள்.

**சாமிநாத சாஸ்திரி:** என்னுடைய கெட்ட எண்ணத் தால் ஒரு பிள்ளைகூடச் சாகவில்லை; உன்னுடைய முட்டாள் தனத்தாலும் டாக்டர்களும் நானுஞ் சொன்ன வார்த் தைகளை நீ கேளாததனுலும் பிள்ளைகள் செத்துப்

போயின. முன் ஜன்மத்தில் செய்த கருமத்திற்கேற்ற படி உனக்கு ஈசுவரன் அப்படிப் புத்தி கொடுக்கிறுனென்று நினைத்துக்கொண்டு நான் உன்னை ஒன்றும் சொல்வதில்லை. நீ என்மேல் பழிபோட்டதால் உண்மையைச் சொன்னேன்.

**கனகவல்லி:** என்னுடைய முட்டாள்தனத்தாலும் கைகண்ட மாத்திரை கொடுத்து வைகுண்ட யாத்திரை அனுப்பும் டாக்டர் வார்த்தையைக் கேளாததனுலும் பிள்ளைகள் செத்துப்போயின என்கிறீர்களே. அது என்ன சமாசாரம்? சொல்லுங்கள், பார்ப்போம்.

**சாமிநாத சாஸ்திரி:** ஒவ்வொன்ருய்ச் சொல்லுகிறேன். கவனமாய்க் கேள். இனிமேலாவது இதையெல்லாம் கவனம் வைத்து நடப்பாயென்று சொல்லுகிறேன். நமது ஜேஷ்டபுத்திரன் ஸ்ரீநிவாசனுக்குப் பால் ஜீரணமாகாமல் வாந்தியும் பேதியும் ஆகிக்கொண்டிருந்ததே. அப்போது டாக்டர் வந்து பார்த்து அந்தக் குழந்தையின் குடல் அதிக பலவீனமாயிருப்பதால் பால் அதிகம் கொடுக்கக் கூடாதென்றும், அரைமணி அல்லது ஒரு மணி நேரத்திற்கு ஒரு தரம் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பால் கொடுக்கவேண்டுமென்றும் சொன்ஞர். நானும் அவர் சொன்னபடி செய்வதே சிலாக்கியமென்று சொன்னேன். நீ அதைக் கொஞ்சமாவது லட்சியம் பண்ணுமல், பால் சரியாய்க் கொடுக்காவிட்டால் குழந்தை இளைத்துப்போகுமே, என்ன செய்வதென்று நினைத்து வேளைக்குக் கால்படி பாலுக்குக் குறையாமல் கொடுத்தாய்; அதன் முடிவு குழந்தை கரையாமல் மூன்ரும் நாள் குழியில் வைக்கும்படி நேர்ந்தது.

**கனகவல்லி:** அந்த டாக்டரோ, டீக்டரோ, அந்தப் பரமதடியனுக்கு ஒன்றும் தெரியாது. நான் முதலிலேயே அந்தச் சாப்பாட்டுராமனுக்கு ஒன்றும் தெரியாதென்றும், நம் நாட்டு வைத்தியனுகிய பண்டிதனைக் கூப்பிட்டுவிட்டால் கண்மூடி விழிப்பதற்குள் சௌக்கியப்படுத்திவிடுவானென்றும் சொன்னேன். நீங்கள் கேட்கவில்லை. குதிரை செத்ததுமல்லாமல் அதற்குக் குழிவெட்டப் பத்துப் பணம் என்பதுபோல் நம் குமாரன் செத்தாலும்

டாக்டர் 'பீஸோ', 'பாஸோ' என்று பில் அனுப்பி ஞன். நீங்களும் குழந்தையைச் சௌக்கியப்படுத் திஞல்தானே பணம் கொடுக்க வேண்டும், அது செத்துப் போயிருக்க ஏன் பணம் கொடுக்கவேண்டும் என்னும் ஞானம் கொஞ்சங்கூட இல்லாமல் முள்ளங் கிப் பத்தைபோல் ஐம்பது ரூபாய் எண்ணிக் கொடுத்து விட்டீர்கள். அப்போது என் வயிற்றெரிச்சல் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. குழந்தை செத்த விசனத்தைப் பார்க்கிலும் இந்த விசனம் ஆயிரம் பங்கு அதிகமாயிருந்தது. நீங்கள் அப்பேர்ப்பட் டவர்களுக்கென்ருல் நூற்றுக்கணக்காய் மறு பேச்சுப் பேசாமல் கொடுத்துவிடுவீர்கள். நான் ஏதாவது ஒரு காசுக்குச் செலவு சொன்ஞல் உங்கள் கண்ணிலிருந்து தண்ணீர் சொட்டுகிறது. நாட்டு வைத்தியஞயிருக்கட் டும், குழந்தை செத்துப் போயிற்றே, நாம் பணம் கேட்கலாமா என்று திரும்பிப் பார்க்குமுன் மாயமாய்ப் பறந்துவிடுவான். போகட்டும். ஒரு குழந்தையைத்தான் பால் அதிகமாய்க் கொடுத்துக் கொன்றுவிட்டேன் என்றீர்கள்; மற்றக் குழந்தைகள் சங்கதி என்ன?

சாமிநாத சாஸ்திரி: இரண்டாவது குழந்தை லட்சுமிக்கு எந்நேரமும் சொக்காய் போட்டு வைக்க வேண்டுமென்று தலையில் அடித்துக்கொண்டேனே; டஜன் டஜஞய்க் கம்பளிச் சொக்காய்களும் தைத்துக் கொடுத் தேனே, எப்போதாவது சொக்காய் போட்டாயா? ஜோ என்று மழை அடித்துக்கொண் டிருக்கும்போது அவசர மாய் எண்ணெய் தேய்த்துச் சாயங்காலம் ஆறு மணிக்குக் குளிப்பாட்டிஞய். போகட்டும், ஸ்நானம் பண்ணின உடனே உள்ளே கொண்டுபோய் மார்பை மூடிக் கம்பளிச் சொக்காய் போடு என்றேன். நீ குழந்தைக் குத் தலையைக்கூடச் சரியாய்த் துவட்டாமல் குழந்தை யைக் குளிர்காற்றிலேயே வைத்துவிட்டுத் திருஷ்டி சுத்து வதற்காக உப்பு மிளகாய் எடுக்கப்போஞய். உக்கிராணச் சாவியைக் காணுமல் கால்மணி நேரம் தேடி எடுத்துவந்து திருஷ்டி சுற்றி ஆரத்தி எடுத்தாய். ஆக அரைமணி நேரமாய்க் குழந்தையைக் குளிர்காற்றில் வைத்திருக்கும் படி செய்தாய். அன்று ராத்திரியே குழந்தைக்குக் காய்ச்

சலும் இருமலும் வந்துவிட்டன. டாக்டரைக் கூட்டிக் கொண்டு வந்து காண்பிக்கவேண்டுமென்று சொன்னேன். டாக்டருக்கு ஒன்றும் தெரியாது என்றும், அந்தத் தடியனைக் குழந்தைக்கு வைத்தியஞ் செய்யச்சொன்னால் கட்டாயமாய்க் குழந்தை இறந்து போகுமென்றும் சொல்லி, நாட்டு வைத்தியனாகிய அப்பாவுப் பண்டிதனைக் கூட்டி வந்து காண்பித்தாய். அவன், "சுமார் ஐந்நூறு கோழி முட்டைகளைக் கொண்டுவந்து தைலம் இறக்கி நவரத்தின மெழுகு செய்யவேண்டும்; அதற்காக நவரத்தினங்கள் வாங்கவேண்டும்" என்று நூறு ரூபாய் கேட்டான். இவன் நவரத்தினமேது, வாங்குவதேது, இது மோசம் என்று சொன்னேன், பணப்பேய் பிடித்துக்கொண்டு குழந்தைக்குச் செலவுசெய்யாமல் குழந்தையைக் கொல்லப்போகிறேனென்றும், இன்னும் இதைப்போல அநேக வார்த்தைகள் சொல்லித் தூற்றினாய். உன் வார்த்தைக்காக நூறு ரூபாய் அழுதேன். மூன்று வேளை மருந்து குழந்தை சாப்பிட்டவுடனே மருந்தின் குணத்தால் குழந்தை பரமபதம் அடைந்தது.

**கனகவல்லி**: டாக்டர் மருந்து கொடுத்திருந்தால் மட்டும் குழந்தை இப்போது உயிருடன் இருக்குமோ? அதற்குக் கடன் அவ்வளவுதான். கடைசிக் கடன் பண்டிதனுக்குச் சேரவேண்டி யிருந்தது; அது சேர்ந்தவுடனே குழந்தையும் விண்ணுலகு சேர்ந்தது. அதற்கு என்னைப் பழிப்பானேன்? போகட்டும், அப்பால் சொல்லுங்கள்.

**சாமிநாத சாஸ்திரி**: மூன்றுவது குழந்தை சீதைக்கு முதுகில் ராஜபிளவை புறப்பட்டது. நான் டாக்டரைக் கொண்டுவந்து அதிக ஜாக்கிரதையாய் வைத்தியம் செய்து அறுக்கவைத்தேன். புண்ணும் நாளுக்கு நாள் ஆறிக்கொண்டே வந்தது. புண்ணை ஜல்தியாய் ஆறாமல் மெதுவாக ஆறும்படி வைத்துப் பணம் பறிப்பதற்கு டாக்டர் ஜாலம் செய்கிறாரென்று, நான் வெளியே போய் வருவதற்குள் உனக்குப் பிடித்த பண்டிதனைக் கூப்பிட்டுக் காண்பித்தாய். அவன் அதை நன்றாய் அறுத்து ஒரு பச்சிலை வைத்துக் கட்டிவிட்டால் மறுநாளைக்குள் முக்கால்

வாசி குணமாகிவிடுமென்றும், அதற்கு அடுத்த நாளைக்குள் பூராவாய்க் குணமாகிவிடுமென்றும் சொல்லி, ஷாப்பில் புதிதாக விற்கும் ஆயுதம் வாங்கவேண்டுமென்று இருபத்தைந்து ரூபாய் கேட்டான். நீ என்னிடம் சொன்னால் நான் ஆட்சேபம் செய்வேனென்று பக்கத்து வீட்டு நடேச தீட்சிதரிடமிருந்து எனக்குத் தெரியாமல் வாங்கிக் கொடுத்தாய். பண்டிதன் ரூபாயை வாங்கிக் கொண்ட ஒரு நிமிஷத்திற்குள் க்ஷவரம் செய்யும் கத்தி கொண்டு அவனால் ஆனவரைக்கும் அறுத்து ஏதோ பச்சிலை வைத்துக் கட்டிவிட்டுப் போய்விட்டான். அதனால் ரணஜன்னி பிறந்து மறுநாளே குழந்தை இறந்தது. நாட்டு வைத்தியன் மறுநாள் முக்கால்வாசி குணமாகுமென்று சொன்னான். ஆனால் அவனுடைய சாமர்த்தியத்தால் மறுநாளே குழந்தையைச் சகலவிதமான வியாதியிலிருந்தும் நிவர்த்தி செய்துவிட்டான். அன்றே டாக்டரைச் சாட்சி வைத்துக்கொண்டு அந்தப் பரமசண்டாளனைப் பதினான்கு வருஷம் ஜன்மதண்டனையடையும்படி செய்திருப்பேன். ஆனால் ஜனங்களெல்லாம் உன்னுடைய புத்திசாலித்தனத்தைக் குறித்து வெகுவாய்ச் சிலாகித்து உன்னைப் பார்க்கும்போதெல்லாம், 'இப்பேர்ப்பட்ட புண்ணியவதி போகிறாள்!' என்று வாழ்த்துவார்களே என்ற பயத்தால் அத்துடன் நிறுத்தும்படி நேரிட்டது.

**கனகவல்லி:** ஏன் மாறுபாஷையாய்ப் பண்டிதனைத் தீவாந்தரம் ஏற்றி இருக்கலாமென்று சொல்லுகிறீர்கள்? பரிஷ்காரமாய் என்னையுங்கூடச் சேர்த்துத் தீவாந்தரம் ஏற்றியிருப்பேன் என்று சொல்லுங்களேன். உங்களை யார் வந்து அப்படிச் செய்யவேண்டாமென்று தடுத்தார்கள்? நான் ஏதாவது கிமானென்றேனா? இன்னும் கேட்கக் கேட்க அடுத்த பிள்ளையைத் திருஷ்டி தோஷம் நிவாரணை செய்வதற்காக விளக்கு வைத்துப் பார்க்கும்போது, தலைசுற்றிவிட, அங்கே கொண்டு வந்து நிறுத்தியிருந்த கிடா பாய்ந்து அதனால் அந்தக் குழந்தை இறந்து போயிற்றே, அதையும் நான்தான் கொன்றேன் என்பீர்கள். வாயில் வந்தபடி எல்லாம் நீங்கள் சொல்லவும் நான் கேட்கவும் என் தலையில் ஆண்டவன் எழுதியிருக்க, உங்களையாவது அந்தப் பாழும் தெய்வத்தையாவது

நொந்துகொள்வதில் பயன் என்ன? ஊரிலுள்ள பெண்களெல்லாம் குழந்தைகளுக்குத் தலை முழுக்காட்டாமலும் திருஷ்டி சுத்தாமலும் நாட்டு வைத்தியனைக் கொண்டு வைத்தியஞ் செய்துகொள்ளாமலுமா இருக்கிறார்கள்? நீங்கள் பூர்வ ஜன்மத்தில் யாரை அடித்தீர்களோ, எவளை இம்சித்தீர்களோ, இன்னும் என்ன என்ன அக்கிரமங்கள் செய்தீர்களோ, அதன் பலன்கள்தாம் இப்போது இப்படி எல்லாம் நடக்கின்றன. இன்னும் இந்த ஜன்மத்தில் என்னை இப்படியெல்லாந் தூற்றுவதற்கு உங்களுக்கு ஆண்டவன் சரியானபடி படியளக்காமல் இருக்க மாட்டான்.

**சாமிநாத சாஸ்திரி:** அவசரமாய்ப் பேச வேண்டிய சமாசாரம் இருக்கிறதென்று சொல்லி மறுபடியும் ஒரு மணி நேரம் வீண் வம்பு பேசி நேரத்தைக் கடத்தினாய். இப்பொழுதாவது ஏதோ அவசரமாய்ப் பேச வேண்டுமென்கிற சங்கதியைச் சொல்லுகிறாயா? இல்லையா?

**கனகவல்லி:** நீங்களே இவ்வளவு நேரம் வீண்வம்புகள் வளர்த்தீர்களல்லாமல் நான் பேசவில்லை. நமக்கு இப்போது இருக்கப்பட்ட அபூர்வ கண்மணியாகிய இராஜாம்பாளுக்கு வயசு பன்னிரண்டு முடிகிறது. நாளைக்கோ, நாளைநின்றோ புஷ்பவதி யாகிவிடுவாள் போல் தோற்றுகிறது. நீங்கள் இன்னும் அவளுக்குக் கல்யாணஞ் செய்ய ஏற்பாடு செய்யாமல் இருக்கிறீர்கள். நான் நான்கு வருஷகாலமாய்க் குழந்தைக்குக் கல்யாணஞ் செய்துவிடவேண்டுமென்று கட்டாயப் படுத்திக் கொண்டிருந்தும் ஏதோ சமூகசீர்திருத்தக் கழகம் என்னும் சங்கத்தில் நீங்கள் ஓர் அங்கத்தினரென்றும், அப்படி இருப்பதால் சிறுவயதில் கல்யாணஞ் செய்து கொடுக்க மாட்டீர்களென்றும் சொல்லிக்கொண் டிருக்கிறீர்கள். உங்களைப்போல் மேற்படி சங்கத்தில் அங்கத்தினராயிருக்கும் ராமசாமி ஐயரும் சுப்பையரும் அவரவர்களுடைய பெண்களுக்கு ஏழு வயதிலேயே கல்யாணஞ் செய்துவிடவில்லையா? நீங்கள் மாத்திரம் ஏன் இப்படிப் பிடிவாதஞ் செய்துகொண் டிருக்கிறீர்கள்?

**சாமிநாத சாஸ்திரி:** சீர்திருத்தக் கழகத்தில் சேர்ந்தவர்களில் அநேகர் மேற்படி கூட்டங்களில் வந்து பேசும்

போது மாத்திரம் சிறுவயதில் கல்யாணஞ் செய்யக்கூடாதென்றும், பால்ய விதவைகளுக்கு மறு கல்யாணஞ் செய்ய வேண்டுமென்றும், எல்லா ஜாதியாரையும் ஒரே மாதிரியாகப் பாவிக்க வேண்டுமென்றும், ஜாதி வேற்றுமையை வேரோடு கருவறுத்துவிட வேண்டுமென்றும், தாசிகள் கச்சேரிகளுக்குப் போகக் கூடாதென்றும், சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களைக் குடிக்கக் கூடாதென்றும் பிரமாதமாய்த் தங்கள் முழுச் சாமர்த்தியங்களோடும் பிரசங்கம் செய்கிறார்கள். ஆனால் அவரவர்கள் சொந்தத்திற்கு மேற்படி காரியாதிகள் வரும்போது மாத்திரம், 'ஏன் நாம் முதலிற் செய்யவேண்டும்? யாராவது நான்கு பேர் முதலில் மேற்படி காரியாதிகளை நடத்தி ருஜுப்படுத்தட்டும். அப்பால் யோசிக்கிறேன்' என்று நினைத்துக்கொண்டு மாமூல் பிரகாரம் நடத்திக்கொண்டு வருகிறார்கள். ஒவ்வொருவரும் யாருக்கு வந்த விருந்தோ என்று இருக்கும் வரையில் நமது தேசம் விருத்திக்கு வருவது அபூர்வம். ஒவ்வொருவரும் தேசவிருத்தி தங்களால்தான் ஆகவேண்டுமென்று நினைத்து அதற்கு வேண்டிய காரியங்கள் செய்யும் வரையில் நமது தேசம் விருத்தியாகாதாகையால், நான் என்னால் கூடியவரையில் எப்படி நடப்பேனென்று ஒப்பி மேற்படி சங்கத்தில் கையொப்பமிட்டிருக்கிறேனோ, அப்படித்தான் நடப்பேன். மற்றவர்கள் நடக்கவில்லையே, நாம் மாத்திரம் ஏன் அப்படி நடக்கவேண்டும் என்கிறாயோ? சுயநலம் பாராட்டும் பேதைகளைப்போல், பேசுவதொன்று நடப்பதொன்றாக நான் செய்வேனோ? ஒரு நாளும் செய்யமாட்டேன். எப்போது ஒன்று செய்வதாய் வாக்களித்தேனோ அதனால் நன்மை வந்தாலும் சரி, தீமை வந்தாலும் சரி, அப்படியே நடப்பேனென்பதை நீ இத்தனை வருஷம் என்னோடு பழகியும் இன்னும் அறியவில்லைபோல் இருக்கிறது.

**கனகவல்லி:** சரி. எப்படியாவது கட்டாயமாய் இந்தத் தைமாதத்தில் கல்யாணஞ் செய்துவிட்டு மறு காரியம் பார்ப்பதாய் வாக்களித்தீர்களே! நீங்கள் வாக்குக் கொடுத்துவிட்டு மாறுவதில்லையென்று இப்போது ஒரு நிமிஷத்திற்கு முன்புதானே சொன்னீர்கள்?

**சாமிநாத சாஸ்திரி:** வாஸ்தவந்தான். கல்யாணஞ் செய்ய ஏற்பாடுகள் என்னஎன்ன செய்வதென்று யோசித்துக்கொண்டுதான் இருக்கிறேன்.

**கனகவல்லி:** நம் பெண்ணுக்குத் தகுந்த மாப்பிள்ளையல்லவா முதலில் தீர்மானஞ்செய்யவேண்டும்? ஏற்பாடுகளெல்லாம் அரை நொடியில் நான் செய்துவிடமாட்டேனே? அரிசி குத்தித் தயாராய் நூறு மூட்டை அடுக்கி இருக்கிறேன். பருப்பு தினுசுகளெல்லாம் நன்றாய்க் குத்தி மாசு மறு இல்லாமல் பொறுக்கி வைத்திருக்கிறேன். சாமான்கள்தாம் நமது அகத்தில் இப்போதே தயாராயிருக்கின்றனவே.

**சாமிநாத சாஸ்திரி:** மாப்பிள்ளை விஷயத்தைக் குறித்துத் தீர்மானஞ் செய்வது என்ன இருக்கிறது? நமது பக்கத்து அகத்து நடேச தீட்சிதர் பிள்ளை கோபாலன் நிரம்பப் புத்திசாலி; நன்றாய்ப் படித்தவன்; பி. ஏ. பரீட்சை கொடுத்தவன். பிதுரார்ஜித சொத்து இருக்கிறது. இதுவரையில் யாதொரு துர்நடத்தையுஞ் செய்ததாக நாம் கேள்விப்படவில்லை. இந்த ஊரிலேயே அவனிடம் பிரியமில்லாதவர்கள் இல்லை. எல்லாவற்றிலும் முக்கியமாகக் கோபாலனுக்கு நம் ராஜத்தின்பேரில் அதிகம் பிரியம். ராஜத்திற்கும் அவன்பேரில் பிரீதி அதிகம். இருவரையும் பார்த்தால் சாக்ஷாத் மகாவிஷ்ணுவும் லட்சுமியும்போல் இருக்கிறார்கள். இப்படி இருக்க மாப்பிள்ளை தீர்மானஞ் செய்யவேண்டுமென்று நீ சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது.

**கனகவல்லி:** ஆனாலும் என்ன உங்களுக்குப் புத்தி வரவர இப்படிப் போகிறது? உங்களுடைய சொந்தப் பிள்ளைக்கு மேலாய் நடேசனை வளர்த்தீர்கள். ஏதோ பரீட்சையில் தேறவில்லை என்பீர்கள்போல் இருக்கிறது. இந்தக் காலத்தில் பரீட்சையில் தேறுவதெல்லாம் அதிருஷ்டந்தான். மேலும் பரீட்சையில் தேறியவர்கள்தாமா நன்றாய்ச் சம்பாத்தியஞ் செய்கிறார்கள்? அநேகர் பி. ஏ. பரீட்சை கொடுத்துவிட்டுக் கலெக்டர் ஆபீஸில் அட்டெண்டர் வேலைக்கு மண்டி போடுகிறார்களே! அதெல்லாம் உங்களுக்குத் தெரியாதா? நடேசனுக்கும் கோபாலனுக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது, பாருங்கள்.

நடேசன் என் கூடப் பிறந்தவனென்று நான் சொல்வதாக நீங்கள் நினைத்துக்கொள்ளக்கூடாது. பெண்கள் முக்கியமாய்ப் பிரியப்படும் அழகில் கோபாலன் சிறந்தவனு? நடேசன் சிறந்தவனு? நல்ல உடுப்புகள் துரைகளைப் போல் கோபாலன் போட்டுக்கொள்ளுகிறுனு? நடேசன் போட்டுக்கொள்ளுகிறுனு? சாதாரணமாய்ப் பெண்களிடத்தில் சங்கோசமென்பதில்லாமல் நடேசன் பேசுகிறுன்; ஆனுல் கோபாலனே பெண்களைக் கண்ட மாத்திரத்தில் ஆலகால விஷத்தைக் கண்டவன்போல் நடுங்குகிறுன். அப்பேர்ப்பட்டவனுக்கு, இறந்ததெல்லாம் போகு நமக்கு இருக்கும் ஒரே குழந்தையைக் கட்டிக் கொடுத்துவிட்டுப் பின்னுல் கண்ணீர் சொரிந்துகொண் டிருப்பதில் என்ன பயன்?

**சாமிநாத சாஸ்திரி:** நீ என்ன சொன்னுலும் சரி; பரீட்சையில் தேருத அந்த முட்டாள் நடேசனுக்கு நம் பெண்ணை நான் கொடுக்கவே மாட்டேன். ஆதிமுதலே நன்ருய்ப் படிக்கச்சொல்லித் தலையில் அடித்துக்கொண்டேனே! வீட்டில் வந்து சொல்லிக்கொடுப்பதற்காக உபாத்தியாயரை வைத்து அவருக்கு மாதம் இருபது ரூபாய் கொடுத்து வந்தேனே. உபாத்தியாயர் முன் வாசலில் வந்தால் அவன் பின்வாசல் வழியாய் எங்கேயாவது ஓடுவான். குறிப்பிட்ட நேரம் வரையில் அவர் காத்திருந்துவிட்டு அவர்பாட்டில் போவார். இந்தச் சங்கதிகளெல்லாம் என்னிடம் சொன்னுல் நான் நடேசனைக் கண்டிப்பேனென்றும், அவன் துஷ்டனென்று நினைத்துக் கொள்வேனென்றும் எண்ணிக்கொண்டு மறைத்துவைத்தாய். அதன் முடிவு அவன் முழுச் சோம்பேறியாகி எந்த வேலைக்கும் தகுதி இல்லாமற் போய் விட்டான். அவன் கெட்டதற்குக் காரணம் நீதான். குழந்தைகள் தப்புச் செய்வதைப் பெற்ருேர் கண்டால் ஒளிக்காமல் அப்போதைக்கு அப்போது கண்டித்து மறுபடியும் தப்புச் செய்யாமல் இருக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிக்கு இல்லாமல், சொன்னுல் தகப்பனுர் அடிப்பாரே என்று தாயார் மறைத்துவைத்தால், தப்புகள் ஒன்று நூருகி, நூறு ஆயிரமாகி நாளுக்குநாள் களைகள் வளருவதுபோல் வளருமே யல்லாமல் குறைவதில்லை.

**கனகவல்லி:** பரீட்சையில் தேருததால் கொடுக்க மாட்டேனென்று நீங்கள் சொல்வது சரியன்று. இவ்வளவு கௌரவம் பொருந்தியிருந்த ராஜா சர் இராமசாமி முதலியார் அவர்கள் என்ன பரீட்சையில் தேறியிருந்தார் கள்? அதிருஷ்டம் வந்தால், தானே கொடுக்கிறது.

**சாமிநாத சாஸ்திரி:** உன் தம்பி நடேசன் படிக்காமல் மாத்திரம் இருந்தாலும் போனால் போகிறதென்று கொடுக் கலாம். அவன் சென்னையில் தேவடியாள்களை வைத்துக் கொண்டு வீண் செலவுகள் செய்வதாகவும், ஸ்பென்சர் கம்பெனியில் ஏராளமாய்ச் சீமைச் சாராயங்களை வாங் கிக் குடிப்பதாகவும், கண்ட கண்ட இடத்தில் தாராள மாய்ச் சாப்பிடுகிறதாகவும் என் வக்கீல் எழுதியிருக்கிறார்.

**கனகவல்லி:** இந்தப் பாழும் கோபாலன் அவருக்கு ஐந்நூறு அல்லது ஆயிரம் ரூபாய் கொடுத்து எழுதும்படி சொல்லியிருந்தாலும் சொல்லியிருப்பான்.

**சாமிநாத சாஸ்திரி:** பார்த்ததுபோல் திடீரென்று ஏன் அபாண்டங்கள் சுமத்துகிறாய்? உன் தம்பி இப்படிப் பட்ட கெட்ட காரியங்கள் செய்யாவிடில் நாட்டுக் கோட்டைச் செட்டிமார்களிடம் ஐம்பதாயிரம் ரூபாய் கடன் வாங்க வேண்டிய காரணம் என்ன? இதையெல்லாம் யோசியாமல் வக்கீலின்பேரிலும் கோபாலன்பேரிலும் பழி சுமத்துகிறாய்.

**கனகவல்லி:** சிறு பிள்ளையாயிருக்கும்போது யாருந் தவறுவது சகஜமே. கல்யாணஞ் செய்து வைத்துவிட்டால் துர்க்குணங்களெல்லாம் மாறி நல்லவனாகிவிட மாட் டானோ? லோகத்திலே தாசிகள் வீட்டுக்குப் போகிறவர் களும் குடியர்களும் இல்லாமலா இருக்கிறார்கள்? அப் பால் அவர்கள் நல்ல வழியில் திரும்புவதில்லையோ? போகட்டும். கோபாலன் ஒன்றும் அறியாதவனென்றும் ரொம்ப நல்லவனென்றும் சொல்லுகிறீர்களே. இப் போது நல்லவனென்றே வைத்துக்கொள்வோம். நல்ல வர்களாயிருக்கிறவர்கள் கல்யாணஞ் செய்த பிற்பாடு கெட்டவர்கள் ஆகிறதில்லையோ?

**சாமிநாத சாஸ்திரி:** உன் தம்பி நல்லவனாகவே இருக் கட்டும்; நான் ஒருபோதும் உன் தம்பிக்கு ராஜத்தைக் கொடுக்க ஒப்புக்கொள்ளமாட்டேன். இது நிச்சயம்.

இந்த விஷயத்தைக் குறித்து நீ பேசுவதில் எள்ளத்தனையும் உபகாரங் கிடையாது.

**கனகவல்லி:** நம் பிள்ளையைப்போல் அவனை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துக் கடைசியாக நம் பெண்ணை அவனுக்குக் கொடுக்காமல் வேறே தெருவிற் போகுங் கோபாலனுக்குக் கல்யாணஞ் செய்துகொடுப்பேன் என்கிறீர்கள். நான் பாவி; இந்த ஜன்மத்தை வைத்துக்கொண்டிருப்பதில் சுகிர்தம் என்ன? நீங்களே பெண் கொடுக்காவிட்டால் அவனுக்கு வேறே யார் பெண் கொடுக்கப்போகிறார்கள்? ஊரெல்லாம் என்னைப் பார்த்துச் சிரிப்பதையும் நான் அவர்கள் செய்யும் நையாண்டிகளைப் பார்த்துக்கொண்டிருப்பதையும்விட உங்கள் கண் முன்னாலேயே நாக்கைப் பிடுங்கிக்கொண்டு செத்துப்போகிறேன்; அப்பால் உங்களுக்கு எப்படிச் செய்ய இஷ்டமோ அப்படிச் செய்து கொள்ளுங்கள்.

இப்படிச் சொல்லி அவர் உடம்பின்மேல் விழும்படி தாரை தாரையாய்க் கண்ணீர்விட்டாள்.

**சாமிநாத சாஸ்திரி:** நீ நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகிறேனென்றாலும் அல்லது குளங் கிணறுகளில் விழுந்து சாகிறேனென்றாலும் அல்லது அப்படியே செத்துப்போனாலும் சரி, ராஜத்தை ஒரு நாளும் அந்தத் துஷ்டனுக்கு விவாகஞ் செய்து கொடுக்கமாட்டேன். அதைவிட நம் பெண்ணைக் கிணற்றில் தள்ளி மேலே ஒரு கல்லைப் போட்டு விடுவேன். இந்தப் பெண் விஷயம் ஒன்று தவிர வேறே அந்தத் துஷ்டனுக்கு நான் பிரியமாய் வளர்த்த தோஷத்திற்காக நீ எதைச் செய்யச் சொன்னாலும் செய்கிறேன்.

**கனகவல்லி:** ஆனால் நிச்சயமாய்ப் பெண் கொடுக்கவே மாட்டீர்கள்?

**சாமிநாத சாஸ்திரி:** கொடுக்கவே மாட்டேன்.

**கனகவல்லி:** வேறே எது கேட்டாலுங் கொடுப்பேன் என்கிறீர்களே; அதாவது உண்மைதானோ, இல்லையோ?

**சாமிநாத சாஸ்திரி:** உண்மைதான்.

கனகவல்லி: நீங்கள் சொல்வது உண்மையானால் உமது சொத்தில் பாதி அவனுக்கென்று உயில் எழுதி வையுங்கள், பார்ப்போம்.

சாமிநாத சாஸ்திரி: பாதிச் சொத்தை அவனுக்கு வாங்கிக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தால் நீ நாக்கைப் பிடுங்கிக்கொள்கிறேனென்றும் கல்யாணம் செய்து கொடு என்றும் இவ்வளவு நேரம் வம்பு பேசினாய்போல் இருக்கிறது. நீ சொன்னாலும் சொல்லாவிட்டாலும் நான் அப்படியே செய்ய உத்தேசித்திருந்தேன்.

கனகவல்லி: அப்படி உத்தேசித்திருந்தால் பின் வக்கீலைக் கூப்பிட்டு உயில் எழுதாமல் ஏன் தாமதிக்கிறீர்கள்? மனிதர்கள் காயம் ஒரு நிச்சயமா? நேற்றுச் சங்கர சுப்பையர் அகத்துக்கு வந்தாராம், சாப்பிட்டாராம்; ''குட்டீ! ஜலம் கொண்டுவா'' என்றாராம். சொம்பு தேய்த்து ஜலம் கொண்டுபோவதற்குள் ஐயர் பரமபதமடைந்தார். ஏதோ செய்கிறேனென்று சொல்வதை ஜல்தியாய்ச் செய்துவைத்து விடுங்கள்.

சாமிநாத சாஸ்திரி வக்கீலைப் புறப்பட்டு வரும்படி காலையில் தந்தி கொடுப்பதாய்ச் சொல்லிவிட்டுக் காலை நாலு மணிக்குப் படுத்துக்கொண்டார்.

## 2. சாஸ்திரியின் உயில்

பொழுது விடிந்ததும் கனகவல்லி எழுந்து வக்கீல் துரைசாமி ஐயங்காருக்குத் தந்தி அடிப்பதற்கு ஞாபகப் படுத்தி, தந்தி அடிக்கும்படி செய்தாள். பாதிச் சொத்தை நடேசனுக்கு எழுதிவைப்பதற்கு வக்கீல் துரைசாமி ஐயங்கார் கட்டாயமாய் ஆட்சேபம் செய்வாரென்று கனகவல்லிக்குத் தெரியுமாதலால், அவர் அப்படி ஆட்சேபித்தாலும் கட்டாயமாய்ச் சொன்ன சொல் தட்டக்கூடாதென்றும் வாக்களித்த பிரகாரமே நடக்கவேண்டுமென்றும் சாமிநாத சாஸ்திரியிடம் உறுதிமொழி பெற்றுக்கொண்டாள். அன்றியும் வக்கீல் ஐயங்காரைச் சந்தோஷப்படுத்துவதற்காக அவருக்கு விசேஷமான விருந்து செய்வதற்கு மத்தியான்னம் ஒருமணி முதல் ஆரம்பித்துச்

சமையல் செய்தாள். சாயங்காலம் ஆறு மணியானதும் இரட்டைக் குதிரை கட்டிய தன் வண்டியை ரெயிலுக்கு அனுப்பி வக்கீல் ஐயங்காரை அழைத்துக்கொண்டு வரும்படி தன் கணவனையும் அனுப்பினாள். சாமிநாத சாஸ்திரி ரெயிலுக்குப் போய் ஐயங்காரவர்களை அழைத்துக் கொண்டு வரும் வழியில், நடந்த சங்கதிகளை யெல்லாம் சாங்கோபாங்கமாய்ச் சொன்னார். ஐயங்காரவர்கள் நடேசனுக்குப் பாதிச் சொத்தைக் கொடுப்பதை விட ஏதாவது தர்மம் செய்வது யுக்தமாயிருக்குமென்றும், நடேசனுக்குப் பாதிச் சொத்தைக் கொடுப்பதால் அவனுக்குக் கெடுதல் இன்னும் அதிகம் உண்டாகுமே தவிர நன்மை உண்டாகாதென்றும் அவரால் ஆன வரையிலும் சொல்லியும் சாஸ்திரிகள் கேளாததால், சிறிது வருத்தத்துடன் உயில் எழுத ஒப்புக்கொண்டார்.

உயில் எழுதச்சொன்ன பிரகாரம் வக்கீல் எழுத வேண்டியதுதானே? கொடுக்கக்கூடாது என்று சொல்'தற்கு இவருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்று )தை வாசிப்போர் நினைக்கலாம். சாமிநாத சாஸ்திரியும் ıக்கீல் துரைசாமி ஐயங்காரவர்களும் சிறுபிள்ளைகள் முதலே ஒன்றாய்ப் படித்தது மாத்திரமன்றி இருவரும் ஆப்த மித்திரர்கள். இந்தப் பாழும் பிசாசாகிய கனகவல்லியின் பேச்சைக் கேட்டு ரத்னபூஷணமாகிய இராஜாம்பாளைக் கொடிய துஷ்டனாகிய நடேசனுக்குக் கல்யாணஞ் செய்து கொடுக்காமல் இருந்ததே, வக்கீல் ஐயங்காரவர்களுக்கு அத்யந்த சந்தோஷம்; பாதிச் சொத்துத் தொலைவது பிரமாதமில்லை என்றும் இதுகூடச் செய்யாவிட்டால் கனகவல்லி முன்னும் பின்னும் போகவிடமாட்டாளென்றும் தமக்குத் தாமே சமாதானம் செய்துகொண்டார். சாப்பாடு முடிந்தவுடன் பின்வருமாறு உயில் எழுதப் பட்டது.

## உயில்

செங்கற்பட்டுஜில்லா காஞ்சீபுரந்தாலூக்கா, காஞ்சீபுரம் வடக்கு ராஜவீதியில் 48-வது நெம்பர் வீட்டில் இருக்கும் ராமசாமி சாஸ்திரிகள்

குமாரர் சாமிநாத சாஸ்திரி எழுதிவைக்கும் உயில் என்னவென்றால்:

யாதொரு வில்லங்கத்திற்கும் உட்படுத்தாமல் என் அதீனத்திற்குள்ளிருக்கும் சுமார் அறுபது லட்ச ரூபாய் பெறுமான வைரம் விளைந்த வாதம்பட்டி என்னும் கிராமத்தையும், அதற்கு அருகிலுள்ள மாவிந்தபுரம் என்னும் கிராமத்தையும், என் புத்திரியாகிய இராஜாம்பாளுக்குக் கிடைக்கும்படிக்கும், சுமார் அறுபது லட்ச ரூபாய் பெறுமான தங்கம் விளைந்த தர்மாபுரம் என்னும் கிராமத்தையும், அதற்கருகிலுள்ள மாவிந்தபுரம் என்னும் கிராமத்தையும், என் பெண்சாதியின் கூடப்பிறந்த நடேசனுக்குக் கிடைக்கும்படிக்கும், நகைகள், பொன், வெள்ளிப்பாத்திரங்களை எல்லாம் மேற்சொன்ன இராஜாம்பாளுக்கும் நடேசனுக்கும் சமபாகமாய்க் கொடுக்கும்படிக்கும், இரும்புப்பெட்டியில் ரொக்கம் வைத்திருக்கும் பதினாயிரம் ரூபாயையும் இராஜாம்பாள் கல்யாணச் செலவுக்கு ரூபாய் ஐயாயிரமும் நடேசன் கல்யாணச் செலவுக்கு ரூபாய் ஐயாயிரமும் கொடுக்கும்படிக்கும், சென்னை, ஆர்பத்நட் அவுசில் டிபாசிட் கட்டியிருக்கும் பணத்திலிருந்து மாதம் மாதம் வரும் வட்டி ரூபாய் ஐந்நூறையும் என் பெண்சாதி கனகவல்லி சம்ரட்சணைக்காகக் கொடுக்கும்படிக்கும், எனது ஆப்த நேயரான வக்கீல் துரைசாமி ஐயங்காருக்கு ஆர்பத்நட் அவுசில் எனது கரன்ட் அக்கௌன்டில் இருக்கும் இருபதினாயிரம் ரூபாயையும் கொடுக்கும்படிக்கும் தீர்மானித்து, ம-ா-ா-ஸ்ரீ வக்கீல் துரைசாமி ஐயங்காரையும், காஞ்சீபுரம் கஸ்பா தாசில்தார் விசுவநாத சாஸ்திரிகளையும் அட்மினிஸ்டிரேட்டர்களாய் ஏற்படுத்தி, மேலேசொன்ன என் அபிப்பிராயத்தின்படி நடத்திவைக்க அவர்கள் இருவரையும் கேட்டுக்கொள்ளுகிறேன். தெய்வாதீனமாய் மேற்சொன்ன இராஜாம்பாளாவது மேற்சொன்ன

நடேசனாவது சந்ததியில்லாமலாவது, கல்யாண மாகாமலாவது ஒருவருக்கு முன்னால் ஒருவர் இறந்துவிட்டால் உயிருடன் யார் இருக்கிறார் களோ அவர்களுக்கு இறந்தவருடைய சொத்தும் சேர்த்துக் கொடுத்துவிட வேண்டியது. மேற் சொன்ன நடேசனும் இராஜாம்பாளும் ஆகிய இருவரும் சந்ததியின்றியோ விவாகஞ் செய்யா மலோ இறந்துபோய்விட்டால் மொத்த ஆஸ்தி யிலிருந்து வரும் வரும்படியை மாத்திரம் என் பெண்சாதியாகிய கனகவல்லிக்குச் சேர்க்கவேண் டியது. அவள் ஆயுளுக்குப் பின்னால் எல்லாச் சொத்தையும் விற்றுச் சென்னையில் வேலைசெய் யச் சக்தியில்லாதவர்களுக்குச் சாப்பாடு போட வேண்டியது.' கனகவல்லி முதலில் இறந்து போனால் ஆர்பத்நட் அவுசில் டிபாசிட்டில் இருக் கும் பணத்தை இராஜாம்பாளும் நடேசனும் சமபாகமாய்ப் பங்கிட்டு எடுத்துக்கொள்ளவேண் டியது. இந்த உயில் யாருடைய நிர்ப்பந்தமில் லாமலும் என் மனப்பூர்த்தியாகவும், புத்தி சுவாதீனத்தோடிருக்கும்போதும் எழுதினேன்.

சாட்சிகள்.

டாக்டர் சந்திரன்
டாக்டர் சூரியன்
ஊரடி சுப்பராயலு

சாமிநாத சாஸ்திரி.

இந்த உயில் எழுதினது வக்கீல் துரைசாமி ஐயங்கார்.

'எனது அபிப்பிராயத்திற்கிணங்க என் சகோதரனுக் குப் பாதிச்சொத்து எழுதிவைக்கும்படி செய்துவிட்டேன். இனி எப்படியாவது ராஜாம்பாளைக் கோபாலனுக்குக் கல் யாணம் செய்துகொடுக்காமல் இருக்கும்படி செய்துவிட் டேனாகில், அப்போது இந்தக் கிழட்டுப்பிணம் ராஜத்தை நடேசனுக்குத்தானே கல்யாணம் செய்துகொடுக்கவேண் டும்? நடேசனைவிட எல்லா அம்சங்களிலுஞ் சிறந்தவன் கோபாலன் ஒருவனே. கோபாலனுக்கு அப்பால் நம்

ராஜத்தை மணப்பதற்குத் தகுதியானவர் வேறே கிடையாது. எப்படியாவது இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் ரூபாய் ஜாதகம் பார்க்க வரும் ஜோஸ்யர்களுக்குக் கொடுத்தேனுகில் நான் சொல்லுகிறபடி அவர்கள் ஆடப் போகிருர்கள்; பின்னுல் பார்த்துக்கொள்ளுகிறேன். அப்பால் இக்கிழட்டுப் பிணம் வலிய நடேசனைக் கல்யாணஞ் செய்துகொள்ளும்படி சொல்லும். அப்போது கொஞ்சம் பிகுவு செய்து அப்பால் கல்யாணஞ் செய்துவைத்துவிடுகிறேன். ஜோஸ்யர்களைச் சொன்னபடி ஆட்டிவைக்கும் ராமண்ணு நம் கையில் இருக்கும்போது இப்போதே நடேசனுக்கும் ராஜாம்பாளுக்கும் கல்யாணம் ஆனது போலவே எண்ணிக்கொள்ள வேண்டியதுதான். அப்படி என் சகோதரனுக்கு ராஜத்தைக் கல்யாணஞ் செய்து வைக்காவிட்டால் நான் எடுத்தது பெண் ஜன்மம் அல்ல' என்று கனகவல்லி தனக்குள்ளாகவே யோசித்துப் புன் சிரிப்பாய்ச் சிரித்துக்கொண்டாள்.

## 3. ஜோஸ்யத் தரகர்கள்

மறுநாள் காலையில் சாமிநாத சாஸ்திரி வெளியிற் போனவுடனே கனகவல்லி ஜகப்புரட்டு ராமண்ணுவை அழைத்து வரும்படி தனக்கு அந்தரங்கமான வேலைக்காரியை அனுப்பினுள். அவள் போய் யாருக்குந் தெரியாமல் ராமண்ணுவைக் கூட்டிவந்து யாரும் அடிக்கடி போகாததோர் அறையில் அவரை வைத்துவிட்டுக் கனகவல்லிக்குச் சமாசாரம் தெரிவித்தாள்.

''ராமண்ணு! வாருங்கள், வாருங்கள், உட்காருங்கள். பாவம், எங்கிருந்து நடந்து வந்தீர்களோ? அதிக சிரமமாயிருக்கும். கொஞ்சம் தாகசாந்தி செய்துகொள்ளுங்கள்'' என்று சொல்லி எட்டுத் தோசை, பத்து இட்டிலி, பன்னிரண்டு தயிர்வடை, பன்னிரண்டு சுகியன், ரவைலட்டு ஆறு, ஜிலேபி ஏழு, பூந்திலட்டு எட்டு ஆகிய இவைகளை ஒரு பெரிய தட்டில் வைத்துத் தாகசாந்திக்காகச் சுமார் இரண்டு படி காபித் தண்ணீரும் கொண்டுவந்து அவர்

பக்கத்தில் கனகவல்லி வைத்தாள். ஐந்து நிமிஷத்தில் ராமண்ணு தட்டில் உள்ள பதார்த்தங்களை எல்லாம் ஒன்று விடாமல் பட்சித்துவிட்டுக் காபித் தண்ணீரையும் பூரா வாய்ச் சாப்பிட்டுவிட்டு, ''இவ்வளவு சாப்பிட்டதற்கு அரைப்படி கோதுமை ரவையும் ஐவ்வரிசியும் போட்டுப் பால்விட்டுப் பாயசஞ் செய்து இத்துடன் கொடுத்திருந் தால் திருப்தியா யிருக்கும்'' என்று சொல்லிவிட்டுக் கைகால் சுத்தி செய்துகொண்டு, தாம்பூலம் தரித்துக் கொண்டார்.

**கனகவல்லி:** ராமண்ணு! நீங்கள் எனக்கு ஒரு காரியம் எப்படியாவது முடித்துக் கொடுக்கவேண்டும். இப் பேர்ப்பட்ட காரியங்களில் நீங்கள் அதிக சாமர்த்திய சாலி என்பது லோகப்பிரசித்தியே.

**ராமண்ணு:** சமாசாரஞ் சொல்லாமல் முடித்துக் கொடு என்கிருயே? என்ன முடிக்கச் சொல்லுகிருய்? என்னுல் ஆவதாயிருந்து, அதற்குத் தக்கபடி செலவுகள் செய்வதாயிருந்தால் நான் முடிப்பதில் என்ன தடை இருக்கப்போகிறது? நான் செய்வேன், செய்ய மாட்டே னென்று உனக்குத் தெரியாதோ? மேல்வீட்டுச் சுப்பையர் பெண்ணை யாரும் கல்யாணஞ் செய்துகொள்ளமாட்டேன் என்று சொல்லிக் கழித்துவிட்டார்களே! சுப்பையர் பத் துப் பை* வெளியே கிளப்பினுர். பெண்ணையும் சொத்துக் காரன் வீடு சேரும்படி செய்துவிட்டேன். ராமசுப்பையர் மகனுக்குக் கண் குருடு என்று யாரும் பெண் கொடுக்க மாட்டேன் என்றுர்களே. பன்னிரண்டு பை வெளியே கிளம்பவே, ஐட்ஜ் கோபாலையர்பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுக்கும்படி செய்தேன். மிராசு சொக்கலிங்கம் பிள்ளையைக் கொண்டுவந்து சேர்க்கும்படி தாசி செல்லம் எத்தனையோ பேருக்குப் பணங்கொடுத்தாள். யாராலாவது முடிந்ததா? சொக்கலிங்கம் பிள்ளையைப்போல் யோக்கியர் உலகத்திலேயே கிடையாது என்றும் பரஸ்திரீகளைக் கண் டால் தம் தாய்க்கு ஒப்பந்தமாய்ப் பார்க்கிறவரென்றும் இந்த ராஜதானி பூராவும் அறியுமே. அப்பேர்ப்பட்டவர் தாசி செல்லம் வீடு எப்படிச் சேர்ந்தார்? எட்டுப் பையைக்

* ஒரு பை என்பது 500 ரூபாய்.

கிளப்பிக்கொண்டு சேர்த்தேன். இதெல்லாம் போகட்டும்; எட்டு வயதில் தாலி அறுத்துத் தேவலோகத்து ஸ்திரீயைப் போல் இருந்த லட்சுமி தரங்கம்பாடி உலகநாத முதலியார் மேல் ஆசைவைத்து அன்னந் தண்ணீரில்லாமல் அவதிப்பட்டாளே. அவர்களை எப்படிச் சேர்த்துவைத்தேன்? லட்சுமியிடத்தில் ஐந்து பையும் முதலியாரிடத்தில் ஐந்து பையும் வாங்கிக்கொண்டு முடித்துவிட்டேன். ராமண்ணுவால் முடியாத சங்கதி ஒன்று உலகத்தில் உண்டோ? இன்னும் நான் செய்திருக்கும் சங்கதிகளைச் சொல்லிக்கொண்டிருந்தால் இந்த வருஷமெல்லாங்கூடக் காணுது. நடக்க வேண்டிய சங்கதியுஞ் சொல்லி எத்தனை பை தளர்த்துகிறுயென்றும் சொன்னுல் பைகளின் கனத்திற்குத் தக்கபடி முடியும் முடியாது என்று சொல்லிவிடுகிறேன்.

**கனகவல்லி:** தங்களிடத்தில் சொல்லாத ரகசியம் என்ன இருக்கிறது? எங்கள் அகத்துக் கிழவர் ராஜாம்பாளை நடேசனுக்குக் கொடுக்கக்கூடாதென்று சொல்லிக் கோபாலனுக்குக் கொடுக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்கிறுர். நாளைக்குக் கிருஷ்ணமாசாரியையும், சுப்பிரமணிய சாஸ்திரிகளையும் கூப்பிட்டு ஜாதகங்கள் பார்க்கப் போகிறுர். ஜாதகங்களைப் பார்த்துவிட்டுக் கோபாலனுக்கும் ராஜாம்பாளுக்கும் பொருத்தமில்லை என்பதாகவும், கோபாலனுக்கு ராஜாம்பாளைக் கல்யாணஞ் செய்தால் மூன்று மாதத்திற்குள் அவள் இறந்து போவாளென்றும் அவர்கள் சொல்லும்படி நீர் செய்யவேண்டும். என்னிடம் பணம் காசு அதிகமில்லையென்பது உமக்கு நன்ருய்த் தெரியும். எப்படியாவது ஒரு பை கொடுத்துவிடுகிறேன்.

**ராமண்ணு:** கோபாலனும் ராஜாம்பாளும் மிகவும் நல்லவர்கள். அப்படியிருக்க அவர்களுக்கு விரோதமாய்ச் செய்வதானுல் என் மனம் எப்படி ஒப்பும்? மேலும் ஜோஸ்யம் பார்ப்பதே மகா பாவம்; அப்படியிருக்க உள்ளதை இல்லையென்று ஜோஸ்யர்கள் சொல்லுவார்களாகில் அதற்கு மேற்பட்ட பாவம் உலகத்திலேயே கிடையாது. இந்த வேலை என்னுல் முடியாது; வேறு யாரையாவது வைத்துச் செய்துகொள். வேண்டுமானுல்

போகிற வழியில் ஜோஸ்யர்கள் இருவரையும் உன்னிடம் அனுப்பிவிடுகிறேன்; நீயே நேரில் பேசிக்கொள்.

**கனகவல்லி:** உங்களால் முடியாதது ஒன்று உண்டோ? அவர்களை இங்கே வரச்சொன்னால் கிழட்டுப் பிராமணர் சந்தேகப்படமாட்டாரோ? எல்லாம் தெரிந்திருந்தும் நீர் இப்படிச் சொல்வதெப்படி? இரண்டு பையாவது கொடுத்துத் தொலைக்கிறேன்.

**ராமண்ணு:** இந்தக் கிழட்டுப் பிராமணன் கூப்பிடும் ஒவ்வொரு ஜோசியருக்கும் இரண்டு பை வீதம் நீ கொடுப்பதாக ஒப்புக்கொள்வதாயிருந்தால் நான் தலை கொடுக்கிறேன். நீ எனக்கு ஒன்றும் கொடுக்கவேண்டாம். இல்லாவிட்டால் என்னால் முடியவே முடியாது.

**கனகவல்லி:** சரி, அப்படியே கொடுக்கிறேன். எப்படியாவது முடித்துவிட வேண்டியது உம்மைச் சேர்ந்த வேலை.

ராமண்ணு கனகவல்லியிடம் விடைபெற்றுக்கொண்டு வீட்டுக்குப் போனார். வீட்டில் காஞ்சீபுரம் கஸ்பா சப்-மாஜிஸ்டிரேட் ஆபீஸ் சேவகர்கள் இருவர் காத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்ட மாத்திரத்தில் ராமண்ணுவுக்கு மிக்க பயமுண்டாகி உடம்பெல்லாம் ஸ்நானம் செய்ததுபோல் வேர்வை வடிய ஆரம்பித்துவிட்டது. அவர்களைக் கண்டு என்ன சமாசாரம் என்று கேட்டார். அவர்கள், ''யஜமான் தங்களைக் கையோடு கொண்டுவரச் சொல்லியிருக்கிறார்'' என்றார்கள். ''என்னப்பா, சம்மன் கொண்டுவந்தீர்களா? அல்லது வாரண்டு கொண்டுவந்திருக்கிறீர்களா? உண்மையைச் சொல்லிவிடுங்கள். நானோ ஏழைப் பிராமணன்; யாருக்கும் ஒரு கெடுதியும் செய்யாதவன். என்மேல் யாராவது அபாண்டமாய் எஜமானிடம் ஏதாவது சொன்னார்களா? நீங்கள் எப்போதும் அவரிடம் இருக்கப்பட்டவர்களாயிற்றே, உங்களுக்குத் தெரியுமே; சொல்லக்கூடாதா? சொன்னால் ஓர் அணுக் கொடுக்கிறேன்'' என்று சொல்லிக்கொண்டு தம் மனத்திற்குள், ''நான் செய்திருக்கும் அநேக அக்கிரமங்களில் எது வெளிக்கு வந்துவிட்டதோ தெரியவில்லையே! இந்தச் சப் மாஜிஸ்டிரேட் ஆயிரம் ஆயிரமாக லஞ்சம் வாங்குகிறவன் என்கிறார்களே, அவன் ஒரு

வழியில் வாங்கினால் நான் ஒரு வழியில் வாங்குகிறேன். என்னிடம் அதிகப் பணம் இருக்கிறதென்று எல்லாருக்கும் தெரியுமே. என்னை அவன் இலகுவில் விடப்போகிறானா?'' என்று எண்ணிக்கொண்டார். இதற்குள் சேவகர்கள் அவரை அவசரப்படுத்திக் கையோடு இட்டுக்கொண்டு போனார்கள்.

காஞ்சீபுரம் கஸ்பா சப் மாஜிஸ்டிரேட் நீலமேக சாஸ்திரிகள் என்பவர் செங்கல்பட்டிற்கு அருகிலுள்ள ஒரு கிராமத்திலிருந்த வைதிகராகிய சுப்பிரமண்ய சாஸ்திரிகளின் ஏக குமாரர். சுப்பிரமண்ய சாஸ்திரிகள் தம் புத்திரனை அதிகக் கஷ்டப்பட்டு உஞ்சவிருத்திசெய்து பள்ளிக்கூடத்தில் வைத்தார். நீலமேக சாஸ்திரிகளும், வாலாயமாய் யூனிவர்ஸிடி பரீட்சைக் கேள்விகளைப் பரீட்சைக்குச் சில நாட்களுக்கு முன்னாலேயே வருவித்து வைத்துக்கொண்டு அவற்றை வேண்டியவர்களுக்கு விற்றுப் பணஞ் சம்பாதித்து, கேள்விகளைக் கொடுக்கும் யூனிவர்ஸிடி உத்தியோகஸ்தர்களுக்குப் பாதியைக் கொடுத்துவிட்டு மற்றப் பாதியை வைத்து ஜீவனஞ் செய்துகொண்டிருக்கும் ஸ்ரீநிவாசையங்காரவர்கள் வீட்டில் வருஷம் பூராவாய் வேலைசெய்வார். பரீட்சைக் காலத்தில் மட்டும் போய் ஸ்ரீநிவாசையங்கார் சொல்லுகிறபடி எழுதிவிட்டு வந்துவிடுவார். இவர் பரீட்சையில் முதன்மையாகவே தேறிவந்தார். இப்படியே பி. ஏ. பரீட்சையிலும் தேறின உடனே, சப் ஜட்ஜ் நரசிம்ம சாஸ்திரி பெண்ணை ஐயாயிரம் ரூபாய் வரதட்சிணையென்று வாங்கிக்கொண்டு கல்யாணஞ் செய்துகொண்டார். முற்காலத்தில் ஆசையை மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்று மூன்று விதமாக வகுத்தார்கள். (தற்காலத்தில் மேலுத்தியோகஸ்தர்களைத் திருப்தி செய்யவேண்டுமானால் முதலிற்சொன்ன மண்ணாசையை விட்டுவிட்டுப் பொன்னாலும் பெண்ணாலும் திருப்தி செய்வது அநேகருடைய கொள்கையாயிருப்பது உலகமறிந்த இரகசியமே.) அப்படியே நமது நீலமேக சாஸ்திரிகளும் அவருடைய மேலதிகாரிகளைப் பொன்னாலும் பெண்ணாலும் திருப்திசெய்து காஞ்சீபுரம் சப் மாஜிஸ்டிரேட் வேலை பெற்றார். அப்பால் அநேக இடங்களுக்கு மாற்றப்பட்டுக் கடைசியில் காஞ்சீபுரமே வந்து

சேர்ந்தார். பாவம்! அவருக்கு ஐம்பத்து நாலு வயசாகி விட்டது. அவருக்கு நான்கு புத்திரர்களும் இரண்டு புத்திரிகளும் பிறந்து, எல்லோருக்கும் கல்யாணமாகி இப்போது பதினாறு பேரன் பேத்திகள் இருக்கிறார்கள். இப்படி இருக்கும்போது அரசன் என்றும், ஏழை என்றும் வித்தியாசம் பாராட்டாத எமதர்மராஜன் தன் தூதர்களை அனுப்பி நீலமேக சாஸ்திரிகளின் பெண்சாதியை மண்ணுலகு விட்டு விண்ணுலகிற்குக் கொண்டுபோய் விட்டான். தம்முடைய பேருக்கிணங்க, சாஸ்திரிகள் நீலமேக வர்ணமாகவே இருப்பார். நாலரை அடி உயரம், ஐந்தடி சுற்றளவுள்ளவர். அநேக உத்தியோகஸ்தர்களைப்போல் உட்கார்ந்து எழுந்திருப்பதே சாஸ்திரிகளுக்கு மிகவும் கஷ்டம்.

இரண்டு பேர் சேவகர்கள் போயும் இன்னும் ராமண்ணாவைக் கொண்டுவரவில்லையே என்று இன்னொரு சேவகனை அனுப்பி, ''எங்கிருந்தாலும் உடனே கொண்டுவா'' என்று சொல்லி நீலமேக சாஸ்திரிகள் அனுப்பினார். நல்ல வேளையாய்ச் சேவகன் தெருவிற்குப் போவதற்குள் ராமண்ணாவைக் கொண்டுவந்துவிட்டார்கள். அவரைப் பார்த்தவுடனே தம் குலதெய்வத்தைப் பார்த்தவர் போல் எழுந்து, ராமண்ணாவைச் சோபாவில் உட்கார வைத்துத் தாமும் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டார். சேவகர்களைக் கூப்பிட்டு, ''நான் உங்களைக் கூப்பிடுகிற வரையில் நீங்கள் உள்ளே வராமல் இருக்கிறதுந் தவிர, எங்கிருந்து அவசரமாகிய தந்தி வந்தாலும், கொலை நடந்ததென்று யார் வந்து சொன்னாலும், என்னைப் பார்க்க, கலெக்டரல்ல, கவர்னர்-ஜெனரல் துரை வந்தாலும் அவர்களிடம் நான் வெளியே போயிருக்கிறேனென்று சொல்லவேண்டியது. எந்தக் காரணத்தை உத்தேசித்தும் என்னைத் தொந்தரவு செய்யக்கூடாது'' என்று கடூரமான உத்தரவளித்து அவர்களை முன்பக்கத்தில் பாரா இருக்கச் சொல்லிவிட்டு ராமண்ணாவிடம் பேச ஆரம்பித்தார். இதற்குள்ளாக ராமண்ணாவுக்கு இருந்த பயமெல்லாந் தீர்ந்து, 'நம்மை ஏதோ காரியமாக அழைத்திருக்கிறான்; இவன் ஊரில் லஞ்சம் வாங்கினால் நான் இவனிடம் பலமாய் வாங்காமல் விடப்போகிறதில்லை;

ஒரு கை பார்த்துக்கொள்கிறேன்' என்று யோசனை செய்துகொண் டிருந்தார்.

ராமண்ணு: எஜமானவர்கள் நாயாகிய என்னை ஒரு பொருட்டாக எண்ணிக் கூப்பிட வைத்தபோதே எனது ஜன்மம் சாபல்யமாகிவிட்டது. இந்த நாய் செய்ய வேண்டிய வேலை உத்தரவானுல் உடனே முடித்துவிடும்.

நீலமேக சாஸ்திரி: ஓய் ராமண்ணு, நான் பேச்சு வளர்க்கப்பட்டவனல்ல. சுருக்கமாய்ச் சொல்லுகிறேன். ஜாக்கிரதையாய்க் கேளும். சாமிநாத சாஸ்திரி பெண் ராஜாம்பாளைக் கோபாலனுக்குக் கொடுக்க உத்தேசித்து நாளை ஜாதகங்கள் பார்க்கப் போகிருர்களாம். எப்படி யாவது அவர்கள் இருவருக்கும் பொருத்தமில்லை என்று ஜோஸ்யர்களை விட்டுச் சொல்லச்சொல்லி அந்தப் பெண்ணை எனக்குக் கல்யாணஞ் செய்து வைத்துவிட வேண்டியது. இந்த வேலை உம்மால் ஆகுமே யல்லாமல் வேறே யாராலும் ஆகாது. நீர் முடித்துக் கொடுத்தால் உமக்குச் சரியானபடி இனும் அளிக்கிறேன்.

ராமண்ணு: தங்களுடைய கியாதி இந்த ராஜதானி பூராவும் பரவியிருக்கிறது. தாங்கள் போலீஸ் இன்ஸ்பெக்டரைக் கூப்பிட்டு, ஏதாவது கொள்ளைக் கேசில் கோபாலனைச் சம்பந்தப்படுத்திச் சிறையில் அடைத்துவிட்டால் அப்பால் அவனுக்குப் பெண் கொடுக்கமாட்டார்கள். நடேசனுக்குக் கொடுப்பதில்லை என்று கிழட்டுப் பிணம் சொல்லிக்கொண் டிருக்கிறது. அப்பால் தாங்கள் பெண் கேட்டால் கொடுத்துவிடுவார்கள். தங்களுக்கு என்ன குறைவு இருக்கிறது? பத்துலட்ச ரூபாய் சம்பாதித்திருக்கிறீர்கள். வர்ணத்திலோ சாக்ஷாத் கண்ணனை ஒத்திருக்கிறீர்கள். ரூபத்தில் தங்களைப் பார்த்த பெண்கள் இன்னொருதரம் திரும்பிப் பார்க்காமல் இருக்கமாட்டார்கள். எல்லாரும் விரும்பத்தக்க கௌரவமான சப் மாஜிஸ்டிரேட் உத்தியோகம் வகிக்கிறீர்கள். இவ்வளவிருந்தும் தாங்கள் என்னிடம் சொல்வானேன்? ஜோஸ்யர்களைக் கூப்பிடவாவது, அவர்கள் பொருத்தமில்லை என்று சொல்லவாவது! இது நடக்கப்பட்ட சங்கதியோ? நியா

யஞ் செலுத்தவேண்டிய தாங்களே இப்படிச் சொன்னால் இன்னும் மூட ஜனங்கள் என்ன செய்யமாட்டார்கள்?

**நீலமேக சாஸ்திரி:** இந்தக் கதையெல்லாம் அளக்காதீர்; ஐந்நூறு அல்லது ஆயிரமாவது கொடுத்துத் தொலைக்கிறேன்; எப்படியாவது காரியத்தை முடித்துவிடும்.

**ராமண்ணா:** என்ன இப்படிப் பேச ஆரம்பிக்கிறீர்கள்? ஐந்நூறு, ஆயிரம் கொடுக்கிறேனென்று சொல்லிவிட்டு அப்பால் என்னைப் பயமுறுத்தி, பணம் வாங்கினானென்று சிறைச்சாலையில் வைப்பதற்குத் தாங்கள் ஏற்பாடு செய்கிறீர்கள்போல் இருக்கிறதே!

**நீலமேக சாஸ்திரி;** எங்கள் அப்பாணை அப்படிக் கில்லை. சாமி சாக்ஷியாய் நான் உண்மைதான் சொல்லுகிறேன்.

**ராமண்ணா:** தங்கள் வாயிலிருந்து வரும் வார்த்தைகளைக் கேட்கக் கேட்க எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஜோஸ்யர்கள் உண்மை சொல்வதிலேயே எவ்வளவோ பாவம் இருக்கிறதென்று அடிக்கடி பிராயச்சித்தங்கள் செய்துகொள்ளுகிறார்கள். அப்படி இருக்க, நன்றாய் மனத்திற்குத் தெரிந்து பொருத்தம் உள்ளதை இல்லை என்று சொல்வார்களோ? ஒருகாலும் சொல்லவே மாட்டார்கள். அப்படிச் சொன்னால் அவர்கள் பிராயச்சித்தம் செய்வதற்கே எங்கேயாவது பதினாயிரம் ரூபாய் செலவழித்து யாகம் செய்தாலல்லவோ அதனால் வந்த தோஷம் நிவர்த்தியாகும்? நமக்காகப் பொய் சொல்லிவிட்டுப் பதினாயிரம் ரூபாய் செலவழித்து யாகஞ் செய்வதல்லாமல் அந்தச் சிரமத்தை யார் பொறுப்பார்கள்? இதெல்லாம் நடக்கப்பட்ட காரியாதிகளல்லவே? எஜமானவர்கள் இந்த ஏழையை இப்படியெல்லாம் சோதிக்கிறது எஜமானவர்கள் கௌரவத்துக்கு அழகல்லவே

**நீலமேக சாஸ்திரி:** முன்னாலேயே இந்த மூட்டை எல்லாம் அளக்கவேண்டாம் என்றேனே. பதினாயிரம் ரூபாய் கொடுத்தால் சரிப்படுத்துகிறேனென்று சொல்வதற்குப் பதிலாக யாகம் செய்யவே[ண்டு]ம் என்கிறீர். நல்லது; நீர் கேட்கிறபடி கொடுத்துத் தொலைக்கிறேன். காரியத்தைச் சாதித்துவிடும்.

ராமண்ணு: கடிக்க வரும் நாய்க்குக் கருப்புக்கட்டி போட்டால்தானே அது சும்மாயிருக்கும்? அதைப்போல் அந்த ஜோஸ்ய நாய்களுக்கு முதலில் ரூபாய் கொடுத்து விட்டால், தாங்கள் சொன்னபடியே ஆடுவார்கள்.

நீலமேக சாஸ்திரி: நான் பின்னுல் கொடுப்பேனே இல்லையோ என்று முதலில் கொடுக்கச் சொல்லுகிறீர், அப்படியே கொடுத்துவிடுகிறேன். இதோ செக் எழுதிக் கொடுக்கிறேன்; வாங்கிக்கொண்டுபோம்.

ராமண்ணு: எனக்குச் செக்கும் வேண்டாம்; நோட்டும் வேண்டாம். சவரன்களாய் மாற்றிக் கொடுக்க உத்தரவாகட்டும்.

நீலமேக சாஸ்திரி லஞ்சம் வாங்குவது சவரன்களாதலால் தம் இரும்புப் பெட்டியைத் திறந்து அந்தத் தொகையை உடனே கொடுத்து அனுப்பிவிட்டார். ராமண்ணு தாம் அன்று விழித்த முகம் நல்ல முகமென்றும், இப்படியே வருஷத்திற்கு இரண்டொரு முறையாவது இப்பேர்ப்பட்ட வியாபாரம் நடக்கும்படி ஈசன் அருள்புரிய வேண்டுமென்றும் பிரார்த்தித்துக்கொண்டே வீட்டிற்குப் போய்ச் சவரன்களை எல்லாம் பத்திரமாய் வைத்துவிட்டு இருநூறு ரூபாய் எடுத்துக்கொண்டு போய் ஜோஸ்யர்கள் இருவருக்குங் கொடுத்து, வேண்டிய ஏற்பாடு செய்துவிட்டார். மறுநாள் சாமிநாத சாஸ்திரி ஜோஸ்யர்களை அழைத்துவரும்படி செய்து கோபாலனுடைய ஜாதகத்தையும் இராஜாம்பாளுடைய ஜாதகத்தையும் கொடுத்துச் சரியாய்ப் பார்த்து யாதொன்றும் ஒளிக்காமற் சொல்லவேண்டுமென்று சொன்னுர். அவர்கள் இரண்டு மூன்று மணி நேரம் பரல்போட்டு, லக்கினஸ்புடம் முதலியவைகளை யெல்லாம் செய்து பார்த்து ஒன்றும் சொல்லாமல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண் டிருந்தார்கள். இப்படியிருக்குந் தருணத்தில் ராமண்ணுவும் திருப்தியாய்ப் பிராம்மணுர்த்தம் சாப்பிட்டுவிட்டு, சாப்பிட்ட அலுப்புத் தீரும்படி பெருமாள் கோவிலிலுள்ள கல்மண்டபத்தில் இரண்டு நாழிகையாய்ப் படுத்து இப்படியும் அப்படியும் புரண்டுவிட்டுச் சாமிநாத சாஸ்திரி வீடு வந்து சேர்ந்தார். அவரைக் கண்டவுடனே சாமிநாத சாஸ்திரி அவருக்கு ஆசனமளித்து

ராமண்ணுவிடம் ராஜாம்பாளைக் கோபாலனுக்குக் கல்யாணஞ் செய்துகொடுப்பதாக உத்தேசித்து ஜாதகம் பார்ப்பதாகவும் ஜோஸ்யர்கள் இரண்டு மூன்று மணிநேரம் ஜாதகங்களைப் பார்த்துவிட்டுப் பல தடவை சொல்லும்படி கேட்டும் ஒன்றுஞ் சொல்லாமல் வாய் மூடிக்கொண் டிருக்கிற படியால், ராமண்ணுவையும் ஜாதகங்களைப் பார்த்து உண்மை தெரியப்படுத்த வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். ராமண்ணு தமக்கு ஜாதகங்கள் பார்ப்பதில் அவ்வளவு திறமையில்லையென்றும், இருந்தாலும் தமக்குத் தெரிந்தவரையில் பார்த்துச் சொல்லுவதாகவும் சொல்லிவிட்டு, ஜாதகங்களை ஒரு மணி நேரம் வரையில் பார்த்துவிட்டு, "ஈசுவரச் செயல் அப்படி இருக்கும்போது நம்மால் என்ன செய்ய முடியும்?" என்று சொல்லிக்கொண்டே ஜாதகங்களைக் கீழே வைத்துவிட்டு மௌனமாயிருந்தார்.

**சாமிநாத சாஸ்திரி:** ஏன் ராமண்ணு! நீரும் மௌனமாயிருக்கிறீரே? உள்ளதைச் சொல்லுமே; இதில் என்ன பயம்?

**ராமண்ணு:** இந்த ராஜதானியில் நிகரில்லாத இரண்டு ஜோஸ்யர்கள் ஜாதகங்களைப் பார்த்துவிட்டுச் சும்மா இருக்கும்போது, நீர் என்னைக் கேட்பது மரியாதையோ? அவர்கள் வாயால்தான் வரட்டுமே. பாவம்! கோபாலன் மிகவும் நல்ல பையன். அவனுக்குச் சமானமாய் இந்த ஊரிலேயே யாரையும் சொல்லக்கூடாது. ராஜாம்பாளுக்கு அவனையே கல்யாணஞ் செய்துகொள்ளப் பிரியம்போல் இருக்கிறது. கோபாலனுக்கும் ராஜத்தின் பேரில் வெகு பிரியம். ஆனால் ஈசுவரக் கருணை மாத்திரஞ் சற்றுக் குறைவாக இருக்கிறதுபோல் தோற்றுகிறது.

**சாமிநாத சாஸ்திரி:** ஓய் கிருஷ்ணமாசாரி! ஏன் மௌனமாக இருக்கிறீர்? உள்ளதைச் சொல்லுமே.

**கிருஷ்ணமாசாரி:** இல்லை; சொல்லவேண்டியதுதான். ஆனாலும் சுப்பிரமணிய சாஸ்திரிகள் வாயால் வந்துவிட்டால் நல்லது.

**சுப்பிரமணிய சாஸ்திரி:** ஓய் கிருஷ்ணமாசாரியரே, என்ன உமக்கு ஒன்றும் தெரியவில்லைபோல் இருக்கிறது.

"உண்பான் தின்பான் பைராகி, குத்துக்கு நிற்பான் வீரமுஷ்டி" என்பதைப்போல் ஐந்து வயது முதல் சாமி நாத சாஸ்திரி சொத்தைப் பலமாய்த் தின்றுவிட்டு இன்று கொஞ்சம் பிரதிகூலமாகச் சொல்லவேண்டியதை என்னைச் சொல்லச் சொல்லுகிறீரே, இது தர்மமா? இப்படி இன்னொரு தரஞ் சொன்னால் அப்பால் உம்முடைய முகத்தி லேயே நான் விழிக்கமாட்டேன்.

**கிருஷ்ணமாசாரி:** நீர் என் முகத்தில் விழிக்காவிட் டால் அத்தோடு என் அதிருஷ்டமே போய்விடும்போல் இருக்கிறது. அந்த மட்டும் வாயை மூடும்.

இப்படிக் கிருஷ்ணமாசாரியார் சொன்னவுடனே சுப்பிரமணிய சாஸ்திரிகளுக்கு அதிகக் கோபம் வந்து, "நேற்றுப் பிறந்து கோவணங் கட்டத் தெரியாத சின்னப் பயலோடு கூட வந்ததாலல்லவா இவ்வளவு பேசினாய்?" என்று சொல்லி, கிருஷ்ணமாசாரியைக் கன்னத்தில் ஓர் அறை அறைந்தார். உடனே கிருஷ்ணமாசாரியரும் சுப் பிரமணிய சாஸ்திரிகளை இரண்டு அறை கொடுத்தார். மத்தியில் உட்கார்ந்திருந்த ராமண்ணா இருவரையும் சமா தானப்படுத்தப் போகையில் இருவருஞ் சேர்ந்து அவரைப் புடைத்தார்கள். அப்பால் சாமிநாத சாஸ்திரி எல்லாரை யுஞ் சமாதானப்படுத்திச் சிறிது கோபத்துடன், "என் ஏக புத்திரிக்குக் கல்யாணம் செய்ய ஜாதகம் பார்க்கச் சொன்னால் பிராமணர்கள் என்ற உயர்குலத்தோருக்குரிய நடை நொடி பாவனைகளை விட்டுக் கேவலம் மிலேச்சர் களைப் போல் நடந்துகொண்டீர்களாகையால் உங்கள் அபிப்பிராயம் கேட்பதில் பிரயோஜனம் இல்லை" என்று சொல்லிவிட்டுப் பேசாமல் இருந்துவிட்டார். அப்படிச் சாமிநாத சாஸ்திரி சொன்னவுடனே ராமண்ணா, "நாம் கொஞ்சம் ஜாஸ்தியாய்ப் போய்விட்டோம்; இப்படியெல்லாஞ் செய்தால், 'நீ சொல், நீ சொல்' என்று அடித்துக்கொண்டார்களே, இதில் எவ்வளவு கெடுதல் இருக்குமென்று நினைப்பானென்று செய்யச் சொன்னேனே. பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்ததே? இன்னும் நான் சும்மா இருந்தால் எல்லாரை யும் எழுந்து போகச் சொல்லிவிட்டு வேறு ஜோசியர் களைக் கூப்பிட்டால் அவர்கள் என் பேச்சைக் கேட்பார்

களோ என்னவோ?'' என்று யோசனை செய்துகொண்டே இருவரையும் சமாதானப் படுத்துவதைப்போல் சமாதானப்படுத்தி இருவரையும் சாமிநாத சாஸ்திரியிடம் மன்னிப்புக் கேட்கும்படி செய்தார். அப்பால் சாமிநாத சாஸ்திரி சற்றுக் கோபம் தீர்ந்து உள்ளதைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

**சுப்பிரமண்ய சாஸ்திரிகள்:** எல்லாஞ் சரியாய்த் தான் இருக்கிறது. ஆனால் லேசாய்ச் செவ்வாய் தோஷம் மாத்திரம் இருக்கிறது.

**கிருஷ்ணமாசாரி:** ஏங்காணும், அப்படிச் சொல்லுகிறீர்? லேசாய்ச் செவ்வாய் தோஷம் இருக்கிறதென்றீரே! கண்டிப்பாய்ச் செவ்வாய் தோஷம் இருக்கிறதென்றும் கோபாலனுக்குக் கல்யாணஞ் செய்தால் கட்டாயமாய்ப் பெண் ஆறுமாதத்திற்குள் இறப்பாளென்றும் சொல்லுமே.

**ராமண்ணு:** ஓய் கிருஷ்ணமாசாரி, செவ்வாய் தோஷம் இருக்கிறதென்றால் யாருக்குந் தெரியாதா? ஏன் இவ்வளவு பச்சையாய்ச் சொல்லுகிறீர்! உமக்குக் கொஞ்சமாவது புத்தியில்லைகாணும்!

**கிருஷ்ணமாசாரி:** சாமிநாத சாஸ்திரிகள் உண்மையைச் சொல்லச்சொன்னதால் சொல்லிவிட்டேன். நான் மாத்திரம் முகஸ்துதியாய்ப் பேசுகிறவனல்லவென்று எல்லாருக்குந் தெரியுமே. உண்டு என்றால் உண்டு என்பேன்; இல்லை என்றால் இல்லை என்பேன். மற்றவர்களைப்போல் வாழைப்பழத்தில் ஊசி இறக்குவதைப்போல் எனக்குப் பேசத் தெரியாது.

இதைக் கேட்டவுடனே சாமிநாத சாஸ்திரிக்குச் சற்று விசனமும் சந்தேகமும் பிறந்தன. ஏனென்றால், முன்னால் ஒரு தரம் கும்பகோணம் ஜ்யோதிஷபாஸ்கர நீலமேக சியாமளவர்ண திருநீலகண்ட சாஸ்திரிகள் இந்த ஜாதகங்களைப் பார்த்தபோது பொருத்தம் சரியாயிருக்கிறதென்றும், எந்த விதமான குற்றமும் சொல்லக்கூடாதென்றுஞ் சொல்லியிருந்தார். ஆகையால் இந்த ஜோஸ்யர்களிடம் அதெல்லாம் ஒன்றும் சொல்லாமல் அவரவர்களுக்குத் தக்க மரியாதைகள் செய்து அனுப்பிவிட்டுச் சாமிநாத சாஸ்திரி கும்பகோணத்திலிருக்கும் தம் இஷ்ட

ரான பாலகிருஷ்ணமூர்த்திக்குப் பின்வருமாறு தந்தி கொடுத்தார்:

"இந்தத் தந்தி கண்டவுடனே கும்பகோணம் ஜோசியரான நீலகண்ட சாஸ்திரிகளைக் கையோடு கொண்டு வருவதன்றி அவரைப் பார்த்த நிமிஷம் முதல் அவர் யாரோடும் பேசாதபடி ஜாக்கிரதையாகக் கூட்டிக் கொண்டு வரவேண்டியது."

சாமிநாத சாஸ்திரி கொடுத்த தந்தி வந்து சேர்ந்தவுடனே பாலகிருஷ்ணமூர்த்தியும் சாஸ்திரிகள் சொன்ன பிரகாரமே தம் சாமர்த்தியத்தால் நீலகண்ட சாஸ்திரிகள் வேறே யாருடனும் பேசாதபடி காஞ்சீபுரம் கொண்டு போய்ச் சேர்த்தார்.

தந்தி கொடுத்த சமாசாரம் ராமண்ணுவுக்கு எப்படியோ தெரிந்து கும்பகோணத்திலிருந்து வரும் வழியில் எவ்வகையிலாவது நீலகண்ட சாஸ்திரிகளைக் கண்டு பொருத்தம் இல்லை என்று சொல்லும்படி ஏற்பாடு செய்யச்சொல்லித் தம் சிஷ்யர்களில் ஒருவரை அனுப்பினுர். ஆனுல் கிருஷ்ணமூர்த்தியோ யாரையும் சாஸ்திரிகளின் பக்கத்தில் நெருங்கவிடவில்லை. சிஷ்யன் உபகாரமின்றியே திரும்பிவந்து நடந்த விருத்தாந்தங்களைச் சொன்னவுடனே ராமண்ணு, "உன்னைச் சாமர்த்தியசாலி என்று நினைத்திருந்தேன்; ஆனுல் கடைசியில் நீ அவ்வளவு கெட்டிக்காரனல்லவென்று ருஜூப்படுத்தி விட்டாய். இதற்குள் ஜாதகம் பார்க்க ஆரம்பித்து விடுவார்களாகையால் நான் இனி அஸ்வாரசியமாக இருந்தால் எனக்குப் பண நஷ்டமாவதன்றிக் கேவலமும் சம்பவிக்கும்" என்று சொல்லிக்கொண்டே அவசரமாகச் சிறு கடிதமொன்று எழுதிக்கொண்டு ஆற்றங்கரைக்குப் போய்த் தண்ணீர்ப் பாம்பு ஒன்றைப் பிடித்து வாழையிலையிற் பொதிந்து மடியில் வைத்து மேலே போட்டிருக்கும் அங்கவஸ்திரத்தால் மூடிக்கொண்டு சாமிநாத சாஸ்திரிகளின் வீடுபோய்ச் சேர்ந்தார். இதற்குள்ளாக நீலகண்ட சாஸ்திரிகள் ஜாதகங்களைப் பார்க்க ஆரம்பித்துவிட்டார். முன்னுல் ஜோசியம் பார்த்துச் சொன்ன இரண்டு ஜோசியர்களும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு, 'இன்றே நாம் இந்த ஊரை விட்டு வேறு எங்கேயாவது

ஓடிப்போக வேண்டியதுதான். நமது மோசம் இனிக் கொஞ்ச நேரத்தில் வெளியாகிவிடப்போகிறது' என்று நினைத்துக்கொண்டிருக்குஞ் சமயத்தில் ராமண்ணு வரவே, அவரைக் கண்டதும், 'இவர் ஏதாவது ஏற்பாடு செய்திருப்பார். இல்லாவிட்டால் தைரியமாய்ச் சபைக்கு வர மாட்டார்' என்று சற்றுத் தைரியமாக இருந்தார்கள். ராமண்ணு வந்ததும் நீலகண்ட சாஸ்திரிகள் பக்கத்தில் வந்து உட்கார வந்தார். ஆனால் கிருஷ்ணமூர்த்தியோ அவரைச் சாஸ்திரிகள் பக்கத்தில் உட்காரவிடாமல் அதிக மரியாதையாய்த் தம் பக்கத்தில் உட்காரும்படி அழைத்து உட்காரச்சொன்னார். ராமண்ணு வந்து ஐந்து நிமிஷங்களுக்கப்பால் திடீரென்று எல்லாருக்கும் மத்தியில் ஒரு பாம்பு ஓட ஆரம்பித்தது. பாம்பென்றால் படையும் நடுங்குமே. உட்கார்ந்திருந்தவர்களில் சிலர் ஓட ஆரம்பித்தார்கள். சிலர் தடி எடு என்றார்கள். அதற்குள் தடி எடுக்கச் சென்றவர்களில் ஒருவர், "நீ அடிக்கப் போகாதே" என்றார். சிலர், "வேலைக்காரனைக் கூப்பிட்டு அடிக்கச்சொல்" என்றார்கள். ஆக இப்படி அல்லோல கல்லோலப்படுஞ் சமயத்தில் ராமண்ணு எழுதிக்கொண்டு வந்திருந்த கடிதத்தை யாரும் பார்க்காதபடி நீலகண்ட சாஸ்திரிகளிடம் கொடுத்துவிட்டார். ஆபத்துக்குப் பாவம் இல்லையாதலால் தெருவில் இருந்த பறை முனிசாமி உள்ளே போய்ப் பாம்பை அடித்து வெளியே கொண்டு போனான்.

நீலகண்ட சாஸ்திரிகள் கையில் கொடுக்கப்பட்ட கடிதத்தின்மேல், "ஜாக்கிரதை! இந்தக் கடிதத்தை வாசித்துப் பார்த்துவிட்டு மறுகாரியம் பார்க்கவேண்டியது. ரகசியமான விஷயமாதலால் இந்தக் கடிதம் உம்மிடம் இருப்பதே யாருக்குந் தெரியக்கூடாது!" என்று எழுதியிருந்தது. எல்லோரும் அவரவர்களுடைய ஸ்தானங்களில் அமர்ந்தார்கள். நீலகண்ட சாஸ்திரிகள் மட்டும் வெளியில் போய்வர வேண்டுமென்றார். கிருஷ்ணமூர்த்தி தாமுங் கூட வருவதாகச் சொல்லி அவரை அழைத்துக் கொண்டு போய் வீட்டிலுள்ள கக்கூசைக் காண்பித்து உள்ளே போய்ப் பாதை நிவாரணஞ் செய்துகொள்ளும்படி சொல்லி வெளியே காவலிருந்தார். சாஸ்திரிகள்

தக்கூசுக்குள் போனவுடனே கடிதத்தைத் திறந்து பார்த்தார். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது :

"இந்த ஊர் சப் மாஜிஸ்டிரேட்டாருடைய நடைநொடி பாவனைகளும் குணமும் உமக்கு நன்ருய்த் தெரியுமே. மேலும் இக்கடிதம் உம் கையில் கொடுத்தவருடைய சுபாவமும் உமக்குத் தெரியும். கோபாலனுக்கும் ராஜாம்பாளுக்கும் பொருத்தமில்லை என்பதாகவும் செவ்வாய் தோஷம் இருக்கிறதென்றும் நீர் சொல்ல வேண்டியது. அப்படிச் சொன்னுல் ஆயிரம் ரூபாய் இந்தக் கடிதம் உமது கையிற் கொடுத்தவரிடம் நீர் பெற்றுக்கொள்ளலாம். அப்படிச் சொல்லாமல் வேறு விதமாக நீர் சொல்லும் விஷயத்தில் சாக்ஷாத் ஸ்ரீ நவநீத கிருஷ்ணன் ஆணை, நீர் திரும்பிப் போய் உம் பெண்சாதி பிள்ளைகள் முகம் பார்க்கப் போகிறதில்லை. இது சத்தியம். சப் மாஜிஸ்டிரேட் எஜமானவர்கள் உத்தரவு அப்படி ஆகியிருக்கிறது. பொருத்தம் இருக்கிறதென்று சொன்னீராகில், நீர் சொல்லிவிட்டு வெளியே வருவதற்குள் நீர் கொள்ளை வழக்கில் சம்பந்தப்பட்டதாக வாரண்டு கொண்டுவந்து உம்மைப் பிடித்துக்கொண்டு போய்விடுவார்கள். அப்பால் போலீஸ் ஸ்டேஷனில் செய்யும் இம்சைகள் நான் சொல்லி உமக்குத் தெரியவேண்டியதில்லை. இதற்குச் சாட்சி, தெருவில் சிவப்புத் தலைப்பாகைக்காரன் தயாராயிருக்கிருன், பார்த்துக்கொள்ளும். நீர் சொன்னதற்குமேல், நான் போய்விடு என்று சொன்னுல் போவான். கண்ணைக் காண்பித்தேனுகில் உம்மை மாட்டிவிடுவான். ஆயிரம் ரூபாய் பெற்றுக்கொண்டு வீட்டிற்குச் சந்தோஷமாய்ப் போக இஷ்டமிருந்தால் போம். இல்லாவிட்டால் கொள்ளை வழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்டு ஜெயில் போய்ச் சேர இஷ்டமிருந்தால் சேரும். இக்கடிதத்தை உடனே கிழித்தெறிந்துவிட வேண்டியது."

வாசித்துப் பார்த்தவுடனே நீலகண்ட சாஸ்திரிகள், "ஏதடா, விபரீதமாய் முடிந்துவிட்டதே! 'இப்படிப் பார்த்தால் ஸ்திரீஹத்தி, அப்படிப் பார்த்தால் பிரம்மஹத்தி' என்பார்களே' அது சரியாய் முடிந்துவிட்டதே. ராஜாம்பாளும் கோபாலனும் மெத்த நல்லவர்கள். அவர்

களுக்கு விரோதமாய் நாம் சொல்லவே கூடாது. அப்படிச் சொல்லாவிட்டால் இந்தப் பாவி சப் மாஜிஸ்டிரேட் ஜெயிலில் அடைத்துவிடுவானே; அந்தச் சண்டாளன் சொன்னால் சொன்னபடி செய்பவனாயிற்றே. ஜகதீசா! என்னை இப்படி ஆபத்திற்குள் கொண்டுவந்து விட்டு விட்டாயே; என்ன செய்வேன்!'' என்று வருத்தப் பட்டுச் சற்றுநேரம் யோசனைசெய்து இருகட்சியாருக்கும் சங்கடமின்றி நடந்துகொள்வதாகத் தீர்மானித்துக் கொண்டு வந்தார்.

தம் ஆசனத்தில் வந்து உட்கார்ந்து சற்று நேரம் ஜாதகங்களைப் பார்த்துவிட்டுத் தாகத்திற்குக் கொஞ்சம் ஜலம் கொண்டுவரச் சொல்லிச் சாப்பிட்ட நீலகண்ட சாஸ்திரிகள், பாதி ஜலம் சாப்பிட்டவுடனே செம்பைக் கீழே சோரவிட்டுத் திடீரென்று பின்னால் சாய்ந்து விட்டார். மூச்சும் இல்லை, பேச்சும் இல்லை. உடனே டாக்டரை அழைப்பித்துப் பார்க்கச் சொன்னார்கள். அவரும் கைநாடி, கால் நாடி பார்த்து, மார்பில் யந்திரம் வைத்துப் பிராணவாயுபோல் இருக்கிறது என்று சொல்லி மருந்து எழுதிக் கொடுத்து ஆஸ்பத்திரியில் மருந்து வாங்கி வரும்படி செய்து, மருந்து கொடுத்து வந்தார். மூன்று நாளாகியும் வாயைத் திறக்க வில்லை. அப்பால் சாமிநாத சாஸ்திரி, ''பொருத்தம் இருந்தாலுஞ் சரி, இல்லாவிட்டாலுஞ் சரி, ராஜாம்பாளைக் கோபாலனுக்குக் கல்யாணம் செய்துகொடுக்கப் போகிறேன்'' என்று முரட்டுத்தனமாய் ஒரேபிடியாய்ச் சொல்லிக் கல்யாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யும்படி கனகவல்லிக்குச் சொன்னதுடன் தாமும் நடக்கவேண்டிய காரியாதிகளைச் செய்துகொண்டிருந்தார்.

## 4. போலீஸ் அநியாயங்கள்

இப்படிச் சாமிநாத சாஸ்திரி பொருத்தம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கோபாலனுக்கே பெண்ணைக் கொடுக்கத் தீர்மானித்து விட்டாரென்ற சமாசாரம் சப் மாஜிஸ்டிரேட் சாஸ்திரிகள் காதில் விழுந்தவுடனே

ராமண்ணுவைக் கூட்டிக்கொண்டு வரச்சொல்லி, இனி என்ன செய்தால் தமக்கு இராஜாம்பாளைக் கல்யாணஞ் செய்து கொடுப்பார்களென்று யுக்தி கேட்டார்.

**ராமண்ணு:** எஜமானவர்களுக்குத் தெரியாத யுக்தி நான் என்ன சொல்லப்போகிறேன்? இருந்தாலும் இந்த நாயை ஒரு பொருட்டாக எண்ணிக் கேட்பதால் சொல்லு கிறேன். இனிப் போலீசார் தயவு இருந்தால்தான் இவ் விஷயம் அநுகூலமாகும்.

**நீலமேக சாஸ்திரி:** போலீசார் எப்படி அநுகூலம் செய்ய முடியும்? அப்படி அவர்களால் ஆகிறதாயிருந்தால் போலீஸ் இன்ஸ்பெக்டர் மணவாள நாயுடு என் இஷ்ட ராயிற்றே. போலீசார் வழக்குக் கொண்டுவந்தால் நான் சிட்சை செய்கிறதே தவிர விடுவதில்லையே! போலீசார் காரணம் இல்லாமல் ஏன் ஒருவனைக் குற்றவாளியென்று கொண்டுவருவார்கள்? அவர்களுக்குப் பைத்தியம் பிடித் திருந்தால் அல்லவா அநியாயமாய் யாரையாவது கொண்டுவந்து விடுவார்கள்? ஆகையால் அவர்களெல் லாருக்கும் என்மேல் பிரியம் அதிகம். என் சங்கதியைத் தம் சங்கதியாகப் பாவித்து மணவாள நாயுடு செய்து விடுவார். என்ன செய்யச் சொல்லுகிறுயோ சொல். இப்பொழுதே செய்யச் சொல்கிறேன். யாரடா சேவகன்?

**ராமண்ணு:** கொஞ்சம் பொறுங்கள். ஆக்கப் பொறுத்தது ஆறப் பொறுக்காதா? முதலில் இன்னது செய்கிறதென்று நன்ருகத் தீர்மானஞ் செய்துகொண்டு அப்பால் அவரைக் கூப்பிட்டு வரச்சொல்லுங்கள்.

**நீலமேக சாஸ்திரி:** தீர்மானஞ் செய்கிறது என்ன இருக்கிறது?

**ராமண்ணு:** முதலில் இன்ன வழியாய்ச் செய் கிறதென்று ஏற்பாடு செய்யவேண்டும். இரண்டாவது, அந்த ஏற்பாடுகளையெல்லாம் தாங்களே நேரில் செய்யப் போகிறீர்களா அல்லது இந்த நாயைச் செய்யச் சொல்லு கிறீர்களா என்பது. மூன்ருவது, என்னைச் செய்யச் சொன்னல் அவர்களுக்கு எவ்வளவு இனும் அளிக்க உத்தே சித்திருக்கிறீர்களென்பதும் தீர்மானஞ் செய்யவேண்டும்.

**நீலமேக சாஸ்திரி:** இந்த வழியாய்ச் செய்யவேண்டு மென்று நீ சொல். நானே மணவாள நாயுடுவைக் கூப்

பிட்டுச் செய்யச்சொன்னால் செய்துவிடுகிறான். அதற்கு நீ மத்தியஸ்தம் எதற்கு? மேலும் அவர்களுக்கு ஏன் இனம் கொடுக்கவேண்டும்? என்னிடங்கூடவா மணவாள நாயுடு லஞ்சம் வாங்குவான்?

**ராமண்ணா:** ஆனால் இப்படிச் செய்யவேண்டுமென்று சொல்லிவிடுகிறேன். தாங்கள் சொல்லி மணவாள நாயுடு அப்படிச் செய்தால் நான் என் கழுத்தை இரண்டு துண்டாக வெட்டிக்கொண்டு விடுகிறேன். ஏழை இப்படி அகம்பாவம் பிடித்துப் பேசுகிறேனென்று எஜமானவர்களுக்குக் கோபம் வரக்கூடாது. எஜமானவர்களுக்குச் சகல விதமான அதிகாரங்கள் இருந்தாலும் இந்தக் காரியத்தை அடியேன் மூலமாக நடத்தினால் நடக்குமே அல்லது எஜமானவர்களாகச் செய்தால் ஒன்றும் நடக்கப் போகிறதில்லை.

**நீலமேக சாஸ்திரி:** என்ன செய்யவேண்டும் என்பதைச் சொல்லி, நான் சொன்னால் ஏன் நடக்காது என்பதற்குக் காரணத்தையுஞ் சொல்லு, பார்ப்போம்.

**ராமண்ணா:** பொன்விளைந்த களத்தூரில் ரங்கநாத முதலியார் வீட்டில் தீவட்டிக் கொள்ளையடித்து நகைகள் திருட்டுப்போனது தங்களுக்குத்தெரியுமல்லவா? அந்த நகைகளெல்லாம் ஒன்றுவிடாமல் அகப்பட்டுவிட்டன. அந்தச் சமாசாரம் தங்களுக்குத் தெரியாது. அப்படி அகப்பட்ட நகைகளில் பாதிக்குமேல் தங்க நகைகள். அவற்றையெல்லாம் உருக்கிக் கணக்குப் பிரகாரம் பங்கு போட்டாகி விட்டது. தீவட்டிக் கொள்ளைபோட்டு நகை திருடினவர்களைக் குற்றவாளிகளாகக் கொண்டுவந்தால் அவர்கள் எல்லா நகைகளும் போலீசார்வசம் அகப்பட்டனவென்று சொல்வதன்றி இவர்கள் உருக்கின இடம், விற்ற இடம் முதலானவற்றைச் சொல்லிவிடுவார்கள். மேலும், இனிமேல் இவர்களைத் திருடர் நம்பவும் மாட்டார்கள். அநேகமாய்த் திருடரும் சில போலீசாரும் பாகஸ்தர்களானபடியால் வாஸ்தவமாய்த் திருடின குற்றவாளிகளை அவர்கள் காண்பித்துக் கொடுக்கிறதில்லை. வேறே யாரையாவதுதான் குற்றவாளிகளாக ஏற்படுத்தவேண்டும். ஆகையால் அந்த நகைகளிற் சிலவற்றைக் கொண்டு வந்து சாமிநாத சாஸ்திரி வீட்டில் வைத்து, திருட்டு

நகைகளை வாங்கி மறைத்துவைத்த குற்றத்திற்காகச் சாமிநாத சாஸ்திரியைப் போலீஸ் கொட்டடியில் கொண்டுபோய் வைத்துக்கொண்டு அவர் பெண்ணைத் தங்களுக்குக் கல்யாணஞ் செய்துகொடுக்க ஒப்புக்கொண்டால் விட்டுவிடுவதாகவும், இல்லாவிட்டால் விடமாட்டார்களென்றும் பயமுறுத்தினுல் கட்டாயமாய் ஒப்புக்கொள்வார். ஒரு தரம் வாக்களித்தால் அப்பால் தம் பிராணன் போனுலும் சாமிநாத சாஸ்திரி புரண்டு பேச மாட்டார்.

**நீலமேக சாஸ்திரி:** ஆனுல் இப்போதே மணவாள நாயுடுவை அழைத்துவரச் சொல்லி, நடக்கவேண்டிய தெல்லாம் சொல்லிவிடுகிறேன். நான் சொல்லுகிறதைக் கட்டாயமாய் நாயுடு செய்தே தீர்ப்பான்.

**ராமண்ணு:** தங்கள் இஷ்டப்படி செய்யுங்கள்; நான் போகிறேன்.

**நீலமேக சாஸ்திரி:** நீயும் இருந்து சொல்லிவிட்டுப் போ.

**ராமண்ணு:** சரி சரி, பேஷ்! ஏன் இந்த ஏழைப் பிராமணன் பிராம்மணுர்த்தம் தின்றுகொண்டு ஜீவிக்கிருனென்று என் வாயில் மண்போடப் பார்த்துவிட்டீர்கள் போலிருக்கிறதே! நன்ருயிருக்கிறது.

**நீலமேக சாஸ்திரி:** என்ன! வாயில் வந்தபடி எல்லாம் பேசுகிருய்!

**ராமண்ணு:** நான் சொல்லும்வரை திருட்டுப் போன நகைகள் அகப்பட்ட சங்கதி தங்களுக்குத் தெரியுமா? நான் தங்களிடம் இதெல்லாம் சொன்னேனென்ருல் மணவாள நாயுடு என்னை லேசில் விட்டுவிடுவானே! நாளை இந்நேரத்திற்குள் என்னைச் சிறையில் வைத்துவிட மாட்டானே? இல்லை, அப்படிக் கேட்டீர்கள். "நகை ஏது, அகப்பட்டதேது?" என்றுதான் சொல்லுவான். பொன் வாணிகர் தாய்ப்பொன்னிலும் மாப்பொன் எடுப்பார்கள்; ஆனுல் போலீசாரோ தாயாராயிருக்கட்டும், பிள்ளையா யிருக்கட்டும், பாதி வாங்காமல் விடமாட்டார்கள். தங்களைப்போல் அந்தஸ்திலும் உத்தியோகத்திலும் இருக்கிறவர்கள் இதைப்போலொத்த சங்கதிகளைச் சொன்னுல் லஞ்சம் எனக்குக் கொடுக்கப் பிரயத்தனஞ்

செய்தார்களென்று மாறிவிடுவார்கள். என்னைப்போன்றவர்கள் போய்ச் சொன்னால் ஆட்கள் அந்தஸ்துக்குத் தகுந்தபடி தொகை பேசிக்கொண்டு வேண்டிய ஏற்பாடு செய்துவிடுவார்கள்.

**நீலமேக சாஸ்திரி:** நீ சொல்வது நியாயந்தான். என் அந்தஸ்துக்கு அவனிடம் இப்படிச் செய் என்று நான் சொல்லக்கூடாது. சொல்லியும் ஒருவேளை மறுத்தால் அது மிகவும் கேவலமாக இருக்கும். சாமிநாத சாஸ்திரியை அடைத்துவைக்க என்ன கேட்பான்?

**ராமண்ணு:** தங்களுக்குத் தெரியாதது என்ன இருக்கிறது? லஞ்சம் வாங்குகிறவர்கள் அந்தஸ்தின்பேரில்தானே வாங்குவார்கள்? ஏன், தங்களுக்குத் தெரியாதோ? பண்டார சந்நிதிகளைப் போலொத்தவர்கள் ஏதாவது அற்பக் குற்றஞ் செய்துவிட்டாலும் இருபதாயிரம் முப்பதாயிரமென்று சப் மாஜிஸ்டிரேட்டுகள் வாங்கிக்கொண்டு நியாயம் எந்தப் பக்கத்திலிருந்தாலும் விட்டுவிடுவது சகஜம். என்னைப்போலொத்தவன் அதே குற்றஞ்செய்தால் இரண்டு ரூபாய் வாங்கிக்கொண்டு விட்டுவிடுவார்கள். சாமிநாத சாஸ்திரி அதிகச் சொத்துக்காரரானபடியால் குறைந்தது பதினாயிரம் ரூபாய் கொடுக்காவிட்டால் மணவாள நாயுடு சம்மதிக்கமாட்டார்.

**நீலமேக சாஸ்திரி:** அழுவதெல்லாம் அழுதுதானே தொலைக்கவேண்டும்? இதோ, கொண்டு போ; எப்படியாவது காரியத்தை முடித்துவிடு; முடியவில்லை என்று வந்து சொல்லாதே.

**ராமண்ணு:** கொடுப்பதைச் சந்தோஷமாய்க் கொடுங்கள். கல்யாண காரியமாயிற்றே.

இவ்வாறு சொல்லிவிட்டுச் சாஸ்திரிகளிடம் விடைபெற்றுக்கொண்டு ஐயாயிர ரூபாயை வீட்டில் புதைத்துவைத்துவிட்டு, ஐயாயிர ரூபாயை எடுத்துக்கொண்டு மணவாள நாயுடு வீட்டுக்குப் போய் அவரைக் கண்டு ஆசீர்வாதஞ்செய்து பக்கத்தில் போய் உட்கார்ந்தார்.

ஏதாவது வேலையிருந்தால் மாத்திரம் ராமண்ணு இன்ஸ்பெக்டர் மணவாள நாயுடுவிடம் வருவாராதலால், மணவாள நாயுடு தம் பக்கத்திலிருந்தவர்களையெல்லாம்

வெளியே அனுப்பிவிட்டு அப்பால் ராமண்ணுவிடம், ''என்ன சம்ாசாரம்?'' என்று கேட்டார்.

**ராமண்ணு:** ஒன்றும் இல்லை; சப் மாஜிஸ்டிரேட் சாஸ்திரியவர்களுக்குத் தங்களால் சிறு காரியம் ஒன்று ஆகவேண்டி யிருக்கிறது. அவர்கள் தாமாகச் சொல்வதற்குச் சங்கோசப்பட்டுக்கொண்டு என்னைச் சொல்லச் சொன்னுர்கள்.

**மணவாள நாயுடு:** சாஸ்திரிகள் மிகவும் நல்லவர்கள். நாம் கேஸ் கொண்டுபோனுல் தண்டிக்கிறதே தவிர, விடுவதே கிடையாது. அப்படி இருக்க அவர்களுக்கு ஆகவேண்டிய உபகாரம் நாம் செய்யவேண்டியதுதான். அற்ப விஷயமாயிருந்தால் எழுதி யனுப்பியிருப்பார். ஏதோ விசேஷம் இருப்பதால்தான் உன்னை அனுப்பியிருக்கிருர். நீ யாருக்கு உபகாரஞ் செய்வதாய் வருகிருயோ அவர்களுக்குச் சனியன் பிடித்திருந்தால்தானே உன்னை யோசனை கேட்பது வழக்கம்? சப் மாஜிஸ்டிரேட் சாஸ்திரிகள் பொருளை விரயஞ்செய்ய என்ன யோசனை செய்திருக்கிருய்? உள்ளதைச் சொல்.

**ராமண்ணு:** இந்தப் பரம ஏழையின்பேரில் தாங்கள் அப்படி அபிப்பிராயப்பட்டது என் அதிருஷ்டந்தான். சுருக்கமாய்ச் சொல்லுகிறேன், கேளுங்கள். சாமிநாத சாஸ்திரி பெண் ராஜாம்பாளை நம் சப் மாஜிஸ்டிரேட் சாஸ்திரிகள் கல்யாணஞ் செய்துகொள்ள உத்தேசித்துக் கோபாலனுக்கும் ராஜாம்பாளுக்கும் பொருத்தம் இல்லையென்று ஜோசியர்களைச் சொல்லச்சொல்லி ஏற்பாடு செய்யச் சொன்னுர்கள். அவர் இஷ்டப்படியே செய்தேன். பொருத்தம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கோபாலனுக்கே பெண்ணைக் கொடுப்பேனென்று சாமிநாத சாஸ்திரி ஒரே பிடிவாதம் செய்கிருர். அதன் பேரில் தங்கள் தயவு இருந்து தாங்கள் ஒத்தாசை செய்தால் மட்டும் இந்தக் காரியம் நடக்குமென்றும், இல்லாவிட்டால் நடக்காதென்றும் கண்டிப்பாய்ச் சொன்னேன். அதன்பேரில் தங்களிடம் சொல்லி எப்படியாவது சாமிநாத சாஸ்திரியிடம் சப் மாஜிஸ்டிரேட்டாருக்கே பெண் கொடுப்பதாக வாக்குத்தத்தம் பெறுவதற்கு வேண்டிய காரியங்களைச்செய்து எப்படியாவது முடிக்கச் சொன்னுர்.

**மணவாள நாயுடு:** சரி; ஜோசியப்புரட்டில் உனக்கு எவ்வளவு அகப்பட்டது? சாமிநாத சாஸ்திரி சாமான்ய மானவரல்லவே! அவர் எனக்கு நிரம்ப வேண்டியவர். வருஷம் வருஷம் ஆறுமாதத்துச் சாப்பாட்டிற்கு வேண்டிய நெல் எனக்கு இனமாகக் கொடுத்துவருகிறார். இந்த ஊரில் நல்ல நெல் அகப்படுவதில்லையென்று அவர் காதில் விழும்படி நான் சொன்னால் உடனே மறுநாள் நெல் அனுப்பிவிடுகிறார். நான் போலீஸ் இன்ஸ்பெக்டர் என்னும் பயத்தால் அவர் அனுப்புவதில்லை. நூற்றுக்கணக்கான ஏழைகளுக்கு இனமாய்ச் சாப்பாட்டுக்கு நெல் கொடுப்பதைப்போல் எனக்கும் கொடுத்து வருகிறார். மேலும், அவர் என் வார்த்தையைக் கேட்டுப் பெண்ணைச் சப் மாஜிஸ்டிரேட் சாஸ்திரிகளுக்குக் கொடுப்பாரா?

**ராமண்ணா:** தங்களை நல்ல வார்த்தை சொல்லச் சொல்லவில்லை. பொன்விளைந்த களத்தூர்த் தீவட்டிக் கொள்ளைக் கேசில் அகப்பட்ட சில நகைகளை அவர் வீட்டில் வைத்து, இரண்டாம் பேருக்குத் தெரியாமல் அவரைப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய் மாமூல் பிரகாரம் நடத்தினால் ஒரு நாழிகையில் ஒப்பமாட்டாரோ?

**மணவாள நாயுடு:** சபாஷ்! நன்றாய்ச் சொன்னாய்! அவரைப் பிடித்து இம்சிக்கும் சமாசாரம் வெளியே வந்துவிட்டால் அவரிடம் தர்மம் வாங்கும் ஜனங்களெல்லாம் என்னைச் சும்மா விடுவார்களோ? போலீஸ் ஸ்டேஷனையே இடித்துத் துவம்சஞ் செய்துவிட மாட்டார்களோ? அவர் என்ன சாமானியமானவரா? நம் தேசத்தைத் தலைகீழாக மாற்றுவதாகச்சொல்லும் காங்கிரஸ் சபையில் சேர்ந்தவர்களிற் சிலர் இங்கே இருக்கிறார்களே, அவர்கள் சும்மா இருப்பார்களோ?

**ராமண்ணா:** தாங்கள் இப்பேர்ப்பட்ட இளநெஞ்சரென்று இன்றுதான் கண்டேன். புத்தி இல்லாத நம் பேதை இந்துக்களுக்கு அவ்வளவு கர்வமா? சர்க்கார் மகிமையை நிலைநிறுத்தும் போலீஸ் வீரர்களின் தலைவராகிய தாங்கள் சாமிநாத சாஸ்திரியை அல்ல, இந்த ஊரிலுள்ளவர்களை எல்லாம் பிடித்துக் கொட்டடியில் அடைத்தாலும் யாராவது பேசலாமா? ஜனக்கூட்டங் கூடி இப்படிச் செய்வது நியாயம் அல்லவென்று பேசினால் அக்

கூட்டத்தின் அக்கிராசனுதிபதியைப் பிடித்து, விசாரணை செய்யாமலே பிடித்த பிடியிலேயே கண்காணுத தேசத்திற்குக் கொண்டுபோக 1818-ஆம் வருஷத்து மூன்ருவது ரெகுலேஷன் தங்களுக்கு இல்லையா? மேலும் போலீஸ் வீரர்களிடம் உள்ள துப்பாக்கிகளால் சுட்டால், கண்மூடி விழிப்பதற்குள் ஜனங்களெல்லாம் தலைமாடு கால்மாடாய்ச் சாய்ந்துவிட மாட்டார்களா? போலீசார் வசமிருக்கும் துப்பாக்கிகள் காணுவிட்டால் சென்னைக்குத் தந்தி கொடுத்தால் பட்டாளச் சிப்பாய்கள் வந்து ஊரில் உள்ளவர்களையெல்லாஞ் சுட்டுக் கொன்றுவிட மாட்டார்களா? இன்னும் அதற்குமேல் போனுல் பீரங்கிகள் இல்லையோ? ஒரு நொடிக்குள்ளாக ஊர் இருந்த இடமே தெரியாமற் சுட்டுப் பரத்திவிடாதோ? வாய்ச் சாமர்த்தியம் பேசுஞ் சில படித்த முட்டாள்களுக்குப் பயந்து தாங்கள் பேசுவது ஆச்சரியமே.

**மணவாள நாயுடு:** நீர் சொல்வதெல்லாம் வாஸ்தவமே. ஒருவேளை நமதுபேரில் திரும்பினுலும் திரும்புமல்லவா? அப்படித் திரும்புவது அபூர்வமானுலும் ஒரு கால் திரும்பிவிட்டால் வேலை போய்விடுமே! அப்படி வேலை போய்விட்டால் வீட்டில் உட்கார்ந்து சௌக்கியமாய்ச் சாப்பிடுவதற்கு வேண்டிய பணம் வருவதாயிருந்தால் தலைகொடுக்கலாம். இல்லாவிட்டால் என்னுல் முடியாது.

**ராமண்ணு:** தொகை அதிகம் வேண்டுமென்று சொல்வதற்காக இப்படியெல்லாம் பேசினதாக ஏற்பட்டுவிட்டது. சரி, தங்களுக்கு அந்த விஷயத்தில் ஆயாசம் வேண்டாம். ஐயாயிர ரூபாய் கொடுக்காவிட்டால் காரியம் முடியாதென்று சொல்லித் தீர்மானஞ் செய்து இதோ வாங்கிக்கொண்டு வந்துவிட்டேன். மாமூல் பிரகாரம் எனக்குச் சேரவேண்டிய நூற்றுக்கு ஐந்து கமிஷன் கொடுத்துவிடுங்கள்.

**மணவாள நாயுடு:** இன்னும் ஜாஸ்தி பேசியிருக்கலாம். இருந்தாலும் பரவாயில்லை. நான் கொடுக்கும் ஒரு சிறு மூட்டையை மாத்திரம் நீ கொண்டுபோய்ச் சாமிநாத சாஸ்திரி வீட்டில் பந்தோபஸ்தான இடத்தில் வைத்துவிட வேண்டியது உனது வேலை. மற்றச் சமா

சாரம் நான் பார்த்துக்கொள்ளுகிறேன். நாளை ராத்திரி சகல காரியங்களும் முடிந்துவிடுமென்று சப் மாஜிஸ்டிரேட்டாரிடம் சொல்லிவிடு.

மறுநாள் சாயங்காலம் மணவாள நாயுடு கொடுத்த சிறு மூட்டையை ராமண்ணு ரகசியமாகக் கனகவல்லியிடம் பேசப்போவதுபோல் போய்ச் சாமிநாத சாஸ்திரி வீட்டில் வைத்துவிட்டு வந்துவிட்டார். ராத்திரி எட்டு மணியானதும் போலீஸ் இன்ஸ்பெக்டர் மணவாள நாயுடுவும், எட்டுப் போலீஸ் கான்ஸ்டேபில்களும், கிராம முனிசீபும், ராமண்ணுவுமாகச் சாமிநாத சாஸ்திரி வீடு வந்து சேர்ந்தார்கள். வந்ததும் மணவாளநாயுடு நான்கு போலீஸ் கான்ஸ்டேபில்களை வீட்டுக்கு நாலுபுறத்திலும் நிறுத்திவிட்டு ஒரு கான்ஸ்டேபிலை முன் வாசலிலும் ஒரு கான்ஸ்டேபிலைப் பின் வாசலிலும் நிறுத்திவிட்டு, வீட்டிலிருந்து யாரையும் வெளியே போகவிடக் கூடாதென்றும் உள்ளே யாரையும் விடக்கூடாதென்றும் காவலிருக்கும் ஆறு கான்ஸ்டேபில்களுக்கும் உத்தரவளித்துவிட்டு மற்றவர்கள் உள்ளே போனுர்கள். இவர்கள் அனைவரையும் சாமிநாத சாஸ்திரி உட்காரவைத்து என்ன விசேஷம் என்று கேட்டார்.

மணவாள நாயுடு: விசேஷம் ஒன்றும் இல்லை. பொன்விளைந்த களத்தூரில் தீவட்டிக் கொள்ளையடித்த சங்கதி தங்களுக்கு நன்ருய்த் தெரியுமே. கொள்ளையடித்தவர்களில் இரண்டொருவர் அந்தச் சொத்தில் சிலவற்றைத் தங்களிடங் கொடுத்து வைத்திருப்பதாகச் சொன்னுர்கள். தங்களுடைய பெருந்தன்மையையும் குண அநுபவங்களையும் நன்ருயறிந்த நான் அதைச் சிறிதும் நம்பவே இல்லை. இருந்தாலும் சட்டப்படி நான் தங்கள் வீட்டைச் சோதனை பண்ணுவிட்டால் எனக்கு விரோதிகளாயிருக்கிறவர்கள் நான் ஏதோ லஞ்சம் வாங்கிக்கொண்டு சோதனை செய்யாமலிருந்தேனென்று மேலதிகாரிகளுக்கு மொட்டை மனு எழுதிப்போடுவார்கள், ஆகையால் யாருக்கும் தெரியாமலிருக்கும்படி இந்நேரத்தில் சோதனை செய்ய வந்தேன். அதைக் குறித்து மன்னிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

**சாமிநாத சாஸ்திரி:** மகாராஜராய் என் வீடு முழுவதும் சோதனை செய்துகொள்ளுங்கள். அதனால் எனக்குக் கெடுதல் என்ன? மடியில் கனம் இருந்தாலல்லவா வழியில் பயம்?

இப்படிச் சொல்லிவிட்டுத் தம் பெட்டிகளுடைய சாவிகளை யெல்லாம் தம் வேலைக்காரன் ஒருவனிடங் கொடுத்துத் திறந்து காண்பிக்கச் சொல்லிவிட்டு அவர் அங்கேயே உட்கார்ந்திருந்தார். பெட்டிகளையெல்லாம் திறந்து பார்த்தும் ஒன்றும் அகப்படாததால் வீடெல்லாந் தேட ஆரம்பித்தார்கள். கடைசியாக யாரும் விசேஷமாகப் போகாத ஓரறையில் சுற்றிவைத்திருந்த பாயை உதறினார்கள். அதிலிருந்து பொத்தென்று ஒரு பொட்டணம் விழுந்தது. அதை யாரையும் எடுக்க விடாமல் சாமிநாத சாஸ்திரியை அழைத்துவரும்படி ஒரு கான்ஸ்டேபிலை அனுப்பி, அவர் வந்தவுடனே, "இந்தப் பொட்டணம் இங்கே வந்த விவரம் என்ன?'' என்று இன்ஸ்பெக்டர் கேட்டார். அவர் தமக்குத் தெரியாதென்று சொன்னார். பொட்டணத்தை அவிழ்த்துப் பார்த்ததுந் திருட்டுப்போன நகைகளிற் சில இருந்தன. உடனே நகைகளை எடுத்துக்கொண்டு சாமிநாத சாஸ்திரிக்குக் கால்களிலும் கைகளிலும் விலங்குகள் மாட்டி யாருக்கும் அடங்காத பரம துஷ்டர்களைக் கட்டுவது போல் இருப்புச் சங்கிலியாற் கட்டி, ஒரு வண்டியில் ஏற்றி, பத்துக் கான்ஸ்டேபில்கள் துப்பாக்கிகள் சகிதம் வண்டியைச் சுற்றிவரச் சந்தடி பண்ணுமல் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய், பயங்கரமான ஓர் அறையில் அடைத்தார்கள். "எனக்குப் புத்தி தெரிந்தது முதல் என் மனச்சாக்ஷிக்கு விரோதமாய் இதுவரையில் நான் நடந்ததில்லையே! அப்படி இருக்க நான் சிறையில் அடைபடும்படி நேரிட்டதே. ஒருகால் பூர்வ ஜன்மத்தில் யாரையாவது அநியாயமாய் இம்சித்திருப்பேன். அந்தப் பலன்தான் இப்போது நான் அநுபவிக்கிறேன் போலிருக்கிறது'' என்று மனத்திற்குள் சாமிநாத சாஸ்திரி எண்ணிக்கொண்டிருந்தார். அவரை அடைத்திருந்த அறையின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு அவர் காதுக்குக் கேட்கும்படி பின்வருமாறு

போலீஸ் கான்ஸ்டேபில்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்: ''இந்தத் திருட்டுப் பார்ப்பான் ஊரிலுள்ள பணங்களை யெல்லாந் திருடிக்கொண்டு வரச்சொல்லி இவன் திருட்டுத்தனம் தெரியாமலிருக்கும்படி ஏழைகளுக்குத் தர்மஞ் செய்துவந்தான்போல் இருக்கிறது!''

''அப்படி அவன் செய்துகொண்டு வந்ததால்தான் இதுவரையில் அகப்படவில்லை. இல்லாவிட்டால் முன்னே யே அகப்பட்டு விடமாட்டானோ?'' என்று ஒருவன் சொன்னான்.

''பலநாள் திருடன் ஒரு நாளைக்கு அகப்படுகிறான். இவன் அகப்பட்டது பெரிதல்ல. நம் இன்ஸ்பெக்டர் மணவாள நாயுடு அவர்கள் சாமர்த்தியமே சாமர்த்தியம்! அவருக்குத் துப்பு எப்படி வந்ததென்று யாருக்கும் தெரியவில்லையே'' என்றான்.

இன்னொருவன், ''அவர் ஒரு சாமியாரைப் பூஜித்து வருகிறார். அந்தச் சாமியார்தாம் அவருக்குத் துப்புத் துலக்குகிறது'' என்றான் மற்றொருவன்.

''ராத்திரி பன்னிரண்டு மணிக்கு மேல்தான் சாஸ்திரிகளுக்குப் போலீஸ் ஸ்டேஷன் மரியாதை தெரியப் பாகிறது'' என்றான் மற்றொருவன்.

''ஆனால் இன்று பூஜை எல்லாம் நடக்கப்போகிறதென்று சொல். அப்படியா? எனக்குத் தெரியாதே!'' என்றான் வேறொருவன்.

அப்பால் போலீஸ் ஸ்டேஷனில் அடைத்து வைத்திருக்கும் ஜனங்களைப் போலீஸார் இம்சிக்கும் வழிகளை எல்லாம் பேசிக்கொண்டார்கள். இவ்வளவையும் கேட்டுக்கொண்டிருந்த சாமிநாத சாஸ்திரி, ''இன்னும் கொஞ்ச நேரத்தில் இந்த இம்சை எல்லாம் நான் அநுபவிக்க வேண்டும்போலிருக்கிறது! ஈசுவராக்கினையை யாரால் மீற முடியும்?'' என்று யோசனை செய்துகொண்டிருந்தார். கொஞ்சநேரத்திற்கெல்லாம் ஒரு போலீஸ் கான்ஸ்டேபில் உள்ளே போனான். சாமிநாத சாஸ்திரி அவனைப் பார்த்து, ''அப்பா, எனக்குத் தாகம் அதிகமாயிருக்கிறது; சற்று வெளியில் கொண்டுபோனால் தாகத்திற்குச் சாப்பிட்டு வருகிறேன்'' என்றார்.

அக்கொடிய துஷ்டன் அவரைப் பார்த்து, "ஏங்காணும் பிராம்மணு! ஊரிலுள்ள திருட்டுச் சொத்தையெல்லாம் உருக்கும்போது எவ்வளவு சந்தோஷமாயிருந்தது! இப்போது எப்படி இருக்கிறது பார்த்தாயா?" என்றான்.

அதற்குச் சாமிநாத சாஸ்திரி, "அப்பா, நான் ஒரு பாவமும் அறியேன்" என்றார்.

உடனே அத்துஷ்டனுக்குக் கோபம் வந்து, "ஒன்றும் அறியாயா?" என்று இரு கன்னமும் புடைக்க நன்றாய் நாலைந்து அறை அறைந்துவிட்டு, "மூத்திரத்தைப் பிடித்துத் தாகத்திற்குக் குடி" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான்.

"அவர்கள் பேசினபடி முதல் பூஜை ஆகியிருக்கிறது. ஜகதீசா! இன்னும் இவர்கள் செய்யும் இம்சையைப் பொறுக்க எனக்கோ சக்தி இல்லை. என்னைக் கொன்று விட்டாலும் பரவாயில்லை. உயிரோடு வைத்துக்கொண்டு இப்படி இம்சிக்கிறார்களே" என்று சாமிநாத சாஸ்திரி எண்ணிக்கொண் டிருந்தார்.

கொஞ்ச நேரத்திற்கப்பால் அவரை அடைத்திருக்கும் கதவு மறுபடியும் திறக்கப்பட்டது. இப்போது என்ன ஆபத்து இருக்கிறதோ என்று சாமிநாத சாஸ்திரி எண்ணினார். கதவு திறந்ததும் ராமண்ணாவை உள்ளே தள்ளி மறுபடியும் கதவு மூடப்பட்டது. ராமண்ணாவைக் கண்டதும் சாமிநாத சாஸ்திரிக்குச் சற்று விசனம் தீர்ந்து, "ஏது ராமண்ணா, உம்மையும் என்னோடு அடைத்துவிட்டார்களே! உம்மையும் ஏதாவது குற்றஞ்செய்ததாகக் கொண்டு வந்து விட்டார்களோ?" என்றார்.

**ராமண்ணா:** நீங்கள் ஜலம் கேட்டதாகவும் அதற்குக் கொடுக்கமாட்டேனென்று சேவகன் போய்விட்டதாகவும் வெளியே பேசிக்கொண்டார்கள். இதைக் கேட்டதும் கலிகாலக் கர்ணனுகிய உங்களுக்கும் இப்பேர்ப்பட்ட இம்சை வந்துவிட்டதே என்ற வருத்தத்துடன் உம்மை வெளியே கொண்டுபோகாவிட்டாலும் எப்படியாவது உங்களுக்கு ஜலம் கொண்டுவந்து கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் ஒரு சீசாவில் தண்ணீர் நிரப்பி மடியில் வைத்து யாருக்குந் தெரியாமல் கட்டிக்கொண்டு

உள்ளே போவதற்கு உத்தரவு கேட்டேன். போகக்கூடா தென்று சொன்னூர்கள். உடனே இவர்களில் ஒருவனே அடித்தால், என்னேயும் உள்ளே மூடிவிடுவார்களென்ற எண்ணத்துடன் வலியச் சண்டைக்கு இழுத்து ஒருவனே அடித்தேன். உனக்கு இவ்வளவு கர்வமா என்று சொல்லி என்னேயும் அடைத்துவிட்டார்கள். இதுதான் சமாசாரம். இதோ இந்தச் சீசாவிலிருக்கும் ஜலத்தைக் கொண்டு தாகசாந்தி செய்துகொள்ளும்.

**சாமிநாத சாஸ்திரி:** என் நிமித்தம் நீர் இவ்வளவு கஷ்டத்திற்குள்ளானீரே! இந்த உபகாரத்தை என் ஆயுள் பரியந்தம் மறக்கமாட்டேன். இந்தப் பாழும் இடத்திலிருந்து தப்புவது எப்படி? அநியாயமாய் இந்த மணவாள நாயுடு திருட்டுச் சொத்தைக் கொண்டுவந்து வைத்து இப்படிச் செய்தானே! என்ன காரணமோ, தெரியவில்லையே?

**ராமண்ணு:** நீங்கள் கஷ்டத்திற்குள் அகப்பட்டிருப்பதால் யோசனே பண்ணுமல் மணவாள நாயுடுபேரில் குற்றஞ் சுமத்துகிறீர். சோதனே செய்தபோது நானும் கூடத்தானே இருந்தேன்? உங்கள் வேலே ஆட்களில் எவனுவது அந்தக் கொள்ளேயில் சம்பந்தப்பட் டிருக்கவேண்டும். நகைமூட்டை பாயிலிருந்து திண்ணென்று கீழே விழுந்ததே. இப்போது கொஞ்ச நேரத்திற்கு முன்புகூட உங்களுடைய விஷயத்தைக் குறித்து மணவாள நாயுடு எவ்வளவு கஷ்டப்பட்டுக்கொண்டார்! சப் மாஜிஸ்டிரேட் சாஸ்திரிகளுக்குச் சமாசாரம் தெரியாவிட்டால் நீங்கள் இந்த இடத்தைப் பார்த்திருக்கவே மாட்டீர்கள்.

**சாமிநாத சாஸ்திரி:** இந்தச் சப் மாஜிஸ்டிரேட் லஞ்சம் வாங்கப்பட்டவனுயிற்றே! ஐயாயிரம் அல்லது பதினுயிரமாவது கொடுத்துத் தொலேக்கிறேன். எப்படியாவது என்னே இந்த இடத்திலிருந்து வெளியேற்றப் பாரும்.

**ராமண்ணு:** உங்கள் குணம் எனக்குத் தெரியாதோ? நான் இவ்வளவு நேரம் சும்மா இருந்தேனென்று எண்ணிக்கொண்டீர்போல் இருக்கிறது. நீங்கள் இந்த இடத்தில் இருக்கிறவரையில் எனக்குத் தூக்கம் பிடிக்குமா? நன்ருய்ச் சொன்னீர். போலீஸ் இன்ஸ்பெக்டரும் நானும் போய்ச் சப் மாஜிஸ்டிரேட்டாரிடம் பேசினேம். அவர்

பணம் என்ற சங்கதியே உங்களுடைய விஷயத்தில் எடுக்கக்கூடாதென்ருர்.

**சாமிநாத சாஸ்திரி:** ஆனுல் கட்டாயமாகத் தண்டித்து விட வேண்டுமென்கிருர்போல் இருக்கிறது.

**ராமண்ணு:** இல்லே, இல்லே. அவர் சொல்லுகிறபடி ஒரு விஷயத்தில் நீர் நடந்து கொள்வதாயிருந்தால் இப்போதே விட்டுவிட ஏற்பாடு செய்கிறேன் என்கிருர்.

**சாமிநாத சாஸ்திரி:** எந்த விஷயத்தில்?

**ராமண்ணு:** அதுதான் எனக்குச் சொல்லச் சற்று யோசனேயாயிருக்கிறது. உங்களேத் தவிர இன்னெருவராஞல், தேடப்போன கொடி காலில் சுற்றிக்கொண்டதென்றும், கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததென்றும் யோசித்துக்கொண்டு சந்தோஷமாய் இப்பேர்ப்பட்ட சம்பந்தம் நமக்கு அகப்பட்டதேயென்று சாமியைப் பிரார்த்திப்பார்கள். ஆனுல் உங்கள் எண்ணம் எப்படியோ?

**சாமிநாத சாஸ்திரி:** நீர் சொல்லுவது ஒன்றும் அர்த்தமாகவில்லேயே; காலும் இல்லாமல் தலேயும் இல்லாமற் சொல்லுகிறீரே. விவரமாய்ச் சொன்னுலல்லவோ தெரியும்?

**ராமண்ணு:** சப் மாஜிஸ்டிரேட்டார் தாமாகவே பத்து லட்சத்திற்குமேல் சம்பாத்தியஞ் செய்திருக்கிருர். இன்னும் எத்தனேயோ லட்சம் சம்பாத்தியஞ் செய்வார். வாய்ச்சொல்லால் ஒருவனேச் சிறைச்சாலேக்கு அனுப்பவும் விடுதலே செய்யவும் சக்தியுடைய சப் மாஜிஸ்டிரேட் வேலேயில் இருக்கிருர். அவருக்கு வயசு அதிகம் ஆகிவிடவில்லே. சுமார் ஐம்பது அல்லது ஐம்பத்துநாலுக்கு மேல் இருக்காது. ஐம்பது வயதென்றுதான் யாராவது மதிப்பார்களா? ஒருகாலும் மதிக்கமாட்டார்கள். நாலு தினங்களுக்குமுன் ஜில்லாக் கலெக்டர் துரையவர்கள் பழைய ஜோடுகளே ரிப்பேர் செய்துகொண்டு வந்தவர், வண்டியிலேயே வைத்துவிட்டு இறங்கிப் பங்களாவுக்குள் போனுராம். துரையவர்களேப் பார்க்கப்போயிருந்த சப் மாஜிஸ்டிரேட் சாஸ்திரி உடனே அந்தப் பழைய ஜோடுகளேக் கையில் தூக்கிக்கொண்டு துரைக்குப் பின்னுலேயே ஓடினுராம். துரையவர்கள் ஜோடுகளேக் கீழே

போடச் சொல்லிவிட்டு, 'இன்னும் சிறு பிள்ளைபோல் ஓடு கிறாய்' என்று சொல்லித் தட்டிக்கொடுத்தாராம். கலெக்டர் துரையவர்கள்கூட இன்னும் சிறுவனென்று சொன்னதாக அவர் எல்லாரிடமும் சொல்லிக்கொண் டிருக்கிறார்.

**சாமிநாத சாஸ்திரி:** என்னை விடுதலை செய்வதற்கும் அவர் பதினாறு வயது பாலகுமாரனா யிருப்பதற்கும் என்ன சம்பந்தம்?

**ராமண்ணா:** நான் மாறுபாஷையாய்ச் சொன்னால் தங்களுக்குப் புரியவில்லைபோல் இருக்கிறது. ஒன்றும் இல்லை. நம் இராஜாம்பாளை அவருக்கு இரண்டாந்தாரமாகக் கட்டிக் கொடுப்பதாகத் தாங்கள் வாக்களித்தால் உடனே வெளியே போகலாம். ஆட்சேபமே கிடையாது.

**சாமிநாத சாஸ்திரி:** என் ஏக குமாரத்தியாகிய ராஜாம்பாளைக் கொடிய பாதகனும் லஞ்சம் வாங்கிச் சம்பாதிப்பவனும் அதர்மிஷ்டனும் நன்மை இன்னதென்றே அறியாதவனுமாகிய அந்தக் கிழட்டுப் பிணத்திற்குக் கல்யாணம் செய்து கொடுப்பதைவிட என் பிராணனை விட்டுவிட மாட்டேனா?

**ராமண்ணா:** என்ன, தங்களுக்கு ஒன்றும் தெரியவில்லையே! இது உங்களோடு போனாலும் பரவாயில்லை. இன்று உங்களை அடைத்தவர்கள் நாளைக்குக் கோபாலனைச் சிறையில் அடைக்க ஏற்பாடு செய்வார்கள். அப்பால் தங்கள் குமாரத்தி யாரைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளுவாள்? கவைக்குதவாத குடிகேடனும் தாசிக் கள்ளனும் நாட்டுக்கோட்டைச் செட்டிகளிடம் கடன் வாங்குபவனும் பேதமில்லாமல் எங்கேயும் சாப்பிடுகிறவனுமாகிய நடேசனைத்தானே மணப்பாள்? இவருக்குக் கொடுத்தால் துர்க்குணங்களோடு கொஞ்சமாவது கௌரதை உண்டு. நடேசன் கல்யாணம் செய்துகொண்டு சொத்தையெல்லாம் வீண் செலவு செய்துவிட்டு உம்முடைய பெண்ணைச் சோற்றுக்குத் திண்டாடும்படி வைத்துவிடமாட்டானோ?

**சாமிநாத சாஸ்திரி:** நான் இப்பொழுதே கோபாலனுக்குச் சமாசாரம் தெரிவித்தால் அவன் இருக்கிற ஜாக்கிரதையில் இருக்கமாட்டானோ?

**ராமண்ணு:** நாம் இருக்குமிடம் இன்னதென்று யோசிக்காமற் பேசுகிறீர்கள். நம்மால் சிறையிலிருந்து எப்படித் தெரிவிக்க முடியும்? நான் சொல்லுகிறபடி செய்தால் நல்லது. இல்லாவிட்டால் கெடுதல் உண்டாகுமே தவிர நன்மை அடையமாட்டீர். 'பசிக்குப் பனம் பழந் தின்றால் பின்னல் பட்டபாடு படலாம்' என்பது போல் இப்போது அப்படியே செய்கிறேனென்று சொல்லி விட்டுப் போய், அப்பால் மாட்டேனென்றால் உங்களை என்ன செய்யக்கூடும்?

**சாமிநாத சாஸ்திரி:** நான் வாக்களித்துவிட்டு அப்பால் புரளவே மாட்டேனென்பது உமக்குத் தெரியாதா? வாக்களித்தால் செய்தே தீருவேன். ஆகையால் நான் ஒருபோதும் வாக்களிக்கமாட்டேன்.

**ராமண்ணு:** சற்றுக் கிட்ட வாருங்கள். ஒரு ரகசியம் சொல்லுகிறேன். இந்தச் சப் மாஜிஸ்டிரேட் அநியாயமாய்த் தண்டித்த ஒரு பிரபலமான போக்கிரி ஜெயிலிலிருந்து விடுபட்டு ஒரு வாரம் ஆயிற்று. அவன் இன்னும் மூன்று நாளைக்குள் இவர் உயிரை வாங்கிவிடத் தீர்மானித்து, வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கிறான். நீர் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டு வாக்களித்தால் உம் மகளைக் கல்யாணம் செய்துகொடுக்க வேண்டிய அவசியமும் ஏற்படாது. நீர் கொடுத்த வாக்கும் தவற வேண்டியதில்லை; வெளிப்பட்டும் போகிறீர்.

**சாமிநாத சாஸ்திரி:** இப்படிக் கொலைசெய்ய ஏற்பாடு செய்கிறானென்று நீர் சப் மாஜிஸ்டிரேட்டாரிடம் சொல்லவேண்டாமா? என்னதான் கெட்டவனுயிருந்தாலும் கொலைசெய்யப் போகிறானென்று தெரிந்தும் சொல்லாமல் இருக்கலாமா? எவரையாவது பார்த்தவுடனே நான் இந்த விவரம் அவருக்குத் தெரிவிக்கும்படி செய்கிறேன்.

**ராமண்ணு:** நல்ல வேலை செய்கிறீர்! இந்தச் சமாசாரம் எனக்கு மாத்திரந் தெரியுமே அல்லாது வேறே யாருக்குந் தெரியாது. சப் மாஜிஸ்டிரேட்டாருக்கு யாரோ சொல்லிவிட்டார்களென்று அவனுக்குத் தெரிந்தால், முதலில் என்னைப் பைசல் செய்துவிட்டு அப்பால் அவரைக் கொலைசெய்வான். இந்தக் கலியுகத்தில் ஒரு

வருக்கு உபகாரம் செய்தால் அது அபகாரமாகவே முடிகிறது. என் வாயை வைத்துக்கொண்டு சும்மா இருந்தால் இவ்வளவு வருமா? தன்னைக் கொல்ல வந்த பசுவையுங் கொல்லலாமென்று மனுதர்ம சாஸ்திரத்திற் சொல்லவில்லையா? இவ்வளவு உங்களுக்குத் தீங்குசெய்தும் அவனுக்கு நன்மை செய்யவேண்டும் என்கிறீர்கள். உங்களைக் கடிக்க வரும் பாம்பை வழியே போகும் ஒருவன், தன்னைக் கடித்துவிடுமே என்ற பயங்கூட இல்லாமல் அடித்தால், 'அதை அடிக்காதே, என்னைக் கடிக்கட்டும்' என்று சொல்வதற்குச் சமானமாயிருக்கிறதே, சபாஷ்!

**சாமிநாத சாஸ்திரி:** ஆனல் என்ன செய்யச் சொல்லுகிறீர்?

**ராமண்ணு:** இன்னுஞ் சொல்லுகிறதில்தானு இருக்கிறது? கல்யாணஞ்செய்து கொடுக்கிறேனென்று இன்ஸ்பெக்டர் மணவாள நாயுடுவையும் சப் மாஜிஸ்டிரேட் சாஸ்திரிகளையும் என்னையும் வைத்துக்கொண்டு வாக்குக் கொடுக்க வேண்டியதுதான்.

**சாமிநாத சாஸ்திரி:** ஆனல் நீர் சொன்னதெல்லாம் உண்மைதானே? கல்யாணஞ்செய்து கொடுக்கும்படி வராதே! உண்மையாய்ச் சொல்லும்.

**ராமண்ணு:** உம்மிடத்தில் எப்போதாவது நான் பொய் சொல்லியிருக்கிறேனே? எங்கள் அப்பாமேல் ஆணை; வாஸ்தவந்தான்.

**சாமிநாத சாஸ்திரி:** சப் மாஜிஸ்டிரேட்டாரையும் இன்ஸ்பெக்டரையும் அழைத்து வந்தால் நீர் சொன்ன பிரகாரம் வாக்களிக்கிறேன்.

**ராமண்ணு:** இப்போது நானும் உம்மைப்போல் கைதிதானே? அவர்கள் கதவைத் திறக்கட்டும்.

இதையெல்லாம் பக்கத்திலிருந்து கேட்டுக்கொண்டிருந்த சப் மாஜிஸ்டிரேட்டாரும், இன்ஸ்பெக்டரும் ராமண்ணுவின் சாதுரியத்திற்கு மெச்சி, இக்காரியம் இன்னெருவரால் முடிக்க முடியாதென்று பேசிக்கொண்டார்கள். கால்மணி நேரத்திற்கு அப்பால் கதவு திறக்கப்பட்டு இன்ஸ்பெக்டர் மணவாள நாயுடு உள்ளே வந்து சப் மாஜிஸ்டிரேட்டார் அபிப்பிராயத்தைச் சாமிநாத சாஸ்திரிகளுக்குத் தெரிவிக்க வந்தேனென்ருர். உடனே

ராமண்ணு, "எல்லாம் முடித்துவிட்டேன். தாங்கள் வரும் வரையில் பாக்கி வைக்கவில்லை" என்று சொல்லி, "சப் மாஜிஸ்டிரேட்டார் வரவேண்டியதுதான் பாக்கி" என்ருர். சப் மாஜிஸ்டிரேட் சாஸ்திரிகளை அழைத்துவரச் சொல்லி ஆளனுப்புவதாகச் சொல்லிக் கொஞ்ச நேரத்தில் இருவருமாக வந்து சேர்ந்தார்கள். உடனே சாமிநாத சாஸ்திரி தம் பெண்ணுகிய இராஜாம்பாளைச் சப் மாஜிஸ்டிரேட் சாஸ்திரிகளுக்குக் கல்யாணஞ்செய்து கொடுப்பதாக வாக்களித்தார். உடனே அவருடைய விலங்குகளை எல்லாம் கழற்றிவிட்டு வெளியே கூட்டிக்கொண்டு வரும் போதே மணவாள நாயுடு, தாம் சர்க்கார் ஆக்கினைப்படி நடக்கவேண்டியது நியாயமாக இருந்தாலும், சாமிநாத சாஸ்திரிகள் விஷயத்தில் அப்படி நடப்பது தமக்கு அதிக வருத்தத்தைக் கொடுத்ததால் சப் மாஜிஸ்டிரேட்டாரிடம் சொல்லி இருவருமாகக் கலந்துபேசி விட்டுவிட வேண்டிய ஏற்பாடு செய்ததாகவும், ஏதோ சில நேரம் காவலில் வைத்திருந்ததற்காகச் சாஸ்திரிகள் மனத்தில் வருத்தம் வைக்காமல் இருக்கும்படிக்கும் வேண்டிக்கொண்டார். அன்றியும், அவரைக் காவலில் வைத்தது யாருக்கும் தெரியாதாகையால் அந்த விஷயத்தைக் கனவாக நினைத்துக் கொண்டு அதைக் குறித்து வெளியில் பிரஸ்தாபஞ் செய்யக் கூடாதென்றும் சொன்னுர்.

இதற்குள்ளாகச் சப் மாஜிஸ்டிரேட்டார் சாமிநாத சாஸ்திரியின் கன்னம் வீங்கவேண்டிய காரணம் என்ன வென்று அவரைக் கேட்டார். அவர் ஒன்றும் மறுமொழி சொல்லாமல் மௌனமாக இருக்கவே இன்ஸ்பெக்டரைக் கேட்டார். அவர் தமக்குத் தெரியாதென்று சொல்லி அங்கிருந்த கான்ஸ்டேபில்களைக் கேட்க, ஒருவன் இன்னுன் அடித்தானென்று சொன்னுன். உடனே சப் மாஜிஸ்டிரேட்டாருக்கு இரு கண்களிலும் நெருப்புப் பொறி பறக்க, இன்ஸ்பெக்டரைப் பார்த்து, "மாஜிஸ்டிரேட் அதிகாரமெல்லாம் உன் கான்ஸ்டேபில்களுக்குக் கொடுத்திருக்கிறதோ?" என்று கடுமையாய்க் கேட்க, இன்ஸ்பெக்டருக்குக் கோபம் வந்து அந்தக் கான்ஸ்டேபிலை அங்கிருந்த பிரம்பால் பலமாய் அடித்ததல்லாமல் உடனே

சாமிநாத சாஸ்திரியை அடைத்திருந்த இடத்தில் அவனை அடைத்துவிடச் சொல்லி அவனை வேலையிலிருந்து நீக்க வேண்டிய பிரயத்தனங்கள் செய்வதாகவுஞ் சொல்லி விட்டுச் சாமிநாத சாஸ்திரியைச் சப் மாஜிஸ்டிரேட்டார் வண்டியில் ஏற்றிக் கொண்டுபோய் வீட்டில் விட்டுவிட்டார்கள். அப்பால் இன்ஸ்பெக்டர் மறுபடியும் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் அடைக்கப்பட்டிருந்த கான்ஸ்டேபிலைத் திறந்துவிட்டு அவன் நெடுநாளாகத் தன்னைச் சொந்த ஊருக்கு மாற்றவேண்டுமென்று கேட்டுக் கொண்டபடி அவனை மாற்றின ஆர்டரும் கையிற் கொடுத்துப் பத்து ரூபாயும் கொடுத்துவிட்டுத் தம் வீட்டிற்குப் போனார். அவன் அன்று தான் விழித்த முகம் நல்ல முகமென்றும், அப்படியே நித்தியம் தன்னை அன்று அடித்ததைப் பார்க்கிலும் நான்கு பங்கு அதிகமாய் அடித்துப் பத்து ரூபாய் கொடுத்தால் எவ்வளவு உபகாரமாயிருக்குமென்றும் எண்ணிக்கொண்டு சந்தோஷமாய்த் தன் ஊர் போய்ச் சேர்ந்தான்.

## 5. இராஜாம்பாளும் சாமிநாத சாஸ்திரியும்

இராஜாம்பாள்: அப்பா! நேற்று ராத்திரி ராமண்ணாவும், போலீஸ் இன்ஸ்பெக்டர் மணவாள நாயுடுவும், போலீஸ் கான்ஸ்டேபில்களும் வந்து பொன்விளைந்த களத்தூரில் திருட்டுப்போன நகை நமது வீட்டில் அகப்பட்டதாகச் சொல்லி உங்களை இம்சைப்படுத்திப் பிடித்துக் கொண்டு போனபோது எனக்கு வந்த கோபம் இவ்வளவு அவ்வளவென்று சொல்ல முடியாது. அப்போதே நமது வீட்டிலுள்ள ரிவால்வரைக் கொண்டு அவர்களெல்லோரையும் சுட்டுவிடலாமென்று யோசித்தேன். அப்பால் ஆழ்ந்து யோசனை செய்ததில் இவர்களைச் சுட்டால் இன்னும் அதிகப் போலீஸ் வீரர்கள் வந்து நம்மைப் பிடித்துப் போவார்களென்றும், அதனால் உபகாரமில்லையென்றும் தீர்மானம் செய்து சும்மா இருந்துவிட்டேன். அப்பால் கோபாலனைக் கூப்பிட்டுக் கேட்டதில் அவர் பொழுது விடிந்த பிற்பாடு சென்னைக்கு வக்கீலுக்குத் தந்தி

கொடுத்து வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டுமென்று சொன்னதன்றி என்னைச் சாப்பிட்டுப் படுத்துக்கொள் ளும்படி பல வகையிலும் வேண்டினார். ஆனால் புத்தி தெரிந்தது முதல் உங்கள் பக்கத்திலேயே உட்கார்ந்து சாப்பிட்டுப் பழக்கப்பட்டவளாகிய எனக்கு நீங்கள் இப்படிப்பட்ட சங்கடத்திற்குள் அகப்பட்டுக்கொண்டி ருக்கிறீர்களென்று தெரிந்தும் எப்படிச் சாப்பிட மனந் துணியும்? ஆகையால்தான் நீங்கள் ராத்திரி திரும்பி வரும்வரையில் நானும் கோபாலனும் உட்கார்ந்து, மேல் நடக்கவேண்டிய விஷயங்களைக் குறித்துப் பேசிக் கொண்டே இருந்தோம். நீங்கள் திரும்பி வந்தவுடனே எனக்கு உண்டான சந்தோஷம் இப்படிப்பட்டதென்று சொல்ல முடியவில்லை. மேலும் அந்த விஷயத்திற்கும் நமக்கும் இனி யாதொரு சம்பந்தமும் இல்லையென்று நீங்கள் சொன்னவுடனே பின்னும் அதிகமான ஆனந் தத்தை அடைந்தேன். ஆனால் நீங்கள் மாத்திரம் ஒரு விதமான வருத்தத்துடன் யோசனை செய்துகொண்டிருக்கி றீர்களென்று எனக்குத் தோன்றுகிறது. நேற்றுப் பட்ட இம்சைக்காகவும் அவமானத்திற்காகவும் உங்களுக்கு வருத்தம் இருக்கவேண்டியது அவசியமாக இருந்தபோதி லும், அதைவிட ஆயிரமடங்கு அதிகமான விசனத்தில் நீங்கள் அமிழ்ந்திருக்கிறீர்களென்று ஊகிக்கிறேன்.

**சாமிநாத சாஸ்திரி:** கண்மணி, உன்னை நான் வளர்த்த அருமையையும் உன்னுடைய புத்தி நுட்பத்தையும் நினைக்க நினைக்க என் மனமானது அனலிலிடும் மெழுகு போல் உருகுகிறது. நேற்று இருக்கவேண்டிய விசனத்தை விட அதிக விசனத்தில் ஆழ்ந்திருக்கிறேன் என்பதை நீ எப்படி அறிந்தாய்?

**இராஜாம்பாள்:** நீங்கள் நேற்று ராத்திரி வந்தவுடனே சாப்பாடு ஒன்றும் வேண்டாமென்று சொல்லிவிட்டுப் படுத்துக் கொண்டீர்களே! அப்போது நான் பாலைக் கொண்டுவந்து கொடுத்து அதையாவது சாப்பிடச் சொன்னபோது உங்களுக்கு என்னைக் கண்டமாத்திரத்தில் உண்டான வருத்தமானது நேற்று நீங்கள் அடைந்த வருத்தத்தால் ஏற்பட்ட விசனம் அல்லவென்றும், வேறு காரணத்தால் ஏற்பட்டதென்றும் தெளிவாய் என் மனத்

தில் தோன்றியது. உங்களுக்கு ஏற்பட்ட விசனம் இன்ன தென்று அறிந்து, என்னால் கூடுமானால் நிவர்த்திசெய்ய வேண்டுமென்னும் எண்ணத்தோடு இப்போது உங்களைக் கேட்கிறேன்.

**சாமிநாத சாஸ்திரி:** குழந்தாய், கேள். உன்னிடம் என் விசனத்தை இன்று சொல்லாவிடினும் இன்னும் சில தினங்களில் சொல்லித்தீர வேண்டு மாகையால் சொல்லுகிறேன். உன்னுடைய ஜாதகத்தையும் கோபால னுடைய ஜாதகத்தையும் ஜோசியர்களைப் பார்க்கச் சொன்னபோது அவர்கள் பார்த்துவிட்டுச் செவ்வாய் தோஷம் இருக்கிறதென்று சொன்னபோது, எனக்கு அவர்கள் சொன்னது புரட்டென்று தெரிந்துதான் கும்ப கோணத்திலிருந்து நீலகண்ட சாஸ்திரிகளை வரவழைத் தேன். அவர் ஜாதகம் பார்த்துக்கொண் டிருக்கும் சமயத்தில் ராமண்ணா வந்ததும், அதற்கப்பால் நீல கண்ட சாஸ்திரி வெளிக்குப் போய் வந்தவுடனே மூச்சுப்பேச்சில்லாமல் விழுந்ததையும் யோசிக்கையில் அவரை யாரோ பயமுறுத்தினதன்மேல் நமக்கு விரோத மாகச் சொல்லக்கூடாதென்ற எண்ணத்துடன், அப்படிப் பாசாங்கு செய்தாரென்று பின்னால் நடந்த விஷயங் களைக் கொண்டு ஊகிக்கவேண்டியிருக்கிறது. நேற்று நமது வீட்டில் நடந்த விஷயங்களும் என்னைப் பய முறுத்திச் சிறைச்சாலையில் கொண்டுபோய் வைத்துக் கொண்டு என்னிடம் ஓர் வாக்குறுதி பெறுவதற்காகச் செய்தவை என்றும் இப்போது ஊகிக்கிறேன். நேற்று நான் இருந்த காபுராவில் இந்த விஷயங்களை யெல்லாம் ஆய்ந்தோய்ந்து யோசனை செய்யாமல் அவர்கள் யோசனை செய்தபடியே அவர்கள் வலையிற் சிக்கிவிட்டேன். நான் ஜன்மமெடுத்து இன்றுவரையில் சொன்ன வாக்கைத் தட்டி நடந்தவன் அல்ல. அப்பேர்ப்பட்டவனென்று தெரிந்ததனால்தான் என்னைச் சிக்குமுக்கிற் கொண்டு போய்விட்டு, பிடித்த பிடியிலேயே வாக்களிக்கும்படி செய்துவிட்டார்கள். இப்போது யோசித்துப் பார்க்கை யில் அப்படி வாக்குக் கொடுத்த நாக்கை வெட்டிவிட வேண்டுமென்று தோன்றுகிறது. மேலும், நான் விடுதலை அடையும்பொருட்டு என் உயிரிலும் சிறந்த இருவரைத்

தீரா விசனத்தை அடையும்படி செய்தேன். ஆகையால் நான் ஜீவித்திருப்பதால் என் பிராணனுக்குமேல் அதிகப் பிரியமாய்ப் பார்க்கும் இருவருக்கும் விசனம் உண்டாகும்; அப்படி அவர்கள் விசனத்தை அடைந்துகொண் டிருப் பதைப் பார்ப்பதைவிட நான் பிராணத் தியாகம் செய்து கொள்வதே நலமல்லவா?

**இராஜாம்பாள்:** அப்பா! என்னவோ சொல்லுகிறீர் கள். காரியம் இன்னதென்று சொல்லவில்லை. மேலும் நீங்கள் பிராணத் தியாகம் செய்துவிட்டால் அப்பால் உல கத்திலே எனக்கு என்ன வேலை? உங்களுக்கு மறுமை யிலும் சிசுருஷை செய்வதற்காக நானும் உங்கள் பின்னு லேயே பிராணனை விட்டுவிடுகிறேன். எப்போது நான் பிராணனை விட்டுவிட்டேனோ என் அந்தரங்கப் பிரியனான கோபாலனும் இறந்து விடுவதில் தடையிராது. ஆகை யால் நாங்கள் இருவரும் இறந்துபோக வேண்டுமென்ற எண்ணம் உங்களுக்கு இருந்தால், உங்கள் இஷ்டம்போல் செய்யுங்கள்.

**சாமிநாத சாஸ்திரி:** நீங்கள் இருவரும் வருத்தத்தை அடையும்படி வாக்களித்துவிட்டேன் என்பதற்காகத் தானே நான் இறந்து போகவேண்டுமென்றேன்? நடந்த சங்கதிகளைச் சொல்லுகிறேன். என்மேல் தப்பு இருக் கிறதா இல்லையா என்று நீயே அறிந்துகொள். நேற்று ராத்திரி என்னைப் போலீஸ் ஸ்டேஷனில் அடைத்த கொஞ்ச நேரத்திற்குள் தாகத்துக்குச் சாப்பிட வெளியே விடவேண்டுமென்று கேட்டேன். வெளியே போகவிட வில்லை. அப்பால் அரைமணி நேரம் பொறுத்து எனக் குத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்கிற எண்ணத் துடன் போலீசாரிடம் வீண்சண்டை போட்டால் தன்னை யும் அடைத்துவிடுவார்களென்றும், அப்போது எனக்குத் தண்ணீர் கொடுக்கலாமென்றும் எண்ணி அப்படியே சண்டை செய்து தான் ஜலம்கொண்டு உள் வந்ததாக ராமண்ணு சொன்னான். நான் கொஞ்சமாவது சந்தேகப் படாமல் வாஸ்தவமென்றே நினைத்தேன். அப்பால், இந்த ஊர் சப் மாஜிஸ்டிரேட் நீலமேக சாஸ்திரிகளின் தூண்டுதலின்பேரில்தான் என்னை அடைத்திருப்பதாகவும், உன்னை நீலமேக சாஸ்திரிகளுக்குக் கல்யாணம் செய்து

கொடுப்பதாக வாக்களித்தால் உடனே விட்டுவிடுவார் களென்றும் ராமண்ணு சொன்னுன். நான் அதற்குச் சிறிதும் இடங்கொடுக்கவில்லே. அப்பால், நான் ஒப்புக் கொள்ளாவிட்டால் கோபாலனேயும் திருட்டுக் கேசில் சம்பந்தப்படுத்த உத்தேசித்திருப்பதாகவும், அவனேயும் சிறையில் அடைத்து விடுவதாகவுஞ் சொல்லி, நான் வாக்குக் கொடுத்துவிட்டு வெளியே போய்விட்டால் இன்னும் இரண்டொரு தினத்தில் இந்தச் சப் மாஜிஸ் டிரேட்டை யாரோ கொலேசெய்யக் காத்துக்கொண் டிருக் கிருனென்றும், ஆகையால் நான் வாக்களிப்பதால் உடனே விடுதலே யடைவதன்றிக் கல்யாணஞ் செய்து கொடுக்கவேண்டிய பிரமேயமும் இல்லே என்பதாகவும் ராமண்ணு சொன்னுன். நேற்று ராத்திரி இருந்த நிலேயில் எனக்கு எப்போதும் மாமூலாயிருக்கும் நன்மை தீமை என்று பகுத்தறியும் சக்தி சற்று மட்டுப்பட்டிருந்தது. அதனுல் இப்படி இருக்குமா இருக்காதா என்று யோசனே செய்யாமல் அவர்கள் கேட்டபடி வாக்களித்துவிட்டு இப்போது ஆந்தையைப்போல் விழித்துக்கொண் டிருக் கிறேன். இப்போது யோசித்துப் பார்க்கையில், ராமண்ணு ஆதிமுதலே இந்தச் சப் மாஜிஸ்டிரேட் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு அவனுக்கு அநுசரணேயாய் நடந்திருப்ப தால் அவனேக் கொலேசெய்ய ஆள் தயாராயிருக்கிரு னென்று அவன் சொன்னது பொய்யென்று தெளிவாகத் தோற்றுகிறது. நான் சொன்ன வாக்கும் தட்டக்கூடாது. காமக் குரோத லோப மோக மத மாச்சரியம் என்னும் துர்க்குணங்களே திரண்டு உருவாக வந்திருக்கும் அந்தக் கிழட்டுப் பிணத்திற்கு என் கண்மணியாகிய உன்னேக் கல்யாணம் செய்துகொடுக்க என் மனம் எப்படித் துணியும்? இதுதான் எனக்கு இருக்கும் வருத்தம்.

**இராஜாம்பாள்:** அப்பா! என்னே யாருக்குக் கல்யா ணம் செய்துகொடுக்க உங்களுக்கு இஷ்டம்?

**சாமிநாத சாஸ்திரி:** ராஜம்மா, கேட்கவேண்டுமா? கோபாலனேத் தவிர வேறே யாருக்காவது உன்னேக் கல்யாணம் செய்துகொடுக்க என் மனம் எப்படி ஒப்பும்? உங்கள் இருவருக்கும் குழந்தை முதலே இருக்கும் பிரியம்

எனக்குத் தெரியாதா? கோபாலனைத் தவிர வேறே கோடி சூரியப் பிரபு வந்து கேட்டாலும் உன்னைக் கொடுக்க எனக்கு இஷ்டமில்லை.

**இராஜாம்பாள்:** அப்பா! எப்படியாவது உங்கள் வாக்குக் கொடுத்தவரைக்கும் சொன்னபிரகாரம் நடப்பதுதான் சரி. வேறு யோசனை செய்வது உசிதம் அல்ல. ஆகையால் முகூர்த்தம் வைத்து நிச்சயதார்த்தம் செய்ய ஏற்பாடு செய்யுங்கள். இனி யோசனை செய்வதில் பிரயோஜனம் இல்லை. யார் யாருக்குப் பிராப்தம் எங்கே இருக்கிறதோ அங்கேதான் நடக்கும். கடவுள் விட்டபடி விடட்டும். மேலும், நீலமேக சாஸ்திரிகள் என்ன சாமானியமானவரா? சுயார்ஜிதமாகப் பத்து லட்சத்துக்கு மேல் சம்பாதித்துவிட்டார். உத்தியோகத்திலும் சப் மாஜிஸ்டிரேட் உத்தியோகம் வகிக்கிறார். லட்சணத்தில் தான் என்ன குறைவு? வயசும் அவ்வளவு ஜாஸ்தி ஆகிவிடவில்லை. அப்படி இருக்க அவரைக் கல்யாணம் செய்து கொள்வதில் எனக்குக் கொஞ்சமாவது வருத்தமே கிடையாது. ஆகையால் நீங்கள் அந்த விஷயத்தைக் குறித்துச் சிறிதேனும் வருத்தம் வைக்காமல் உடனே வேண்டிய ஏற்பாடுகள் செய்துவிடச் சொல்லுங்கள். ஆனால் அவர் சப் மாஜிஸ்டிரேட்டாக இருக்கிறபடியால் அவர் அந்தஸ்துக்குத் தாங்கள் கன்னிகாதானம் செய்துகொடுக்கக் கூடாதாகையால் நான் சொன்னதாகச் சொல்லி அவரையே கல்யாணம் வெகு சிறப்பாய் நடத்தவேண்டுமென்றும், அவர் எவ்வளவுக்குச் சிறப்பாய்க் கல்யாணம் நடத்துகிறாரோ அவ்வளவுக்கு எனக்கு அவர்மேல் இஷ்டம் அதிகமாக இருக்குமென்றும் சொல்லி, இந்த ராஜதானியிலுள்ள பிரபலமான தாசிகளுக்கும், வாத்தியக்காரர்களுக்கும், பாகவதர்களுக்கும் சொல்லுவதன்றி, பந்தல்கள் முதலானவையும் விசேஷமாகப் போடச் சொல்லவேண்டும். பொதுவாக இந்தக் கல்யாணத்தைப் போல் இதுவரையில் எவரும் செய்ததில்லை என்ற பேர் வரும்படி செய்யச் சொன்னேனென்றும் சொல்லுங்கள்.

**சாமிநாத சாஸ்திரி:** நீ பேசுவதைப் பார்த்தால் நான் சொன்னதன்பேரில் உன் புத்தி சிதறிப்போனதாகத்

தோன்றுகிறது. பெண்கள் யாரை விரும்புகிருர்களோ அவர்களுக்கே கல்யாணஞ் செய்துகொடுக்க வேண்டுமென்றும், கல்யாணம் முதலிய விசேஷ காலங்களில் ஜாஸ்திப் பணம் செலவு செய்வது வியர்த்தமென்றும், தாசிகள் கச்சேரிகள் வைப்பது கூடவே கூடாதென்றும் இதுவரையில் சொல்லிக்கொண் டிருந்த நீ, இந்தக் கொள்கைக்கு நேர் விரோதமாக இப்போது நடக்க வேண்டுமென்று சொல்லுகிருயே! அது என்ன?

**இராஜாம்பாள்:** முன்னுல் அப்படித் தோன்றிற்று. இப்போது அதெல்லாம் பைத்தியமென்றும் இப்படிச் செய்வதே சிலாக்கியமென்றும் தோன்றுகிறது. சிறு பிள்ளைகளில் கெடுதல்களாகத் தோன்றும் விஷயங்கள் பெரியவர்களான பிற்பாடு நன்மைகளாகத் தோன்றுகிறதில்லையா? ஒவ்வொருவரும் அநேக காரியங்கள் கெடுதல்களென்று தெரிந்தும் அவைகளைச் செய்கிருர்கள் அல்லவா? தீமையென்ருல் எப்படிச் செய்வார்கள்? ஏதோ அநுகூலம் இருப்பதால்தான் அப்படிச் செய்கிருர்கள். அதெல்லாம் எதற்கு? நீங்கள் வாக்குக் கொடுத்ததற்கும் உங்கள் அபிப்பிராயத்திற்கும் விரோதம் வராமல் நடக்கச் சித்தமாயிருக்கிறேன். இனி நீங்கள் இந்த விஷயத்தில் அசுவாரசியமாயிராமல் உடனே ராமண்ணுவைக் கூப்பிட்டு இச்சமாசாரம் சொல்லி அனுப்பிவிடுங்கள். இல்லாவிட்டால் நானே சொல்லி அனுப்புகிறேன்.

இப்படிச் சொல்லிவிட்டு இராஜாம்பாள் தன் வேலைக்காரிகளில் ஒருத்தியை அனுப்பி, ராமண்ணுவைக் கூட்டிவரச்சொல்லி அவரிடம் மேற்சொன்ன விஷயங்களையெல்லாம் தெரிவித்து நீலமேக சாஸ்திரிகளிடம் போய்ச் சொல்லும்படி அனுப்பினுள்.

## 6. கல்யாண ஏற்பாடுகள்

**ராமண்ணு:** சாமிநாத சாஸ்திரிதான் சம்மதித்துவிட்டார், இராஜாம்பாள் என்ன சொல்லுவாளோ என்று எஜமான் சந்தேகப்பட்டுக்கொண் டிருந்தீர்களே; பார்த்தீர்களா என் சாமர்த்தியத்தை? மந்திரவாதி ஒருவனைப் பிடித்து வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்த

தில் இப்போது ராஜாம்பாள் தங்களைப் பிரியத்தோடு கல்யாணஞ் செய்துகொள்வதாகவும், கோபாலனுடைய முகத்தைத் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டேனென்றும் சொல்லும்படி செய்துவிட்டேன்; பார்த்தீர்களா?

**நீலமேக சாஸ்திரி:** ஆகா! அப்படியா? சபாஷ்! நல்ல வேலை செய்தீர். என்னுடைய கட்டாயத்திற்காக என்னை அவள் கல்யாணஞ் செய்துகொண்டாலும் கோபாலன் பேரிலேயே அவளுக்குப் பிரியம் இருக்குமென்று நினைத்திருந்தேன். அதனால் கோபாலனைக்கூட ஏதாவது ஏற்பாடு செய்து பள்ளிக்கூடத்திற்கு அனுப்பலாமா என்று யோசித்திருந்தேன். ஆனால் இப்போது நீர் சொன்ன வார்த்தையால் அப்படிச் செய்யவேண்டியதில்லையென்று தோன்றுகிறது. அவள் என்னைக் குறித்து என்ன சொன்னாள்? கோபாலனைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை என்றீரே. நீரே நேரில் பார்த்தீரா? அல்லது எவராவது சொன்னார்களா?

**ராமண்ணா:** நான் இன்னொருவருடைய வார்த்தையைக் கேட்டுத் தங்களிடம் இவ்வளவு தைரியமாய்ச் சொல்லுவேனா? சுருக்கமாய்ச் சொல்லுகிறேன் கேளுங்கள். உங்களுடைய கல்யாண ஏற்பாடுகளைக் குறித்துப் பேச என்னை ராஜாம்பாள் கூப்பிட்டனுப்பினாள். நான் போனவுடனே கல்யாணம் வெகு சிறப்பாகச் செய்யவேண்டுமென்று சொன்னாள். நான் தங்களுடைய அந்தஸ்துக்குத் தக்கபடி தாங்கள், இப்பேர்ப்பட்ட கல்யாணம் யாருஞ் செய்ததில்லை என்று சொல்லும்படி, அவ்வளவு விசேஷமான ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிறீர்களென்று சொன்னேன். அப்பால் தங்களுடைய அழகைக் குறித்தும் கம்பீரத்தைக் குறித்தும் அந்தஸ்தைக் குறித்தும் குணாநுபவங்களைக் குறித்தும் உதாரத்துவத்தைக் குறித்தும் பெருந்தன்மையைக் குறித்தும் ஈகையைக் குறித்தும் அவள் பேசியபோது, ஆஹா! ராஜாம்பாளா இப்படிப் பேசுகிறாளென்று சந்தேகப்பட்டு என் கண்களைக்கூட நம்பாமல் நன்றாய்க் கண்களைத் துடைத்துக்கொண்டு பார்த்தேன். அப்பால் ஒருவேளை கனவோ நனவோ என்றுகூட யோசித்தேன். பிறகு ராஜாம்பாள்தான் இப்படிப் பேசுகிறாளென்று நிச்சயித்துக்கொண்டேன். ஆகா!

அவள் தங்களைப் புகழ்ந்து பேசினதை இன்னதென்று ஆயிரம் நாவைப் படைத்த ஆதிசேஷனுலுஞ் சொல்ல முடியாதென்றால் கேவலம் வடிகட்டின முட்டாளாகிய என்னால் எப்படி விஸ்தரித்துச் சொல்ல முடியும்? அவள் இப்படித் தங்களைப் புகழ்ந்துகொண் டிருக்கும் சமயத்தில் கோபாலன் அவள் எதிரே வந்தான். அவனைக் கண்டதும் என்ன செய்கிறுளென்று பார்த்தேன். இதுவரையில் பாராத கூலி வேலைக்காரன் ஒருவனைக் கண்டால் எப்படி இருப்பாளோ அப்படியே அவனைப் பாராததுபோல் இருந் தாள். அப்போதும் கோபாலன் போகாமல் அவள் சமீபத் தில் வந்து ஏதோ சொல்ல வாயெடுத்தான். உடனே அவள், "இன்றுமுதல் நீயும் நானும் அந்நியர்கள்; இனிமேல் என்னிடம் நீ பேசத்தகாது" என்று வெகு கடூரமாகச் சொன்னுள். "அப்படி நீ சொல்வதற்கு ஏற்பட்ட கார ணம் என்ன?" என்று கோபாலன் கேட்டான். "உன்னி டம் நான் காரணஞ் சொல்லவேண்டிய பிரமேயம் இல்லை. இன்று முதல் நீயும் நானும் அந்நியர்களென்பதை நிச்சயமாய் அறிந்துகொள்" என்று சொன்னுள். உடனே அவன் அழாத துக்கமாய் எழுந்து போய்விட்டான். இதுதான் நான் நேரில் பார்த்த சங்கதி.

**நீலமேக சாஸ்திரி:** பேஷ்! நான் எடுத்த ஜன்மம் இன் றல்லவோ புனிதமாயிற்று? அவள் இஷ்டம் எப்படியோ அப்படியே கல்யாணஞ் செய்கிறேன். இரண்டு லட்சம் அல்ல, ஐந்து லட்ச ரூபாய் செலவு செய்கிறேன். என்ன கெட்டுப்போயிற்று? எப்படியாவது அவளைத் திருப்தி செய்ய வேண்டியதுதான். என்ன என்ன செய்தால் அவ ளுக்குத் திருப்தியாயிருக்கும்? சொல்லும், பார்ப்போம்.

**ராமண்ணு:** தாங்களே நேரில் போய் ராஜாம்பா ளிடம் கேட்டு நீங்கள் இருவரும் தீர்மானம் செய்து கொள்ளுங்கள். "கொண்டவனுங் கொடுத்தவனு மொன்று; கொட்ட வந்த பறையன் தூரத் தூர" என் பதுபோல் இனிமேல் எங்களையெல்லாம் தாங்கள் கனவி லும் நினைக்கப்போகிறீர்களா? அதில்லை. எப்படியாவது எஜமானுக்கு இந்த நாயின் பேரில் சிறிது தயவிருந்தால் போதும். நான் போய் வருகிறேன்.

ராமமண்ணு போய்விட்டார். உடனே நீலமேக சாஸ்திரிகள் க்ஷவரம் செய்துகொண்டு ஐந்து மேரு பன்னீர் உடைத்து ஊற்றி, பன்னீரிலே ஸ்நானஞ்செய்து திருப்தியாய்ச் சாப்பிட்டுவிட்டு, அலங்காரஞ் செய்து கொள்வதற்காக மெத்தைக்குப் போய், இரும்புப் பெட்டியைத் திறந்து வைரக் கடுக்கன்களை எடுத்து நாய்த் தோலிற் சுத்தமாய்த் துடைத்துக் காதிற் போட்டுக் கொண்டார். பத்தரைமாற்றுத் தங்கத்தாற் கட்டி இடையிலே வைரங்களும் ரத்தினங்களும் பொதிந்துள்ள ருத்திராட்ச மணியையும் சாளக்கிராம மணியையும், தங்கத்தாற் கட்டிய பதினைந்து சரம் நல்முத்து ஆரத்தையும் கழுத்தில் அணிந்தார். நவரத்தினங்களால் அமைத்துள்ள முகப்பையுடைய தங்கப் பூணூல் போட்டுக் கொண்டார். பத்து விரல்களில் ஒவ்வொரு விரலுக்கும் நவரத்தினங்கள் அமைத்த மோதிரங்கள் இரண்டும், தங்கக் கெட்டிக்காப்பும், கெட்டிக் கொலுசும், நவரத்தினங்கள் இழைத்த யாளிமுகத் தோடாவும் கையிலும், முழங்கைக்கு மேல் ஒரு கையில் தங்கக் கடையமும், மற்றொரு கையில் நவரத்தின பாசிபந்தும் மாட்டிக்கொண்டார். ஒரு முழ அகலமுள்ள ஜரிகை முன்றானையுள்ள பன்னிரண்டு முழ வேஷ்டியை இடுப்பிற் கட்டி, அதற்குமேல் தங்க அரைஞாணைப் பூட்டிக்கொண்டார். உயர்ந்த பனாரிஸ் சால்வை ஒன்றை யோக வல்லவாட்டாகப் போட்டுக் கொண்டு, சிவப்புப் பட்டில் ஜரிகைக்கொட்டடிக் கோராக்களும் கோராக்களுக்கிடையில் ஜரிகைப் புட்டாக்களும் உள்ள மத்தாப்புச் சவுக்கத்தைப் புஜத்தில் தொங்கவிட்டுக் கொண்டார். இந்துஸ்தானிலிருந்து வரவழைத்திருந்த உயர்ந்த வாசனைகளைப் பூசிக்கொண்டு, உயர்ந்த ஜவ்வாதை இழைத்துத் திலகமிட்டு, திலகத்திற்குக் கீழ்க் குங்குமப் பொட்டும், திலகத்திற்கு மேல் குங்குமப்பூவும் பச்சைக் கர்ப்பூரமும் ஜவ்வாதுஞ் சேர்த்து உரைத்து வைத்திருக்கும் சந்தனப் பொட்டும் இட்டுக் கொண்டார். மல்லிகை, முல்லை, இருவாட்சி, சண்பகம், மருக்கொழுந்து, குருவிவேர், கொடிசம்பங்கி, நிலசம்பங்கி, ரோஜா, மனோரஞ்சிதம் முதலிய புஷ்பங்களாற் கட்டப்பட்ட புஷ்ப ஆரத்தை, மயிரை உதறிக் கட்டி நன்றாய் வெளியே

தெரியும்படி வைத்துக்கொண்டு, உயர்ந்த வெல்வெட்டில் தங்கப்பொட்டுகளால் யானே, கிளிகளேப்போல் அலங்கரிக்கப்பட்ட ஜோட்டைக் காலில் மாட்டிக்கொண்டு, கோமேதகக் கண்களுடைய தங்க யாளியைக் கைப்பிடியாக வைத்த, யானைத் தந்தத்தாற் செய்யப்பட்ட தடியைக் கையில் தாங்கி, நான்கு சர்க்கார்ச் சேவகர்கள், தங்கள் பில்லைகளோடு சுத்தமான உடுப்பு அணிந்துகொண்டு வண்டியின் முன்னும் பின்னும் ஓடிக்கொண்டு வர, அரபி தேசத்துப் பஞ்ச கல்யாணிக் குதிரைகள் இரண்டு கட்டிய சாரட்டில் ஏறிக்கொண்டு இராஜாம்பாளின் வீடு போய்ச் சேர்ந்தார். நீலமேக சாஸ்திரிகள் வந்தாரென்ற சமாசாரந் தெரிந்தவுடனே, இராஜாம்பாள் ஓடிவந்து அவருக்குச் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து உள்ளே அழைத்துக் கொண்டுபோய்ச் சோபாவில் உட்காரும்படி சொல்லித் தான் கொஞ்ச தூரத்தில் நின்றுகொண் டிருந்தாள்.

**நீலமேக சாஸ்திரி:** கண்மணி ராஜம், ஏன் தூரத்தில் நின்றுகொண் டிருக்கிருய்? பதிவிரதைகளுக்கு இருக்க வேண்டிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களும் உன்னிடம் குடிகொண் டிருக்கும் விஷயம் எனக்கு நன்ருய்த் தெரியும். ஆனால் அந்நியர்களிடத்தில் நீ அந்த மாதிரி இருக்கவேண்டியது அவசியமே. என்னிடம் சகஜமாயிருப்பதில் ஆட்சேபம் என்ன? இந்தச் சோபாவில் என் சமீபத்திலேயே நீ உட்காரலாமே.

**இராஜாம்பாள்:** நாம் கல்யாணஞ் செய்துகொண்ட பிற்பாடு ஆயுள் பரியந்தம் ஒருவர் பக்கத்தில் ஒருவர் உட்கார்ந்திருக்க வேண்டியவர்கள்தாமே? கல்யாணம் நடக்கும் வரையில் சில நாளைக்குத் தூரவே இருப்பது நல்லதல்லவா? இப்போதே உங்கள் பக்கத்தில் உட்கார்ந்தால் பார்ப்பவர்கள், 'இன்னும் கல்யாணமுமாகவில்லை, ஒன்றுமில்லை; அதற்குள்ளாக இப்படி இருக்கிருர்கள்!' என்று தூற்றமாட்டார்களா? ஊர்வாயை மூட உலைமூடி உண்டோ? கல்யாணமாகிவிட்டால் யாரும் பேசமாட்டார்கள்.

**நீலமேக சாஸ்திரி:** சரி! நீ நின்றுகொண் டிருப்பது எனக்கு வருத்தமாயிருக்கிறது. பக்கத்திலிருக்கும் நாற்காலியிலாவது உட்கார்ந்து கொள். ஏது? நகைகளெல்

லாம் போட்டுக்கொள்ளாமலும், நல்ல புடைவையைக் கட்டிக்கொள்ளாமலும் நாடோடியைப்போல் இருக்கிருயே! உனக்கு நகைகளெல்லாம் ஜதையாய் உன் தகப்பனுர் செய்து போடவில்லையா? அப்படி இல்லாவிட்டால் உடனே பச்சையில் ஒரு ஜதை, சிவப்பில் ஒரு ஜதை, வைரத்தில் ஒரு ஜதை ஆக மூன்று செட்டுகள் அனுப்பச் சொல்லிச் சென்னை டாக்கர் ஷாப்புக்கு இப்போதே தந்தி கொடுக்கிறேன்.

**இராஜாம்பாள்:** வர்ரியக் கட்டைக்குப் பட்டுக் குஞ்சமா? எனக்கு இப்போது இருக்கும் நகைகளே எதேஷ்டம். நான் கெட்ட கேட்டுக்கு எனக்கு இருக்கும் நகை போதாதோ? தயவுசெய்து தாங்கள் இந்த ஒரு விஷயத்தில் மாத்திரம் என்னை மன்னிக்கவேண்டும். பதவியில் இந்திரனுக்கும் அழகில் மன்மதனுக்கும் சம்பத்தில் குபேரனுக்கும் ஈகையில் கர்ணனுக்கும் சாமர்த்தியத்தில் அர்ஜுனனுக்கும் பலத்தில் பீமசேனனுக்கும் சத்தியத்தில் அரிச்சந்திரனுக்கும் சமானமாகிய தங்களைப் பர்த்தாவாய் அடைய, பூர்வஜன்மத்தில் நான் எவ்வளவு தவஞ்செய்திருக்கவேண்டும்? நான் ஜன்மம் எடுத்ததற்கு அவ்வளவே எனக்குப் போதுமானது.

**நீலமேக சாஸ்திரி:** என்னை நையாண்டி செய்கிருய் போல் இருக்கிறது. ஓர் அடி தூரங்கூடத் தாண்டமுடியாதவனைத் தாண்டவராயப்பிள்ளை என்பதுபோலும், ஒரு கண் குருடாய் இருப்பவனை நல்லகண்ணுப் பிள்ளை என்பது போலும், பிச்சைக்காரரைக் கண்டவுடனே கல்லாலடித்துத் துரத்துபவனைத் தர்மபுத்திரப்பிள்ளை என்பதுபோலும், ஒரு முத்துங் கண்டறியாதவனைச் சொரிமுத்துப் பிள்ளை என்பதுபோலும், மூச்சுக்கு முந்நூறு பொய் சொல்பவனைப் பொய்சொல்லா மெய்ப்பிள்ளை என்பதுபோலும், நீ சொன்ன அம்சங்களில் கொஞ்சங்கூட இல்லாத என்னை இப்படியெல்லாஞ் சொல்லுகிருயே!

**இராஜாம்பாள்:** தாங்கள் அப்படித்தான் சொல்லுவீர்கள். என்னைப்போல் வெம்போக்கியை அப்படியெல்லாஞ் சொன்னுல் வாஸ்தவத்தில் நம்மை மெச்சிக் கொள்கிருர்களென்று எண்ணிக்கொள்வார்கள். ஆனுல் தங்களைப்போல் சகல குணங்களும் பொருந்தியவர்கள்

இப்படிச் சொல்லுவது சகஜந்தான். அதிருக்கட்டும்; மேல் நடக்கவேண்டிய காரியங்களைச் சொல்லுங்கள்.

**நீலமேக சாஸ்திரி:** இந்தக் கல்யாணத்தைப்போல் இதுவரையிலும் யாரும் நடத்தவில்லையென்று சொல்லும்படி அவ்வளவு சிறப்பாய்க் கல்யாணம் நடத்தவேண்டுமென்பது என் அபிப்பிராயம். உன் அபிப்பிராயம் எப்படியோ?

**இராஜாம்பாள்:** என் அபிப்பிராயமும் அப்படித்தான். ஆனால் அதோடு நாம் கல்யாணஞ் செய்துகொள்வதற்கு முன்னால் இந்த ஊரில் உள்ளவர்களையெல்லாம் சந்தோஷப்படுத்திக் கல்யாணஞ் செய்தால் நல்லதென்று எனக்குத் தோற்றுகிறது. இந்த விஷயத்தில் தாங்கள் என் அபிப்பிராயத்தின்படி நடத்தவேண்டும்.

**நீலமேக சாஸ்திரி:** ஊரில் உள்ளவர்களையெல்லாம் எப்படிச் சந்தோஷப்படுத்தவேண்டும்? சொல், அப்படியே செய்வோம்.

**இராஜாம்பாள்:** நமது கல்யாணத்திற்குப் பத்து நாள் முன்னாலிருந்து இந்த ஊரிலுள்ள ஜனங்கள் எல்லாருக்கும் அவரவர்கள் ஜாதியாசாரத்திற்குத் தகுந்தபடி பூரி, அல்வா, வடை, பாயசம், லட்டு, ஜிலேபி முதலிய பலகாரங்களுடன் பத்து நாளும் சாப்பாடு போடவேண்டும்; ஏழை ஒவ்வொருவருக்கும் மூன்று சேலை, மூன்று ஜதை வேஷ்டிகள் வீதம் வரப்பட்டவர்களெல்லோருக்கும் தரவேண்டும். கல்யாணத்திற்கு முதல்நாள் பெண்களுக்குச் சேலைகளும் ஆண்களுக்கு வேஷ்டிகளும் கொடுக்கவேண்டும். இதுதான் எனக்காகத் தாங்கள் செய்யவேண்டியது. தங்கள் கௌரவதைக்குத் தக்கபடிதான் கல்யாணஞ் செய்வீர்களே; அதைக் குறித்து நான் விஸ்தரிக்கவேண்டியதில்லை.

கொஞ்சநேரத்திற்கப்பால் நீலமேக சாஸ்திரி இராஜாம்பாளிடம் விடைபெற்றுக்கொண்டு போய், இராஜாம்பாள் சொன்னபடியே ஏற்பாடுகள் செய்துவிட்டார். காஞ்சீபுரத்தில் எல்லா ஜாதியாருக்கும் பத்து நாளைக்குச் சாப்பாடு போடுகிறார்களென்றும், பத்தாம் நாள் ஒவ்வொரு பெண்ணுக்கும் மூன்று சேலைகளும், ஆணுக்கு மூன்று ஜதை வேஷ்டிகளும் இனாம் அளிக்கப்போகிறார்

களென்றும் சமாசாரம் பரவினவுடனே, அய லூர்களிலிருந்து ஜனங்கள் கூட்டங் கூட்டமாய் வந்து சேர்ந்தார்கள். காஞ்சீபுரத்தில் சாதாரணமாய் உட் காரக்கூட இடம் அகப்படுவது கஷ்டமாகப் போயிற்று. முகூர்த்தம் தீர்மானஞ் செய்திருக்கும் நாள் வியாழக் கிழமையாதலால் புதன்கிழமையன்று புடைவைகளும் வேஷ்டிகளுங் கொடுக்கப்பட்டன. புதன்கிழமை ராத்திரி மாப்பிள்ளை புறப்பட்டுப் பெண்வீடு வர நாள் பார்த் திருந்தார்கள்.

காஞ்சீபுரம் பூராவும் பந்தல்கள் போடப்பட்டன. ஒவ்வொரு தெருவிலும் கொட்டகைப் பந்தல்கள் போட் டுக் கச்சேரிகள் நடந்துகொண் டிருந்தன. ஊர் முழுவதும் விளக்குகள் போடப்பட் டிருந்ததன்றியும் புதன்கிழமை சாயங்காலம் ஐந்துமணி முதல் தீவட்டிகளும் மத்தாப்பு களும் எரிந்துகொண்டே இருந்தன. ஆறு மணியானதும், யானையின்மேல் அம்பாரி வைத்து நீலமேக சாஸ்திரிகள், ஊர் முழுதும் பதினெட்டு வாத்தியங்கள் தாம் தாமென்று முழங்க, யானையின் மீதிலுள்ள அம்பாரி யில் ஏறி உட்கார்ந்தார். சாதாரணமாய்ப் பட்டணப் பிரவேசங்களில் தீவட்டி சுமக்கிறவர்களும், மத்தாப்புக் காரரும் பாணக்காரரும் வெடிபோடுகிறவனும் வாத்தி யக்காரரும் தாசிகளும் வெற்றிலை, புஷ்பம், சந்தனம் கொடுப்பவர்களும் பன்னீர் தெளிப்பவர்களும் மாப் பிள்ளையோடுகூடவே போவது வழக்கமல்லவா? ஆனால் இந்தக்கல்யாணத்தில் அப்படிப்பட்ட ஏற்பாடுகள் செய்ய வில்லை. பத்து கஜ தூரத்திற்கொருதரம் தீவட்டிக்காரர் ஐம்பது பேர், மத்தாப்புக்காரர் ஆறு பேர், பாணவேடிக் கைக்காரர் நான்கு பேர், வெடிவண்டி ஒன்று, ஒரு ஜதை மேளகாரர், ஒரு ஜதை பாண்டுவாத்தியக்காரர், நான்கு தாசிகள், பன்னீர் தெளிக்க இருவர், வெற்றிலை, புஷ்பம், சந்தனம் கொடுக்க நான்கு பேர் ஆகிய இவர்கள் நிறுத் தப்பட்டிருந்தார்கள். இப்படியே ஊர் பூராவும் நிறுத் தப்பட்டிருந்தமையால் ஒரு பக்கத்திலுள்ளவர்கள் இன் னொரு பக்கம் போகவேண்டிய அவசியம் இல்லாமல் இருந் தது. ஆகவே பட்டணப் பிரவேசம் புறப்பட்டவர்கள் மாத்திரம் போய்க்கொண் டிருந்தார்கள் தவிர வேறே

யாரும் போகவில்லை. கல்யாணத்திற்குக் கச்சேரிக்காக அழைக்கப்பட்டவர்களுடைய பேரையெல்லாம் சொல்வது அசாத்தியமாகையால் வந்தவர்களில் முக்கியமான சிலரை மட்டுமே சொல்லுவோம். நாகசுர வாத்தியத்தில் திருமருகல் நடேசனும், திருநெல்வேலி ஆனையப்பனும், கும்பகோணம் சிவக்கொழுந்தும், கூறைநாட்டு நடேசனும்! தவுலில் ஸ்ரீ வாஞ்சியங் கோவிந்தனும், தேரழுந்தூர் வைத்தியும், திருநெல்வேலி மரகதமும்; கன்செட் வாத்தியத்தில் தஞ்சை ஈரோஜிராவும், தஞ்சை ஆத்மராவும்; பாடகர்களில் ராமநாதபுரம் ஸ்ரீநிவாசையங்காரும், மகா வைத்தியநாதையரும், பட்டணம் சுப்பிரமணிய ஐயரும், தோடி சுந்தரராவும், மடவார் விளாகம் முத்தையபாகவதரும், எட்டையபுரம் ராமசந்திர பாகவதரும், திருநெல்வேலி ஜாவளி சுப்பையரும், கோயம்புத்தூர்த் தாயும், மோட்டுக் காமாட்சியும், கோலார் நாகுவும், கரிவலநல்லூர்ப் பொன்னம்மாளும்; பிட்டிலில் திருக்கோடிகாவல் கிருஷ்ணையரும், திருச்சி கோவிந்தசாமி பிள்ளையும், திருநெல்வேலி வெங்குப் பிள்ளையும், கரூர்த் தேவுடு ஐயரும்; மிருதங்கத்தில் தஞ்சைத் துக்காராமும், தஞ்சை நாராயணசாமி அப்பாவும், புதுக்கோட்டைத் தக்ஷிணாமூர்த்தியும், கும்பகோணம் அழகநம்பியும், மைலாட்டூர்க் கிருஷ்ணையரும், கோயம்புத்தூர் வெங்கடையரும்; கஞ்சிராவில் மான்பூண்டியா பிள்ளையும்; புல்லாங்குழலில் கும்பகோணம் சரபசாஸ்திரிகளும், பல்லடம் சஞ்சீவிராவும்; கடவாத்தியத்தில் பழனிக் கிருஷ்ணையரும், பழனி ரங்கையரும், ராஜு முதலியாரும்; வீணை வாத்தியத்தில் மைசூர்ச் சேஷண்ணாவும், பக்ஷி சுப்பண்ணாவும், சென்னை தனமும், திருநெல்வேலி அம்மாளுவும்; பரதநாட்டியத்தில் திருவாரூர் ஞானமும், சென்னை ரூபாவதியும், திருநெல்வேலிப் பெரிய குஞ்சரமும்; பாகவதர்களில் தஞ்சாவூர்க் கிருஷ்ண பாகவதரும், கும்பகோணம் பஞ்சாபகேச சாஸ்திரிகளும், பாலக்காட்டு அநந்தராம பாகவதரும், பழனி சுப்பிரமணிய பாகவதரும் வந்திருந்தவர்களில் முக்கியமானவர்கள்.

சாயங்காலம் ஆறுமணிக்குப் புறப்பட்ட ஊர்வலம் முடிந்து ராத்திரி இரண்டு மணிக்கு மாப்பிள்ளை பெண்வீடு

வந்து சேர்ந்தார். வாசலில் ஆரத்தி எடுத்து மாப்பிள்ளையை வீட்டிற்குள் அழைத்துக்கொண்டுவந்து உட்கார வைத்துப் பாலும் பழமும் கொடுத்து நிச்சயதார்த்தம் செய்ய ஏற்பாடு செய்து, மாப்பிள்ளை வீட்டிலிருந்து பெண்ணுக்காகக் கொண்டுவந்த நகைகளைப் பெண்ணுக்குப் போட்டு நிச்சயதார்த்தம் செய்யப் பெண்ணை அழைத்துவரச் சொன்னார்கள். பெண் இருக்கும் இடத்திற் போய்ப் பார்க்கையில் பெண்ணைக் காணவில்லை. ஒரு வேளை கால்வாய்க்குப் போயிருக்கலாமென்று அங்கே தேடினார்கள். அப்பால் வேறு எங்கேயாவது படுத்துத் தூங்குகிறாளோ என்று வீடெல்லாந் தேடியும் பெண் அகப்படவில்லை. முதலில் கிசுகிசுவென்று பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பால் பெண்ணைக் காணோம் என்ற சங்கதி எல்லாருக்குந் தெரிந்து சகலருந் தேட ஆரம்பித்தார்கள். காலை மூன்று மணிவரையில் எங்கே தேடியும் பெண்ணைக் காணவில்லை. நீலமேக சாஸ்திரி அதிகக் கோபத்துடன் போலீஸ் இன்ஸ்பெக்டர் மணவாள நாயுடுவிடம் சொல்லிப் போலீஸ் வீரர்களை விட்டு ஊரெங்குந் தேடி எப்படியாவது பெண்ணைக் கண்டுபிடித்துக்கொண்டு வரும்படி ஆக்கினை செய்ததும் அல்லாமல் யார் கண்டு பிடித்துக் கொண்டுவருகிறார்களோ அவர்களுக்குப் பதினாயிரம் ரூபாய் இனாம் கொடுப்பதாகவும் சொன்னார்.

## 7. ஒரு கோரமான கொலை

வியாழக்கிழமை காலையில் வக்கீல் துரைசாமி ஐயங்கார் இராஜாம்பாள் கல்யாணத்திற்குப் போவதற்காகப் புறப்பட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில் தெருவில், 'பேப்பரையா, பேப்பர், காஞ்சீபுரத்தில் கல்யாணப் பெண்ணின் கொலை!' என்ற சத்தம் கேட்டது.

காஞ்சீபுரத்தில் கல்யாணப் பெண்ணின் கொலை என்கிறார்களே, என்று தமக்கு வந்திருந்த காலைப் பேப்பரைத் திறந்து பார்த்தபோது, தடித்த எழுத்தில் பின்வருமாறு எழுதியிருந்தது:

"காஞ்சீபுரத்தில் ஒரு கோரமான கொலை!

சாமிநாத சாஸ்திரியின் ஏக புத்திரியாகிய
இராஜாம்பாளின் பயங்கரமான கொலை.

நமது ராஜதானியில் தருமஞ் செய்வதில் நிகரற்ற கலிகாலத்துக் கர்ணனென்று பேர்வழங்கும் காஞ்சீபுரம் பிரம்மஸ்ரீ சாமிநாத சாஸ்திரிகளின் ஏக புத்திரியாகிய இராஜாம்பாளைக் கொன்று, அடையாளந் தெரியாமல் இருக்கும்படி கொன்ற இடத்திலேயே நெருப்பால் கொளுத்தப்பட் டிருந்ததென்று கேட்க அதிக விசனப்படுகிறோம். இராஜாம்பாளுடைய கல்யாணம் இன்று தீர்மானஞ் செய்திருந்ததையும் அவளுடைய இஷ்டத்தின்படி லட்சக்கணக்கான ஜனங்களுக்குப் பத்து நாளாகப் போஜனம் செய்வித்து, நேற்று ஒவ்வொரு புருஷனுக்கும் மூன்று ஜதை அங்கவஸ்திரங்களும் ஒவ்வொரு பெண்ணுக்கும் மூன்று புடைவைகளும் கொடுக்கப்பட்டதையும் யோசிக்கையில் அவளுடைய கொலையைக் குறித்து வருத்தப் படாதவர்கள் இல்லை. எல்லோராலும் விரும்பப்பட்டு இதுவரையில் யாருக்கும் ஒரு தீங்கும் செய்தறியாத இராஜாம்பாளைக் கொலைசெய்த பாதகனுடைய மனக் குரூரத்தை நினைக்கையில் யாருக்கும் உடல் நடுங்காமல் இருக்காது. ஏனென்றால் குழந்தை முதல் இராஜாம்பாளோடு பழகி, உடலும் உயிரும் போலிருந்த கோபாலன் கொலை செய்தானென்பதைக் கேட்க இன்னும் அதிக வருத்தத்தைக் கொடுக்கிறது. கோபாலன் சாமானியமானவன் அல்லன். பி. ஏ. பரீட்சையில் முதலில் தேறியிருப்பவன். இதுவரையில் யாருக்கும் யாதொரு தீங்கும் செய்தறியாதவன். எல்லோராலும் பிரியமாய்க் கொண்டாடப்படுபவன். கொலை செய்ததற்குக் காரணம் கோபாலனுக்குப் பெண்ணைக் கொடுக்காமல் காஞ்சீபுரம் சப் மாஜிஸ்டிரேட் நீலமேக சாஸ்திரிகளுக்குக் கல்யாணஞ்செய்ய ஏற்பாடு செய்ததுதான் என்று சொல்லுகிறார்கள்.

கேவலம் ஒரு பெண்ணின் நிமித்தம் தன் நற்குண நற்செய்கைகளை விட்டுவிட்டுக் கோபாலன் கொலை செய்திருப்பானு என்று சந்தேகிக்க இடமிருக்கிறது. ராவணன் தன் குலத்தோடு நாசமானதற்குக் காரணம் சீதாபிராட்டியல்லவா? துரியோதனன் தன் குலத்தோடு நாசமானதற்குக் காரணம் துரோபதை அல்லவா? இந்திரனுக்கு உடம்பெல்லாம் ஆயிரம் கண்களானது அகலிகை என்ற பெண்ணுலல்லவா? சந்திரனுக்கு வளர்பிறை தேய்பிறை ஏற்பட்டது தாரை என்ற பெண்ணுல் அல்லவா? இன்னும் தங்களுக்குச் சமானம் இல்லாமல் ஒற்றுமையாயிருந்த சுந்தோபசுந்தர் என்னும் சகோதரர் இருவரும் யாரால் கெட்டார்கள்? கேவலம் ஒரு பெண்ணின் நிமித்தமல்லவா? இவற்றையெல்லாம் யோசிக்குமிடத்தில் தனக்கு அபிமானமான ஒரு பெண்ணின் நிமித்தம் மனிதன் கொலை மாத்திரமல்ல, இன்னும் எதுவும் செய்வான் என்று நம்ப இடமேற்படுகிறது. கடைசியாக இந்தக் கொலையைக் கையும் மெய்யுமாகக் கண்டு பிடித்த போலீஸ் இன்ஸ்பெக்டர் மணவாள நாயுடு அவர்களின் சாமர்த்தியத்தை மெச்சாமல் விடுவது சரியல்ல. நம் போலீஸ் வீரர்கள் சாமர்த்தியசாலிகள் அல்லவென்று சொல்லுவது மூடத்தனம் என்பதற்கு இது ஓர் அத்தாட்சி அல்லவா?''

தலைப்பில் எழுதியிருந்த, 'இராஜாம்பாளின் கொலை' என்பதை வாசித்தவுடனே வக்கீல் துரைசாமி ஐயங்காருக்கு விசனம் உண்டாகிவிட்டது; அப்பால் அவர் வாசிக்கவேண்டுமென்று வாசிக்கவில்லை. அவர் கண்கள் படித்துக்கொண்டு போயினவே தவிர அவர் புத்தி அதிற் செல்லவில்லை. அப்பால் கோபாலன் கொலைசெய்தானென்பதை வாசித்ததும் மூர்ச்சையாகிக் கீழே விழுந்துவிட்டார். பக்கத்தில் இருந்த வேலைக்காரர்கள் அவருக்கு மூர்ச்சை தெளியும்படி செய்தார்கள். காலையில் காபிகூடச் சாப்பிடாமல் வண்டியைத் திருவல்லிக்கேணிக்கு ஓட்டச் சொல்லிப் போலீசாரால் கண்டுபிடிக்க முடியாத கஷ்டமான களவு, கொலைகளை யெல்லாங் கண்டுபிடிக்கக்கூடிய சாமர்த்தியமுள்ள துப்பறியும் கோவிந்தன் வீட்டண்டை வண்டியை

நிறுத்தினர். துரைசாமி ஐயங்கார் வண்டியை விட்டு இறங்குமுன் கோவிந்தன் ஒரு சிறு மூட்டையை எடுத்துக் கொண்டு வண்டியில் வந்து ஏறினர்.

**துரைசாமி ஐயங்கார்:** கோவிந்தா, நான் வந்தவுடனே மூட்டையோடு வண்டியில் வந்து ஏறினயே! நான் உன்னை எங்கே அழைத்துப்போக வந்தேனென்று உனக்குத் தெரியுமா?

**கோவிந்தன்:** தயவுசெய்து வண்டிக்காரனை ஜல்தியாய் வண்டியை ஓட்டச் சொல்லுங்கள். ரெயில் போக இன்னும் பத்து நிமிஷங்களே இருக்கின்றன. அப்பால் பேசிக்கொள்ளலாம்.

**துரைசாமி ஐயங்கார்:** இன்னும் ஒன்பதரை நிமிஷந் தான் இருக்கிறது. நாம் போய் டிக்கட்டு வாங்கி ஏறுவதற்கு நேரம் இராதே.

**கோவிந்தன்:** கோச்மான்! குதிரையை எவ்வளவு ஜல்தியாய் ஓட்ட முடியுமோ அவ்வளவு ஜல்தியாய்க் கர்நாடக ரெயிலுக்கு ஓட்டு. ஜல்தியாய் ஐயர் ஓட்டச் சொல்லுகிறர்.

**துரைசாமி ஐயங்கார்:** நான் கர்நாடக ரெயிலுக்குப் போகிறேனென்று உனக்கு எப்படித் தெரியும்?

**கோவிந்தன்:** தாங்கள் கர்நாடக ரெயிலுக்குப் போகிறீர்களென்று அறியச் சக்தியில்லாவிட்டால் என்னைத் தாங்கள் அழைத்துப்போவதிற் பயன் என்ன? டிக்கட்டு வாங்க நேரமில்லை, வாஸ்தவந்தான். நான் ஐந்து நிமிஷங்களுக்கு முன்னேதான் திருவல்லிக்கேணியிலிருக்கும் தென்னிந்தியா ரெயில்வேயின் கிளை ஆபீசில் இரண்டு முதல் வகுப்பு டிக்கட்டுகள் வாங்கித் தயாராய் வைத்தேன். இன்று காலை பேப்பரை வாசித்தவுடனே கட்டாயமாய்த் தாங்கள் என்னை அழைத்துக்கொண்டு காஞ்சீபுரம் போவீர்களென்று எனக்குத் தெரியும்.

**துரைசாமி ஐயங்கார்:** கோபாலன் ராஜாம்பாளைக் கொலை செய்திருப்பானென்பதை நான் சிறிதேனும் நம்பவில்லை. உன் அபிப்பிராயம் எப்படியோ?

**கோவிந்தன்:** நான் அங்கே போய் நடந்த விருத்தாந்தங்களை அறியாமல் என் அபிப்பிராயம் சொல்ல முடியாது.

இதற்குள்ளாக வண்டி கர்நாடக ரெயில் நிலையத்துக்கு வந்து சேர்ந்தது. இவர்கள் ரெயில்வண்டி ஏறினார்களோ இல்லையோ, வண்டியும் புறப்பட்டுவிட்டது. காஞ்சீபுரம் போய்ச் சேர்ந்தவுடனே ரெயிலிலிருந்து இறங்கிச் சாமிநாத சாஸ்திரி வீடுபோய்ச் சேர்ந்தார்கள். சாஸ்திரி துரைசாமி ஐயங்காரைக் கண்டவுடனே ஓவென்று அழ, அவர் சமாதானஞ் செய்ததுஞ் சற்றுத் தேறிக் கோபாலன் கொலைசெய்தே இருக்கமாட்டானென்றும், போலீசார் கட்டுமானஞ் செய்திருப்பார்களென்றும், வாஸ்தவத்திற் கொலைசெய்தவனைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றும் சொன்னார். அப்பால் துரைசாமி ஐயங்கார் கோவிந்தனை அழைத்துவந்த விவரம் தெரிந்தவுடனே சாஸ்திரி கோவிந்தனை அழைத்து வரச்சொல்லி, வாஸ்தவமாய்க் கொலைசெய்தவனைக் கண்டுபிடித்துத் தண்டனை அடையும்படி செய்தால் பதினாயிர ரூபாய் இனாம் அளிப்பதாகச் சொன்னார். அதன்பேரில் கோவிந்தன் நடந்த விருத்தாந்தங்களைச் சொல்லச் சொன்னவுடனே சாமிநாத சாஸ்திரி பின்வருமாறு சொல்ல ஆரம்பித்தார்:

**சாமிநாத சாஸ்திரி:** ராத்திரி இரண்டு மணிக்கு மாப்பிள்ளை ஊர்வலம் வந்து சேர்ந்தவுடனே நிச்சயதார்த்த நகைகளைப் பெண்ணுக்குப் போடப் பெண்ணைத் தேடினோம். பெண்ணை எங்கும் காணாமையால் அங்கே வந்திருந்த இன்ஸ்பெக்டர் மணவாள நாயுடுவைக் கண்டுபிடிக்கச் சொன்னோம். அதன்பேரில் அவர் ராஜாம்பாளுடைய கைப்பெட்டியைத் திறந்து காண்பிக்கச் சொல்லிப் பார்த்ததில் அதில் கோபாலனிடத்திலிருந்து வந்த கடிதம் ஒன்று அகப்பட்டது. அதில் பின்வருமாறு எழுதியிருந்தது :

கடிதம்

17, இராஜவீதி, காஞ்சி.

எனது பிரியமுள்ள ராஜத்திற்கு,

நான் எல்லாம் தீர்மானஞ் செய்துகொண்டு உனக்குத் தெரிவிப்பதாகச் சொல்லியிருந்தேன் அல்லவா ? உலகளந்த பெருமாள் கோவில் தெருவில் 25-வது நெம்பருள்ள வீடு உனக்குத் தெரியுமே.

அந்த வீட்டிற்கு நீ இன்று ராத்திரி சரியாய் 12-மணிக்கு வந்துவிட்டால் நாம் முன்னால் தீர்மானஞ்செய்த ஏற்பாட்டின் பிரகாரம் நடந்துகொள்வோம்.

இப்படிக்கு, உன் பிரிய நேயன்,
**கோபாலன்.**

இந்தக் கடிதத்தைக் கண்டவுடனே போலீஸ் இன்ஸ்பெக்டர் உலகளந்த பெருமாள் கோவில் தெருவிற்குப் போனார். நானுங் கூடப் போனேன். அவ்விடத்தில் இராஜாம்பாள் எழுதின காகிதத் துண்டு ஒன்று அகப்பட்டது. அதில் பின்வருமாறு எழுதியிருந்தது :

'மோசம் போனேன் கோபால[illegible] என்னைச் சுடலைமாடன் தெரு, 29-வது நெம்பர் வீட்டிலுள்ள குதிலில்......'

இதை வாசித்தவுடனே அக்கடிதத்தில் குறிப்பிட்ட இடம் போய்ச் சேர்ந்தோம். போனவுடனே கதவு திறந்திருந்தது. உள்ளே போனதும் கோபாலன் தன் மார்பின் பேரில் உருத் தெரியாமற் சுட்ட ராஜாம்பாளின் பிரேதத்தை வைத்துக்கொண்டு அழுதுகொண் டிருப்பதைக் கண்டோம். உடனே போலீஸ் இன்ஸ்பெக்டர் பிரேதத்தை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகச் செய்து கோபாலனைச் சிறையில் வைத்துவிட்டார். இதுதான் சமாசாரம். வீட்டிற்கு வந்தவுடனே என் மேஜையின்பேரில் ராஜாம்பாள் கைப்பட எழுதிய கடிதம் ஒன்று இருந்தது. இதோ இருக்கிறது அந்தக் கடிதம்; தாங்களே வாசித்துப் பார்த்துக்கொள்ளலாம்.

**கடிதம்**

ம-ா-ா-ஸ்ரீ மகாகனம் பொருந்திய அப்பா அவர்கள் திருப்பொற்பாத கமலங்களுக்குத் தங்கள் அன்பான புத்திரி ராஜாம்பாள் எழுதிக்கொள்ளும் விண்ணப்பம் என்னவென்றால், நான் தாங்கள் கொடுத்த வாக்குக்கு இடையூறு வராதபடிக்கும், தங்களுடைய வாஸ்தவமான அபிப்பிராயத்தின்படி யாருக்கு என்னைக் கல்யாணஞ் செய்துகொடுக்க வேண்டுமென்று ஆதியில் உத்தேசித்திருந்தீர்களோ

அவரைக் கல்யாணஞ் செய்துகொள்வதற்காகவும் தங்களை அநியாயமாய் இம்சைப்படுத்திப் பலாத்காரமாய் என்னைக் கல்யாணஞ் செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன் இருந்தவராகிய நீலமேக சாஸ்திரியை அவமானப்படுத்துவதுடன் அநியாயமாய் லஞ்சம் வாங்கிச் சம்பாத்தியம் செய்துவைத்திருந்த அவருடைய சொத்தை நல்ல வழியிற் செலவழிக்க வேண்டுமென்ற எண்ணத்துடனும், நீலமேக சாஸ்திரியைக் கல்யாணஞ் செய்துகொள்வதாக ஒப்புக்கொண்டவள்போல் அபிநயித்து அவரை லட்சக் கணக்கான ஜனங்களுக்குச் சாப்பாடு போடும்படி செய்ததோடு, ஆயிரக்கணக்கான ஜனங்களுக்குப் புடைவைகளும் வேஷ்டிகளும் கொடுக்கும்படி செய்தேன். தாங்கள் என் பேருக்கு உயில் எழுதிவைத்திருக்குஞ் சொத்துத் தமக்குச் சேருமென்ற எண்ணத்துடன் அவர் சம்பாத்தியஞ்செய்த சொத்துப் பூராவையும் கல்யாணத்தில் செலவழித்தார். தங்களை அவர் இம்சைப்படுத்தியதற்கு நான் ஆண்பிள்ளையாயிருந்தால் அவரைக் குதிரைச் சவுக்கால் அடித்திருப்பேன். பெண்பிள்ளையானதுபற்றி அவருடைய பொருள் செலவாகும்படி செய்ததன்றி அவரை அவமானப்படும்படியும் செய்ததுதான் என்னாலாகிய காரியம். தாங்கள் கொடுத்த வாக்குக்கு இடையூறு வந்ததென்று தாங்கள் நினைக்கவேண்டாம். ஏனென்றால், தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நீலமேக சாஸ்திரிக்குக் கல்யாணஞ் செய்யத் தாங்கள் ஏற்பாடு செய்தீர்கள். நான் அவரைக் கல்யாணஞ் செய்துகொள்ளாமல் ஓடிப்போனால் அது தங்களுடைய தப்பல்ல. இப்படி மோசஞ் செய்துவிட்டு ஓடிப்போனதற்குத் தாங்கள் கட்டாயமாய் என்னை மன்னிக்கக் கோருகிறேன். எனக்குப் புத்தி தெரிந்ததுமுதல் தங்களைவிட்டு ஒரு நாளாவது பிரிந்திருந்தவளல்லவாதலால் இன்று தங்களை விட்டுப் போவது அதிக வருத்தத்தைக் கொடுத்தபோதிலும், அப்படித் தங்களை விட்டுப் போகவேண்டியது அத்தியாவசியமாகையால் தாங்கள் என்னை மன்னிப்பீர்க

ளென்று நம்பியிருக்கிறேன். கூடிய சீக்கிரத்தில் கோபாலனும் நானும், புருஷனும் பெண்சாதியுமாகி மணக்கோலத்துடன் தங்களை நமஸ்கரிக்க விரும்பும்,

தங்கள் சதாக் கீழ்ப்படிதலுள்ள,

பிரியமான புத்திரி,

**ராஜாம்பாள்.**

இந்தக் கடிதத்தைக் கண்டவுடனே கோவிந்தன் கொலை நடந்த இடத்தைப் பார்க்க வேண்டுமென்று சொன்னார். சாமிநாத சாஸ்திரி அவ்விடத்தில் ஒன்று மில்லை என்றும் பிரேதத்தை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்விட்டார்களென்றும் சொன்னார். இருந்தாலும் கோவிந்தன் அந்த இடத்தைப் பார்க்கவேண்டுமென்று சொல்லித் துரைசாமி ஐயங்காருடன் அங்கே போய்ப் பார்த்ததில் ஒரு போலீஸ் கான்ஸ்டேபில் அந்த இடத்தில் இருந்துகொண்டு யாரையும் உள்ளே போகவிடாமல் தடுத் துக்கொண் டிருந்தான். துரைசாமி ஐயங்காரைக் கண்ட வுடனே கான்ஸ்டேபில் மரியாதையாய் உள்ளே போய்ப் பார்க்கச் சொன்னான். துரைசாமி ஐயங்காருடன் வந்த கோவிந்தனும் உள்ளே போய் ஜாக்கிரதையாகப் பார்த்து வருகையில் அபூர்வமாய் அகப்படக்கூடிய மஞ்சள்ரோஜாப் புஷ்பத்தின் ஆறு இதழ்கள் அங்கே கிடந்தன. அவைகளை வெகு ஜாக்கிரதையாய் எடுத்து ஒரு காகிதத்தில் மடித்துக் கோவிந்தன் வைத்துக்கொண்டார். அப்பால் அடுப்பண்டை போய் அடுப்புச் சாம்பலைக் கிளறிப் பார்க் கையில் சாம்பலுக்குள் விசித்திர வேலைசெய்த கைக் குட்டையொன்று ரத்தந் தோய்ந்து, துண்டுகளாகக் கிழிக்கப்பட்டுப் புதைக்கப்பட் டிருந்தது.

சென்னையிலிருந்து துரைசாமி ஐயங்காரும் கோவிந் தனும் வந்து கொலை நடந்த இடத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்களென்ற சங்கதி தெரிந்த மணவாள நாயுடு அந்தச் சமயத்தில் அங்கே வந்து சேர்ந்தார். வந்ததுங் கோவிந்தன் அடுப்புச் சாம் பலைக் கிளறி அதிலிருந்து கைக்குட்டையை எடுப் பதைக் கண்டதும், "கோவிந்தன்! காலையில் சாம் பலைக் கிளறிப் பார்க்க மறந்துவிட்டேனாகையால் இப்

போது பார்க்க வந்தேன்; அந்தத் துண்டுகளை இப்படி என் கையில் கொடுங்கள். நான் பார்க்கிறேன்'' என்று சொல்லி வெடுக்கென்று பிடுங்கிப் பார்த்ததும், ''பேஷ்! கோபாலன்பேரில் எவ்வளவு பிரியமுள்ளவர்களும் இப்போது கோபாலன் கொலை செய்யவில்லையென்று சொல்ல முடியாதபடி ருஜூப்படுத்தும் சாட்சியம் எடுத்துக் கொடுத்ததற்காக உமக்கு வந்தனம் அளிக்கிறேன்'' என்று சொல்லி, கிழித்துப்போட்டிருக்கும் கைக்குட்டையின் ஒரு மூலையிலிருந்த, 'கோ' என்னும் அடையாளத்தைக் காண்பித்து இது கோபாலனுடைய கைக்குட்டை என்று மணவாள நாயுடு சொன்னார்.

**மணவாள நாயுடு:** கோவிந்தன், முன்னால் செங்கற்பட்டில் நாங்கள் கிருஷ்ணரெட்டி கொலைசெய்தானென்று குற்றஞ் சாட்டினபோது அவன் குற்றவாளியல்லவென்றும் சாமிரெட்டிதான் குற்றவாளி என்றும் புரளிகள் செய்து ஜூரர்களை நம்ப வைத்தீரே! அப்படியே இப்போது கோபாலன் இக் கொலை செய்யவில்லையென்றும், ராஜாம்பாளின் அழகைக் கண்டு தேவலோகத்திலிருந்து கந்தர்வர்கள் வந்து கொலை செய்தார்களென்றும் ருஜூப்படுத்த வந்தாற்போல் இருக்கிறது! இரவும் பகலும் அதே வேலையாகத் திரியும் எங்களைவிட நீர் மிகுந்த கெட்டிக்காரரென்று பலர் உமக்குப் பணங்கொடுக்கிறார்களே. நீர் முன் ஜன்மத்தில் நல்ல புண்ணியம் செய்திருக்கிறீர்போல் இருக்கிறது. அந்த எண்ணத்தோடு நீர் இப்போது இங்கே வந்திருந்தால் உடனே ஊருக்குத் திரும்பிப்போகலாம். ஏனென்றால், இந்தக் கேசில் நான் கண்டுபிடித்திருக்கும் சாட்சியங்களுக்கு நீர் மாத்திரமல்ல, உம்மைப் படைத்த பிரம்மதேவனும் ஆட்சேபம் சொல்ல முடியாது.

**கோவிந்தன்:** தாங்கள் என் விஷயத்தில் தப்பு அபிப்பிராயங் கொண்டிருக்கிறீர்கள். அதிக அநுபோகமுள்ள போலீஸ் இன்ஸ்பெக்டர்களுக்கு விரோதமாகவே நான் நடப்பதாகத் தாங்கள் நினைக்கிறீர்கள். அது சரியான அபிப்பிராயமன்று.

**மணவாள நாயுடு:** இதுவரையில் போலீசார்களுக்கு விரோதமாய் அவர்கள் செய்தது சரியல்லவென்று அநேக

வழக்குகளில் நீர் ருஜுப்படுத்தி இருப்பதால்தானே நீர் மகா கெட்டிக்காரரென்றும் உமக்குச் சமானமாய் யாரையுஞ் சொல்லக்கூடாதென்றுஞ் சொல்லுகிறார்கள்.

**கோவிந்தன்:** போலீசார் அவ்விஷயங்களில் தப்பாய் நடந்திருந்ததாக எனக்குத் தோன்றினதால் உண்மையைக் கண்டுபிடித்தேன். அதற்காகத் தாங்கள் என்பேரில் தப்புக் கண்டுபிடிக்கலாமோ? தயவுசெய்து தாங்கள் கண்டுபிடித்திருக்கும் சாட்சியங்களை எனக்குத் தெரிவித்தால் நான் சென்னைக்குப் புறப்பட்டுப் போகிறேன்.

**மணவாள நாயுடு:** நாங்கள் கஷ்டப்பட்டுக் கண்டுபிடித்திருக்கும் விஷயங்களைச் சொன்னால் அதிலிருந்து குட்ரயுக்தி எடுத்து மாற்றுவது உமது வழக்கமாயிற்றே! நான் இப்போது சொல்லாவிட்டால் எனக்குப் பயந்துகொண்டு மணவாள நாயுடு சொல்லமாட்டேனென்று சொன்னானென்றும், சொல்லியிருந்தால் வானத்தை வில்லாய் வளைத்து விடுவேனென்றும், மணலைக் கயிறாய்த் திரித்துவிடுவேனென்றும், எல்லாரிடமுஞ் சொல்லித் தற்புகழ்ச்சி செய்துகொள்வீர். மேலும் உமக்கு நான் பயந்திருந்தால் அல்லவா உம்மிடத்திற் சொல்லாமல் ஒளிக்கப் போகிறேன்? ஒவ்வொன்றாய்ச் சொல்லுகிறேன்; கேளும்:

முதலாவது, கோபாலன் ராஜாம்பாளைப் பன்னிரண்டு மணிக்கு உலகளந்த பெருமாள் கோவில் தெரு, 25-வது நம்பர் வீட்டிற்கு வரச்சொல்லி எழுதியிருக்கிறான்.

இரண்டாவது, மேற்சொன்ன வீட்டில் நாங்கள் போய்ப்பார்த்தபோது, ‘மோசம் போனேன்; கோபால என்னைச் சுடலைமாடன் தெரு, 29-வது நம்பர் வீட்டிலுள்ள குதிலில்...’ என்று ராஜாம்பாள் கைப்பட எழுதிய காகிதம் அகப்பட்டது. ‘கோபாலன்’ என்று எழுதியதில் ‘ன்’ சரியாய்த் தெரியாதபோதிலும், ‘என்னைச் சுடலைமாடன் தெரு’ என்று எழுதியிருப்பதிலிருந்து, கோபாலன் அவளைக் கொண்டுபோகப் போகிறானென்பது பரிஷ்காரமாய் ஏற்படுகிறது.

மூன்றாவது, ராஜாம்பாளைக் குத்திக் கொன்ற கட்டாரி, கோபாலன் பக்கத்திற் கிடந்ததன்றி அவன் மேலெல்லாம் ரத்தம் சிந்தியிருந்தது.

நான்காவது, இவ்வளவும் போதாதென்று 'கோபாலன்' என்பதில் முதல் எழுத்தாகிய 'கோ' என்னும் எழுத்து மூலையில் எழுதப்பட்டு, ரத்தந் தோய்ந்து துண்டு துண்டாய்க் கிழிக்கப்பட்ட கைக் குட்டை கொலை நடந்த இடத்திலுள்ள சாம்பலில் மூடப் பட்டிருந்ததை உம் கையால் எடுத்துக் கொடுத்தீர்.

இவ்வளவு பரிஷ்காரமான சாட்சியங்களைப் பார்த்த பிற்பாடு கூட, செஷன்ஸ் ஜட்ஜும் ஜூரர்களும் கோபாலன் குற்றவாளி யல்லவென்று சொன்னால் அப்பால் நான் இந்த இன்ஸ்பெக்டர் உத்தியோகத்தை விட்டுவிட்டுத் தோட்டி வேலைக்குப் போவேன்.

**கோவிந்தன்:** தாங்கள் அவ்வளவு நிச்சயமாய்ச் சொல்லுவதும், தண்டிக்காவிட்டால் இந்த வேலையை விட்டுவிட்டுத் தோட்டிவேலைக்குப் போவேனென்று சொல் வதுஞ் சரியல்ல. எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக் குமோ யார் பார்த்தார்கள். ஆகையால் தயவுசெய்து இன்னுந் தீர விசாரணை செய்து அப்பால் தங்கள் அபிப்பிரா யத்தை வெளியிடுங்கள். அவசரப்படுவது எப்போதுங் கெடுதி என்று எனக்குத் தோன்றுகிறது.

**மணவாள நாயுடு:** சரி; உங்களுக்குக் கோபாலன் குற்றவாளியல்ல என்று தோன்றுகிறதுபோல் இருக் கிறது. உங்களுடைய குட்ரயுக்திகளைக் கொண்டு நீங்கள் மாத்திரம் கோபாலனைத் தவிர வேறே யாராவது இக் கொலை செய்ததாக ருஜுப்படுத்திவிட்டால், நான் தோட்டிவேலை செய்வதன்றி, ஒரு பக்கத்து மீசையையும் சிறைத்துவிட்டு, கரும்புள்ளி செம்புள்ளி முகமெல்லாங் குத்திக்கொண்டு கழுதைமேல் ஏறி ஊர்வலம் வரவுஞ் சம்மதிக்கிறேன். வேறொருவன் குற்றவாளியென்று நீர் ருஜுப்படுத்தாவிட்டால் நான் செய்வதாகச் சொன்ன பிரகாரம் நீர் செய்வதாக ஒப்புக்கொள்கிறீரா?

**கோவிந்தன்:** என்ன! தங்களுக்கு இப்படிக் கோபம் வருகிறது? என் வாயால் தாங்கள் செய்தது சரியல்ல என்று சொன்னேனா? தீர விசாரித்துப் பிறகு சொல்வது நல்லதென்றேனே தவிர, வேறே ஏதாவது சொன்னேனா? அப்படியிருக்கத் தாங்கள் பந்தயங் கூறுவது ஏன்?

**மணவாள நாயுடு:** சரி, சரி! முதலிலேயே இப்படிச் சொல்லியிருந்தால் இப்படிப் பேசியே இருக்கமாட்டேனே. திருவல்லிக்கேணி கோவிந்தன் வந்திருந்தால் புரட்டி விடுவானென்று பேதை ஜனங்கள் சொல்வது வழக்கமாயிற்றே. இந்தக் கேசில் அந்தக் கெட்டிக்காரக் கோவிந்தனுக்கு யார் மூக்குக்கும் எட்டாத விசேஷ வாசனை ஒன்றும் அகப்படவில்லைபோல் இருக்கிறது. இன்ஸ்பெக்டர் ஏமாந்தவனாயிருந்தால் கோவிந்தனுக்கு வாசனை தெரியும். பழம் பெருச்சாளியாகிய மணவாள நாயுடுவிடம் கோவிந்தன் ஜபஞ் சாயுமா?

**கோவிந்தன்:** வாய்ப்பேச்சுப் பேசுவதால் வரும் பயன் என்ன? கெட்டிக்காரராயிருந்தால் நடத்திக்காட்டுவார்கள். தங்களுக்கு ஸ்டேஷனில் அதிக வேலை இருக்குமே. அந்த வேலைகளை விட்டுவிட்டு வீண்பேச்சுப் பேசுவதில் வரும் பயனென்ன? உத்தரவு பெற்றுக் கொள்ளுகிறேன். துரைசாமி ஐயங்காரவர்களே! கோபாலனை அடைத்திருக்கும் இடத்திற்கு என்னைத் தயவுசெய்து கூட்டிக்கொண்டு போங்கள்.

**துரைசாமி ஐயங்கார்:** கோவிந்தா, மணவாள நாயுடு சொன்ன சங்கதிகளை யெல்லாங் கேட்டாயே! கோபாலனைக் குறித்து உன் வாஸ்தவமான அபிப்பிராயம் என்ன? உண்மையாய்ச் சொல்.

**கோவிந்தன்:** நான் கோபாலனைப் பார்த்துப் பேசின பிற்பாடே அவன் குற்றவாளியென்றும், அல்லவென்றுஞ் சொல்ல முடியும்.

## 8. கோவிந்தனும் கோபாலனும்

**கோவிந்தன்:** கோபாலன் என்னை இதுவரையிற் பார்த்திராததால் அவனுக்கு என்னை அடையாளந் தெரியாது. ஆகையால் நாம் கோபாலனைச் சந்தித்தவுடனே ராஜாம்பாளைக் கொலை செய்தவனைக் கண்டு பிடித்துத் தண்டிப்பதற்காக வந்திருக்கும் திருவல்லிக் கேணித் துப்பறியும் கோவிந்தனென்று அவனிடம் தாங்கள் சொல்லவேண்டும். அப்பால் நடக்கவேண்டிய சங்கதிகளை நான் பார்த்துக்கொள்ளுகிறேன்.

கோபாலன் அடைபட்டிருந்த இடத்துக்குப் போன வுடனே துரைசாமி ஐயங்கார், தாம் கோபாலனுடைய வக்கீலென்றும் அவனைக் கண்டு பேசவேண்டுமென்றும் அங்கே காவல் இருந்தவர்களிடஞ் சொல்லி, உத்தரவு பெற்றுக் கோவிந்தனும் தாமுமாக உள்ளே போனார்கள். அங்கே மூலையில் விசனத்துடன் உட்கார்ந்திருந்த கோபாலன் துரைசாமி ஐயங்காரைக் கண்டதும் எழுந்து ஓடிவந்து அவரைக் கட்டிக்கொண்டு ஓவென்று அழுதான். துரைசாமி ஐயங்காரும் கோபாலன் இருந்த ஸ்திதியைப் பார்த்ததும் சகிக்க முடியாமல் அழுதார். ஐந்து நிமிஷம் கழிந்ததும் கோவிந்தன், தான் இன்னானென்று சொல்லச் சொல்லியபடியே துரைசாமி ஐயங்காரும் சொல்லிக் கோபாலனும் கோவிந்தனும், ஒருவரையொருவர் அறியும் படி செய்துவைத்தார்.

உடனே கோபாலன் கோவிந்தனுடைய கையைப் பிடித்துக்கொண்டு, "ராஜாம்பாள் இறந்துபோன பிற்பாடு பூமியில் நான் ஜீவித்திருக்க வேண்டுமென்ற விருப்பம் எனக்குச் சிறிதாவது இல்லையாயினும், அவளைக் கொலைசெய்து உருத் தெரியாதபடி சுட்டுக் கொளுத்திய கல்நெஞ்சனாகிய கொடிய பாதகனை இன்னானென்று கண்டுபிடித்து அவனைத் தகுந்தபடி சிட்சை செய்துவிட்டு அப்பால் இறந்துபோனால்தான் என் ஆத்மாவானது விண்ணுலகஞ் சேரும். ஒருகால் தாங்கள் கண்டுபிடிக்காத முன் இப்போது மணவாள நாயுடு ஏற்படுத்தியிருக்கும் சாட்சியத்தின்பேரில் என்னைத் தூக்குப்போட்டுக் கொன்றுவிட்டாலும், 'கோபாலன்தான் இறந்துவிட்டானே, இனி நாம் அதை ஏன் விசாரணை செய்யவேண்டும்?' என்று தாங்கள் விட்டுவிடாமல், அந்தக் கொலைபாதகனைக் கண்டு பிடித்துத் தண்டிக்கும்வரையில் தாங்கள் இந்த வேலையை விட வேறு வேலை செய்யவே மாட்டீர்களென்று எனக்குக் கட்டாயமாய் வாக்களிக்கவேண்டும். இன்று காலையில் என் தகப்பனாரிடம் நான் இந்த விஷயத்தைப்பற்றிப் பேசின போது அவர் தம் சொத்துப் பூராவையுமாவது செலவழித்துக் கண்டுபிடிப்பதாகவும், அதைக் கண்டுபிடிக்க வல்லவர்கள் தாங்களே என்றுஞ் சொல்லித் தங்களை அழைத்துக்கொண்டுவரச் சென்னைக்குப் போயிருக்கிறார்.

தாங்கள் இப்போது வந்துவிட்டதால் இப்போதே தாங்கள் கண்டுபிடித்ததாக எண்ணிக்கொண்டு இனி நான் சந்தோஷமாய் இருப்பேன். நான்தான் கொலைசெய்தேன் என்று போலீஸ் 'இன்ஸ்பெக்டர் மணவாள நாயுடு சொல்லுகிறானே; அவனுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதுபோல் இருக்கிறது. என்னைக் கல்யாணஞ் செய்வதாய் வாக்களித்து வேண்டிய ஏற்பாடுகள் செய்யச்சொல்லியபடி செய்துவிட்டு அவளை இரண்டு மணிக்கு உலகளந்த பெருமாள்கோவில் தெருவிற்கு வரச்சொல்லி நான் எழுதி இருந்தேனே, அதுதான் அந்த மடையனுக்கு நான் கொன்றேனென்பதற்கு முதல் சாட்சியாம். பிரியத்தோடு கல்யாணஞ் செய்துகொள்ளுகிறேனென்று வந்தவளை நான் கொலைசெய்தேன் என்கிறானே! அவனுக்குப் புத்தி இருந்தால் அப்படிச் சொல்லுவானா? அவளை நான் கொலை செய்திருந்தால், அவ்விடத்திலேயே நான் இருப்பேனா? ஏன் இந்தப் புத்திகூட அவனுக்கு இல்லாமற் போயிற்றென்று எனக்குத் தெரியவில்லை. தாங்கள் கொலைசெய்த பாதகனைக் கண்டுபிடிக்கும்வரையில் வேறு வேலை செய்வதில்லையென்று எனக்கு வாக்குக் கொடுங்கள்'' என்றான்.

**கோவிந்தன்:** உன்னை நான் இதுவரையில் பார்த்திராதபோதிலும் உன்னுடைய குணதிசயங்களைப் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இந்தக் கொலை நீ செய்யவில்லை என்று நான் நிச்சயமாய்ச் சொல்லுவேன். ஆனால் யார் செய்தார்களென்று நான் கண்டுபிடிக்க வேண்டுமென்ற எண்ணம் உனக்கு இருந்தால், இதற்கு ஒரு மாதத்திற்கு முன்னாலிருந்து நீ என்ன என்ன செய்தாயென்றும் யாராருடன் பேசினாயென்றும் ஒன்றும் ஒளிக்காமல் என்னிடம் சொல்ல வேண்டும். இதற்குச் சம்பந்தப்படாத விஷயங்களை நாம் ஏன் சொல்ல வேண்டுமென்று நீ நினைத்துக்கொண்டு சொல்லாமல் இருக்கக்கூடாது. இதில் சம்பந்தப்படாத விஷயங்களென்று உனக்குத் தோற்றும் சங்கதிகளே ஒருகால் இதற்குக் காரணமாய் இருக்குமாதலால் எவ்வளவு ரகசியமான விஷயமாயிருந்தாலும், உனக்கு அத்தியந்த நேயர்களாகிய ஆண் அல்லது பெண்ணைக் குறித்திருந்தா

னும் கொஞ்சமாவது ஒளிக்காமற் சொல்லவேண்டும்; வக்கீல்களிடத்திலும் வைத்தியர்களிடத்திலும் உள்ளதை உள்ளபடி சொல்லாமல் ஒளித்தால் அதனால் கெடுதல்கள் நேரிடுமேயல்லது நன்மை வராது. இப்பேர்ப்பட்ட கஷ்டமான விஷயங்களைக் கண்டுபிடிப்பது வருத்தமாகையால் உள்ளதை உள்ளபடி ஒளியாமல் நீ சொல்வதாயிருந்தால் மட்டும் ராஜாம்பாளைக் கொலைசெய்த பாதகனைக் கண்டுபிடிக்க என்னால் முடியும்; பெண்கள் விஷயமாயிற்றே, நாம் எப்படிச் சொல்வது என்ற எண்ணம் கொண்டாயானால் நான் இக் காரியத்திற் பிரவேசிப்பதால் உபகாரமில்லாமற் போவதுமன்றி என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை என்ற கேவலமும் எனக்கு ஏற்படுமாகையால் உன் மனச்சாட்சிக்கு விரோதம் இல்லாமல் நடந்த விஷயங்களை ஒளிக்காமற் சொல்.

**கோபாலன்:** ஒரு பெண் விஷயந்தவிர மற்றதையெல்லாம் நான் சொல்வதில் தடையில்லை.

**கோவிந்தன்:** துரைசாமி ஐயங்காரவர்களே, இதைக் கண்டுபிடிக்க என்னால் முடியாதாகையால் உத்தரவு கொடுத்தால் நான் சென்னைக்குப் போகிறேன். இவ்வளவு நேரம் நான் ஒன்றும் ஒளிக்காமற் சொல்லவேண்டுமென்று சொல்லியும், கோபாலன் ஒரு பெண் விஷயம் தவிர மற்றதையெல்லாம் சொல்லுகிறேனென்று சொல்வதால் வாஸ்தவத்தில் இப்போது எந்தப் பெண் விஷயம் சொல்லமாட்டேன் என்கிறானே அந்தப் பெண் விஷயத்தில் இருக்கப்பட்ட அபிமானம் கோபாலனுக்கு ராஜாம்பாள் பேரில் இருக்கவில்லையென்று தோன்றுகிறது. ஏனென்றால், ராஜாம்பாளைக் கொலை செய்த பாதகனைக் கண்டுபிடிக்கக்கூட இன்னொரு பெண்ணின் ரகசியஞ் சொல்லமாட்டேனென்றால் அப்போது அவளிடத்தில் எவ்வளவு அபிமானம் இருக்கவேண்டுமென்று தாங்களே யோசித்துக்கொள்ளலாம்.

**கோபாலன்:** தாங்கள் சொல்லுவது சரியல்ல; ராஜாம்பாளைப் பார்க்கிலும் அபிமானமான வஸ்து எனக்கு உலகத்திலேயே கிடையாது. அதற்கும் இதற்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாதாகையால் அநாவசியமாய் ஒரு பெண்ணின் ரகசியத்தை ஏன் வெளிப்படுத்த

வேண்டுமென்றுதான் நினைத்தேன். கட்டாயமாய் ஒன்று கூட ஒளிக்காமல் சொன்னால்தான் தாங்கள் கொலைசெய்தவனைக் கண்டுபிடிப்பீர்களென்று சொல்வதால் ஒளியாமல் ஒவ்வொன்றுஞ் சொல்லிவிடுகிறேன். எப்படியாவது ராஜாம்பாளைக் கொலைசெய்த பாதகர்களைத் தாங்கள் கட்டாயமாய்க் கண்டுபிடிக்க வேண்டுகிறேன்.

**கோவிந்தன்:** சொல்வதாக ஒப்புக்கொள்ள இவ்வளவு நேரம் பிடித்தது. இனியாவது காலதாமதஞ் செய்யாமலும் ஒன்றையும் ஒளிக்காமலும் நடந்ததை நடந்தபடி சொல்.

**கோபாலன்:** சாமிநாத சாஸ்திரிகளைத் திருட்டுக் கேசில் சேர்த்துப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போன அன்றைய ராத்திரி, ராஜாம்பாள் என்னைக் கூப்பிடவிட்டு நடந்த விருத்தாந்தங்களைச் சொன்னாள். நான் விடிந்த பின் வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொள்வோமென்று சொல்லி அவளைப் பல வகையிற் சமாதானப்படுத்தியும் கேளாமல் விசனமாகவே பேசிக் கொண்டிருந்தாள். அதற்குள்ளாகச் சாமிநாத சாஸ்திரிகள் வந்து திருட்டுக் கேசுக்கும் தமக்கும் இனி யாதொரு சம்பந்தமும் கிடையாதென்று சொல்லவே நான் சந்தோஷமாய் வீட்டிற்குப் போய்விட்டேன். மறுநாள் காலையில் சுமார் பத்து மணிக்கு ராஜாம்பாளைப் பார்க்கப் போனேன். ராமண்ணாவோடு அதிக சந்தோஷமாய்ப் பேசிக்கொண் டிருந்த ராஜாம்பாள், என்னைப் பாராமலே பராமுகமாயிருந்தாள். நான் அவளிடம் பேசலாமென்று சமீபத்திற் போனவுடனே கடூரப் பார்வையாய் என்னைப் பார்த்து நான் இதுவரையில் அவளைப் பாராமல் இருந்திருந்தால் எப்படி நடந்துகொள்ளவேண்டுமோ அப்படியே அன்று முதல் நடந்துகொள்ள வேண்டுமென்று ராமண்ணா முன்னிலையிற் சொன்னாள். நான் அப்படிச் செய்த கொடுமை என்னவென்று கேட்டேன். அதெல்லாம் சொல்லவேண்டிய பிரமேயம் இல்லையென்று முன்னிலும் கடுமையாய்ச் சொன்னாள். உடனே ஒன்றும் பேசாமல் வந்துவிட்டேன். ராத்திரிப் பன்னிரண்டு மணிவரையில் என்னிடம் குரோதமில்லாமற் பேசினவள் இப்போது ராமண்ணா முன்னிலையில் இப்படிச் சொன்ன

காரணம் இன்னதென்று எனக்குத் தோன்றவில்லை. ஆனால் அவ் வார்த்தைகள் அவ்வளவு கொடூரமாக இருந்தாலும் அவளுடைய முகக்குறியால் ஏதோ காரணம் பற்றி அப்படிச் சொல்லுகிறாளென்றும், என்மேல் இருக்கப்பட்ட அந்தரங்கப் பிரியம் சிறிதும் குறையவில்லையென்றும் எனக்குத் தெரிந்தபோதிலும் என் மனமானது கொஞ்சம் வருத்தமடையா திருக்கவில்லை.

நான் வீட்டிற்குப் போய் ஐந்து நிமிஷங்களுக்குள்ளாக ராஜாம்பாளிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் அன்று சாயங்காலம் ஏழு மணிக்கு நான் சிங்கார வனத்தண்டை தனித்து வந்தால் அவளுடைய அன்றைய விசேஷ நடத்தையைக் குறித்துத் தான் காரணஞ் சொல்வதுடன் மேல் நடக்க வேண்டிய விஷயங்களுஞ் சொல்வதாக எழுதியிருந்தாள். அந்தக் கடிதத்தை மேஜையின்பேரில் வைத்துக் காற்றில் அடித்துப் போகாதபடி அதற்குமேல் ஒரு கல்லையும் வைத்து விட்டுச் சாப்பிடச் சென்றேன். சாப்பிட்டுவிட்டுத் திரும்பி வந்து பார்க்கையில் அந்தக் கடிதத்தைக் காணவில்லை. வீட்டிலிருந்த வேலையாட்களைக் கூப்பிட்டுக் கேட்டதில் யாரும் எடுக்கவில்லை என்று சொன்னார்கள். யாராவது அந்நியர்கள் வந்தார்களா என்று வேலையாட்களைக் கேட்டதற்கும் யாரும் வரவில்லையென்று சொன்னார்கள். அந்தக் கடிதத்தை வைத்து அதற்குமேல் கல்லெடுத்து வைத்தது எனக்கு நன்றாய் ஞாபகம் இருந்தாலும் அதற்கு முந்தின நாள் ராத்திரி நடந்த சமாசாரங்களாலும், அன்று காலையில் நடந்த ராஜாம்பாளின் விசேஷமான நடத்தையாலும் என் புத்தி சற்றுச் சிதறிப்போயிருந்ததால் ஒருகால் சரியாய்க் கல்லை வைக்காததால் கடிதம் காற்றடித்து ஜன்னல் வழியாய்ப் போயிருக்கலாமென்ற எண்ணத்துடன் தெருவெல்லாம் போய்த் தேடியும் அகப்படவில்லை. சாக்கடைகளிலோ அல்லது எங்கேயோ காற்று அடித்துக்கொண்டு போய்விட்டதென்று சும்மா இருந்து விட்டேன்.

அன்று சாயங்காலம் ராஜாம்பாள் எழுதியபடி அவள் குறிப்பிட்ட நேரத்திற்கு அரைமணி நேரம் முன்னதாகவே போய்க் காத்துக்கொண் டிருந்தேன்.

சரியாய் ஏழு மணிக்கு ராஜாம்பாள் நான் இருந்த இடத்திற்கு வந்து, "அத்தான்! நான் இன்று காலையில் தங்களிடம் அப்படிச் சொன்னதற்குக் காரணம் சொல்லுகிறேன். கவனமாய்க் கேட்டுப் பூராவும் நன்ருய்க் கிரகித்துக்கொண்டு நான் சொல்லுகிறபடி தாங்கள் நடக்க வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். நம் ஜாதகங்களைப் பார்க்க ஏற்பட்ட நாள்முதல் இந்த ஊர்ச் சப் மாஜிஸ்டிரேட் நீலமேக சாஸ்திரி என்னைக் கல்யாணஞ் செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன், அந்த மனிதவுருக் கொண்டிருக்கும் சனியனுகிய ராமண்ணுவிடஞ் சொல்லி ஜோசியம் பார்ப்பவர்களைப் பயமுறுத்தியும் லஞ்சங்கொடுத்தும் நமக்கு இருவருக்கும் பொருத்தமில்லை என்று சொல்லும்படி செய்தார். ஜோசியர்களுடைய வார்த்தையை லட்சியஞ்செய்யாமல் என் தகப்பனுர் பொருத்தமில்லாவிட்டாலும் உங்களுக்கே என்னைக் கல்யாணஞ் செய்து கொடுப்பேனென்று சொன்னவுடனே, நீலமேக சாஸ்திரியும் ராமண்ணுவும் யோசனைசெய்து, போலீஸ் புலியாகிய மணவாள நாயுடுவுக்குப் பலமாய் லஞ்சம் கொடுத்துத் திருட்டு நகையை எங்கள் வீட்டில் கொண்டுவந்து வைத்து என் தகப்பனுரைப் பிடித்த பிடியிலேயே போலீஸ் ஸ்டேஷனில் அடைத்து அவர் பயப்படும்படியான செய்கைகளெல்லாம் செய்து, கடைசியில் ராமண்ணுவையும் உள்ளே விட்டு நயத்திலும் பயத்திலும் என்னை நீலமேக சாஸ்திரிக்குக் கல்யாணஞ்செய்துகொடுப்பதாக என் தகப்பனுரை வாக்களிக்கும்படி சொல்ல, அவர், தம் பிராணன் போனுலும் அப்படிச் செய்யமாட்டேனென்று சொன்னதன்பேரில், உங்களையும் பிடித்து ஜெயிலிலடைக்க உத்தேசித்திருப்பதாகவும், நீலமேக சாஸ்திரி இன்னும் மூன்று தினங்களில் அவர் இம்சைப்படுத்தி அநியாயமாய் ஜெயிலுக்கு அனுப்பிய ஒரு கைதியினுல் கொல்லப்படுவாரென்றும் ராமண்ணு பிரமாணமாய்ச் சொன்னதன்பேரில், என் தகப்பனுர் நீலமேக சாஸ்திரிக்கு என்னைக் கல்யாணஞ் செய்து தர வேண்டிய அவசியம் ஏற்படாதென்னும் எண்ணத்தினுல் வாக்களித்ததாகவும் என்னிடஞ் சொன்ஞர்.

"என் தகப்பனுரை இம்சைப்படுத்திய நீலமேக சாஸ்திரியின் சொத்துப் பூராவையும் அழித்து அவரை

அவமானப்படுத்த எண்ணி நான் தங்களை வெறுப்பதாகவும் அவரை இஷ்டத்தோடு கல்யாணஞ் செய்துகொள்வதாக வுஞ் சொல்லி, அவருடைய சொத்து, லஞ்சம் வாங்கிச் சம்பாத்தியஞ் செய்த சொத்தாகையால், அதை நல் வழியிற் செலவழிக்க வேண்டுமென்று உத்தேசித்து வேண் டிய ஏற்பாடு செய்திருக்கிறேன். அந்த வேடிக்கையெல் லாம் தாங்கள் கண்டு மனத்திற் களிகூர வேண்டுமே தவிர, வெளிக்கு நான் தங்களைக் கல்யாணஞ் செய்துகொள்ள மாட்டேனென்று சொல்லியிருப்பதால் அதிக விசனத்தில் இருப்பதாகப் பாவனை செய்யவேண்டும். இன்றைக்குப் பதினைந்தாம் நாள் புதன்கிழமை ராத்திரி, நாம் இருவரும் போவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துகொண்டு அன்று சாயங்காலம் எனக்குத் தெரிவித்தால் தாங்கள் எங்கே எத்தனை மணிக்கு வரச்சொல்லி எழுதுகிறீர்களோ, அத்தனை மணிக்கு அங்கே வந்து சேருகிறேன். இன்று முதல் அதுவரையில் தாங்கள் எனக்குக் காகிதங்களும் எழுதக்கூடாது; என்னைப் பார்க்கவும் பிரயாசைப்படக் கூடாது. என்னோடு ஒரு நாள்கூடப் பேசாமல் இருப்பது உங்களுக்கு அதிக வருத்தத்தைக் கொடுக்குமென்று எனக் குத் தெரிந்தபோதிலும் இதுமுதல் என்னைச் சில நாளைக்கு அதிக ஜாக்கிரதையாக வேவுகாரர்களை வைத்துக் காப் பார்களாதலால் நீங்கள் எனக்குக் கடிதங்கள் எழுதுவதும், என்னிடம் பேசுவதும், நான் எண்ணிக்கொண் டிருக்கும் எண்ணங்களைப் பிரதிகூலப்படுத்துமாகையால், நீங்கள் பெரிய மனசுவைத்து நான் சொன்னபடி நடக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இனி அதிக நேரம் நான் இங்கே இருக்கக்கூடாதாகையால் நான் போய்வருகி றேன்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

நாங்கள் இருவரும் பேசிக்கொண் டிருந்தபோது பக்கத்திலுள்ள புதரில் ஆள் நடமாடினால் இலைகள் எப்படி அசையுமோ அப்படிச் சத்தங் கேட்டது. கடைசியில் ராஜாம்பாள் போன பிற்பாடு யாராவது ஒண்டிக் கேட்டார்களோ என்னவோ என்று புதரெல்லாம் தேடி யும் யாரும் அகப்படவில்லை. பூனையாவது பறவைக ளாவது இலைக்குள் ஓடினதால் அப்படிச் சத்தம் கேட்ட

தென்று எண்ணிக்கொண்டு, இன்னும் பதினைந்து நாளைக்கு என் ஆசைக் கண்மணியிடம் பேசாமல் இருக்க வேண்டுமே என்ற விசனத்தால், கண்களிலிருந்து நீர் தாரை தாரையாய் வழிய வீடுபோய்ச் சேர்ந்தேன். அன்று ராத்திரி ஒன்றும் சாப்பிடாமல் விசனத்தோடு படுத்துக்கொண்டேன். இதற்குள்ளாக ராஜாம்பாள் நீலமேக சாஸ்திரியைக் கல்யாணஞ் செய்துகொள்ளப் போகிறளென்ற சமாசாரம் ஊரெங்கும் பரவியதால், அந்த விசனத்தால் நான் சாப்பிடாமற் படுத்துக்கொண் டேனென்று எண்ணிக்கொண்டு என் தாயாரும் தகப் பனும் வேண்டிய தேறுதல்களைச் சொன்னர்கள். மறு நாள் காலையில் காலைப் போஜனம் அருந்திவிட்டு உட் கார்ந்திருக்கையில் ராமசுப்பு சாஸ்திரிகளின் குமாரத்தி லோகசுந்தரியின் வேலைக்காரி வந்து என்னை உடனே லோகசுந்தரி கையோடு அழைத்துக்கொண்டு வரச் சொன்னளென்று சொன்னள். நானும் உடனே புறப் பட்டுப் போனேன்.

**கோவிந்தன் :** கோபாலா, இவ்வளவு நேரம் நீ சொல்லிக்கொண்டு வந்த விஷயங்களை யெல்லாம் கவன மாய்க் கேட்டுக்கொண்டு வந்தேன். எனக்குச் சந்தேகமா யிருக்கப்பட்ட சமாசாரங்களை எல்லாம் நீ சொல்லி முடித்த பிற்பாடு நான் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆனல் சங்கோசப்படாமலும், ஒன்றையும் ஒளிக்காமலும், நீ போனபோது லோகசுந்தரி எங்கே இருந்தாளென்றும், எப்படி இருந்தாளென்றும், எந்த எந்த மாதிரி உடை உடுத்துக்கொண் டிருந்தாளென்றும், அவளும் நீயும் பேசிக் கொண்ட வார்த்தைகள் ஒன்றையாவது விடாமல் நன்ருய் ஞாபகப்படுத்திச் சொல்லவேண்டும். வேடிக்கைக்காக வாவது, அல்லது உன்னைப் பரீட்சை செய்யவேண்டு மென்ருவது நான் ஒவ்வோர் அற்ப விஷயத்தையுஞ் சொல்லச் சொல்லுகிறேனென்று எண்ணுமல் நீ முத லில் வாக்குக் கொடுத்தபடி சொல்.

கோபாலன் சொல்ல ஆரம்பித்தான்: நடந்த விஷயங் களை யெல்லாஞ் சொல்வது எனக்கு வெறுப்பைக் கொடுக்குமே தவிர வேறல்ல. இருந்தாலும் தாங்கள்

சொல்லச் சொல்லுவதால் விவரமாய்ச் சொல்லுகிறேன். என்னை லோகசுந்தரியின் வீட்டு மாடிக்கு அழைத்துக் கொண்டு போய் ஓர் அறையைக் காண்பித்து, ''அந்த அறையில் லோகசுந்தரி இருக்கிருள்; தாங்கள் கதவைத் திறந்துகொண்டு உள்ளே போங்கள்'' என்று சொல்லி விட்டு, வேலைக்காரி போய்விட்டாள்.

லோகசுந்தரி வீட்டிற்குப் போனுல் நான் அவளுடன் பேசிக்கொண் டிருக்கும் இடம் அதுவாதலால் எப்போதும் போல் போனேன். அவ்விடத்தில் லோகசுந்தரியைக் காணவில்லை. ஆனுல் எப்போதும் பூட்டுப் போட்டிருக் கும் ஓர் அறையின் கதவு திறந்திருந்தது. கால்மணி நேரம்வரையில் லோகசுந்தரி வருவாளென்று காத் திருந்தும் அவள் வராததால் கீழே இறங்கிப்போய் வேலைக்காரியிடம் கேட்டேன். லோகசுந்தரி மாடியில் தான் இருக்கிருளென்றும், அந்த அறையில் இல்லா விட்டால் அதற்குப் பக்கத்து அறையில் ஒரு வேளை படுத்திருப்பாளென்றும் என்னைக் கண்டு அவசியம் பேச வேண்டுமென்று சொன்னதால் தயவுசெய்து போய் அவளிடம் கட்டாயமாய்ப் பேசிவிட்டுப் போகும்படிக்கும் சொன்னுள். அவளைப் போய் எழுப்பச் சொன்னேன். அந்த அறைக்குத் தான் போகக்கூடாதென்று என்னையே போய் எழுப்பச் சொன்னுள்.

ஏதோ அவசரமான காரியமென்று சொல்லுகிருளே என்ற எண்ணத்துடன் நான் அந்த அறைக்குள் போனேன். அந்த அறையின் தரை யெல்லாம் உயர்ந்த ரத்தினக் கம்பளியால் மூடியிருந்தது. கம்பளிக்குமேல் ஒரு பக்கத்தில் பளிங்குக் கல் மேஜையின்பேரில் முகங் கழுவிக்கொள்வதற்காக அழகான கண்ணுடியால் செய்யப் பட்ட ஓர் அகலப் பாத்திரத்தில் தண்ணீர் வைத்திருந் தது. அதற்குச் சமீபத்தில் எட்டு அடி உயரமும் நாலடி அகலமும் உள்ள இரண்டு நிலைக்கண்ணுடிகள் நிறுத்தி யிருந்தன. நிலைக்கண்ணுடியின் பக்கத்தில் தந்தப்பெட்டிக் குள் மிகவும் அழகான சீசாக்களில் சிறந்த விலைபெற்ற அத்தர்கள் வைத்திருந்தன. அந்த அறையின் நான்கு பக்கங்களிலும் உயர்ந்த சாம்பிராணி வர்த்திகள் கொளுத்தியிருந்ததால், அந்த அறை முழுதும் வாசனை

மயமாகவே இருந்தது. சுவர்கள் பூராவும் நானுவித வர்ணமுள்ள செமன்டுப் பாளங்கள் அழுத்தியிருந்ததால் கைவைத்தால் நழுவி விழும்படி அவ்வளவு வழவழப்பாய் இருந்தன. சுவர்களிலெல்லாம் மிகவும் விலையுயர்ந்த சட்டங்களால் அலங்கரித்த நிர்வாணப் படங்கள் தொங்க விட்டிருந்தன. இரண்டு நிலைக்கண்ணுடிகளுக்கு மத்தியிலுள்ள சப்ர மஞ்சத்தின்மீது துணியால் மூடப்பட்ட உடம்போ அல்லது நிர்வாணமாகிய உடம்போ என்று சந்தேகிக்கும்படியாக, பட்டுச்சல்லாவைக் கட்டிக்கொண்டு வெல்வெட் தலையணைமேல் முழங்கை வைத்து, பாதாதி கேசபரியந்தம் தொங்கும் கூந்தலை அவிழ்த்துவிட்டிருக்கும் தலையை அந்தக் கையின்மேல் வைத்துக்கொண்டு இவள் இவ்வுலக மாதோ அல்லது மேனகை, ரம்பை என்ற தேவலோகத்து மாதர்கள் இருக்கிருர்களென்று சொல்லுகிருர்களே, அவர்களில் ஒருத்தியோ என்று அவளை அறியாதார் சந்தேகிக்கும்படி அவ்வளவு ஒய்யாரமாய் லோககசுந்தரி படுத்துக்கொண் டிருந்தாள்.

நான் இந்த விவரங்களைத் தங்களிடஞ் சொல்வதற்கு இவ்வளவு நேரமாயிற்றே தவிர உள்ளே போய்ப் பார்த்ததும் வெளியே வந்துவிட்டேன். நான் நடந்த சத்தம் கேட்டோ திடீரென்றுதானே அவள் எழுந்தாளென்பது எனக்குத் தெரியாது. நான் அந்த வாசலை விட்டு எப்போதும் உட்கார்ந்து பேசும் அறைக்கு வருவதற்குள் ஓடிவந்து என் கையைப் பிடித்துக்கொண்டு, ''கோபாலா! என்ன, அந்நியனைப்போல் ஓடிப்போகிருயே! இதுவரையில் நாம் ஒருவருக்கு ஒருவர் எவ்வளவு அந்நியோந்நியமாக இருந்தோமென்பதையும், வித்தியாசமில்லாமல் இருந்தோமென்பதையுஞ் சற்றுங் கவனியாமல் பிசாசைக் கண்டவன் ஓடுவதுபோல் ஓடுகிருயே! இதுவரையில் நீ என் படுக்கையறையைப் பார்த்ததில்லையே? வா! அவ்விடத்திலுள்ள விசித்திரமான படங்களையும் அபூர்வமான வஸ்துக்களையும் காண்பிக்கிறேன்'' என்ருள்.

அதுவரையில், வாஸ்தவமாக அயர்ந்து நித்திரை செய்துகொண் டிருந்தாளென்றிருந்த எனது எண்ணம் சற்று மாறி அவளிடத்தில் ஒருவிதமான வெறுப்பு எனக்கு ஏற்பட்டது. லோககசுந்தரியின் புருஷன்

அவளுக்குப் பதின்மூன்று வயதிலேயே ருதுசாந்தி முகூர்த்தம் செய்யாமல் இறந்துபோனதால், அவளைப் பார்க்கும் போதெல்லாம் அவளுடைய ஸ்திதி இப்படி இருக்கிறதே என்ற வருத்தத்தால் அவளிடத்தில் நான் பேசிக்கொண்டிருந்தேன். அவள் புருஷன் இறந்து மூன்று வருஷம் ஆகிவிட்டதால் இப்போது அவளுக்கு வயது பதினாறு. அவளை இரண்டாம் விவாகம் செய்துகொள்ளும்படி நான் பல முறை சொல்லியிருக்கிறேன். ராஜாம்பாளும் சொல்லியிருக்கிருள்.

ஆகவே, நான் மறுபடியும் அவ்வறைக்குள் பிரவேசிக்க மாட்டேனென்று திட்டமாய்ச் சொல்லவே அப்படியானல் எப்போதும் வாலாயமாய்ப் பேசிக்கொண்டிருக்கும் அறையிலாவது உட்கார்ந்து பேசலாமென்று சொல்லி அங்கே போட்டிருந்த சோபாவில் வந்து உட்கார்ந்துகொண்டு என்னை அவள் பக்கத்தில் உட்காரச் சொன்னுள். அவள் கட்டிக்கொண் டிருக்கும் சல்லாவை மாற்றிவிட்டு, எங்கள் ஜாதியாசாரத்திற்குத் தகுந்த கொறநாட்டுப் புடைவை, அல்லது சுங்கடிப் புடைவை கட்டிக்கொண்டு வந்தாலொழிய நான் உடனே வெளியே போய்விடுவேனென்று சொன்னதன்பேரில், ''நல்லது, அப்படியே கட்டிக்கொண்டு வருகிறேன்'' என்று சொல்லிப் போய் உயர்ந்த கொறநாட்டுப் புடைவையைக் கட்டிக்கொண்டு வந்து சோபாவில் உட்கார்ந்தாள். நான் பக்கத்தில் இருந்த ஒரு நாற்காலியின்மீது உட்கார்ந்துகொண்டு என்னைக் கூப்பிட்ட காரணம் என்ன என்று கேட்டேன்.

அதற்கு அவள், ''கோபாலா! நீ அடிக்கடி என்னை மறு கல்யாணஞ் செய்துகொள்ளும்படி சொல்லியிருக்கிருயே! அதை மறந்துபோனுய்போல் இருக்கிறது?'' என்று கேட்டாள். நான் மறக்கவில்லையென்றும் அப்படிச் செய்துகொள்வதே நல்லதென்றும் சொன்னேன்.

''நீ சொன்னதைப்பற்றி யோசித்து நான் மறு கல்யாணஞ் செய்துகொள்ளவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டேன். இதுவரையில் ஏன் பயந்துகொண்டிருந்தேனென்றுல், என் பெற்ருேர்களுக்கு நான் ஒரே பெண் ஆதலாலும் என்னுடைய புருஷரும் ஒரே பிள்ளை

யாக இருந்து இறந்துபோனதாலும் இரண்டு பக்கங்களி லிருந்தும் அமோகமான சொத்து எனக்குச் சேர்ந்திருப் பதால் யோக்கியதையான புருஷன் அகப்படாமல், வருகிற வன் ஒருவேளை என் சொத்தைக் கவரவேண்டுமென்ற எண் ணத்துடன் என்மேல் பிரியம் இருக்கிறதாகப் பாவித்து என் சொத்தையும் விரயப்படுத்தி என்னையும் தெருவில் விட்டால் என்ன செய்வது என்பதற்காகவே பயந்திருந் தேன்'' என்று சொன்னாள்.

''நீ சொத்தில்லாத ஓர் ஏழையின் பெண்ணா யிருந்தாற்கூட உன் அழகுக்காக எப்பேர்ப்பட்டவனும் உன்னைக் கல்யாணஞ் செய்துகொள்வானே! உன் அழகு உனக்குத் தெரியாததால் நீ உன் சொத்திற்காக உன்னைக் கல்யாணஞ் செய்துகொண்டு அப்பால் மோசஞ்செய்து விடுவான் என்று சந்தேகிக்கிறாய்'' என்றேன்.

''கோபாலா! வாஸ்தவத்தில் நான் அழகாயிருக்கி றேனா? என்னை நன்றாய்ப் பார்த்துச் சொல்'' என்றாள்.

''கைப்பொன்னுக்குக் கண்ணாடியா! நீ சாமான்யமான அழகுள்ள பெண்ணல்லவே! முனிசிரேஷ்டர்களும் உன்னைப் பார்த்தால் பிரியப்படாமல் இருக்க மாட்டார்களென்றால் சாதாரணமான மனிதர் உன்னை விரும்பாமல் இருப்பார் களோ!'' என்றேன்.

அதற்கு அவள், ''நீ அப்படிச் சொன்னது எனக்கு அதிகச் சந்தோஷத்தைக் கொடுக்கிறது. உன்னிடம் எப்படிப் பேச்செடுப்பது என்று வழிதெரியாமல் திண் டாடிக்கொண்டிருந்தேன். ஆனால் இப்பொழுது நீ என்னைப் பார்த்தால் யார்தான் விரும்பார்களென்று சொன்னது எனக்குத் தேவாமிர்தம் சாப்பிட்டால் எவ்வளவு சந்தோ ஷத்தைக் கொடுக்குமோ, அதைவிடப் பதின்மடங்கு அதிக சந்தோஷத்தைக் கொடுத்தது'' என்று சொன்னாள்.

''உன்னை யார் பார்த்தாலும் நான் சொன்னதைப் போல் சொல்லுவார்களே ஒழிய, வேறே சொல்லமாட் டார்கள். நான் சொல்வதால் மாத்திரம் உனக்கு அவ்வளவு ஆனந்தம் ஏற்படவேண்டிய காரணமென்ன?'' என்று கேட்டேன்.

அதற்கு அவள், ''ஊரிலுள்ள மனிதர்கள் மாத்திர மல்ல, தேவர்களுஞ் சேர்ந்து சொன்னாலும் அதனால்

எனக்கு எள்ளளவாவது உபகாரம் கிடையாது; நான் பூர்வ ஜன்மத்தில் விசேஷத் தவம் செய்திருப்பதால்தான் நான் விசேஷ அழகுள்ளவளென்பதாக உன் மனத்தில் தோன்றியது. எப்பொழுது உனக்கு என்னைவிட அழகுள்ள பெண் கிடையாதென்று தோன்றிவிட்டதோ, இனி என் மனக்குறை இன்றோடு நிவர்த்தியாகிவிட்டது'' என்று சொன்னாள்.

''நீ அழகான பெண்தான் என்று நான் சொன்னதால் உன் மனக்குறை எவ்வாறு தீரும்?'' என்று கேட்டேன்.

அதற்கு அவள், ''நீ ஆதி முதலே என்மேல் பட்சமாய்த்தானே இருந்திருக்கிறாய்?'' என்று கேட்டாள். நான் ஆம் என்றேன்.

அப்பால் அவள், ''ஆதி முதலே நீ என்பேரில் பட்சமாயிருந்திருக்கிறாய்; இப்போது நான் மிகுந்த அழகுள்ள பெண்ணென்றும், என்னைப் பார்த்தவர் விரும்பாமல் இருக்கமாட்டார்களென்றுஞ் சொன்னாய்; நானும் உன்பேரில் ஆதிமுதல் பட்சமாயிருந்திருக்கிறேன். பூலோகத்திலுள்ள புருஷர்களிலெல்லாம் நீயே அழகுள்ளவன் என்பதாகவும் எண்ணியிருக்கிறேன். ஆகையால் நீ எப்படி என்னை எண்ணியிருக்கிறாயோ அப்படியே நானும் உன்னை நினைத்திருக்கிறேன். நீ என்னை மோசஞ் செய்யமாட்டாயென்று உன்னிடம் எனக்குப் பூராவும் நம்பிக்கை உண்டு. நீ கல்யாணஞ் செய்துகொள்ள வேண்டுமென்று உத்தேசித்திருந்த ராஜாம்பாளும் நீலமேக சாஸ்திரியைக் கல்யாணஞ் செய்துகொள்வதாய்ச் சம்மதித்துவிட்டாள். அப்படி இல்லையென்று பின்னால் ஒருவேளை அவள் மாறினாலும் எப்படி அவள் இன்னொருவரை ஏமாற்றுகிறாளோ அதைவிட உன்னை அதிகமாக ஏமாற்றுவாளேயல்லாது ஏமாற்றாமல் இருக்கமாட்டாள். ஆகையால் ஒருவரை ஒருவர் இச்சைப்படும் நாம் இருவரும், கல்யாணஞ் செய்துகொள்வதில் என்ன ஆட்சேபம் இருக்கிறது?'' என்று கேட்டாள்.

இவ்வளவு நேரம் மாறி மாறி ஏன் பேசிக்கொண்டு வந்தாளென்று அப்போதுதான் எனக்குத் தெரியவந்தது. தன்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளச் சொல்வதற்

காகத்தான் இப்படிப் பேசுகிருளென்று அதுவரையில் நான் உணராமல் இருந்தது எனக்கே ஆச்சரியமாய் இருந்தது. யோசித்துப் பார்க்கையில், ஆதிமுதலே அவள் என்னைக் கல்யாணஞ் செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணங் கொண்டிருந்ததால்தான் அவள் விதவையாயிருந்தாலும் தன்னை மறுகல்யாணஞ் செய்துகொள்வதாக ஒப்புக்கொண்டு வந்து கேட்ட அநேக கனவான்களையும் மறுத்துவிட்டாள். அவளுக்கு எப்படி மறுமொழி சொல்வது என்று அறியாமல் கொஞ்சநேரம் சும்மா இருந்தேன். அப்பால் எப்படியாவது சொல்லித் தீரவேண்டியதுதானே என்று, ''லோகசுந்தரி! நீ சொன்ன வார்த்தைகள் நினைக்க நினைக்க எனக்கு வருத்தத்தைக் கொடுக்கின்றன. ஏனென்ருல், உன்னை ஆதிமுதலே என் தங்கையாகப் பாவித்து உன்னை நேசித்து வந்தேனே தவிர வேறுவிதமாக நான் நேசிக்கவில்லை. அப்படி இருக்க உன்னை நான் கல்யாணஞ் செய்துகொள்வது கூடாத காரியமாகையால், இந்த விஷயத்தைக் குறித்து நீ என்னிடம் பேசினதையும், நான் உனக்கு மறுத்து மறுமொழி சொன்னதையும் கனவாக நினைத்து மறந்துவிடு. ஏனென்ருல், எப்போது என் இருதயத்தை ராஜாம்பாளுக்கு ஒப்பித்துவிட்டேனே அதை மாற்றி உனக்கு ஒப்பிப்பது முடியாத காரியம்'' என்று சொன்னேன்.

அதற்கு அவள், ''இப்போது ராஜாம்பாள்தான் நீலமேக சாஸ்திரியைக் கல்யாணஞ் செய்துகொள்வதாக ஒப்புக்கொண்டுவிட்டாளே! அப்படி இருக்க இன்னும் அவளை நினைத்துக்கொண் டிருப்பதில் உபயோகமென்ன?'' என்று கேட்டாள். அதற்கு நான், அவள் நீலமேக சாஸ்திரியைக் கல்யாணஞ் செய்துகொண்டால் நான் கல்யாணமில்லாமல் பிரம்மசாரியாயிருப்பேனே தவிர வேறு யாரையுங் கல்யாணஞ் செய்துகொள்ளமாட்டேன் என்றும், அந்த விஷயத்தைக் குறித்து இனிப் பேசுவது வியர்த்தமென்றும் கண்டிப்பாய்ச் சொன்னவுடனே வேரறுந்த மரம் சாய்வதுபோல் மூச்சுப் பேச்சில்லாமல் கீழே விழுந்துவிட்டாள்.

உடனே ஓடிப்போய் வேலைக்காரியைக் கூட்டி வரலாமென்று வெளியே போகப் பார்த்தேன். கதவு

வெளியே பூட்டியிருந்ததால் அங்கிருந்த வேலைக்காரியின் பேரைச் சொல்லி ஐந்து நிமிஷம் வரைக்கும் அழைத்தும் யாரும் பதில் பேசாததால், ஓடிவந்து அவள் படுக்கையறைக்குப் போய்த் தண்ணீர் கொண்டுவந்து முகத்தில் தெளித்தும், பிரக்ஞை வராததால் அங்கே இருந்த ஒரு விசிறியைக் கொண்டு கொஞ்சநேரம் விசிறின தன் பேரில், கண்ணைத் திறந்து பார்த்தாள். அப்பால் கொஞ்ச நேரம் பொறுத்து மிகுந்த வருத்தத்துடன் எழுந்து உட்கார்ந்தாள். உடனே எனக்கு அவசரமான வேலை இருப்பதால் நான் போகவேண்டும் என்றேன். அதற்கு அவள், ''கோபாலா, நீ இன்று எனக்குக் கொடுத்த மறு மொழியால் எனக்கு வியாதி ஏற்பட்டுவிட்டது. நீ எப்படிக் கல்யாணஞ் செய்துகொண்டால் ராஜாம்பாளை மட்டும் செய்துகொள்வாய் என்றும், வேறொருவரைக் கல்யாணஞ் செய்துகொள்ள மாட்டாய் என்றும், உறுதியாய்ச் சொன்னாயோ, அப்படியே நானும் கல்யாணஞ் செய்துகொண்டால் உன்னைமட்டுஞ் செய்துகொள்வேனே தவிர மற்றப்படி வேறு ஒருவரையுங் கல்யாணஞ் செய்து கொள்ள மாட்டேன். இது சத்தியம். நாளடைவில் இப்போது கல்லாயிருக்கப்பட்ட உன் மனம் இரங்குமேயல்லாது இப்படியே இருக்காதென்ற ஒரு நம்பிக்கையால் தான் என் பிராணனை வைத்துக்கொண் டிருக்கிறேன். இல்லாவிட்டால் இன்றே உன் கண்முன்பாக நாக்கைப் பிடுங்கிக்கொண்டு இறந்துபோவேன். இதை உன் மனத்தில் வைத்துக்கொண்டு உன் இஷ்டம் எப்படியோ அப்படிச் செய்துகொள்'' என்று சொல்லி அங்கே இருந்த ஒரு மணியை அடித்தாள். உடனே கதவைத் திறந்து கொண்டு இரண்டு வேலைக்காரிகள் ஓடிவந்தார்கள். நான் அவளிடம் விடை பெற்றுக்கொண்டு, அதிக வருத்தத்துடன் வீட்டிற்குச் சென்றேன்.

அன்றிரவு எப்படி இருக்கிறாளோ என்றும் அந்தத் தெருவழியாய்ப் போனால் ஏதாவது விசேஷம் இருந்தால் தெரியுமே என்றும் அந்தத் தெருவின் வழியாய் இரவு பத்து மணிக்குச் சென்றேன். நடேசனைப்போல் ஓர் ஆள் லோகசுந்தரியின் வீட்டிற்குள்ளே போகக் கண்டேன். ஆனால் நன்றாய்ப் பார்த்ததில் நடேசன் அல்ல என்று நிச்ச

யித்துக்கொண்டேன். ஏனென்றால், நடையெல்லாம் நடேசனுடையதுபோல் இருந்தாலும் நரைத்த மயிரும், ஒரு சாண் நரைத்த தாடியும் இருந்ததால் வைத்தியனோ என்னவோ என்று நினைத்துக்கொண்டு சும்மா வந்து விட்டேன். அன்றுமுதல் நான் வெளியிலேயே போகவில்லை. ரகசியமாக ஸ்ரீரங்கத்திலிருந்து புரோகிதரை மாத்திரங் கூட்டிக்கொண்டுவந்து வைத்திருந்தேன். ஏனென்றால், நீலமேக சாஸ்திரிக்கு எந்த வேளையில் முகூர்த்தம் வைத்திருந்ததோ அதே முகூர்த்தத்தில் ராஜாம்பாளை நான் கல்யாணஞ் செய்துகொள்ள வேண்டுமென்று தீர்மானஞ் செய்து, எங்களுடைய வீட்டில் பூமிக்குள் யாருக்குந் தெரியாமலிருக்கும் அறையில் எனக்கு வேண்டிய இஷ்டர் நாலைந்து பேர் முன்னிலையில் கல்யாணம் முடித்துவிட்டுச் சில நாள் பரியந்தம் ராஜாம்பாளை அங்கேயே யாருக்குந் தெரியாமல் வைத்திருப்பதாக உத்தேசித்திருந்தேன்.

நேற்று உலகளந்த பெருமாள் கோவில் தெருவிற்கு ராத்திரி இரண்டு மணிக்கு வரச்சொல்லிக் கடிதம் எழுதி, என் அந்தரங்கமான வேலைக்காரன் ஒருவனிடங் கொடுத்து யாருக்குந் தெரியாமல் ராஜாம்பாள் கையில் கொடுக்கும்படி அனுப்பினேன். அப்பால் இரவு இரண்டு மணிக்கு அங்கே போய்ப் பார்க்கையில் ராஜாம்பாளைக் காணவில்லை. ஏதோ அசந்தர்ப்பத்தால் சற்றுத் தாமதமாக வருவாளென்று மூன்று மணிவரையிலும் பார்த்துக் கொண்டிருந்தேன். மூன்று மணி அடித்தபிற்பாடுகூட அவள் வராமற்போகவே எனக்குச் சந்தேகம் பிறந்து அப்படிப் பார்க்கையில் ஜன்னலில் வெள்ளையாய் ஒரு கடிதம் தென்பட்டது. அதென்ன என்று சமீபத்திற் போய்ப் பார்க்க ராஜாம்பாள் கையெழுத்தென்று தெரிந்து வாசித்துப் பார்க்கவே, என்ன மோசமோ என்று அந்தக் கடிதத்தைக் கீழே எறிந்துவிட்டுச் சுடலைமாடன் தெருவிற்கு ஓடினேன். அங்கே போய்ப் பார்த்ததும் என்னென்று சொல்லுவேன்! ஒன்றும் தோன்றவில்லை. குத்திக் கொன்ற கட்டாரியை வெளியே எடுக்காமல், நெருப்பால் கொளுத்தப்பட்டிருந்த ராஜாம்பாளின் பிரேதத்தைக் கண்டேன். கட்டாரியை எடுத்துக் கீழே எறிந்து விட்டுப் பிரேதத்தை எடுத்து மார்போடு அணைத்துக்

கொண்டு அழுதுகொண் டிருந்தேன். அப்பால் இன்ஸ்பெக்டர் மணவாள நாயுடு வந்ததும் நான்தான் கொலை செய்தேனென்று சொல்லி விலங்கு மாட்டி இங்கே கொண்டுவந்து அடைத்துவிட்டார். இதுதான் நடந்த விருத்தாந்தம்.

கோவிந்தன் கோபாலனை இரண்டாந்தரம் முதலிலிருந்து மறுபடியும் சொல்லச்சொல்லிக் கேட்டு, பின் வருங் கேள்விகளைக் கேட்டார்.

**கோவிந்தன்:** கோபாலா, உன் அறைக்குள் வைத்த கடிதத்தைக் காணோம் என்றாயே. உன் அறைக்குள் சாதாரணமாய் யார் வருவார்கள் ?

**கோபாலன்:** சங்கோசப்பட்டுக்கொண்டு நான் யாரிடத்திலும் பேசுவதில்லை யாதலால், வேலைக்காரர் நீங்கலாக நான் சாதாரணமாய்ப் பேசும் ராஜாம்பாளும் லோகசுந்தரியும் சென்னையில் இருக்கும் நடேசனுந்தான் என் அறைக்குள் வருபவர்கள்.

**கோவிந்தன்:** சரி! இம் மூவரில் யாராவது அன்று உன்னிடம் வரவேண்டிய வேலை இருந்ததா? அல்லது யாராவது வந்துவிட்டுப் போனதாகக் குறி இருந்ததா? அப்போது தோன்றாவிட்டாலும் இப்போதாவது யோசனை செய்து சொல்லு.

**கோபாலன்:** ராஜாம்பாள் வருவதற்குச் சாத்தியமில்லாததால் கடிதம் எழுதினாள். ஆகையால் அவள் வந்தே இருக்கமாட்டாள். வந்திருந்தாலும் கடிதத்தை எடுத்துக்கொண்டு போகக் காரணமில்லை. ஆகையால் அவளல்ல என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். நடேசன் சென்னையிலேயே இருக்கிறான்; காஞ்சீபுரம் வந்திருந்ததாக யாரும் சொல்லவில்லை யாதலால் அவனும் இருக்கமாட்டான். லோகசுந்தரியையும் அன்று காலையில் நான் பார்த்துப் பேசியதால் அவளும் வர ஏதுவில்லை. ஆதலால் காற்றடித்தே போயிருக்கும்.

**கோவிந்தன்:** நேற்றுக் கடிதம் யாரிடத்தில் கொடுத்தனுப்பினாய்; அந்த வேலைக்காரன் இப்போது எங்கே?

**கோபாலன்:** முருகன் என்னும் வேலைக்காரனிடம் அனுப்பினேன். நேற்றுச் சாயங்காலம் அவன் தம்பியி

ளிடமிருந்து அவனை உடனே புறப்பட்டு வரச்சொல்லித் தந்தி வந்ததால், தந்தியைக் காண்பித்து ரஜாக் கேட்டான். நான் போகச் சொன்னேன்.

**கோவிந்தன்:** இரவு இரண்டு மணிக்கு ராஜாம்பாளை வரச்சொல்லி எழுதினதாகச் சொன்னாயே. இரண்டு மணி என்று நீ எழுதியதாக உனக்கு நன்றாய் ஞாபகம் இருக்கிறதா?

**கோபாலன்:** அதைக் குறித்துக் கொஞ்சமாவது சந்தேகம் இல்லை. ஏனென்றால், அந்தக் கடிதத்தை எழுதி வைத்துக்கொண்டு வேலைக்காரனைக் கூப்பிட்டேன். அவன் வரச் சற்றுத் தாமதப்பட்டதால் அவன் வரும் வரையில் திருப்பித் திருப்பிக் கடிதத்தைப் படித்துக் கொண்டே இருந்தேன்.

**கோவிந்தன்:** நல்லது, கோபாலா! நீ சொல்ல வேண்டியதெல்லாஞ் சொல்லித் தீர்த்துவிட்டாய். இனி, கொலை செய்தவனைக் கண்டுபிடிக்க வேண்டியது என்னைச் சேர்ந்தது. நீ அதுவரையில் தைரியமாய் இரு. நாங்கள் போகிறோம்.

## 9. விசாரணை

இராஜாம்பாள் கொலை செய்யப்பட்டுக் கொளுத்தப் பட்டிருந்தாள் என்ற சமாசாரம் கேள்விப்பட்டவுடனே நீலமேக சாஸ்திரிகள், பிரக்ஞை தப்பிக் கீழே விழுந்து விட்டார். சாஸ்திரிகள் எப்போதும் சுயநலம் பாராட்டு கிறதே வழக்கமாய் இருந்தபோதிலும் இராஜாம்பாள் விஷயத்தில் மாத்திரம் உண்மையான வருத்தத்தை அடைந்தார். ஸ்திரீஹத்தி, சிசுஹத்தி, கோஹத்தி செய்யும் பரம சண்டாளனாக இருந்தாலும், அவனுக்கும் அந்தரங்கமான பிரியம் ஒரு பிராணியின் மேலாவது இருப்பது சகஜமாதலால் நீலமேக சாஸ்திரிகளுக்கு இராஜாம்பாள் பேரில் அத்தகைய வாஸ்தவமான பிரியம் இருந்தது ஆச்சரியமான காரியம் அல்ல. இராஜாம்பாள் இறந்துபோனாளே என்ற விசனம் சற்று நீங்கினவுடனே அவர் கஷ்டப்பட்டுச் சம்பாத்தியஞ் செய்து வைத்திருந்த

ரூபாய் முழுவதும் செலவழிந்துவிட்டதே என்றும், இராஜாம்பாளுக்குச் சுமார் அறுபது லட்சத்துக்குமேல் சீதனம் வருமென்றும், அப்படி அறுபது லட்சம் வரும் போது, தாம் ஐந்து லட்சம் செலவு செய்வது பிரமாதம் அல்லவென்றும் நினைத்துச் செலவு செய்தவராகையால், இப்போது இராஜாம்பாளையும், அவளுடைய சீதனத்தையும் தாம் அதிகக் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த சொத்து முழுவதையும் ஏககாலத்தில் இழந்துவிட்டதைக் குறித்து நீலமேக சாஸ்திரிகள் எவ்வளவு விசனத்தை அடைந்திருப்பார் என்று சொல்லுதல் எளிதல்ல. இதை வாசிப்பவர்களே அவருக்கு எவ்வளவு வருத்தம் இருந்திருக்குமென்று ஊகித்துக்கொள்ளலாம். இராஜாம்பாளும் கோபாலனுஞ் சேர்ந்து சதியாலோசனை செய்து தம்மை அவமானப் படுத்தவேண்டும் என்ற எண்ணங்கொண்டு இப்படிச் செய்தார்கள் என்ற சமாசாரம் தெரிந்தவுடனே முன்னால் எவ்வளவு வருத்தத்தை அடைந்தாரோ அவ்வளவுக்குச் சந்தோஷமடைந்தார். மூதேவியுடன் ஸ்ரீதேவி பிறந்தது போலும், சேற்றில் தாமரை மலர் உண்டாகிறது போலும், சிப்பியிலிருந்து நல்முத்து அகப்படுவது போலும், துர்க்குணங்களே திரண்டு உருக்கொண்டு நீலமேக சாஸ்திரிகளாகப் பிறந்தன என்று எண்ணினபோதிலும், ஒருவன் குற்றஞ்செய்திருப்பான் அல்லது செய்திருக்கமாட்டான் என்று கண்டுகொள்ளக் கூடிய விசேஷமாகிய நற்குணம் அவரிடம் குடிகொண் டிருந்ததாகையால், இராஜாம்பாளின் கொலையைக் குறித்த சமாசாரங்கள் முழுமையும் கேள்விப்பட்டவுடனே, ஒருகாலும் கோபாலன் கொலை செய்திருக்கமாட்டானென்றும், வேறே யாரோ கொலை செய்திருப்பார்களென்றும் நிச்சயமாய்த் தெரிந்து கொண்டபோதிலும், தமக்கு விரோதமாகக் கோபாலன் சதியாலோசனை செய்ததால், எப்படியாவது அவன் தண்டனை அடையவேண்டுமென்று எண்ணிக்கொண் டிருந்தார். தமக்கு விரோதமாய்ச் சதியாலோசனை செய்ததற்குக் கோபாலனைச் சித்திரவதை செய்ய நீலமேக சாஸ்திரிகளுக்கு அதிகாரம் இருந்திருந்தால் கோபாலனுடைய ஒவ்வொரு மயிர்க்காலிலும் காயம்படும்படி சித்திரவதை செய்திருப்பார். கருணைபொருந்திய இந்திய கவர்ன்மென்

டார் அப்படிச் செய்வதற்கு அதிகாரங் கொடுக்க வில்லையே என்று அவர்கள்பேரில் சற்று வருத்தத்தை அடைந்தார். போலீஸ் வழக்குகளை நடத்துவதில் தமக்கு நிகரில்லாத துரைசாமி ஐயங்கார் கோபாலனுக்கு அநு சரணையாக வாதிக்க வந்திருக்கிறார் என்று நீலமேக சாஸ்திரிகளுக்குத் தெரிந்தவுடனே, இன்ஸ்பெக்டர் மணவாள நாயுடுவைக் கூப்பிட்டு, மேலதிகாரிகளுக்கு எழுதிச் சர்க்கார் தரப்பில் வாதிப்பதற்காகப் பாரிஸ்டர் பீ. கொக்குதுரையை வரவழைக்கச் சொன்னார். மாஜிஸ்டி ரேட்டார் சொல்லியபடியே போலீஸ் இன்ஸ்பெக்டர் ஏற்பாடு செய்து தந்தி கொடுத்து, பாரிஸ்டர் கொக்கு துரையை வரவழைத்தார்.

இராஜாம்பாளுடைய கொலை வழக்கை விசாரணை செய்யப் போகிறார்கள் என்ற சமாசாரந் தெரிந்தவுடனே மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் மூச்சுவிடக்கூட இடமில்லா மல் கச்சேரி முழுவதும் ஜனங்கள் நிறைந்துவிட்டார்கள். ஜனங்களைப் போகும்படி போலீசார் எவ்வளவு பிரயத் தனங்கள் செய்தும் ஒன்றும் உபகாரமில்லாமற்போயிற்று. தங்களுடைய கௌரவத்தைக் காட்டவேண்டும் என்ற எண்ணத்துடன் முக்கியமான வழக்குகள் வரும் போது தாமதித்து வந்து, தங்களுடைய கௌரவத்தைவிட லட்சம் பங்கு அதிகமான கௌரவத்தையுடைய பாரிஸ் டர்களையும் கனவான்களையும் காக்க வைப்பது அதிகக் கௌரவமென்று எண்ணிக்கொண்டிருக்கும் சில மாஜிஸ்டி ரேட்களில் நீலமேக சாஸ்திரியும் ஒருவர். ஆதலால், மாமூ லாய் வரவேண்டிய பத்தரை மணிக்கு எல்லாரும் வந்து கோர்ட்டில் காத்துக்கொண்டிருக்க, சாஸ்திரிகள் சாவ காசமாய்ப் பன்னிரண்டு மணிக்குக் கச்சேரிக்கு வந்து சேர்ந்தார். அப்போதும் 2 மணிவரையில் மற்ற வேலை செய்து பின்புதான் இதை எடுத்தார்.

**பாரிஸ்டர் கொக்கு துரை:** நான் பாரிஸ்டராகி என் இருபது வருஷ அநுபோகத்தில் இவ்வளவு குரூரமும் கொடூரமுமாகிய கொலையைக் குறித்து வாதிக்கப் பிரமேயம் ஏற்படவில்லை. இப்போது கொலை செய்யப் பட்ட ராஜாம்பாளுடைய நற்குண நற்செய்கைகளைப் பற்றிக் கோர்ட்டாருக்கும் இங்கே வந்திருக்கும் ஜனங்

களுக்கும் நான் சொல்லவேண்டியதில்லை. இவ்வளவு நற்குண நற்செய்கைகளையுடைய பெண்ணைக் கொலைசெய்வதற்கு என்ன காரணம் இருக்கலாமென்று சற்று ஆராய்வோம்; கொலை நடந்த அன்று பகல் இந்தக் கொலைபாதகக் கோபாலன்.....

**துரைசாமி ஐயங்கார்:** கனம் பொருந்திய கோர்ட்டாரவர்களே, ம-ா-ா-ஸ்ரீ பாரிஸ்டர் கொக்கு துரையவர்கள் கோபாலன்தான் கொலை செய்தான் என்று ருஜுப்படுத்தும்வரை அவனைக் கொலைபாதகன் என்று சொல்வது சட்டவிரோதமாகையால் அப்படிச் சொல்லாமல் குற்றஞ் சாட்டப்பட்டவன் என்று சொல்லும்படி ஆக்ஞாபிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**கோர்ட்டார்:** மணவாள நாயுடு கண்டுபிடித்திருக்கும் சாட்சியம் இன்னதென்று அறிந்த பிற்பாடுகூட, தங்களுக்குச் சந்தேகம் இருக்கிறதோ?

**துரைசாமி ஐயங்கார்:** வாதி சாட்சிகளையும் பிரதிவாதி சாட்சிகளையும் விசாரிக்குமுன் மணவாள நாயுடு சாட்சியத்தைக் கொண்டே, தாங்கள் கோபாலனைக் குற்றவாளி என்று தீர்மானம் செய்துவிட்டதாக ஏற்படுகிறது. விசாரணைக்கு முன்னேயே தாங்கள் அப்படி அபிப்பிராயங் கொண்டிருப்பதால் இந்த வழக்கைத் தாங்கள் விசாரணை செய்வதால் என் கட்சிக்காரனுக்கு நியாயம் கிடைக்காதென்று எனக்குத் தோன்றுகிறது. ஆகையால் தாங்கள் இந்தக் கேசை இரண்டு நாளைக்கு நிறுத்தி வைத்தால், தங்களைத் தவிர வேறே கோர்ட்டார் இந்தக் கேசை விசாரணை செய்யும்படி சென்னை ஐகோர்ட்டுக்கு மனுக்கொடுத்து மாற்றிக்கொள்ளுகிறேன்..

**கோர்ட்டார்:** ஐயங்காரவர்களே, வாயிலிருந்து தவறுதலாய் ஒரு வார்த்தை வருமுன் அதைப் பிடித்துக்கொண்டு சட்ட விரோதம் என்றும், ஐகோர்ட்டுக்கு மனுக்கொடுத்து மாற்றிக்கொள்ளுகிறேன் என்றும் சொல்லுகிறீர். கோபாலனைக் கொலைபாதகன் என்று சொல்வது உமக்கு இஷ்டம் இல்லாவிட்டால் பாரிஸ்டர் கொக்கு துரையை அப்படிச் சொல்லவேண்டாம் என்று சொல்லிவிடுகிறேன். மணவாள நாயுடு சாட்சியங்களைப் பார்த்

தீரா என்று கேட்டேனே தவிர, நான் கோபாலன்தான் கொலை செய்தான் என்று தீர்மானஞ் செய்துகொள்ளவில்லை. நான் இப்படிச் சொன்ன பிற்பாடுகூடக் கேசை மாற்றிக்கொள்ள நீர் அபிப்பிராயப்பட்டால் எனக்குக் கேசை நிறுத்திவைப்பதில் யாதோர் ஆட்சேபமும் இல்லை.

**துரைசாமி ஐயங்கார்:** கோர்ட்டாரவர்களே அப்படி அபிப்பிராயப்படவில்லை என்று சொல்லுவதால் இனிக் கேஸ் நடத்துவதில் எனக்கு யாதோர் ஆட்சேபமும் இல்லை.

**கோர்ட்டார்:** கொக்கு துரையவர்களே, தாங்கள் கோபாலனைக் கொலைபாதகன் என்று சொல்லாமல் ருஜுப் படுத்தும் வரையில் கோபாலன் என்றே சொல்லவேண்டும்.

**பா. கொக்கு துரை:** கொலை நடந்த அன்று பகல் இந்தக் கோபாலன் ராஜாம்பாளுக்கு எழுதிய கடிதம் இதோ இருக்கிறது. இதைத் தாக்கல் செய்துகொள்ளுங்கள். ராஜாம்பாளை உலகளந்த பெருமாள் கோவில் தெரு, 25-ஆம் நம்பர் வீட்டிற்கு வரச்சொல்லி எழுதியிருக்கிறான். இவன் எழுதியபடி அவள் போனளா அல்லது பலாத்காரமாய்க் கொண்டுபோகப்பட்டாளா என்று தீர்மானஞ் செய்வதற்குத் தற்காலத்தில் சாட்சியங்கள் இல்லை. கூடிய விரைவில் மணவாள நாயுடு கண்டுபிடிப்பதாகச் சொல்லுகிறார். எப்படியாகிலும் ராஜாம்பாள் அங்கே போனள் என்று மட்டும் தெரிகிறது. நல்லது; அந்த இடத்தில் கோபாலனுக்கும் ராஜாம்பாளுக்கும் எந்த விஷயத்தைக் குறித்து மனஸ்தாபம் ஏற்பட்டதோ அதுவும் இப்போது தெரியவில்லை. ராஜாம்பாள், 'தலையை இரண்டு துண்டாக வெட்டிவிட்டாலும், கிழக்கே உதிக்கிற சூரியன் மேற்கே உதித்தாலும் உன்னைக் கல்யாணஞ் செய்துகொள்ள மாட்டேன்' என்று சொன்னதற்குச் சாட்சியம் இருக்கிறது. மேலும் அங்கே போலீஸ் இன்ஸ்பெக்டர் மணவாள நாயுடு போனபோது, 'மோசம் போனேன் கோபாலன் என்னைச் சுடலைமாடன் தெரு, 29-வது நெம்பர் வீட்டிலுள்ள குதிலில்' என்று ராஜாம்பாள் கைப்பட எழுதிய காகிதத் துண்டு ஒன்று கிடந்தது. இதனல் என்ன அர்த்தமாகிறது? மோசம்

போனேன் என்பதால் கோபாலனை நம்பி வந்ததில் மோசம் போனுள் என்றும், 'கோபாலன் என்னைச் சுடலைமாடன்' என்பதனுல் கோபாலன் தன்னை மேற்சொன்ன இடத்திற்குக் கொண்டுபோய், இன்னது செய்யப்போகிருன் என்று எழுதுமுன் யாரோ வந்ததனுலோ அல்லது வேறு எந்தக் காரணத்திஞலோ எழுத முடியவில்லை என்றும் தோன்றுகிறது. கோபாலன் யோக்கியனென்று அதுவரையில் நம்பியிருந்தவளுக்கு அன்றுதான் அவனுடைய சகிக்கக்கூடாத துர்க்குணம் ஏதாவது தெரிந்திருக்குமென்றும், அவனுடைய ரகசியம் வெளிப்பட்டுப் போகவே தன்னைக் கல்யாணஞ் செய்துகொள்ளும்படி பலாத்காரஞ் செய்திருக்கலாமென்றும், அவள் கல்யாணஞ் செய்துகொள்ள மாட்டேன் என்றதன்பேரில் இனி அந்த ரகசியம் வெளிப்பட்டுப்போகுமே என்ற எண்ணத்தால் சுடலைமாடன் தெருவிற்குக் கூட்டிக்கொண்டு போய்க் கொலைசெய்ய அவனுடன் உடந்தையாக இருந்தவர்களிடம் யோசனை செய்துகொண் டிருக்கையில் ராஜாம்பாள் அந்தச் சீட்டு எழுதியிருக்கலாம் என்றும் தோன்றுகிறது. சுடலைமாடன் தெருவிற் போய்ப் பார்க்கையில் அவன் கொலைசெய்து கொளுத்திய பிரேதத்தை வைத்துக் கொண்டு அழுவதுபோல் ஜாடை செய்துகொண் டிருந்தான். ராஜாம்பாள் சீட்டு எழுதியது கோபாலனுக்குத் தெரியாதாகையால், சாவகாசமாய்க் கொலைசெய்து சுட்டுக்கொண் டிருந்திருப்பான். அதற்குள்ளாகத் தெருவில் மணவாள நாயுடுவைக் கண்டதும் ஓடிப்போய்ப் பிரேதத்தை மார்பின்மேல் எடுத்து வைத்து அழுவதுபோல் ஜாடை செய்துகொண் டிருந்திருப்பான். இவ்வளவும் போதாதென்று, 'கோ' என்னும் எழுத்து ஒரு மூலையில் எழுதப்பட்ட சித்திரவேலை செய்த ரத்தந் தோய்ந்த கைக்குட்டையொன்று கிழித்துச் சாம்பலில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. இந்தக் குட்டை கோபாலனுடையது என்பதற்குச் சாட்சியங்கள் இருக்கின்றன. கொலை செய்யும் பாதகர்கள் எப்போதும் யாருக்குந் தெரியாமலும் சிறிதாவது சாட்சியம் இல்லாமலுங் கொலைசெய்வது வழக்கமல்லவா? இவ்வளவு சாட்சியங்களுடன் அகப்பட்டது சாமிநாத சாஸ்திரிகள் செய்திருக்கும் புண்ணிய

வசந்தான் என்பதிற் சந்தேகங் கிடையாது. இனிச் சாட்சிகளை விசாரிக்கிறேன். இன்ஸ்பெக்டர் மணவாள நாயுடுவே! உமக்கு இந்தக் கேசில் என்ன தெரியுமென்று விவரமாய்ச் சொல்லும்.

**மணவாள நாயுடு:** புதன்கிழமை ராத்திரி மூன்று மணிக்கு என்னைச் சாமிநாத சாஸ்திரி காணமற் போன அவர் புத்திரியைக் கண்டுபிடிக்கச் சொன்னார். அவள் கைப்பெட்டியைத் திறக்கச் சொல்லிப் பார்த்தேன். அதில் கோபாலன் எழுதிய கடிதம் அகப்பட்டது. அது தான் கோர்ட்டில் முதலில் தாக்கல் செய்யப்பட்டது. அதைக் கண்டவுடனே உலகளந்த பெருமாள் கோவில் தெரு, 25-வது நெம்பர் வீட்டிற் போய்த் தேடினதில் கோர்ட்டில் இரண்டாந்தரம் தாக்கல் செய்யப்பட்ட கடிதம் அகப்பட்டது. அங்கிருந்து சுடலைமாடன் தெரு, 29-வது நெம்பர் வீட்டிற்குப் போனபோது கோபாலன் தன் மார்பின்மேல் ராஜாம்பாளின் பிரேதத்தைச் சாய்த்துக்கொண் டிருந்தான். உடனே அவனை ஜெயிலுக்கு அனுப்பிவிட்டுப் பிரேதத்தை ஆஸ்பத்திரிக்கு அனுப்பினேன். மறுபடியும் கொலை நடந்த இடத்தைத் தேடினதில் சாம்பலுக்குள் இந்தக் கைக்குட்டை அகப்பட்டது.

**கோர்ட்டார்:** ஐயங்காரவர்களே! இந்தச் சாட்சியை நீர் ஏதாவது கேள்விகள் கேட்பதாயிருந்தால் கேட்கலாம்.

**துரைசாமி ஐயங்கார்:** நான் இப்போது கேள்விகள் கேட்கமாட்டேன். செஷன்ஸ் கோர்ட்டில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**கோர்ட்டார்:** இரண்டாவது சாட்சி சாமிநாயுடுவைக் கூப்பிடு.

**பா. கொக்கு துரை:** சாமி நாயுடு, உமக்கு இந்தக் கேசில் தெரிந்த சங்கதிகளைச் சொல்லும்.

**சாமி நாயுடு:** புதன்கிழமை ராத்திரி ஊர் பூராவும் வேடிக்கைகள் நடந்துகொண் டிருந்தன. ஒரு பக்கத்தில் வேடிக்கை பார்த்துவிட்டு நான் உலகளந்த பெருமாள் கோவில் தெருப்பக்கத்திற் போகும்போது ஜலபாதைக்கு வந்தது. 25-ம் நெம்பர் வீட்டில் யாரும் இல்லையாதலால், அங்கே ஜலபாதைக்குப் போகப்போனேன். அப்போது அந்த வீட்டில் ராஜாம்பாளின் குரல் கேட்டது.

ராஜாம்பாள் எல்லாரிடத்திலும் பிரியமாய்ப் பேசுவதைப்போல் என்னிடமும் பேசுவது வழக்கமாதலால் அவள் குரல் எனக்கு நன்ருய்த் தெரியும். 'என் தலையை இரண்டு துண்டாக வெட்டிவிட்டாலும், கிழக்கே உதிக்கிற சூரியன் மேற்கே உதித்தாலும் உன்னைக் கல்யாணஞ் செய்துகொள்ள மாட்டேன்' என்று ராஜாம்பாள் சொன்னதைக் கேட்டேன். உடனே ஒரு கதவு திறந்து மூடப்பட்டது. சுமார் ஐந்து நிமிஷத்திற்குப் பிறகு குதிரைவண்டி யொன்று விரைவாக அந்த வாசலிலிருந்து ஓடிற்று. அதற்குப் பின்ஞல் பைசிகிள் வண்டியேறி யாரோ கொஞ்ச தூரத்தில் பின்தொடரக் கண்டேன். இதுதான் எனக்குத் தெரிந்த விஷயம்.

**கோர்ட்டார்:** இவரை ஏதாவது கேள்வி கேட்க வேண்டுமா?

**துரைசாமி ஐயங்கார்:** இவரையும் செஷன்ஸ் கோர்ட்டில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**கோர்ட்டார்:** மூன்ருவது சாட்சி நடேச சாஸ்திரிகளைக் கூப்பிடு.

நடேச சாஸ்திரிகள் உயர்ந்த பிளானலிற் செய்த வெள்ளைக் கால்சட்டையும் ஓம்ஸ்பன்னில் செய்த கோட்டும் வெஸ்ட்கோட்டும் மெரினு மேஜோடும் ருஷியத் தோலில் செய்த மேலான பூட்ஸ்களும், ஒரு விரல் கனமுள்ள தங்கக் கடிகாரச் சங்கிலியும், நவரத்தினங்கள் இழைத்த தங்கக் கடிகாரமும், தலையில் பஞரிஸ் தலைக் குட்டையும் அணிந்துகொண் டிருந்தார். மொத்தத்தில் இவர் போட்டிருந்த உடுப்புகளைப்போல் ஐரோப்பியரிடங்கூடக் காண்பது கஷ்டமென்ருல், இவருடைய உடுப்புகளைக் குறித்து விஸ்தரிப்பானேன்?

**பா. கொக்கு துரை:** நடேச சாஸ்திரிகளே, கோபாலனுக்கு விரோதமாகச் சாட்சி சொல்வது உமக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுக்கும் என்பது நமக்குத் தெரிந்தாலும், கொலைசெய்யப்பட்ட உமது தமக்கையின் புத்திரியாகிய ராஜாம்பாளைக் கொலை செய்தவர்களைக் கண்டுபிடிப்பதற்காகவும், நீதிஸ்தலங்களில் பொய் சொல்லக்கூடாதாகையாலும் உமக்குத் தெரிந்த விஷயங்களை ஒளியாமற் சொல்லவேண்டும்.

நடேச சாஸ்திரி: ராஜாம்பாள் ஒரு வாரத்திற்கு முன்னால் சில சாமான்கள் வாங்கச் சென்னைக்கு வந்தாள். வந்தவள் நான் இருக்கும் இடத்திற்கு வந்தாள். கோபாலனை விட்டு வேறொருவரைக் கல்யாணஞ் செய்துகொள்ள எப்படி ஒப்புக்கொண்டாய் என்று கேட்டேன். கோபாலனை ஜனங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு நல்லவன் என்கிறார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு கொடியவன் என்று தனக்குத் தெரிந்ததன்பேரில்தான் வேறொருவரைக் கல்யாணஞ் செய்ய ஒப்புக்கொண்டதாகவும், கோபாலனுக்கு நம்பிக்கை கெட்டுப் போகாதபடி அவனைக் கடைசி நிமிஷத்திற் கல்யாணஞ் செய்துகொள்வதாக ஒப்புக்கொண்டவள்போல் அபிநயிக்கிறதாகவும், கல்யாணத்திற்கு முந்தின ராத்திரி அவனை நேரில் கண்டு அவனுடைய கொடிய செய்கைகளை அவனிடஞ் சொல்லிவிட்டு அப்பால், தீர்மானஞ் செய்தபடி நீலமேக சாஸ்திரிகளைக் கல்யாணஞ் செய்துகொள்ளப் போவதாகவுஞ் சொன்னாள். அப்படிச் செய்வது சரியல்ல என்றும், ஒரு சமயம் அவனுக்குக் கோபம் வந்தால், வாஸ்தவமாக அவன் கொடியவனாக இருந்தால் ஏதாவது கெடுதல் செய்வான் என்றும் சொன்னேன். அதைக் குறித்து நான் பயப்படவேண்டிய அவசியம் இல்லை என்றும், அவளுக்கு ஏதாவது அபாயம் நேரிட்டால் மட்டும் என்னை இந்தச் சமாசாரங்களைச் சொல்லும்படியும் என்னிடம் வாக்குறுதி பெற்றுக்கொண்டாள். அவள் செய்வது சரியல்ல என்றும், அந்த விஷயத்தைக் குறித்துச் சாமிநாத சாஸ்திரிகளுக்கு எழுதுவதாகவும் சொன்னேன். 'நீங்கள் என் இஷ்டத்திற்கு விரோதமாய் எழுதினாலும் நடந்தாலும் அதுமுதல் நான் உங்கள் முகத்தில் விழிக்கமாட்டேன்' என்று அவள் சொன்னதால் மௌனமாய் இருந்தேன். இதுதான் எனக்குத் தெரிந்த சங்கதி.

இப்படி நடேச சாஸ்திரி வாக்குமூலங் கொடுத்துக் கொண்டிருந்தபோது பக்கத்தில் நின்றுகொண் டிருந்த கிழவன் ஒருவன் துரைசாமி ஐயங்காரிடம் ஒரு கடிதத் துண்டைக் கொடுத்தான். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது:

"நடேசன் எப்போது வந்தான் என்றும், இதைப் போலொத்த கேள்விகளையும் விவரமாய்க் கேளுங்கள்.
கோவிந்தன்."

**கோர்ட்டார்:** ஐயங்காரவர்களே! இந்தச் சாட்சியை ஏதாவது கேள்விகள் கேட்பதாயிருந்தால் கேளுங்கள்.

**துரைசாமி ஐயங்கார்:** நடேச சாஸ்திரிகளே, தாங்கள் காஞ்சீபுரத்திற்கு எப்போது வந்தீர்கள்?

**நடேச சாஸ்திரி:** நான் வந்தது தங்களுக்குத் தெரியாதா? தாங்கள் கேட்பது ஆச்சரியமா யிருக்கிறதே.

**துரைசாமி ஐயங்கார்:** நான் கேட்ட கேள்விக்குத் தயவுசெய்து மறுமொழி சொல்லுங்கள். எனக்குத் தெரிகிறதற்கும் தாங்கள் விடை சொல்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது.

**நடேச சாஸ்திரி:** ஆனால் சொல்லுகிறேன். நேற்று வியாழக்கிழமை காலை ஒன்பது மணிக்குக் காஞ்சீபுரம் வருகிற ரெயிலில் வந்தேன்.

**துரைசாமி ஐயங்கார்:** எப்போதும் தாங்கள் முதல் வகுப்பு வண்டியில் பிரயாணஞ் செய்வது வழக்கமாயிற்றே; இப்போதும் அப்படியே முதல் வகுப்பு வண்டியில் தான் வந்தீர்களா?

**பா. கொக்கு துரை:** கோர்ட்டாரவர்களே, என் நண்பர் வக்கீல் துரைசாமி ஐயங்கார் கேட்கும் கேள்விகளுக்கும் இந்தக் கேசுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையாதலால் வீண் கேள்விகளைக் கேட்டு நேரத்தைக் கடத்துவதை நான் ஆட்சேபிக்கிறேன்.

**துரைசாமி ஐயங்கார்:** முப்பத்தைந்து வருஷ காலமாய் வக்கீல் உத்தியோகஞ் செய்யும் நான், காரணமில்லாமல் அநாவசியமான கேள்விகளைக் கேட்டு நேரத்தைக் கடத்துவேனோ என்பதைக் குறித்து இருபது வருஷ காலமாய்ப் பாரிஸ்டர் வேலை செய்துவரும் கொக்கு துரையவர்கள் யோசனை செய்யாமல் பேசினதற்காக நான் மனவருத்தப்படுகிறேன். கட்சிக்காரனிடத்தில் பணம் வாங்கினதற்காக வீண் கேள்விகளைக் கேட்டு நேரத்தைப் போக்கும் சில பாரிஸ்டர்களையும் வக்கீல்களையும்போல் என்னையும் நினைத்

துக்கொண்டார்போல் இருக்கிறது. சட்டத்துக்கு விரோத மாக நான் கேள்விகள் கேட்டால் மாத்திரம் கோர்ட்டா ருக்கு என்னை நிறுத்தும்படி சொல்லுவதற்கு அதிகா ரம் உண்டே தவிர இந்தக் கேள்விகளை யெல்லாம் கேட்பதை ஆட்சேபிக்கச் சட்டம் இல்லை.

**பா. கொக்கு துரை:** கோர்ட்டாருக்குச் சகல அதி காரங்களும் சட்டப்படி இருக்கின்றன.

இதையெல்லாங் கேட்டுக்கொண் டிருந்த நீலமேக சாஸ்திரிகள் வக்கீல் துரைசாமி ஐயங்காரின் சாமர்த்தி யத்தையும் கௌரவத்தையும் நன்கு உணர்ந்தவராதலா லும் எப்போதும் அநேகமாய்ப் பாரிஸ்டர்கள் நியாயம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஆட்சேபங்கள் செய்து அதைக் குறித்து வாதித்து நேரத்தைக் கடத்துவது சகஜ மாதலாலும், துரைசாமி ஐயங்கார் காரணமில்லாமல் கேட்கமாட்டார் என்று தெரிந்து, கோர்ட்டாருக்கு எது நியாயமான கேள்வி என்றும், எது அக்கிரமமான கேள்வி யென்றும் தெரியுமாதலால் கோர்ட்டாருடைய வேலையைக் குறித்துப் பாரிஸ்டர் கொக்கு துரை புத்தி சொல்லவேண்டியதில்லை யென்றும், சட்டத்துக்கு விரோத மான கேள்விகளைக் கேட்டால்மட்டும் அப்போது ஆட் சேபிக்கும்படிக்கும் பாரிஸ்டர் கொக்கு துரைக்குச் சற்றுக் கடுமையாய்ச் சொன்னார்.

**துரைசாமி ஐயங்கார்:** முதல் வகுப்பு வண்டியில் தான் வந்தீர்களோ?

**நடேச சாஸ்திரி:** ஆம்; முதல் வகுப்பு வண்டியில் தான் வந்தேன்.

**துரைசாமி ஐயங்கார்:** ஒரு முழு முதல்வகுப்பு வண்டி யைத் தீர்மானஞ் செய்துகொண்டு வந்தீர்களா? அல்லது ஒரு முதல் வகுப்பு டிக்கட்டு மாத்திரம் வாங்கி வந்தீர் களா?

**நடேச சாஸ்திரி:** ஒரு முதல் வகுப்பு டிக்கட்டுத்தான் வாங்கிவந்தேன்.

**துரைசாமி ஐயங்கார்:** காலையில் எழும்பூரில் ஏறினீர் களா? அல்லது வேறு எங்காவது இஷ்டர் வீட்டில் தங்கி வந்தீர்களா?

நடேச சாஸ்திரி: நேராய் எழும்பூரிலிருந்துதான் வந்தேன்.

துரைசாமி ஐயங்கார்: எழும்பூர் ஸ்டேஷனில் டிக்கட்டு வாங்கினீர்களா? அல்லது திருவல்லிக்கேணிக் கிளை ஆபீசில் டிக்கட்டு வாங்கினீர்களா?

நடேச சாஸ்திரி: எழும்பூரில்தான் வாங்கினேன்.

துரைசாமி ஐயங்கார்: ராஜாம்பாள் கல்யாணம் தீர்மானஞ் செய்ததுமுதல் நேற்றுத்தான் காஞ்சீபுரம் வந்தீர்களா? அல்லது இதற்கு முன்னால் எப்போதாவது வந்தீர்களா?

நடேச சாஸ்திரி: நேற்றுத்தான் வந்தேன்.

துரைசாமி ஐயங்கார்: நேற்றைக்கு முன்னால் ஒரு மாதத்திற்குள் எப்போதாவது காஞ்சீபுரம் வந்தீர்களா? அல்லது அதற்கு முன்னாலாவது சமீபத்தில் வந்தீர்களா?

நடேச சாஸ்திரி: நேற்றுத்தான் வந்தேன்.

துரைசாமி ஐயங்கார்: நேற்றைக்கு முன்னால் ஒரு மாதத்திற்குள் எப்போதாவது காஞ்சீபுரம் வந்தீர்களா என்று சற்று யோசனைசெய்து சொல்லுங்கள்.

நடேச சாஸ்திரி: யோசனை செய்ய என்ன இருக்கிறது? நான் காஞ்சீபுரம் வந்து ஒரு வருஷத்திற்கு மேல் ஆகிறது. அதுமுதல் நேற்று வரையில் நான் வரவேயில்லை என்று நிச்சயமாய்ச் சொல்வேன்.

துரைசாமி ஐயங்கார்: தாங்கள் சென்னையில் இருக்கும்போது ராஜாம்பாள் ஒரு வாரத்திற்கு முன்னால் வந்து தங்களிடம் பேசினதாகச் சொன்னீர்களே! என்ன கிழமை வந்தாளென்றும், எத்தனை மணிக்கு வந்தாளென்றும் தயவுசெய்து சொல்லுங்கள்.

நடேச சாஸ்திரி: நேற்றுப் புதனுக்கு முந்தின புதன் கிழமை சாயங்காலம் நாலடித்துப் பத்து நிமிஷத்திற்கு வந்தாள்.

துரைசாமி ஐயங்கார்: நாலடித்துப் பத்து நிமிஷத்திற்கு வந்தாளென்று அவ்வளவு நிர்ணயமாய்ச் சொன்னீர்களே; அவள் வந்தவுடனே மணி என்னவென்று பார்த்தீர்களோ?

நடேச சாஸ்திரி: நாலு மணிக்கு வருவதாக ராஜாம்பாள் எனக்குக் கடிதம் எழுதியிருந்தாள். நாலு மணிக்குச் சரியாய் வராததால் கடிகாரத்தைக் கையில் வைத்துப் பார்த்துக்கொண்டே இருந்தேன். சரியாய் நாலு அடித்துப் பத்து நிமிஷத்திற்கு வந்தாள்.

துரைசாமி ஐயங்கார்: ராஜாம்பாள் எழுதிய கடிதத்தைக் கோர்ட்டில் ஆஜர்ப்படுத்த முடியுமோ?

நடேச சாஸ்திரி: ராஜாம்பாளுக்கு இப்படித் துர் மரணம் சம்பவிக்குமென்றும், தாங்கள் என்னை அந்தக் கடிதத்தை ஆஜர்ப்படுத்தச் சொல்லுவீர்கள் என்றும், எனக்கு முன்னுலேயே தெரிந்திருந்தால் நான் அதைப் பத்திரப்படுத்தியிருப்பேன்.

துரைசாமி ஐயங்கார்: கேட்ட கேள்விக்கு ஜவாப்புச் சரியாய்ச் சொல்லவில்லேயே? தேடிப் பார்த்தாவது ஆஜர்ப்படுத்த முடியுமோ?

நடேச சாஸ்திரி: எனக்கு வந்த கடிதங்களை நான் பந்தோபஸ்துச் செய்வதில்லை. படித்தவுடனே பரிகரித்து விடுவது வழக்கமாதலால் அதையும் அப்படியே செய்து விட்டேன்; ஆதலால் ஆஜர்ப்படுத்த முடியாது.

துரைசாமி ஐயங்கார்: ராஜாம்பாள் தனிமை யாய்த் தங்கள் வீட்டிற்கு வந்தாளா? அல்லது அவளோடு கூட யாராவது வந்தார்களா?

நடேச சாஸ்திரி: தனிமையாய்த்தான் வந்தாள். கூட யாரும் வரவில்லை.

துரைசாமி ஐயங்கார்: உங்கள் வீட்டிற்கு வந்தது யாருக்காவது தெரியுமா?

நடேச சாஸ்திரி: யார் பார்த்தார்கள் என்றும், யாருக்குத் தெரியும் என்றும் எனக்குத் தெரியாது.

துரைசாமி ஐயங்கார்: இதற்கு முன்னுல் எப்போ தாவது ராஜாம்பாள் தங்களுக்குக் கடிதம் எழுதியிருக் கிருளா?

நடேச சாஸ்திரி: இல்லை.

துரைசாமி ஐயங்கார்: ஆனுல் இப்போது மாத்திரம் கடிதம் எழுதின காரணம் என்ன?

**நடேச சாஸ்திரி:** ராஜாம்பாளைக் கேட்டால் அவள் சொல்லுவாள்! எனக்குத் தெரியாது.

**துரைசாமி ஐயங்கார்:** உங்களுக்கும் ராஜாம்பாளுக்கும் பேச்சுவார்த்தையே கிடையாது என்றும், அவள் எப்போது சென்னைக்கு வந்தாலும் தங்களுடைய வீட்டிற்கு வருவதில்லை என்றும், தங்களிடம் பேசுவதில்லை என்றும் சொல்லுகிறார்களே! அது உண்மைதானா?

**நடேச சாஸ்திரி:** போன புதன்கிழமை வரையில் என் வீட்டிற்கு வரவில்லை என்பதும் என்னிடம் பேசவில்லை என்பதும் உண்மைதான்.

**துரைசாமி ஐயங்கார்:** இத்தனை வருஷகாலமாகப் பேசாமலும் தங்களுடைய வீட்டிற்கு வராமலும் இருந்தவள் போன வாரத்தில் வந்து பேசினாள் என்பது சற்று ஆச்சரியமாக இருக்கவில்லையா?

**நடேச சாஸ்திரி:** தாங்கள் இன்று கேட்பதெல்லாம் எனக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. தாங்கள் இத்தனை வருஷ காலமாய் என்னை இப்பேர்ப்பட்ட கேள்விகளெல்லாம் கேட்டீர்களோ? இன்று ஏன் கேட்கிறீர்கள்? இது எனக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. மனிதருக்கு ஒரு நாளைக்கு இருக்கப்பட்ட சுபாவம் ஒரு நாளைக்கு இருப்பதில்லையே? ஒருவேளை, 'நாம்தான் கல்யாணஞ் செய்துகொள்ளப் போகிறோம்; இனி ஏன் இவரிடம் விரோதம் வைக்கவேண்டும்' என்னும் எண்ணத்துடன் என்னைச் சமாதானப்படுத்துவதற்காக வந்திருக்கலாம்.

**துரைசாமி ஐயங்கார்:** ஆனால் தங்களுக்கும் ராஜாம்பாளுக்கும் இதற்கு முன்னால் விரோதம் இருந்ததோ?

**நடேச சாஸ்திரி:** தங்களுக்குத் தெரியாதா?

**துரைசாமி ஐயங்கார்:** எனக்குத் தெரிகிறதற்கும் இப்போது தாங்கள் ஜவாப்புச் சொல்லுகிறதற்கும் வித்தியாசம் இருக்கிறது என்று அப்போதே சொன்னேன். இதுவரையில் தாங்கள் பார்த்திராத வக்கீல் ஒருவர் கேள்வி கேட்டால் எப்படித் தாங்கள் மறுமொழி சொல்லுவீர்களோ அப்படியே இப்போதும் தாங்கள் சொல்லவேண்டும்.

**நடேச சாஸ்திரி:** விரோதந்தான்.

**துரைசாமி ஐயங்கார்:** என்ன விரோதம்?

**நடேச சாஸ்திரி:** என்னைப் பார்க்கும்போதே நல்ல பாம்பைக் கண்டவள் நடுங்குவதைப்போல் நடுங்குவாள். அடிக்கடி என்னைக் குறித்துச் சாமிநாத சாஸ்திரிகளிடம் கோள் சொல்லுவாள். அதற்காக ஐந்து வருஷங்களுக்கு முன் ஒரு நாள் அவளை அடித்தேன். "பிச்சைக்காரனுக்குச் சோறு போடுவதைப்போல் உனக்கு என் வீட்டுச் சோறு போடுவதால் அல்லவா இப்படி அடித்தாய்?" என்று சொல்லி, அவள் தகப்பனார் வந்தவுடனே நான் அந்த வீட்டில் இருந்தால் தான் அங்கே இருக்க முடியாது என்றும், அதுமுதல் என் முகத்தில் விழிக்க முடியாது என்றும் சொன்னாள். சாமிநாத சாஸ்திரிகள் அது முதல் என்னைத் தம் வீட்டில் இருக்கக்கூடாதென்று திட்டப்படுத்திச் சென்னைக்கு அனுப்பிவிட்டார். இதுதான் விரோதம்.

**துரைசாமி ஐயங்கார்:** ராஜாம்பாள் இறந்துபோனதால் தங்களுக்கு விசேஷ அநுகூலங்கள் உண்டோ?

**நடேச சாஸ்திரி:** தாங்கள் கேட்கிறது எனக்குப் புரியவில்லையே?

**துரைசாமி ஐயங்கார்:** சாமிநாத சாஸ்திரி சொத்துக்காரராயிற்றே. ராஜாம்பாள் இறந்துபோனதால் அந்தச் சொத்தெல்லாம் உமக்குத்தானே சேரும்?

**நடேச சாஸ்திரி:** சாமிநாத சாஸ்திரிகளுக்கு இஷ்டமிருந்தால் கொடுப்பார்.

**துரைசாமி ஐயங்கார்:** முன்னாலேயே உயில் எழுதி வைத்திருக்கிற சங்கதி தங்களுக்குத் தெரியாதோ?

**நடேச சாஸ்திரி:** தெரியும். ஆனால் அவருக்கு இஷ்டம் இல்லாவிட்டால் அந்த உயிலை இப்போது ரத்துச் செய்துவிடலாம் அல்லவா?

**துரைசாமி ஐயங்கார்:** சரி: நேற்றுப் புதன்கிழமை ராத்திரி தாங்கள் எங்கே இருந்தீர்கள்?

**நடேச சாஸ்திரி:** ம-௱-௱-ஸ்ரீ மகாராஜா சர் இன் சால்வென்ட் கோவிந்த முதலியார் சென்னையிலுள்ள

பெரிய துரைகளுக்கு விருந்தளித்தார். அந்த விருந்துக்கு என்னையும் அழைத்திருந்ததால் நானும் போயிருந்தேன்.

**துரைசாமி ஐயங்கார்:** அங்கே எத்தனை மணிவரையில் இருந்தீர்கள்?

**நடேச சாஸ்திரி:** பத்தரை மணி வரையில் இருந்தேன்.

**துரைசாமி ஐயங்கார்:** தாங்கள் விருந்துக்குப் போன சங்கதியாவது யாருக்காவது தெரியுமா? அல்லது அதுவும் ராஜாம்பாள் தங்கள் வீட்டிற்கு வந்ததை யாரும் பார்க்கவில்லையே; அதைப்போல் யாரும் பார்க்கவில்லையா?

**நடேச சாஸ்திரி:** அங்கே போஜனத்திற்கு வந்திருந்த துரைகள் எல்லோருக்குந் தெரியும். அது போதாதென்றால் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டுகள் இருவர் பார்த்தார்கள். ஒரு மாஜிஸ்டிரேட்கூட, ''பத்தடித்து இருபத்தைந்து நிமிஷமாயிற்றே; இனி நாம் வீட்டிற்குப் போகவேண்டியதுதானே?'' என்று என்னைக் கேட்டார். தங்களுக்கு அந்த விஷயத்தில் சிறிதாவது சந்தேகம் இருந்தால் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டைக் கேட்டுக் கொள்ளலாம்.

இன்னும் கேட்கவேண்டிய கேள்விகளைச் செஷன்ஸ் கோர்ட்டில் கேட்டுக்கொள்வதாகச் சொல்லித் துரைசாமி ஐயங்கார் உட்கார்ந்தவுடனே நான்காவது சாட்சி அஸிஸ்டெண்ட் சர்ஜன் காவன்னுவைக் கூப்பிடச்சொல்லிக் கோர்ட்டார் உத்தரவு பண்ணினார்கள்.

**பாரிஸ்டர் கொக்கு துரை:** மிஸ்டர் காவன்னு! தாங்கள்தானு இறந்துபோன ராஜாம்பாளின் பிரேதத்தைச் சோதனை செய்தவர்கள்?

**காவன்னு துரை:** நான் மாத்திரஞ் சோதிக்கவில்லை. பிரேதத்தின் சமீபத்திற் போய்ப் பார்த்தவுடனே, எனக்குச் சில சந்தேகங்கள் ஏற்பட்டதால் சர்ஜன் பால் துரைக்குத் தந்தி கொடுத்து அவர் வந்ததன்பேரில் நானும் அவருமாகச் சோதனை செய்தோம்.

**பா. கொக்கு துரை:** என்ன சந்தேகம் ஏற்பட்டது?

**காவன்னு துரை:** போலீஸ் இன்ஸ்பெக்டர் மணவாள நாயுடு, கட்டாரியால் குத்தினதால் சாவு சம்பவித்திருக்கலாம் என்று சொன்னுர். நான் சமீபத்திற் போய்ப் பார்த்தவுடனே, பிரேதத்தின் உடம்பில் துப்பாக்கியாற் சுட்ட குண்டும் பாய்ந்திருக்கிறது என்று தெரியவந்ததால் மிஸ்டர் பால் துரையைக்கூட வரவழைத்தேன்.

இப்படிச் சொன்னவுடனே இன்ஸ்பெக்டர் மணவாள நாயுடு இதைத் தாம் கண்டுபிடிக்கவில்லையே என்ற கேவலம் தம்மேல் ஏற்படும் என்று, பாரிஸ்டர் கொக்கு துரையிடம் போய் ஏதோ கிசுகிசுவென்று சொன்னுர்.

**பா. கொக்கு துரை:** மிஸ்டர் காவன்னு! துப்பாக்கியால் சுட்ட காயமும் இருக்கிறது என்று நீர் மணவாள நாயுடுவுக்குத் தெரிவித்தீரா?

**காவன்னு துரை:** தெரிவிக்கவில்லை.

**பா. கொக்கு துரை:** நீர் உடனே தெரிவித்திருந்தால் இன்ஸ்பெக்டர் மணவாள நாயுடு, துப்பாக்கியால் சுடப்பட்டிருப்பதால் அந்தத் துப்பாக்கி எங்கே இருக்கிறது என்பதையும், இதைப்போலொத்த சமாசாரங்களையும் கண்டுபிடித்திருப்பார் அல்லவா! நீர் அப்படித் தெரிவிக்காததால் துப்பாக்கியை ஒளிப்பதற்கு வேண்டிய சாவகாசம் ஏற்பட்டுவிட்டதே? நீர் அப்படிச் சொல்லாமல் இருந்தது சரியல்ல என்று தங்களுக்குத் தெரியவில்லையா?

**காவன்னு துரை:** மரணம் என்ன காரணத்தால் ஏற்பட்டது என்று கண்டுபிடிக்க வேண்டியது எங்களுடைய வேலையே அல்லது மற்றவையெல்லாம் எங்களைச் சேர்ந்த வேலை அல்ல. இந்த விஷயத்தில் நாங்கள் சரியாய் நடக்கவில்லை என்று தங்களுக்குத் தோன்றினுல் மகாராஜராய் எங்களுடைய நடத்தையைக் குறித்துச் சர்ஜன் ஜெனரலுக்குத் தாங்கள் பிரியாது செய்துகொள்ளலாம். துப்பாக்கியாற் சுட்ட காயம் உடம்பில் இருக்கிறது என்று கண்டுபிடிக்க முடியாத போலீஸ் புலிக்குத் துப்பாக்கி ஒளித்த இடத்தைக் கண்டுபிடிக்க முடியுமோ? சாதாரணமாய்த் துப்பாக்கி இன்னதென்று அறியாத நாட்டுப்புறத்தான்கூடத் துப்பாக்கியால் சுட்ட காயத்தைக் கண்டுபிடித்துவிடுவானே! இவர் அந்த இடத்தில் ரத்தந் தோய்ந்த கட்டாரி கிடப்பதைக் காணவே, கட்டாரியால்

தான் மரணம் சம்பவித்திருக்கும் என்று ஆய்ந்தோய்ந்து பாராமல் தீர்மானஞ் செய்துவிட்டார்போல் இருக்கிறது.

**மணவாள நாயுடு:** உடம்பெல்லாம் நெருப்பால் கொளுத்தப்பட்டிருந்ததால் துப்பாக்கியின் காயமென்று நான் நினைக்கவில்லை.

**பா. கொக்கு துரை:** சரி; எப்படியாவது இருக்கட்டும். மரணம் என்ன காரணத்தால் ஏற்பட்டது என்றும், எத்தனை காயங்கள் உடம்பில் இருந்தன என்றும் விவரமாய்ச் சொல்லுங்கள்,

**காவன்னு துரை:** துப்பாக்கியின் காயமொன்று, கட்டாரியின் காயம் ஒன்று, ஆக இரண்டு காயங்கள் இருந்தன. இந்தக் காயங்களைத் தவிரப் பாஷாணமும் சாப்பிட்டிருக்கவேண்டும்.

**பா. கொக்கு துரை:** நீர் சொல்லுவது ஆச்சரியத்தைக் கொடுக்கிறதே! இறந்தபின் பாஷாணம் ஊற்றப்பட்டிருக்கிறதா? அல்லது உயிருடன் இருந்தபோதே பாஷாணம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ?

**காவன்னு துரை:** உயிருடன் இருந்தபோதே பாஷாணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**பா. கொக்கு துரை:** இறந்தபின் நெருப்பால் கொளுத்தினார்களா? அல்லது உயிருடன் இருந்தபோது கல்நெஞ்சர் கொளுத்தினார்களா?

**காவன்னு துரை:** இறந்த பிற்பாடுதான் கொளுத்தியிருக்கிறது.

**கோர்ட்டார்:** ஐயங்காரவர்களே, தாங்கள் ஏதாவது கேள்விகள் கேட்பதாயிருந்தால் கேட்கலாம்.

இவ்வாறு சொன்னவுடனே, ''இவரையும் விவரமாய் விசாரிக்கவேண்டும். கோவிந்தன்'' என்று எழுதிய சீட்டை, துரைசாமி ஐயங்காரிடம் பக்கத்தில் நின்று கொண்டிருந்த கிழவன் கொடுத்தான்.

**துரைசாமி ஐயங்கார்:** மிஸ்டர் காவன்னு துரையவர்களே, தாங்கள் பிரேதத்தின் உடம்பில் கட்டாரியின் குத்தாலும், துப்பாக்கியின் குண்டினாலும் ஏற்பட்ட காயங்கள் இருந்தன என்றும், இவை இரண்டைத் தவிர, பாஷாணமுங் கொடுக்கப்பட்டிருந்தது என்றும் சொல்

கிறீர்களே. இதில் ராஜாம்பாள், கட்டாரியின் காயத்தால் இறந்தாளா? துப்பாக்கியின் குண்டால் இறந்தாளா? விஷத்தால் இறந்தாளா? அல்லது மூன்றினுடைய கொடூரமுஞ் சேர்ந்து இறந்தாளா?

**காவன்ளு துரை:** மூன்றில் ஏதாவது ஒன்றே அவளைக் கொல்லப் போதுமானது.

**துரைசாமி ஐயங்கார்:** தாங்கள் சொல்லுவது எனக்கு நன்ருய்ப் புலப்படவில்லை. தயவுசெய்து சற்று விஸ்தரித்துச் சொல்லுங்கள்.

**காவன்ளு துரை:** அவளுக்குப் புதன்கிழமை ராத்திரி ஒன்பது மணி சுமாருக்கு விஷம் கொடுக்கப்பட்டிருக்கலாம். கட்டாரியால் குத்திக் கொல்லாமலும், துப்பாக்கியாற் சுடாமலும் இருந்திருந்தாற்கூட ராத்திரி ஒரு மணிக்கு அவள் விஷத்தின் கொடூரத்தால் இறந்து போயிருப்பாள். விஷம் கொடுக்கவில்லை என்றும், துப்பாக்கியால் சுடவில்லை என்றும் வைத்துக்கொண்டாலும் கட்டாரியின் குத்து மாத்திரமே அவள் பிராணன் போவதற்குப் போதுமானது. விஷமும் கட்டாரிக் குத்தும் இல்லாவிட்டாலும் துப்பாக்கியின் குண்டே கொல்வதற்குப் போதுமானது. ஆகவே மூன்றில் ஏதாவது ஒன்று இருந்தாலே மரணம் நிச்சயந்தான்.

**துரைசாமி ஐயங்கார்:** விஷம் கொடுத்ததுதான் ராத்திரி ஒன்பது மணிக்கு இருக்கலாம் என்று சொன்னீர்கள். கட்டாரியின் குத்து முன்ளுல் இருக்குமா அல்லது துப்பாக்கியால் சுட்டது முன்ளுல் இருக்குமா என்று தயவுசெய்து சொல்லுங்கள்.

**காவன்ளு துரை:** துப்பாக்கியால் சுட்டதும் கட்டாரியால் குத்தினதும் ஏககாலத்தில் இருக்கும் என்பது என் அபிப்பிராயம்.

**துரைசாமி ஐயங்கார்:** இரண்டும் ஏககாலத்தில் நடந்திருக்கும் என்று தாங்கள் சொன்னீர்களே. ஒரே மனிதன் இவ்விரண்டு வேலைகளையும் ஏககாலத்தில் செய்ய முடியுமா?

**காவன்ளு துரை:** முடியவே முடியாது. கட்டாரியால் குத்தினது பக்கத்திலிருந்து குத்தியிருக்கவேண்டும். துப்

பாக்கியாற் சுட்டது குறைந்தது ஐந்து கஜ தூரத்திற்கு அப்பாலிருந்து சுட்டிருக்கவேண்டும். ஆகையால் இரண்டு பேர் செய்ததேயொழிய ஒருவர் செய்த காரியம் அல்ல என்று திட்டமாய்ச் சொல்லலாம்.

**துரைசாமி ஐயங்கார்:** இப்போது தாங்கள் சோதனை செய்த பெண்ணின் வயது என்ன இருக்கும் என்று தோற்றுகிறது?

**காவன்னு துரை:** சுமார் பதினறு வயது இருக்கலாம் என்று எங்களுக்குத் தோற்றுகிறது.

இப்படிக் காவன்னு துரை சொன்னதும் கோர்ட்டாரும் கொக்கு துரையும் மணவாள நாயுடுவும் புன்சிரிப்பாய்ச் சிரித்தார்கள்.

கோர்ட்டார், சர்ஜன் பால் துரையையும் கூப்பிட்டு விசாரணை செய்தார்கள். அவரும் காவன்னு துரை சொன்னதுபோலவே சொன்னர். மாஜிஸ்டிரேட்டார் கேசைச் செஷன்ஸ் கோர்ட்டுக்கு விசாரணைக்காக அனுப்புவதாகவும் அதுவரையில் கைதி ஜெயிலில் இருக்கவேண்டும் என்றும் சொன்னர். வக்கீல் துரைசாமி ஐயங்கார் ஜாமீன் பேரில் விடவேண்டும் என்று பல வகையிற் பிரயத்தனஞ் செய்து கேட்டும் நீலமேக சாஸ்திரி ஜாமீன்பேரில் விட ஒப்புக்கொள்ளவில்லை.

## 10. குடுகுடுப்பைக்காரன்

**போ**லீஸ் கோர்ட்டில் விசாரணை முடிந்த மறுநாட் காலையில் குடுகுடுப்பைக்காரன் ஒருவன் லோகசுந்தரியின் வீட்டண்டை காலை ஆறு மணி சுமாருக்குப் போனன்.

**குடுகுடுப்பை:** பலுகவே, பலுகவே, மன்ச்சி வாக்கு பலுகவே; சேதி வருகுது; சேதி வருகுது; சேதி வருகுது; நல்ல சேதி வரப்போகுது, குடு குடூ, குடு குடூ, குடு குடூ; ஐயோண்ணு போறன்; பாவம்; ஐயோண்ணு போறன்; ரங்கூனில் ஐயோண்ணு சாகப்போறன்; குடு குடூ, குடு குடூ, குடு குடூ. புறப்பட்டு வரணுமுங்குறன்; வரணுமுங்குறன்; பாவி விடமாட்டேண்ணு சொல்லுகிறளே. குடு குடூ, குடு குடூ, குடு குடூ. ஆசை யிளுக்குதிங்கே,

ஆசை யிளுக்குதிங்கே, ஆசை யிளுக்குதிங்கே; மருந்து இளுக்கு தங்கே; மருந்து இளுக்கு தங்கே; மருந்து இளுக்குதங்கே ; குடு குடு, குடு குடு, குடு குடு.

இப்படிக் குடுகுடுப்பை லோகசுந்தரியின் வீட்டண்டை கூவிக்கொண்டு போகையில், லோகசுந்தரியின் வீட்டுத் தெருவில் கோலம் போட்டுக்கொண் டிருந்த சுந்தரம் என்னும் வேலைக்காரி இதைக் கேட்டுக் கோலம் போடு வதை நிறுத்திவிட்டுக் குடுகுடுப்பையைக் கூப்பிட்டுச் சமா சாரம் என்னவென்று கேட்டாள்.

குடுகுடுப்பை: ஐயோண்ணு போருன், ஐயோண்ணு போருன். ஐயோண்ணு ரங்கூனில் சாகப்போருன். பலுகவே, பலுகவே, மன்ச்சி வாக்கு பலுகவே! குடு குடு, குடு குடு, குடு குடு.

சுந்தரம்: யார் ஐயா சாகப் போருன்?

குடுகுடுப்பை: குடு குடு, குடு குடு, குடு குடு; தாயி யாருண்ணு கேக்கிருங்கோ? யாருண்ணு கேக்கிருங்கோ? யாருண்ணு கேக்கிருங்கோ? சுடுகாட்டிலிருந்து ஓடிவந்து ஐக்கம்மா யாருண்ணு சொல்லு; யாருண்ணு சொல்லு; உடனே சொல்லு; குடு குடு, குடு குடு, குடு குடு. வேணு நாயுடு, வேணு நாயுடு, வேணு நாயுடுண்ணு ஐக்கம்மா சொல்லுருங்கோ.

சுந்தரம்: ஏன் ஐயா சாகப்போகிருர்?

குடுகுடுப்பை: தாயி ஏனுண்ணு கேக்கிருங்கோ, ஏனுண்ணு கேக்கிருங்கோ, ஏனுண்ணு கேக்கிருங்கோ; ஐக்கம்மா மலையாள பகவதி, ஓம்பது கம்பளத்தாள், உடனே சொல்லு, உடனே சொல்லு; ஓடிவந்து சொல்லு. குடு குடு, குடு குடு, குடு குடு; சுந்தரம் தாயி வேணு நாயுடுவண்டை சண்டைபோட, கோவிச் சிக்கிட்டு ரங்கூன் போனுன். குடு குடு, குடு குடு, குடு குடு; ரங்கூனுக்குப் போனுலும் சுந்தரம் தாயண்டை இருக்கப் பிரியம் கூடவே போச்சு; கூடவே போச்சு; கூடவே போச்சு. குடு குடு, குடு குடு, குடு குடு. ரங்கூ னுக்குப் போனதும், மகமாயி, சொத்துக்காரி, பர்மாக் காரி வேணு நாயுடுமேல் பிரியப்பட்டாள். குடு குடு, குடு குடு, குடு குடு. சுந்தரம் தாயண்டை இருக்கப் பிரியம்.

வேணு நாயுடு பர்மாக்காரியைக் கண்ணெடுத்துக்கூடப் பார்க்கலை; கண்ணெடுத்துக்கூடப் பார்க்கலை; கண்ணெடுத்துக்கூடப் பார்க்கலை. குடு குடூ, குடு குடூ, குடு குடூ. பர்மாக்காரி மந்திரம் போட்டு மடக்கப் போரு; மந்திரம் போட்டு மடக்கப்போரு; வேணு நாயுடை மடக்கப்போரு. குடு குடூ, குடு குடூ; குடு குடூ. இரண்டு மந்திரத்திலே மாட்டி மடியப்போருன்; மந்திரத்திலே மாட்டி மடியப்போருன்; மந்திரத்திலே மாட்டி மடியப்போருன். குடு குடூ, குடு குடூ, குடு குடூ. இரண்டாட்டில் ஓராடு முளிக்கிறதுபோல் முளிக்கிருன்; திசைகெட்டு முளிக்கிருன்; திசைகெட்டு முளிக்கிருன். குடு குடூ, குடு குடூ, குடு குடூ. பலுகவே, பலுகவே, மன்ச்சி வாக்கு பலுகவே; ஜக்கம்மா, பலுகவே; ஐயோண்ணு சாகப்போருன், சாகப்போருன், ஐயோண்ணு சாகப்போருன். குடு குடூ, குடு குடூ, குடு குடூ.

**சுந்தரம்:** அந்த முண்டை பர்மாக்காரியின் மந்திர வலையிலிருந்து நீக்க வழியில்லையா?

**குடுகுடுப்பை:** குடு குடூ, குடு குடூ, குடு குடூ; பலுகவே, பலுகவே; மன்ச்சி வாக்கு பலுகவே; தாயி! பர்மாக்காரி வலையிலிருந்து நீக்கணு முங்கிருங்க, நீக்கணு முங்கிருங்க, நீக்கணு முங்கிருங்க; குடு குடூ, குடு குடூ, குடு குடூ; மன்ச்சி வாக்கு பலுகவே, மன்ச்சி வாக்கு பலுகவே; ஜக்கம்மா பலுகவே, பகவதி பலுகவே. பர்மாக்காரி ரொம்ப கெட்டிக்காரிண்ணு ஜக்கம்மா சொல்லுருங்கோ; ஜக்கம்மா சொல்லுருங்கோ; ஜக்கம்மா சொல்லுருங்கோ; குடுகுடூ, குடு குடூ, குடு குடூ; பலுகவே, பலுகவே, மன்ச்சி வாக்கு பலுகவே.

**சுந்தரம்:** பர்மாக்காரி மந்திரத்திலே கெட்டிக்காரிண்ணு, உனக்கு அதுக்குமேலே மந்திரம் போட்டு அந்தப் பாதாளி முண்டை மந்திரத்திலிருந்து நீக்கி வேணு நாயுடை இங்கே வரச்சொல்ல முடியாதோ?

**குடுகுடுப்பை:** குடு குடூ, குடு குடூ, குடு குடூ; பர்மாக்காரி மந்திரத்திலே ரொம்ப கெட்டிக்காரி, ரொம்ப கெட்டிக்காரி, ரொம்ப கெட்டிக்காரி; குடு குடூ, குடு குடூ, குடு குடூ. இப்பத்தான் மந்திரம்போட ஆரம்

பித்ததனுலே, குடு குடூ, குடு குடூ, குடு குடூ; இப்போதே உடனே பதில் மந்திரம் போட்டாத்தான்; குடு குடூ, குடு குடூ, குடு குடூ; வேணு நாயுடு தப்புவாணுண்ணு பகவதி சொல்லுருங்க; குடு குடூ, குடு குடூ, குடு குடூ. இல்லாவிட்டா; குடு குடூ, குடு குடூ, குடு குடூ; வேணு நாயுடைப் பர்மா மண்ணுக்கு; குடு குடூ, குடு குடூ, குடு குடூ: இரை கொடுக்க வேண்டியது தாணுண்ணு, குடு குடூ; குடு குடூ, ஐக்கம்மா சொல்ருங்க; ஐக்கம்மா சொல்ருங்க, குடு குடூ, குடு குடூ, குடு குடூ.

சுந்தரம்: ஐயா! எப்படியாவது இப்போதே பதில் மந்திரம் போட்டு வேணுநாயுடை இங்கே கொண்டுவந்து சேர்க்கும்படியான வழி செய். அவர் சௌக்கியமாய் வந்து சேர்ந்தாருண்ணு உனக்குப் பத்து ரூபாய் வேண்டுமுண்ணு லும் கொடுத்துப்போடுறேன். அந்தப் பர்மாக்காரி முண்டையை அப்படியே மந்திரத்திலே கொண்ணுபோட் டையிண்ணு இருபது ரூபாண்ணுலும் கொடுக்கிறேன். எப்புடிண்ணுலும் வேணுநாயுடு ஜல்தியாய் இங்கே வந்து சேரும்படி செய்.

குடுகுடுப்பை: குடு குடூ, குடு குடூ, குடு குடூ, சல் மந்திரக்காளி, மாயக்காளி, யாருக்கும் அடங்காக் காளி ஓடி வா; மலையாள பகவதி ஓடி வா; ஐக்கம்மா ஓடி வா; தாயி வேணுநாயுடைக் கொண்டுவரச் சொல்ருங்கோ; குடு குடூ, குடு குடூ, குடு குடூ; ஐக்கம்மா, இப்பவே கால்நாழிகைகூடத் தாமதஞ் செய்யாமே குடு குடூ, குடு குடூ, குடு குடூ; மந்திரம் போட்டாத்தான் முடியு முண்ணு சொல்ருங்க. குடு குடூ, குடு குடூ, குடு குடூ. மன்ச்சி வாக்கு பலுகவே, ஐக்கம்மா பலுகவே, பலுகவே, பலுகவே; மன்ச்சி வாக்கு பலுகவே.

சுந்தரம்: பின்னே உடனே மந்திரம் போடாமே எங்கிட்ட சொல்லிக்கிண் டிருக்கியே! உடனே மந்திரம் போடணுமின்னியே.

குடுகுடுப்பை: மந்திரம் உடனே போடணும்; இடம் இல்லே; ஓர் இடத்திலே உக்காந்து மந்திரம் போட்டா ரெண்டு மணி நேரத்துக்கு அங்கே யாரும் வரக்கூடா துண்ணு ஐக்கம்மா சொல்லுருங்க. உடனே மந்திரம்

போடணுமிண்ணுஞ் சொல்லுறுங்க. ரெண்டு மணி நேரத்துக்கு ஆள் யாரும் வராத அறை ஒண்ணு இப்பவே காமிச்சையிண்ணு வேணு நாயுடை இண்ணைக்கி எட்டு நாளுக்குள்ளே கொண்ணுந்து விட்டுடறேன். அந்தப் பர்மாக்காரியை வேணுமுண்ணுலுங் கொண்ணுடறேன். எனக்கு நீ ஒரு காசுகூட இப்போ குடுக்கவேணும். அவுங்க வந்து சௌக்கியமாச் சேர்ந்த பிற்பாடு நீங்க சொன்ன பணங் குடுங்க. இப்பவே யாரும் வராத அறை ஒண்ணு மட்டும் ரெண்டு மணி நேரத்துக்குக் கொடுங்க. அப்போ பாருங்க, ஐக்கம்மா கெட்டிக்காரத்தனத்தை.

**சுந்தரம்:** எங்க அம்மா படுக்கிற அறைக்குத்தான் யாரும் வரமாட்டாங்க. அம்மா வெளியே போயிருக்கிறுங்க. வரப் பத்து மணி ஆகும். அதுக்குள்ளே மந்திரம் போட்டுட்டு வருவதாயிருந்தா அந்த அறையைக் கொடுக்கிறேன். எங்கம்மா கிட்டேண்ணுலும் வேறே யார் கிட்டேண்ணுலும் அந்த அறைக்கு உன்னே உட்டேண்ணு சொல்லாதே.

**குடுகுடுப்பை:** ஜல்தியாய்க் கொண்டுபோய் விடு. நேரம் ஆச்சிண்ணு, பாவி பர்மாக்காரி மந்திரம் ஏறிடும். ஏறிட்டா ஆராலேயும் முடியாது.

இப்படிச் சொன்ன உடனே சுந்தரம் வழியிலிருந்த ஆட்களையெல்லாம் போக்குக் காட்டி வேறு இடங்களுக்குப் போகச் சொல்லிவிட்டு, குடுகுடுப்பையை அழைத்துக்கொண்டுபோய் லோகசுந்தரி படுக்கும் அறைக்குள் விட்டுவிட்டுக் கதவை வெளியே தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு தூரப்போகாமல் அங்கேயே சுற்றிக் கொண்டு, அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் பார்த்துக் கொண்டிருந்தாள். லோகசுந்தரியின் அறையில் போட்டு மூடப்பட்டவுடனே குடுகுடுப்பை வேஷம் போட்டுக் கொண்டு வந்த துப்பறியும் கோவிந்தன் இன்னும் இரண்டு மணி நேரத்துக்குள், தான் தேட வேண்டிய இடங்களையெல்லாந் தேடி, கண்டுபிடிக்க வேண்டிய சமாசாரங்களைக் கண்டுபிடித்துவிட வேண்டுமே என்ற எண்ணத்துடன் அங்கே யாரும் வராதபடி உள் தாழ்ப்பாளைப் போட்டுவிட்டுக் குடுகுடுப்பைப் பைக்குள் தயாராய்க் கொண்டுவந்திருந்த சாவிக்கட்டுகளை எடுத்து ஒவ்வொரு

பெட்டியாய்த் திறந்து பார்த்தான். தான் நாடிவந்த வஸ்துக்களில் ஒன்றுவது அகப்படாததால் அதிக வருத்தத்துடன், வீணே திரும்பிப் போகவேண்டியதுதான் என்று எண்ணிக்கொண்டு மறுபடியும் அங்கும் இங்கும் அதிகக் கூர்மையாய்ப் பார்த்தான்.

அப்போது ஓர் இடத்தில்மாத்திரம் சுவரில் வைத்துக் கட்டியிருந்த செமன்டு ஓடுகள் சற்று வித்தியாசப்பட்டிருந்ததால் அவ்விடத்தில் ரகசியமான ஓர் அறை இருக்கலாமென்று எண்ணி அந்த இடத்தைத் தட்டிப் பார்த்தான். பள்ளமிருந்தால் எப்படிச் சத்தங் கேட்குமோ அப்படிச் சத்தம் கேட்கவே அதைத் திறப்பதற்கு வழி தெரியாமல் சுமார் அரை மணிநேரம் வரையில் தன்னுலான சாமர்த்தியமெல்லாஞ் செய்து பார்த்தும் முடியவில்லை. அப்பால் ஒரு பக்கத்தைப் பிடித்து அமுக்கவே அந்தச் சூக்ஷ்ம அறை செமன்டு ஓடுகளோடு திறந்துவிட்டது. அந்த அறைக்குள் யானைத்தந்தத்தாற் செய்து தங்கப் பிடிகள் போட்டிருந்த பெட்டி ஒன்று இருந்தது. அதை எடுத்து வெளியே வைத்து அதிக சூக்ஷ்மமாய்த் திறந்த உடனே பெட்டியினுள்ளே தங்கத்தாற் செய்து இடையிடையே நவரத்தினங்கள் பதித்துள்ள சட்டத்தில் கோபாலனுடைய படம் போட்டு மேலே இருந்தது. அதை எடுத்துக் கீழே வைத்துவிட்டு அப்பால் அந்தப் பெட்டி பூராவுந் தேடியும் ஒன்றும் அகப்படவில்லை. பெட்டியின் வெளிப்பக்கத்து உயரத்தைவிட உட்பக்கத்து உயரம் குறைவாயிருந்ததால் அதிலும் சூக்ஷ்ம அறை இருக்கலாமென்று நினைத்து அதிகக் கஷ்டப்பட்டு அதையுங் கண்டுபிடித்து உள்ளே பார்க்கையில் ராஜாம்பாள் கோபாலனுக்கு எழுதி, கோபாலன் வீட்டிலிருந்து காணுமற்போன கடிதம் அகப்பட்டது. அப்பால் பார்க்கையில் நடேசனிடமிருந்து லோகசுந்தரிக்கு இராஜாம்பாள் கல்யாணத்திற்குப் பதினுலு நாளைக்கு முன் வந்த தந்தி அகப்பட்டது:

"நீ தந்திகொடுத்த பிரகாரம் இன்று ராத்திரிப் பத்துமணிக்கு உன்னைச் சந்திக்கிறேன்.

நடேசன்."

என்று எழுதியிருந்தது. அதற்கப்பால் தேடுகையில் இராஜாம்பாளின் கல்யாணத்திற்கு மூன்று நாளைக்கு

முன்னால் நடேசனிடமிருந்து லோகசுந்தரிக்கு வந்த கடிதம் ஒன்று அகப்பட்டது. அதில் பின்வருமாறு எழுதியிருந்தது.

"எனதன்பிற் சிறந்த, ஆசைநிறைந்த, இன்பம் விளைந்த, சொந்தம் மிகுந்த அரிய கண்மணியாகிய லோகசுந்தரத்திற்கு; இரவிலும் பகலிலும், கனவிலும் நினைவிலும் சதா உன்னையே நினைத்துக்கொண்டிருக்கும் உன் சொந்த நடேசன் எழுதிக்கொள்வது என்னவென்றால், நான் பத்துத் தினங்களுக்கு முன்னால் காஞ்சீபுரம் வந்தபோது நீ சொல்லியபடி நடத்துவதற்காக வேண்டிய பிரயத்தனங்களெல்லாஞ் செய்துவிட்டேன். மேலும் கல்யாணத்திற்கு முந்தின நாள் அதாவது புதன்கிழமை ராத்திரி, பத்தரைமணி வரையிலும் ஒரு விருந்துக்கு வருவதாகச் சம்மதித்திருக்கிறேன். ஏனென்றால் விருந்துக்கு அநேக பிரபுக்கள் வருவார்கள். அன்று ராத்திரி நான் எங்கே இருந்தேனென்று ஒருகால் சந்தேகம் வந்தால் அவர்களெல்லாஞ் சாட்சி சொல்வார்களென்று அப்படித் தீர்மானித்தேன். பத்தரை மணிக்கு மோட்டார் வண்டி ஏறினால் குறிப்பிட்ட நேரம் வந்து சேர்ந்துவிடுகிறேன். இனி இந்த விஷயத்தைக் குறித்துக் கிஞ்சித்தாவது நீ சஞ்சலப்பட வேண்டியதில்லை. இக் கடிதத்தைப் படித்தபின் பரிகரித்துவிடு.

இப்படிக்கு உனது சொந்த நடேசன்."

குடுகுடுப்பை சொல்லிய இரண்டு மணி நேரத்திற்கு இன்னும் ஐந்து நிமிஷங்களே இருந்ததால் இந்த மூன்று கடிதங்களை மாத்திரம் எடுத்துக்கொண்டு மற்றவைகளையெல்லாம் முன்னால் இருந்தபடியே வைத்து, பெட்டியை மூடிச் சூக்ஷ்ம அறைக்குள் வைத்து அதையும் மூடிவிட்டு, உள்ளே போட்டிருந்த தாழ்ப்பாளைத் திறந்துவிட்டு, மந்திரம் செய்பவன் உட்கார்ந்திருப்பதைப்போல் கோவிந்தன் உட்கார்ந்திருந்தான். அதற்குள் சரியாய் இரண்டு மணி நேரம் ஆகிவிடவே சுந்தரம் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தாள். அப்போதுதான் மந்திரஞ் செய்வதை விட்டு எழுந்திருப்பவன்போல எழுந்திருந்த குடுகுடுப்பை,

வேண்டிய மந்திரம் போட்டுவிட்டதாகவும் இனிப் பாதாளி பர்மாக்காரி மந்திரம் ஏருவிட்டாலும் வேணு நாயுடு உடம்பு கொஞ்சம் அசௌக்கியமாக இருந்துதான் எழுந்திருப்பாரென்றும் சொல்லி, இனும் வாங்குவதற்கு அன்றைக்குப் பதினைந்தாம் நாள் வருவதாகச் சொல்லி விட்டுப் புறப்பட்டு வெளியே வந்து, ''ஜக்கம்மா பலுகவே, மன்ச்சி வாக்கு பலுகவே, பலுகவே, குடு குடூ, குடு குடூ, குடு குடு'' என்று குடுகுடுப்பையை அடித்துக்கொண்டே போனான்.

அன்று மத்தியான்னம் கோவிந்தன், வக்கீல் துரைசாமி ஐயங்காருடன் போய், சாமிநாத சாஸ்திரிகளைக் கண்டு, முன்னால் எழுதிவைத்த உயிலை உடனே ரத்துச்செய்து போடவேண்டுமென்றும் இல்லாவிட்டால் சாஸ்திரிகளின் பிராணனுக்கே ஒருவேளை அபாயம் வரக்கூடுமென்றும் சொல்லி அந்த உயிலை ரத்துச் செய்துவிட்டார்கள். உயில் ரத்துச் செய்த சமாசாரத்தைத் துரைசாமி ஐயங்காரவர்களே நடேசனிடம் எப்படிச் சொல்ல வேண்டுமோ அப்படிப் பக்குவமாய்ச் சொல்லிவிடுவதாகச் சொன்னார். கோவிந்தன் சாமிநாத சாஸ்திரிகளிடம் தமக்குக் காஞ்சீ புரத்தில் ஆகவேண்டிய வேலை ஆகிவிட்டதென்றும், இனித் தாம் செய்யவேண்டிய வேலையெல்லாம் சென்னையில் இருப்பதால் அங்கே செல்லவேண்டுமென்றும் சொன்னார். ''இதுவரையில் கோபாலனுக்கு அனுகூலமாகிய சாட்சியங்கள் ஏதாவது கண்டுபிடித்தாயா?'' என்று சாஸ்திரிகள் கேட்டார்.

**கோவிந்தன்:** நன்றாய்த் தெரியாமல் யாருக்கும் நான் ஒன்றும் சொல்வதில்லை என்பது தங்களுக்கு நன்றாய்த் தெரியுமே. செஷன்ஸ் கோர்ட்டில் கேஸ் வரும் வரையில் நான் உயிருடன் இருந்தால் கட்டாயமாய்க் கோபாலன் குற்றவாளி அல்லவென்று ருஜுப்படுத்துவ தன்றியில் வாஸ்தவமான குற்றவாளிகளையுங் கண்டு பிடித்து விடுகிறேன். இனி இந்த விஷயத்தில் தாங்கள் கொஞ்சமாவது கவலை வைக்கவேண்டாம்.

இவ்வாறு சொல்லிக் கோவிந்தனும் துரைசாமி ஐயங்காரும் சாமிநாத சாஸ்திரிகளிடம் விடைபெற்றுச் சென்னைக்குச் சென்றார்கள்.

# 11. மோகினி

செஷன்ஸ் கோர்ட்டில் கோபாலனுடைய வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டுமென்று தீர்மானித்த மூன்றும் நாள், லோகசுந்தரி உயர்ந்த ஆடையாபரணங்களை அணிந்துகொண்டு கோபாலனை அடைத்திருக்கும் இடத்திற்குப் போய்க் காவலிருக்கும் சேவகர்களுக்குப் பத்து ரூபாய் கொடுத்து உள்ளே போய்க் கோபாலனைக் கண்டு, அதிக விசனப்பட்டவள்போல் அபிநயித்து அழுது கொண்டிருந்தாள். சூது சற்றும் அறியாத கோபாலன் அவள் வாஸ்தவமாகவே வருத்தப்படுகிருள் என்று எண்ணி அவளைச் சமாதானப்படுத்தப் பின்வருமாறு பேசினுன்:

**கோபாலன் :** லோகசுந்தரி, நீ இவ்விடத்திற்கு வந்ததை யாராவது பார்த்தால் உன்னை ஏளனம் செய்யமாட்டார்களா? பூர்வ ஜன்மத்தில் நான் பாவம் செய்திருப்பதால்தான் இந்த ஜன்மத்தில் கொலை செய்தேனென்று அநியாயமாய்க் குற்றஞ் சாட்டப்பட்டுச் சிறையில் அடைபட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட இடத்திற்கு உன்னைப் போல் ஒத்தவர் வருவது தகாதே.

**லோகசுந்தரி :** கோபாலா, இத்தனை வருஷ காலமாய் நீ என்னேடு பழகியும் இன்னும் என்னுடைய சுபாவம் இப்பேர்ப்பட்டதென்று அறியவில்லைபோல் இருக்கிறது. அபாயம் நேரிட்ட காலத்திலும், யாரும் ஒத்தாசை செய்யாத காலத்திலும் யாரொருவர் அக் கஷ்டங்கள் தங்களுக்கு நேரிட்டதாக எண்ணி ஒத்தாசை செய்ய வருகிருர்களோ அவர்களே வாஸ்தவமாகிய இஷ்டரென்பதை நீ மறந்து போனுய்போல் இருக்கிறது. உன்னுடைய பெருந்தன்மையையும், குணுநுபவங்களையும் நன்கறிந்த நான், நீ ராஜாம்பாளைக் கொலை செய்யவில்லையென்று சத்தியங்கூடப் பண்ணுவேன்.

**கோபாலன் :** லோகசுந்தரி, இரண்டொருவரைத் தவிர இவ்வூரில் உள்ளவர்களெல்லாம் நான்தான் ராஜாம்பாளைக் கொலை செய்தேனென்று சொல்லும் போது, நான் கொலை செய்யவில்லை என்று நீ உறுதியாகச் சொல்வதற்காக உனக்கு வந்தனமளிக்கிறேன்.

லோகசுந்தரி : கோபாலா ! அந்நியர்களிடத்திற் பேசுவதைப்போல் என்னிடம் பேசுகிருயே தவிர சிறு குழந்தைகள் முதலே நம் இருவருக்கும் உடல் இரண்டும் உயிர் ஒன்றுமாக இருந்ததாகப் பாவித்து நீ பேச வில்லையே. உனது வந்தனத்தை ஏற்பதற்காகவா யார் என்ன சொன்னபோதிலும் பரவாயில்லை என்பதாக உன்னைப் பார்க்க இங்கே வந்தேன்? இனிமேலாவது, 'உனக்கு வந்தனமளிக்கிறேன்' என்ருவது இதைப்போ லொத்த அந்நியர்களிடம் பேசும் உபசார வார்த்தைகளை யாவது நீ என்னிடம் பேசாமல் இருக்கவேண்டுமென்று உன்னை மன்ருடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். உன் வாயி லிருந்து அப்பேர்ப்பட்ட வார்த்தைகள் வருவதானது என் செவியில் நாராசத்தைக் காய்ச்சி ஊற்றுவதைப்போல் இருக்கிறதால் தயவுசெய்து இனிமேல் அத்தகைய வார்த் தைகளைச் சொல்லாதே. உன்னை அக்கிரமமாக இவ்விடத் தில் அடைத்திருக்கிருர்களே! இதிலிருந்து தப்புவதற்கு ஏற்பாடு செய்திருக்கிருயா?

கோபாலன் : வக்கீல் துரைசாமி ஐயங்காரவர்கள், இப்பேர்ப்பட்ட சங்கதிகளைக் கண்டுபிடிப்பதில் மிகவும் தேர்ந்த துப்பறியும் கோவிந்தன் என்பவரைச் சென்னையி லிருந்து அழைத்துக்கொண்டு வந்தார். நான் இதுவரை யிலும் அவருடைய சாமர்த்தியத்தை நேரில் அறியாவிட் டாலும் அவரைப் பார்த்தது முதல் வாஸ்தவத்திற் கொலைசெய்தவர்களை அவர் கட்டாயமாய்க் கண்டுபிடித்து விடுவாரென்ற எண்ணம்மட்டும் எனக்குப் பூராவாய் இருக்கிறது. அவர் கண்டுபிடிக்கும் வரையில் இந்தப் பாழும் இடத்தில் இருந்து தொலையவேண்டியதுதான்.

லோகசுந்தரி : கோபாலா ! உனக்கென்ன புத்தி வரவர இப்படியாகிறது? சாமிநாத சாஸ்திரிகளும் துரை சாமி ஐயங்காரவர்களும் நானுந்தான் நீ ராஜாம்பாளைக் கொலை செய்யவில்லையென்று நம்புகிறேரும். மற்ற யாரைக் கேட்டாலும் என்ன சொல்லுகிருர்கள் ? கட்டாயமாய் நீ கொலை செய்திருப்பாயென்றுதான் சொல்லுகிருர்கள். அவர்கள் அப்படிச் சொல்வதற்குக் காரணம் என்ன? உன்னுடைய கழுத்துக்குச் சரியாய்க் கயிறு கொண்டுவரு வதற்கு எவ்வளவு சாட்சியங்கள் தேவையோ, அவ்வளவு

சாட்சியங்களையும் மணவாள நாயுடு தயார் செய்திருக்கிறான். அப்படி இருக்க, சென்னையிலிருந்து வந்திருக்கும் கோவிந்தன் எவ்வளவு வல்லமைசாலியாக இருந்தபோதிலும், அவனாற்கூட நீ குற்றவாளி அல்லவென்றும், குற்றஞ் செய்தவர்கள் இன்னார் என்றும், கண்டுபிடிக்க முடியாதென்று நான் நினைக்கிறேன். கடைசி நிமிஷம் வரைக்கும், 'இதோ கண்டுபிடிக்கிறேன், அதோ கண்டுபிடிக்கிறேன்' என்று சொல்லிவிட்டு, அதுவரையிலும், அகப்பட்ட வரையில் அதற்கும் இதற்கும் பணம் வேண்டுமென்று சுற்றிக்கொண்டு போவது அவர்களுடைய வேலையாதலால் நீ அவர்களை நம்பி அநியாயமாய் விலையுயர்ந்த உன் பிராணனை விடுவது அடாத காரியம். நீ அப்படிச் செய்வது கொஞ்சமாவது சரியல்ல.

**கோபாலன்:** ஆனால் என்ன செய்யவேண்டும் என்கிறாய்?

**லோகசுந்தரி:** என்னிடம் விசேஷ திரவியம் இருப்பது நீ நன்கு உணர்ந்த விஷயம். பதினாயிரம் ரூபாய் செலவழித்தேனாகில் உனக்குக் காவலிருக்கும் போலீஸ்காரர் ஐந்து பேரும் உன்னை விட்டுவிடுவார்கள். அப்பால் நாம் இருவரும் மாறு வேஷம் பூண்டு அந்நிய நாடுகளுக்குப் போய் வேறே பேர் வைத்துக்கொண்டு சுகமாயிருக்கலாம்.

**கோபாலன்:** நான் குற்றவாளி அல்லவென்று ருஜுவாவதற்கு முன்னால் நான் ஓடிப்போனால், வாஸ்தவமாகவே நான்தான் குற்றஞ் செய்தேனென்று ஏற்படாதோ? மேலும் என் உயிருக்கு உயிராகிய ராஜாம்பாள் இறந்துபோன பிற்பாடு நான் உயிர் வைத்திருப்பதில் என்ன உபயோகம்? உயிருடன் இருப்பதைவிட இறப்பதே நல்லது. ராஜாம்பாளைக் கொலைசெய்தவர்களைக் கண்டுபிடித்து நான் குற்றவாளி யல்லவென்று தீர்மானமான பிறகு, இறந்துபோக வேண்டுமென்றே எண்ணியிருக்கிறேன்.

**லோகசுந்தரி:** கோபாலா, கஷ்டத்திற்குமேல் கஷ்டம்வரவே உன் புத்தி சிதறிப் போய்விட்டதுபோல் இருக்கிறது. ராஜாம்பாள் இறந்துபோனதால் நானும் இறந்துபோகிறேன் என்கிறாயே? இப்படிப் பேசுவது புத்திசாலியாகிய உனக்கு அழகா? நல்லது; ராஜாம்

ளாள்பேரில் இவ்வளவு பிரியம் வைத்திருந்தாயே! அவள் ஏதாவது அதை நினைத்தாளா? அன்று கோர்ட்டில் நடேசன் சொன்ன வார்த்தைகளை நீ கவனிக்கவில்லை போல் இருக்கிறது. எவ்வளவுக்கு எவ்வளவு உன்னை நல்லவ னென்று ஜனங்கள் நினைக்கிருர்களோ அவ்வளவுக்கு அவ் வளவு நீ கொடியவனென்றும் அதைக் கண்டறிந்த பிற் பாடுதான் நீலமேக சாஸ்திரிகளைக் கல்யாணஞ் செய்யத் தான் ஒப்புக்கொண்டதாகவும் ராஜாம்பாள் சொன்ன தாக நடேசன் சொல்லவில்லையா? உன் குணத்தையே அறியாத விசுவாச காதகியாகிய அவளைக் குறித்து நீ கனவிலும் நினைக்கலாமோ? உன் நல்ல குணத்தினுல் அவள் எப்பேர்ப்பட்டவளென்பதை நீ இதுவரையில் அறி யாமல் இருந்தாய். அன்று நடேசன் சொன்னதைக் கேட்ட பிற்பாடுகூட இன்னும் நீ அவளை நினைக்க லாமோ? நீலமேக சாஸ்திரிகளைக் கல்யாணஞ் செய்து கொள்ளாதவளாயிருந்தால் அவரை இப்படிச் செலவு செய்யச் சொல்லுவாளோ? உன்னைக் கடைசி நேரத்தில் கல்யாணஞ் செய்துகொள்ளுகிறேன் என்றதைப்போல் இன்னும் எத்தனை பேரை இப்படி ஏமாற்றிஞளோ தெரிய வில்லை. டாக்டர் காவன்ஞ துரையவர்கள் கொடுத்த வாக்குமூலத்தால் குறைந்தது அவளுக்கு மூன்று விரோதி கள் இருந்ததாக ஏற்படுகிறது. ஆகையால் நீலமேக சாஸ்திரிகளையும் உன்னையும் தவிர இன்னும் அவள் மூன்று பேரை ஏமாற்றியிருப்பதாகத் தெரிகிறது. இப்படி ஐந்து பேரை மோசம் செய்தவளாகிய ஜகப்புரட்டு மோசக்காரியைக் குறித்து உன்னைத் தவிர ஒரு பைத்தியக் காரன்கூட விசனப்படமாட்டான். அப்பேர்ப்பட்ட கொடியவளுடைய மாய வலையிலிருந்து உன்னை நீக்கினதற் காக நீ கடவுளைப் பிரார்த்திக்கவேண்டுமே தவிர விசனப் படலாமோ?

கோபாலன்: லோகசுந்தரி, அந்த மட்டோடு நிறுத்து. இனி என் ஆசைக் கண்மணியாகிய ராஜாம் பாளைக் குறித்துக் கெடுதலாக இன்னொரு வார்த்தை நீ சொல்லுவாயாகில் நான் என்ன செய்வேனென்று எனக்கே தெரியாது. ஒருகால் வாஸ்தவமாகவே கொலை பாதகனுலும் ஆய்விடுவேன்போல் இருக்கிறது. ஆகை

யால் அந்தப் பேச்சைத் தவிர வேறே பேச்சிருந்தால் பேசு. இல்லாவிட்டால் இப்போதே எழுந்து போய்விடு. என்னைக் கொலைபாதகனுக்காதே! உண்மை என்பதையே ஒரு நாளும் அறியாத குடிகேடனுகிய நடேசனுடைய வார்த்தையை நம்பி என்னை ராஜாம்பாள் பழித்ததாக நீயும் தீர்மானஞ் செய்துவிட்டாய்போல் இருக்கிறது. ராஜாம்பாள் நேரில் வந்து என்னைத் திட்டினலும் அப்போதுகூட ஏதாவது காரணம் பற்றித்தான் அவள் அப்படிப் பேசியிருப்பாளென்றும், வாஸ்தவமாக அவள் அப்படி ஒரு நாளும் சொல்லமாட்டாளென்றுந்தான் நான் நினைப்பேன். ஐந்து பேரை ஏமாற்றிய அவள் என்னையும் ஏமாற்றுவாள் என்ருயே! நீலமேக சாஸ்திரிகள் அவளுடைய தகப்பனுரை இம்சைப்படுத்தியதற்காக அவரை அவமானப்படுத்த வேண்டுமென்று அப்படியெல்லாம் செய்தாளே தவிர, அவரைத் தவிர, ஓர் எறும்பைக்கூட இதுவரையில் அவள் ஹிம்சித்தறியாள்.

**லோகசுந்தரி:** அவள் மானிடப் பிறவி அல்லவென்றும், தெய்வப் பிறப்புத்தான் என்றுமே வைத்துக்கொள்ளுவோம். அவள் இறந்து போய்விட்டதால், இனி அந்தச் செத்த பேச்சைப் பேசுவதால் ஏதாவது உபகாரமுண்டோ? மேல் நடக்கவேண்டிய காரியங்களை யோசனை செய்யாமல் வீண்பேச்சுப் பேசுவதனுல் வரும் லாபம் என்ன?

**கோபாலன்:** ராஜாம்பாளைக் கொன்றவர்கள் இன்னுர் என்று அறியுமுன் நான் வேறு யோசனை செய்யவே மாட்டேன்.

**லோகசுந்தரி:** சரி, நீ கொலை செய்யவில்லையென்றும், வேருெருவர் கொலை செய்ததாகவும் ருஜுவாகிவிட்டதென்றே வைத்துக்கொள்வோம்; அப்பால் நடப்பது என்ன?

**கோபாலன்:** நடப்பதென்ன? பிராணனை விடவேண்டியதுதான்.

**லோகசுந்தரி:** இப்போது வாஸ்தவமாக உனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதென்று நிச்சயமாகிவிட்டது. மாட்சிமை தங்கிய ஆல்பர்ட் விக்டர் இளவரசர் இறந்தபோதும் எவரும் அவர் கூட இறக்கவில்லையே! பூலோகந்

தோன்றி இதுவரையில் எத்தனை அரசர்கள் இறந்திருக்கிறார்கள்? இனி எத்தனை அரசர்கள் இறக்கப் போகிறார்கள்? அப்படியெல்லாம் இருக்க இறந்துபோன ராஜாம்பாளைக் குறித்து நீ துக்கிப்பதில் பயன் என்ன?

**கோபாலன்:** லோகசுந்தரி, 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்பதைப் போல் ராணிக்கு ராணியின் பிள்ளை சிலாக்கியமானால் அன்றன்றைச் சாப்பாட்டிற்குக்கூடக் கதியில்லாதவர்களுக்கும் அவர்களுடைய பிள்ளைகள் சிலாக்கியந்தான். இனி ராஜாம்பாளைப் போல் நற்குண நற்செய்கைகளையும் ரூபலாவண்யத்தையுமுடைய பெண் அகப்படுவது துர்லபமாகையால் என் பிராணனை வைத்துக்கொண்டிருப்பதில் பிரயோஜனம் இல்லை.

**லோகசுந்தரி:** கோபாலா, போன முயல் பெரிய முயல் என்று சொல்வது சகஜந்தான். வாஸ்தவமாகவே ராஜாம்பாள் சிலாக்கியமான பெண்ணென்றே வைத்துக் கொள்வோம். இறந்துபோனவள் மறுபடியும் எழுந்து வரப் போகிறதில்லையே! அப்படி யிருக்க அவளைக் குறித்து இனி ஏன் நினைக்கிறாய்? அவள் இறந்துபோனதால் நானும் இறந்துபோகிறேன் என்கிறாயே. தற்கொலை செய்துகொள்வது மகா பாவமென்று வேதங்கள் கூறவில்லையா? சகல சாஸ்திர விற்பன்னனாகிய நீ இப்படிப் பேசுவது அதிக வருத்தத்தைக் கொடுக்கிறது.

**கோபாலன்:** வாஸ்தவந்தான்; தற்கொலை புரிவது பாவந்தான். நான் இறந்துபோவதே சிலாக்கியமென்று சொன்னதில் அர்த்தம் என்னவென்றால், இல்லறத்திலிருந்து இறந்துபோகிறேன் என்றேன். அதாவது சந்நியாசியாகிறேன் என்றேனே தவிரத் தற்கொலை செய்து கொள்ளுகிறேனென்று சொல்லவில்லை.

**லோகசுந்தரி:** வயிற்றுச் சோற்றுக்கு வழியில்லாதவனும் திக்கற்றவனும் சர்க்காருக்கு விரோதமாய் நடந்து அதனால் தன் ரூபத்தை மாற்றி வேறு ரூபமாகக் காட்ட வேண்டுமென்று மாறு வேஷம் பூண்டு அலைகிறவனும், தன் பெண்சாதியின் துர்க்குணத்தைக் கண்டு அதனால் வெறுப்படைந்து வேஷம் போட்டுக்கொண்டு திரிகிறவ

னும் இன்னும் வேறுவிதமாகத் திருப்தி அடையாதவர் களும் சந்நியாசிகளாகிறது இப்போதைய வழக்கமா யிருக்கிறது. எவன் ஒருவன் பரப்பிரம்ம சொருபமா யிருக்கும் சாட்சாத் ஜகதீசனுடைய பாதாரவிந்தங் களுக்குப் பாத்திரனுக வேண்டுமென்னும் எண்ணத்துடன் திரிகரண சுத்தியாய், இல்லறத்தைத் துறந்து சந்நியாசம் பெற்றுக்கொண்டு ஒரு வேளைச் சாப்பாடு மாத்திரம் சாப்பிட்டுக்கொண்டு, மண்ணுசை, பெண்ணுசை, பொன்னுசை என்ற மூன்ருசைகளையும் வேருடன் கரு வறுத்துவிட்டு, ஒரே மனதாய்க் கடவுளைத் தியானஞ் செய்துகொண் டிருக்கிருனே அவனுக்கல்லவா நித்தியத் துவம் அகப்படும்? அப்படியில்லாமல், ‘என் ஆசைக் கண்மணியாகிய ராஜாம்பாள் இறந்து விட்டாளே’ என்ற ஏக்கத்தால் நீ சதா அவளுடைய நாம ஸ்மரணையே செய்துகொண்டு காவி வஸ்திரம் உடுத்துக்கொண்டு சந்நியாசியாவதனுல் வரும் பலன் ரவுரவாதி நரகந்தான் என்பதை நீ அறியவில்லைபோல் இருக்கிறது. இந்த ஊரில் உன்னைப்போல் சாஸ்திரங்களில் தேர்ந்தவர்கள் இல்லையென்று எல்லாரும் சொல்லிக்கொள்ளுகிருர்களே! இங்கிலீஷ் படிக்க ஆரம்பித்துவிட்டால் சாஸ்திரங்களே புரட்டுகளென்று அதைப் படிக்காது விட்டுவிடுவது சகஜமாயிருந்தாலும் நீ மாத்திரம் அப்படிச் செய்யாமல் நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், அறுபத்து நாலு கலை ஞானம், மனுதர்ம சாஸ்திரம் முதலிய சாஸ்திரங்களை யெல்லாம் ஒன்று விடாமல் படித்தாயே. படித்தவர்களைப் பார்க்கிலும் படியாத முட்டாள் வண்ணுன் சிலாக்கிய மென்று தெலுங்கு பாஷையில் ஒரு வழக்குச் சொல் உண்டு. அந்தப் பழமொழியை உன்னிடத்தில்தான் கண்டேன். ‘அறவடித்த முன்சோறு காடிப்பானையில் விழும்’ என்பதைப்போல் நீ சகல சாஸ்திரங்களையும் படித் ததனுல்தான் இப்படிப் பேசுகிருய்போல் இருக்கிறது. என்னிடம் சொல்வதைப்போல் இவ்வார்த்தையை இனி யாரிடமும் சொல்லாதே; சிரிக்கப்போகிருர்கள்.

**கோபாலன்:** நீ சொல்லுவதெல்லாம் வாஸ்தவந் தான். நான் இனி இறப்பதும் இல்லை; துறப்பதும் இல்லை; இனி எனக்குச் சந்தோஷமும் இல்லை; துக்கமும்

இல்லை; ஆதலால் ஏழைகளுக்கு ஒத்தாசை செய்து கொண்டு என் காலத்தைக் கழிக்கிறேன்;

லோகசுந்தரி: நீ சிறு குழந்தை முதலே ராஜாம்பாளையும் என்னையும் நேசித்து எங்களுக்கு வேண்டிய புத்திமதிகளைச் சொல்லிக்கொடுத்து வந்தாய். நாம் மூவரும், மூன்று உடலும் ஓர் உயிரும்போல ஒருவரை ஒருவர் நேசித்து வந்தோம். தெய்வாதீனமாய் ராஜாம்பாள் இறந்து போனாள். ஆகையால் மூவரில் இப்போது உயிருடன் இருக்கும் நாம் இருவரும் ஒருவரை ஒருவர் நேசித்துப் பாலும் நீரும் போலவும், அன்னமும் பேடையும் போலவும், மூவர்களாலும் தேவர்களாலும் ரிஷிகளாலும் முனிகளாலும் விலக்க முடியாத போகங்களை அநுபவித்துக்கொண் டிருப்பதை விட்டுவிட்டு, பட்டினி கிடக்கிறேனென்றும், ஏழைகளுக்கு ஒத்தாசை செய்கிறேனென்றும் பைத்தியக்காரன் உளறுவதைப்போல் உளறுகிறாயே! சகல போகங்களையும் அநுபவித்துக்கொண்டு நாம் இருவரும் தர்மஞ் செய்வது எவ்வளவு சிலாக்கியமாகும்! எனக்கு இருக்கும் சொத்து முழுவதையும் தர்மஞ் செய்கிறேன். என்னைப்போல் அழகுள்ள பெண் கிடையாளென்று உன் வாயாலேயே சொல்லியிருக்கிறாய்; என்னைப் பார்த்த புருஷர்கள் இச்சைப்படாமல் இருக்க மாட்டார்களென்றும் சொல்லியிருக்கிறாய். நான் நன்றாய்ப் படித்திருக்கிறேன். எப்போது உனக்கு வாசிக்க முடியவில்லையோ அப்போது உன் பக்கத்திலிருந்து நான் வாசிப்பேன். எப்போது உனக்குத் தூக்கம் பிடிக்கவில்லையோ, அப்போது வாயால் பாடி உன்னைச் சந்தோஷிப்பிக்கக் கூடிய இனிய குரல் அடைந்திருக்கிறேன். அதுவும் போதாதென்றால் வீணையையும் பிடிலையும் வைத்துக் கொண்டு பாடுவேன். ஆகையால் ராஜாம்பாளைவிட எந்த விஷயத்தில் நான் குறைவாயிருக்கிறேன்? இல்லை; அப்படியே குறைவென்றே வைத்துக்கொள்வோம். இப்போது ராஜாம்பாள் இறந்து போய்விட்டபடியால் இனி என்னைப்போல் சகல குணங்களும் பொருந்திய பெண் உனக்கு அகப்படுவது கஷ்டந்தான். எனக்கு உன்மேல் இருக்கப்பட்ட பிரியம் இவ்வளவு அவ்வளவென்று சொல்ல முடியாது. ஆகையால் உன் வாயால்

என்னைக் கல்யாணஞ் செய்துகொள்ளுகிறேனென்று சொல்லு.

**கோபாலன்:** என்னுடைய இருதயத்தை ராஜாம் பாளுக்கு ஒப்பித்துவிட்டேன். இனி எப்படி வேறொரு வருக்கு ஒப்பிக்க முடியும்? முடியாத காரியத்தைச் செய்யச் சொல்லுகிருயே!

**லோகசுந்தரி:** உன்னுடைய இருதயத்தை ராஜாம் பாளுக்கு ஒப்பித்துவிட்டதைக் குறித்து எனக்குக் கஷ்டம் இல்லை. என்மேல் இப்போது பிரியம் இல்லாவிட்டாலும், நீ என்னைக் கல்யாணஞ் செய்துகொள்வ தாக ஒப்புக்கொண்டால் மூன்று நாட்களில் எப்படி யாவது என்மேல் பிரியம் உண்டாகும்படி செய்து விடுகிறேன் பார். அப்படிச் செய்யாவிட்டால் நீ என்னைக் கல்யாணஞ் செய்துகொள்ள வேண்டாம். லோகத்திலுள்ள இன்பங்களை உணராமல் பித்தனைப்போல் பிதற்றுகிருயே! அவ்வளவு திடச்சித்தம் உள்ள ராஜரிஷியாகிய விசுவா மித்திரராலேயே பெண்ணின் இன்பத்திலிருந்து மீள முடியவில்லையே! அப்படி இருக்க வைராக்கியமே இன்னதென்று அறியாத உன்னால் அந்த இன்பத்தி லிருந்து எப்படி மீள முடியும்? இன்னும் மன்மதன் அவனுடைய புஷ்ப பாணங்களை உன்மேல் வருஷிக்க வில்லைபோல் இருக்கிறது. பாவி மன்மதன் ஏன் என்னை இப்படி இம்சிக்கிருனே தெரியவில்லையே! கோபாலா, பகலிலும் இரவிலும் நனவிலும் கனவிலும் சதா என் முன்னுலேயே நீ நிற்கிருயே! என்மேல் உனக்குப் பிரியம் இல்லாவிட்டால் எப்படி உன் உருவம் எனக்குத் தோன் றும்? வாஸ்தவமாக என்னைச் சோதிக்கிருய்போல் இருக் கிறது. இனியாகிலும் என்னைச் சோதனை செய்யாமல் தயவு கூர்ந்து என்னைக் கல்யாணஞ் செய்துகொள்வ தாக வாக்களி. நீ தாமதம் செய்யும் ஒவ்வொரு விநாடி யும் எனக்கு ஒவ்வொரு யுகமாயிருக்கிறதே! புருஷனை ஒருபெண் இப்படி வேண்டிக்கொள்வது கேவலமாயிருந்தா லும் எனக்கு உன்மேல் இருக்கும் அளவிட முடியாத பிரிய மானது பெண்களுடைய கௌரவத்தைக் குறைத்து உன்னை இப்படியெல்லாம் வேண்டிக்கொள்ளும்படி செய் கிறது. பூலோகந் தோன்றின நாள் முதல் எந்த ஸ்திரீ

யும் நான் உன்னை விரும்புவதைப்போல் விரும்பியிருக்க மாட்டாள் என்பது சத்தியம். நான் இவ்வளவு சொன்ன பிற்பாடுகூட இன்னும் நீ வாக்களிக்காமல் இருப்பது மகா பாதகமாகும்.

**கோபாலன்:** லோகசுந்தரி, முன்னுலேயே நான் ராஜாம்பாளைத் தவிர வேறே யாரையும் கல்யாணம் செய்துகொள்ள மாட்டேனென்று கண்டிப்பாய் உனக்குச் சொல்லியிருக்கிறேன். மேலும் உன்னை என் சொந்தத் தங்கையைப் போல் பாவிப்பதாகவுஞ் சொல்லியிருக்கிறேன். நீ மறுபடியும் என்னை இப்படி இம்சிப்பது எனக்கு அதிக வருத்தத்தைக் கொடுக்கிறது. என்னைக் கல்யாணஞ் செய்துகொள்ள இஷ்டப்பட்டு வந்த பெண்ணைக் கொலை செய்தேனென்று கொடிய குற்றஞ் சாட்டப்பட்டு ஜெயிலில் அடைபட்டிருக்கும் எனக்கு நீ, காமாதி போகங்களின் இன்பங்களைப் போதிப்பதனுல் வரும் பயன் என்ன? மணவாள நாயுடு என் கழுத்துக்குச் சரியாய்ச் சாட்சியங்களை ஏற்படுத்தியிருக்கிருன். நான் தப்புவதே மகா துர்லபம். அப்படியெல்லாம் இருக்க, சதா என்னையே நினைத்துக் கொண்டிருப்பதாகவும் எனக்கு உன்மேல் பிரியம் இல்லாவிட்டால் என் உருவம் உனக்கு எப்படித் தோன்ற முடியுமென்றும் ஏதேதோ பேசுகிருய். என் சொந்தத் தங்கை ஒருத்தி இருந்தால் அவள்மேல் எவ்வளவு பக்ஷமாயும் அன்பாயும் இருப்பேனே அவ்வளவு பக்ஷமாயும் அன்பாயும் உன்னிடம் இருக்க முடியுமே தவிர, வேறு விதமாக இருப்பது முடியாத காரியம். மேலும், ராஜாம்பாளைக் கொலை செய்த பாதகர்களைக் கண்டு பிடிக்கும் வரையில் வேறே சமாசாரங்களை யோசனை செய்ய என்னுல் சாத்தியமாகாது.

**லோகசுந்தரி:** நீ என்னைக் கல்யாணஞ் செய்து கொள்வதாக வாக்களித்தாயானுல், இன்றுமுதல் மூன்று தினங்களுக்குள்ளாக ராஜாம்பாளைக் கொலை செய்த பாதகனைக் கண்டுபிடித்துச் சிறையில் அடைப்பதன்றி, உன்னையும் விடுதலை செய்யும்படி செய்கிறேன். அப்படி நான் செய்யாவிட்டால் நீ என்னைக் கல்யாணஞ் செய்து கொள்ள வேண்டாம்.

**கோபாலன்:** ஆனால் கொலை செய்தவன் இன்னான் என்று உனக்குத் தெரியும்போல் இருக்கிறது. உனக்குத் தெரிந்திருக்கும்போது அவன் வெளியில் திரிந்துகொண்டிருப்பதையும், நான் ஜெயிலில் அடைபட்டிருப்பதையும் நீ எப்படிப் பார்த்துக்கொண்டிருக்கிறாய்? உனக்கு என்மேல் பிரியம் இருப்பதாக நீ பாவனை செய்கிறபடி வாஸ்தவமாகப் பிரியம் இருந்தால் நான் ஜெயிலில் அடைபட்டிருப்பதை நீ பார்த்துக்கொண்டிருப்பாயோ?

**லோகசுந்தரி:** கொலை செய்தவன் இன்னான் என்று எனக்குத் தெரிந்திருந்தால் நான் இதுவரையில் நீ ஜெயிலில் இருக்கப் பார்ப்பேனோ? ஒருகாலும் பார்க்கமாட்டேன். உன்பேரில் இருக்கும் அந்தரங்கப் பிரியத்தால் ராஜாம்பாளைக் கொலைசெய்தவனைக் கண்டுபிடிக்கும்படி கெட்டிக்காரனென்று பேரெடுத்திருக்கும் ஒரு துப்பறிபவனை நியமித்து அமோகமாய்ப் பொருள் செலவழித்து வருகிறேன்; அவன் இன்னும் மூன்று தினங்களில் கொலை செய்தவனைக் கண்டுபிடித்துவிடுவதாக இன்று காலையில் உறுதியாய் வாக்களித்திருக்கிறான். அந்த நற்செய்தியைத் தெரிவிப்பதற்கே இங்கு வந்தேன்.

**கோபாலன்:** நீ என் நிமித்தம் எடுத்த பிரயாசையை என் ஆயுள்பரியந்தம் மறவாமல் இருப்பேன்.

**லோகசுந்தரி:** முன்னாலேயே அந்நியர்களிடம் பேசும் உபசார வார்த்தைகளை என்னிடம் பேச வேண்டாம் என்றேனே! மறுபடியும் ஏன் அப்படிச் சொல்லுகிறாய்? நான் கேட்ட முக்கியமான கேள்விக்கு இதுவரையில் நீ விடை சொல்லாமல் ஏன் காலதாமதம் செய்கிறாய்?

**கோபாலன்:** முன்னாலேயே சொல்லிவிட்டேனே.

**லோகசுந்தரி:** வழவழவென்று சொல்வதிற் பயன் இல்லை; உண்டு, இல்லை என்று நன்றாய் யோசனைசெய்து சொல்.

**கோபாலன்:** தீர்க்காலோசனை செய்துதான் சொன்னேன்; அப்படிச் சொல்வது எனக்கு அதிக வருத்தத்தைக் கொடுத்த போதிலும் உண்மை உரைப்பதே எனது வழக்கமாதலால் உன்னைக் கல்யாணஞ் செய்துகொள்வது முடியாத காரியம்.

**லோகசுந்தரி:** என்னைக் கல்யாணஞ் செய்துகொள்வதாக ஒப்புக்கொண்டால் மட்டும் கொலைசெய்தவனைத் தண்டித்து, உன்னைச் சிறையிலிருந்து மீட்பேன்; இல்லாவிட்டால் சும்மா இருந்துவிடுவேன்.

**கோபாலன்:** நீ மீட்டாலும் சரி; மீட்காவிட்டாலும் சரி; உன்னைக் கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன்.

**லோகசுந்தரி:** ஆனால் நீ என்னை விரோதிக்கிறாய்?

**கோபாலன்:** நீ அப்படி எண்ணிக்கொண்டால் அதை யாரால் தடுக்க முடியும்? என்னுடைய வாஸ்தவமான அபிப்பிராயத்தை வெளியிட்டதால் நீ ஏன் என்னை விரோதியாகப் பாவிக்கவேண்டும் என்பது எனக்குப் புலப்படவில்லை.

**லோகசுந்தரி:** பெண்கள் எப்போது வலிய வந்து கல்யாணம் பண்ணிக்கொள்ளும்படி கேட்கிறார்களோ அப்போது அவர்களை மறுக்கக்கூடாதென்று சாஸ்திரம் கூறுகிறதே! அப்படி இருக்க, ஒரு முறைக்கு நான்கு முறை நான் வலிய வந்து, என்னைக் கல்யாணஞ் செய்துகொள்ளும்படி உன்னைக் கெஞ்சிக் கேட்டும், நீ நிஷ்காரணமாக என்னைக் கல்யாணம் செய்துகொள்ள மாட்டேனென்றால், எனது மனம் எவ்வளவு வருத்தப்படும் என்பதைச் சற்று ஆலோசனை செய்தாயா? அவ்வளவு வருத்தம் அடையும்போது இஷ்டம் உண்டாகுமா? விரோதம் உண்டாகுமா? உனக்கு இன்னும் பூலோகத்தினுடைய அநுபோகம் போதாததால் நன்மை இன்னதென்றும் தீமை இன்னதென்றும் நீ அறியவில்லை. பெண்கள் விரும்பிய புருஷர் பெண்களின் இஷ்டத்தின்படி நடக்காவிட்டால் அதனால் எவ்வளவு கேடு விளையும் என்பதை நீ இதுவரையில் பார்த்ததும் இல்லை, கேட்டதும் இல்லைபோல் இருக்கிறது. ஆசைப்பட்ட புருஷர்மீது, முன்னால் எவ்வளவு பிரியம் இருந்ததோ அவ்வளவிற்கு ஆயிரம் பங்கு அதிகமாக விரோதம் ஏற்படுவது சகஜந்தான். நான் விரும்புகிறபடி நீ என்னைக் கல்யாணஞ் செய்துகொண்டால் ராஜாம்பாளைக் கொலை செய்தவனைக் கண்டுபிடிப்பது ஒன்று; நீ சிறையிலிருந்து குற்றவாளி

யல்லவென்று ருஜூப்படுத்தப்பட்டு, பழைய மரியாதையை அடைவது இரண்டு; என்னுடைய சொத்துப் பூராவையும் அடைவது மூன்று; மதனும் ரதியும்போல் நாம் இன்ப சுகங்களை அநுபவிப்பது நான்கு; ஆகிய இவ்வித நன்மைகளை அடைவாய். என் இஷ்டப்படி நடக்காவிட்டால் உன் அருமைக் கண்மணியாகிய ராஜாம்பாளை நீ கொலைசெய்ததாக ருஜூப்படுத்தப்பட்டு, மகா பாவி என்று எல்லோராலும் தூற்றப்பட்டு, தூக்கிற் போட்டுக் கொல்லப்படுவதால் மறுமையிலும் ரவுரவாதி நரகத்திற் போய்ச் சேருவாய். இவ்விரண்டில் எது செய்வது நன்மையென்றும், எது செய்வது தீமையென்றும் நன்றாய் யோசனை செய்து பதில் சொல்.

**கோபாலன்:** எப்படி ஆனாலும் சரிதான். உன்னைக் கல்யாணஞ் செய்துகொள்ளமாட்டேன்; இது சத்தியம்.

**லோகசுந்தரி:** நல்லது, கோபாலா! நீ இப்படிச் சொன்னதற்காக உன்னைப் போதுமானபடி கஷ்டங்களை அநுபவிக்கும்படி செய்யாவிட்டால் என் பேர் லோகசுந்தரியும் அல்ல; நான் எடுத்தது பெண் ஜன்மமும் அல்ல. இந்த நிமிஷம் முதல் என்னை விரோதியாக நினைத்துக்கொள்.

லோகசுந்தரி அதிகக் கோபத்துடன் எழுந்துபோய்விட்டாள். கோபாலனும் அதுவரையில், அவளைத் தன் தங்கையாகப் பாவித்து அவளுக்கு வேண்டிய நற்புத்திகளைப் புகட்டி வந்தவனாதலாலும், இயற்கையிலேயே பிறருடைய துர்க்குணங்களை நினையாமல் அவர்களால் தான் அடைந்த நன்மைகளை மட்டும் நினைப்பவனாதலாலும், லோகசுந்தரிக்குக் கோபம் வரும்படியாகத் தான் நடக்கும்படி நேரிட்டதே என்று வருத்தப்பட்டுக்கொண்டிருந்தான்.

சென்னைக்குப் போன துரைசாமி ஐயங்கார், சாமிநாத சாஸ்திரிகளுக்கு வாக்களித்த பிரகாரம், நடேசனைக் கண்டு உயிலை ரத்துப்பண்ணின சங்கதியை அவனுக்குச் சொல்லி, அதனால் அவன் வருத்தம் அடையாதபடி சமத்காரமாய், உயிலை ரத்துச் செய்ததே நலமென்று காட்டிப் போனார்.

# 12. தாய்க்கிழவி

இராஜாம்பாளின் கல்யாணத்திற்குப் போய் இரண்டு நாட்களில் வந்துவிடுவதாகத் தாசி பாலாம்பாளிடம் நடேச சாஸ்திரிகள் சொல்லிவிட்டுப் போனவர், சொன்ன படி வர முடியாமல் அசந்தர்ப்பப் பட்டுப் போய் ஐந்து நாட்கள் ஆகிவிட்ட படியால் அவள் கோபித்துக்கொள்ளு வாளென்று அவளைத் திருப்தி செய்வதற்காகக் குஷால் தாஸ் கடைக்குப் போய் ஆயிர ரூபாயில் மத்தாப்புச் சேலையும் ரவிக்கையும் வாங்கிக்கொண்டு பாலாம்பாள் வீட்டுக்குப் போய்ப் பார்த்தார். தாய்க் கிழவி மாத்திரம் ஒரு பக்கத்தில் விசனமாக உட்கார்ந்துகொண் டிருந்தாள்; பாலாம்பாளைக் காணவில்லை.

நடேச சாஸ்திரி: பங்கஜம்! பாலாம்பாள் எங்கே?

தாய்க்கிழவி: தாங்கள் வருவீர்களென்று மூந்தாநாள் ராத்திரி பன்னிரண்டு மணிவரையில், நான் எவ்வளவு சமாதானம் சொன்னபோதிலும் கேட்காமல் உட்கார்ந் திருந்தாள். தள்ளாத காலமாதலால் நான் கண் உறங்கி விட்டேன். காலையில் எழுந்து பார்க்கையில் அவளைக் காணேம். படுக்கையிலும் படுக்கவில்லை. ஒருகால் தங்கள் பேரில் இருக்கும் பிரியத்தால் தங்களைத் தேடிக்கொண்டு காஞ்சீபுரம் போயிருப்பாளென்று நினைத்துக்கொண் டிருந்தேன். இப்போது தாங்கள் என்னைக் கேட்கிறது ஆச்சரியமாயிருக்கிறதே! தள்ளாத காலத்தில் தாங்களும் அவளும் சேர்ந்துகொண்டு என்னைச் சோதனை செய் வது சரியல்ல; தயவு செய்து என் கண்மணி எங்கே என்று சொல்லுங்கள்.

நடேச சாஸ்திரி: வாஸ்தவமாக நான் பார்க்கவில்லை. நீயும் அவளும் சேர்ந்துகொண்டு என்மேல் இருக்கும் கோபத்தால் என்னைத் தண்டிப்பதற்குப் பதிலாக இப்படிப் பகடி செய்ய உத்தேசித்தீர்கள்போல் இருக் கிறது. போதும் இந்த விளையாட்டு; அவளைக் காணுமல் என் கண்கள் பூத்துப்போயின; அவள் எங்கே இருக்கிருள்?

நடேச சாஸ்திரிகள் இப்படிக் கேட்டவுடனே தாய்க் கிழவி ஓவென்று ஒப்பாரி வைத்து அழத் தொடங்கிஞள்.

அவளை நடேச சாஸ்திரிகள் தம்மால் ஆனவரையில் சமாதானப்படுத்திக் கேட்டும் முன் சொன்னபடியே சொல்லி அழுதாளேதவிர, வேறே ஒன்றும் சொல்லவில்லை. அப்பால் யோசனை செய்து இனிச் சும்மா இருப்பதில் காரியம் இல்லை என்று தெரிந்து, திருவல்லிக்கேணிக் கோவிந்தனை அழைத்துத் தேடச் சொல்லவேண்டுமென்ற எண்ணத்துடன் வண்டியில் ஏறி அவர் வீட்டிற்குப் போய்த் தம் பேர் எழுதிய சீட்டை அனுப்பினுர். கோவிந்தன் உள்ளே உட்கார்ந்தபடியே சாஸ்திரிகளை அழைத்து வரும்படி சொல்லி, அவர் வந்தவுடனே, என்ன விசேஷம் என்று கேட்டார்.

**நடேச சாஸ்திரி:** முந்தாநாள் ராத்திரி முதல் தாசி பாலாம்பாளைக் காணேம்; அவளுக்கு அபாயம் நேரிட்டிருக்குமென்று அவள் தாய் சந்தேகப்படுகிருள். தாங்கள் எப்படியாவது விரைவில் அவள் எங்கே போனுள் என்றும் அல்லது என்ன அபாயத்திற்கு உட்பட்டிருக்கிருளென்றும் கண்டறிய வேண்டும். அதனுல் என்ன செலவு நேரிட்டபோதிலும் நான் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன். இதோ இந்த ஐந்நூறு ரூபாயை முன்பணமாக வைத்துக்கொள்ளுங்கள்.

**கோவிந்தன்:** நான் கண்டுபிடித்தால் மட்டும் ரூபாய் வாங்குவதே தவிர அதற்கு முன்னுல் வாங்குவதில்லை. தாங்கள் இன்னுரென்றும், தங்களுடைய யோக்கியதை இன்னது என்றும் நன்கு உணர்ந்த நான் தங்களிடம் முன்னுல் ரூபாய் வாங்கமாட்டேன். நான் கண்டுபிடிக்க வேண்டும் என்ற அபிப்பிராயம் தங்களுக்கு இருந்தால் நான் கண்டுபிடிக்கும் வரையில் என்னைத் தொந்தரவு செய்யாமல் என் போக்கின்படி விடவேண்டும்; உயிருடன் இருந்தால் எங்கே இருக்கிருளென்றும், வியாதியால் இறந்திருந்தால் எங்கே இறந்தாளென்றும், என்ன வியாதியால் இறந்தாளென்றும், கொலை செய்யப்பட்டிருந்தால் யார் கொலை செய்தார்களென்றும் கண்டு பிடிக்கும் வரையிலும், என்னை எந்த விதமான கேள்விகளும் தாங்கள் கேட்கிறதில்லையென்று ஒப்புக்கொள்ள இஷ்டம் இருந்தால்தான் என்னுல் கண்டு பிடிக்க முடியும்; இல்லாவிட்டால் தாங்கள் வேறொருவரைப் பார்த்துக்கொள்ளுங்கள்.

நடேச சாஸ்திரி: எப்படியாவது விரைவாகக் கண்டு பிடியுங்கள். தாங்களாகச் சொல்லும்வரையில் நான் தங்களைக் கேட்பதில்லை.

உடனே சாஸ்திரிகளும் கோவிந்தனும் புறப்பட்டுத் தாசி பாலாம்பாள் வீட்டிற்குச் சென்றார்கள். (கோபாலனிடம் இராஜாம்பாளைக் கொலை செய்தவர்களைக் கண்டு பிடிக்கும் வரையில் வேறு வேலை செய்வதில்லை என்று கோவிந்தன் வாக்களித்திருந்தும் இதைக் கண்டு பிடிக்க ஒப்புக்கொண்டது சரியா என்று இதை வாசிப்போர் நினைக்கலாம். கோவிந்தன் ஒருவருக்கு ஒரு வாக்களித்தால் அப்பால் தவறுவது இல்லையாதலால், இதைக் கண்டுபிடிக்க ஒப்புக்கொண்டது நியாயமா, நியாயமல்லவா என்பது கடைசியில் விளங்கும்.) அங்கே போனதும் தாய்க்கிழவி பங்கஜமும் நடேச சாஸ்திரிகள் சொன்னது போலவே சொன்னாள். உடனே கோவிந்தன் நடேச சாஸ்திரிகளைத் தபாலாபீசுக்கு அனுப்பி ஒருகால் காஞ்சீபுரத்திற்குப் பாலாம்பாள் வந்திருக்கிறாளா என்று நண்பர்கள் யாரேனும் இருந்தால் அவர்களுக்குத் தந்தி கொடுத்து ஜவாப்புப் பெற்று வரும்படி சொல்லி அனுப்பி விட்டார்.

**கோவிந்தன்:** பங்கஜம், வாஸ்தவமாகப் பாலாம்பாள் எங்கே என்று கண்டுபிடிக்க வேண்டுமென்ற அபிப்பிராயம் உனக்கு இருந்தால் என்னிடம் நீ உண்மை சொல்லவேண்டும். உண்மை சொல்லாவிட்டால் என்னால் கண்டுபிடிப்பது கஷ்டமாகும்.

தாய்க்கிழவி: நான் அப்போதே உண்மை சொல்லி விட்டேன். இன்னும் என்ன உண்மை சொல்லச் சொல்லுகிறீர்கள்?

**கோவிந்தன்:** நடேசனை ஏமாற்றினதுபோல என்னையும் ஏமாற்ற நினைத்தாய்போல் இருக்கிறது. நல்லது; நீ சொன்னது பொய்யென்று உனக்கு ரூபித்துவிட்டு நான் வீட்டிற்குப் போகிறேன். முந்தாநாள் ராத்திரி முதல் பாலாம்பாளைக் காணோம் என்றாயே? அது முழுப்பொய்; ஜனவரிமீ 26வ புதன்கிழமை ராத்திரி முதல் பாலாம்பாளைக் காணோம் என்று சொல்லு.

இவ்வாறு கோவிந்தன் சொன்னவுடனே தாய்க்கிழவி எழுந்து ஓடிவந்து, கோவிந்தனுடைய கால்கள் இரண்டையும் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு தான் பொய் சொன்னதற்காகத் தன்னை மன்னித்துத் தன் ஆசைக் கண்மணியாகிய பாலாம்பாள் எங்கே இருக்கிருளென்று சொல்ல வேண்டுமென்றும், பாலாம்பாள் புறப்பட்டுப் போன நேரத்தைச் சரியாய்க் கோவிந்தன் சொன்னபடியால் அப்போது அவள் எங்கே இருக்கிருளென்பதும் அவருக்குத் தெரியுமென்றும், தன்னைச் சந்தேகத்தில் வைப்பது சரியல்லவென்றும் தர்மமல்லவென்றும் கெஞ்சிக் கேட்டாள்.

**கோவிந்தன்:** நான் உண்மையைச் சொல்லச் சொன்ஞல், சொல்லாமல் ஒளித்ததனுல் என்னுல் கண்டுபிடிக்க முடியாது. நீ இப்படியே ஒவ்வொன்றிலும் பொய் சொல்லுவாய். நான் கஷ்டப்பட்டும் உபகாரம் இல்லாமற் போகும். ஆகையால் நான் போகிறேன்.

**தாய்க்கிழவி:** ஐயா! தாங்கள் அப்படிக் கோபித்துக் கொள்ளக் கூடாது. ஒன்றும் விடாமல் உண்மையைச் சொல்லிவிடுகிறேன். நான் சொல்வது உண்மைதான் என்று உங்கள் தலையில் வேண்டுமாஞலும் அடிக்கிறேன்.

**கோவிந்தன்:** நீ என் தலையில் அடித்துப் பொய்ச் சத்தியம் செய்தால் அதனுல் எனக்குத்தானே கெடுதி? உன் வீட்டிற்கு வரும் முட்டாள்களைப் பேச்சுச் சாமர்த்தியத்தால் ஏமாற்றுவதுபோல் என்னையும் ஏமாற்ற நினைக்காதே; இன்னெரு தரம்மட்டும் நீ பொய் சொல்வதாக எனக்குத் தோன்றிஞல் உடனே நான் எழுந்து போய் விடுவேன். நடேச சாஸ்திரியின் எதிரில் உண்மை சொல்ல மாட்டாய் என்றுதான் அவரை அனுப்பிவிட்டேன். அவர் திரும்பி வருவதற்குள் சொல்ல வேண்டியவைகளை யெல்லாம் ஜல்தியாய் ஒளியாமற் சொல்லிவிடு.

**தாய்க்கிழவி:** நான் ஒன்றும் விடாமல் சொல்லிவிடுகிறேன். தாங்கள் தயவுசெய்து சாஸ்திரிகளிடம் சொல்லக்கூடாது.

**கோவிந்தன்:** இல்லை; வாஸ்தவத்தைச் சொல்.

**தாய்க்கிழவி:** மூன்று வாரங்களுக்கு முன்ஞல் பாலாம்பாளும் நடேசனும் சோபாவில் உட்கார்ந்துகொண்டு

சதுரங்கம் ஆடிக்கொண் டிருந்தார்கள். அப்போது எங் கேயோ இருந்து அவசரமான தந்தி வந்ததென்று நடேச சாஸ்திரியின் வேலைக்காரன் கொண்டுவந்து கொடுத்தான். அதை வாங்கிப் பார்த்தவுடனே அவர் ஜேப்பில் வைத்துக் கொண்டார். பாலாம்பாள் ஆனவரையில் என்ன சமா சாரமென்று கேட்டும் அதுவரையில் அவளிடம் எவ்வித ரகசியங்களையும் ஒளியாமல் சொல்லிவந்த சாஸ்திரி, அன்று சரியான ஜவாப்புச் சொல்லாமல் ஏதோ அவசர மான வேலை இருப்பதாகவும் அதனால் அன்றிரவு வர முடியாதென்றும் சொல்லிப்போனார். அது என்ன சமாசார மென்று கண்டறியும் வரையில் தாகத்திற்கு ஜலங்கூடச் சாப்பிடமாட்டேன் என்று பாலாம்பாள் சொல்லிக் கொண்டிருந்ததால், நான் ஒரு யுக்தி செய்து, வந்த தந்தியை வேலைக்காரன் வைத்திருந்ததாகவும் அதை நாய் துண்டு துண்டாய்க் கிழித்துப் போட்டதாகவும், தந்தியில் என்ன சமாசாரம் இருந்ததென்று நடேச சாஸ்திரிகள் கேட்டனுப்பினதுபோலவும் தந்தி ஆபீசுக்கு ஆள் அனுப்பிச் சமாசாரம் தெரிந்துகொண்டேன். அதாவது காஞ்சீபுரம் லோகசுந்தரி, நடேசனை மாறுவேடம் பூண்டு அன்று ராத்திரி பத்துமணிக்கு வரச்சொல்லி எழுதியிருந் தாள்.

இதைக் கேட்டவுடனே பாலாம்பாள் தானும் காஞ்சீபுரம் போய் அவர்கள் என்ன பேசுகிறார்களென்று கண்டறிந்து வருவதாய்ச் சொல்லி ஆண்வேடம் பூண்டு நடேச சாஸ்திரிகள் போன ரெயிலிலேயே போனாள். மறு நாள் காலையில் வந்ததும் ராஜாம்பாளுக்கும் கோபாலனுக் கும் கல்யாணம் நடக்கப்போவதாகவும், அதை நடேசனும் லோகசுந்தரியும் சேர்ந்து எப்படியாவது தடுக்கவேண்டு மென்று ஏற்பாடு செய்வதாகவும் சொன்னாள். மறுபடியும் நடேசன் போகும்போது தானும் போய் எப்படியாவது ராஜாம்பாளுக்கும் கோபாலனுக்கும் கல்யாணம் நடக்கும் படி செய்யப் போவதாகவும், நடேசனும் லோகசுந்தரியும் செய்யும் ஏற்பாடுகளைக் கெடுக்கப்போவதாகவுஞ் சொன் னாள். யார் எப்படிப் போனால் என்னவென்று என்னால் கூடியவரையிற் சொல்லியும் கேளாமல் 26வ புதன்கிழமை சாயங்காலம் ஆறுமணி ரெயிலில் பாலாம்பாள் போனாள்.

போகும்போது கட்டாயமாய் மறுநாளே வருவதாகச் சொல்லிவிட்டுப் போனுள். மறுநாள் ராஜாம்பாள் கொலை செய்யப்பட்டாளென்று பத்திரிகையில் வாசித்த வுடனே அவளால் தடுக்க முடியவில்லையென்று நினைத்து ஒருகால் நடேசனேடு வருவாளென்று எதிர்பார்த்திருந் தேன். நடேசன் அவளைப் பார்க்கவே இல்லையென்று உண்மையைச் சொல்வதால் அவளுக்கு ஏதோ அபாயம் வந்திருக்குமென்று நம்புகிறேன். இதுதான் உண்மை யாய் நடந்த சங்கதிகள். எப்படியாவது அவளைக் கண்டு பிடித்து என்னிடம் சேர்க்கவேண்டியது தங்களைச் சேர்ந்த கடமை. தாங்கள் அப்படிச் செய்தால் நானும் என் மக ளும் எப்போதும் தங்களை மறக்கவே மாட்டோம்.

**கோவிந்தன்:** காஞ்சீபுரம் 26வ போனுள் என்ருயே; யார் வீட்டில் போய் இறங்குவதாகச் சொன்னுள்?

**தாய்க்கிழவி:** என்னிடம் சொல்லவில்லை.

**கோவிந்தன்:** அதற்கு முன்னுல் தான் காஞ்சீபுரம் வருவதாக யாருக்காவது காகிதம் எழுதினுளா?

**தாய்க்கிழவி:** காகிதம் எழுதினுள். யாருக்கென்று என்னிடம் சொல்லவில்லை. அவளே எழுதி அவள் கைப் படத் தபாலிற் போட்டாள்.

**கோவிந்தன்:** அவள் மாமூலாய் எழுதும் பெட்டி எங்கே?

**தாய்க்கிழவி:** இதோ இருக்கிறது பாருங்கள்.

அதை அவள் திறந்து காண்பித்தாள். பெட்டி பூரா வாய்த் தேடியும் விசேஷமான காகிதம் ஒன்றும் அகப்பட வில்லை. அப்பால் அங்கே இருந்த மை ஒத்தும் காகி தத்தை மாத்திரம் கோவிந்தன் பத்திரமாய் எடுத்து வைத்துக்கொண்டார். இதற்குள்ளாகத் தந்தி ஆபீ சுக்குப் போன நடேசனும் ஜவாப்புத் தந்தி வந்த வுடனே அதை எடுத்துக்கொண்டு வந்தார். அதில் பின் வருமாறு எழுதியிருந்தது:

ம-ள-ள-ஸ்ரீ,

நடேச சாஸ்திரிகளுக்கு, சென்னை.

காஞ்சீபுரத்திற்குப் பாலாம்பாள் வந்ததாகத் தெரியவில்லை. அவளைத் தெரிந்த எல்லாரிடமும்

கேட்டதற்கு யாரும் வரவில்லையென்று சொல்லுகிறார்கள். நான் அவளைப் பார்த்து நான்கு வருஷங்கள் ஆகின்றன.

லோகசுந்தரி, காஞ்சீபுரம்.

கோவிந்தன், கூடிய விரைவில் கண்டுபிடித்து வந்து சொல்லுவதாகச் சொல்லி, நடேச சாஸ்திரிகளிடம் விடை பெற்றுக்கொண்டு போய்ப் பாலாம்பாளை இதுவரையில் யார் குத்தகையாக வைத்துக்கொண் டிருந்தார்களென்று விசாரித்ததில் பின்வரும் சமாசாரங்களைக் கண்டுபிடித்தார்.

காஞ்சீபுரம் லோகசுந்தரியின் காலஞ்சென்ற புருஷராகிய சீதாராம சாஸ்திரிகள்தாம் பாலாம்பாளைப் புதுச் சோபனம் செய்தாரென்றும், அதுமுதல் சாப்பிடும் வேளை தவிர மற்ற வேளைகளிலெல்லாம் அவளுடைய வீட்டை விட்டு அப்பாற் போவதில்லையென்றும், பாலாம்பாளுக்குத் திருப்தியாகும்படி நகைகள் செய்து போட்டதல்லாமல், அவள் கேட்ட சாமான்களையெல்லாம் யாதொரு அட்டியுமில்லாமல் வாங்கிக்கொடுத்ததாகவும், அப்பால் திடீரென்று அவர் வாந்தி பேதியால் இறந்து போய்விட்டாரென்றும் தெரியவந்தது. அவர் காலஞ்சென்ற பிற்பாடு இரண்டொரு மாசம் பாலாம்பாள் விசனமாக இருந்ததாகவும், அப்பால் சென்னைத் தலைப்பாகை மாற்றி ஜகப்புரட்டுக் கம்பெனியின் முதல் துபாஷாகிய பாஷியகாரலு நாயுடு அவர்களின் ஏகபுத்திரராகிய ஷோக் நரசிம்மலு நாயுடு அவர்கள் பாலாம்பாளை இரண்டு வருஷ காலமாய் வைத்துக்கொண் டிருந்ததாகவும், அதில் ஒரு வருஷத்திற்குள் அவருக்கிருந்த பிதிரார்ஜித சொத்தெல்லாம் செலவாகிவிடவே, க. மு. அ. ப. ர. ந. சி. வ. அப்பாவு செட்டியாரவர்களிடம் ஐம்பதாயிரம் ரூபாய் கடன்வாங்கிச் செலவு செய்தாரென்றும், செட்டியாருக்குப் பணம் சேராததால் கோர்ட்டில் ஷோக் நரசிம்மலுநாயுடுவின் பேரில் கேஸ் போட்டு, தாசி பாலாம்பாளின் உதவியால் நரசிம்மலு நாயுடுவைக் கடன்காரர் ஜெயிலில் அடைத்து வைத்தார்களென்றும், ஷோக் நரசிம்மலு நாயுடு ஜெயிலிலிருந்து விடுதலையாகி ஒரு மாத காலந்தான்

ஆயிற்று என்றும், ஜெயிலிலிருந்து விடுதலை அடைந்த வுடனே நாயுடு மறுபடியும் பாலாம்பாள் வீட்டிற்குப் போனாரென்றும், அவரைக் கண்டு பாலாம்பாள் ஒரு பேச்சுக்கூடப் பேசாமல் தாய்க்கிழவியை விட்டு நாயுடு அங்கே வந்தால், நடேச சாஸ்திரிகள் கோபித்துக்கொள் ளுவாரென்றும் ஆகையால் நாயுடுவை, அவர் அந்தஸ் துக்குத் தக்க இடத்தைப் பார்த்துக்கொள்ள வேண்டுமே தவிர, இனி அந்த இடம் வருவது அவருக்குத் தகாதென் றும் சொல்லச் சொன்னதாகவும், அதைக் கேட்டவுடனே நாயுடுவுக்கு மிகுந்த கோபம் உண்டாகி, 'உன்னை என்ன கதி செய்கிறேன் பார்!' என்று பயமுறுத்திவிட்டுப் போனதாகவும் தெரியவந்தது.

ஷோக் நரசிம்மலு நாயுடு ஜெயிலுக்குப் போன சில தினங்களுக்கு அப்பால் ஒரு நாள் நடேச சாஸ்திரி செங் கான் கடைப் பந்தலில் உள்ள ஆட்டக் கொட்டகைக்கு நாடகம் பார்க்கப் போயிருந்ததாகவும், அவர் போய் ஒரு தனிச் சோபாவில் உட்கார்ந்ததாகவும், அன்று ஆட்டத் திற்கு வந்திருந்த பாலாம்பாளும் அவர் உட்கார்ந்திருந்த சோபாவிற்குப் பக்கத்துச் சோபாவில் வந்து உட்கார்ந்த தாகவும், நாடகம் நடந்துகொண் டிருக்கும்போது நாட கத்தின் குணானுபவங்களைக் குறித்து முதலில் இருவரும் பேசினார்களென்றும், அப்பால் பாலாம்பாள் சாஸ்திரி களைத் தன் சோபாவில் வந்து உட்காரும்படி சொல்லி அவருக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்துக்கொண்டே பேசிக்கொண் டிருந்ததாகவும், நாடகம் முடிந்தவுடனே நடேச சாஸ்திரிகள் தம் வீட்டிற்குப் போகாமல், பாலாம் பாள் வீடு சமீபத்தில் இருந்ததால் அங்கேயே போய்ப் படுத் துக்கொண்டதாகவும், அது முதல் லோகசுந்தரியின் தந்தி வந்தவரையில் பாலாம்பாளின் வார்த்தைக்கு மறு பேச்சுப் பேசாமல் இருந்ததாகவும் தெரியவந்தது. தாசிகள் தம் வீட்டிற்கு வரும் புருஷர் பேரிலெல்லாம் பிரியமாக இருப்ப தாய் நடிப்பது சகஜமாயிற்றே! அப்படி இல்லாமல் பாலாம்பாள் நடேச சாஸ்திரிகள் பேரில் வாஸ்தவமான பிரியத்தை வைத்திருந்தாளென்பதையும், நடேச சாஸ்திரி சொத்துக்காரரா யில்லாமல் இருந்தாலும் ஷோக் நரசிம் மலு நாயுடுவை ஓட்டினதுபோல் ஓட்டிவிடாமல் அவள்

ஆயுள்பரியந்தம் அவரை வைத்துக்கொண் டிருப்பாளென் பதையும் கோவிந்தன் விசாரணை செய்து அறிந்துகொண் டார். இதை அறிந்ததுமுதல் கோவிந்தன் என்ன செய்தா ரென்றும் எங்கே இருக்கிறாரென்றும் இப்போது தெரிய வில்லை.

## 13. செஷன்ஸ் கோர்ட்டு

செஷன்ஸ் கோர்ட்டில் இராஜாம்பாளின் கொலைக் கேஸ் விசாரணையாகப் போகிறதென்ற சங்கதி தெரிந்த வுடனே, பக்கத்துக் கிராமங்களில் உள்ள ஜனங்களெல் லாம் வேடிக்கை பார்ப்பதற்காகக் கூட்டங் கூட்டமாய் வந்து சேர்ந்தார்கள். காலை எட்டு மணிமுதல் கூட்டம் வர ஆரம்பித்துவிட்டபடியால் நியாயாதிபதி வந்து தம் ஸ்தானத்தில் உட்காரும்போது சுமார் ஐம்பதினாயிரம் ஜனங்கள் கோர்ட்டிலும் கோர்ட்டைச் சுற்றிலும் இருக் கும் வெளிப்புறத்திலும் கூடியிருந்தார்கள். ஜூரர்களை யெல்லாம் கூப்பிட்டு அவர்களில் ஒன்பது பேர் ஜூரர்க ளாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களும் அவர் களுக்கு ஏற்படுத்தியிருக்கும் இடங்களில் அமர்ந்தவுடனே, கோபாலனைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். கவர்ன் மென்ட் தரப்பில் பாரிஸ்டர் கொக்குதுரையவர்களும், கோபாலனுக்காக வக்கீல் துரைசாமி ஐயங்காரவர்களும் வாதிப்பதற்காக வந்திருந்தார்கள்.

ஜட்ஜ் துரையவர்கள் கோபாலனைப் பார்த்து, "நீ குற்றவாளியா? குற்றவாளியல்லவா?" என்று கேட்ட தற்கு, கோபாலன், "குற்றவாளியல்ல" என்று பதில் சொன்னான். அப்பால் பாரிஸ்டர் கொக்குதுரை, மாஜி ஸ்டிரேட் கோர்ட்டில் கேஸை எப்படி ஆரம்பித்தாரோ அப்படியே ஜூரர்களுக்கும் ஜட்ஜ்துரைக்கும் நன்றாய்ப் புலப்படும்படி அதைவிட ஜாஸ்தியாகக் கேசை ஆதிமுதல் அந்தம் வரையில் சவிஸ்தாரமாய்ச் சொல்லி முடித்தார். அப்பால் சாட்சிகளை விசாரிப்பதாகச் சொல்லி முதல் சாட்சியாகிய இன்ஸ்பெக்டர் மணவாள நாயுடுவைக் கூப்பிடச் சொன்னார்.

**பா. கொக்கு துரை :** இன்ஸ்பெக்டர் நாயுடவர்களே! இந்த வழக்கில் தங்களுக்குத் தெரிந்த விஷயங்களை விவரமாய்ச் சொல்லுங்கள்.

**மணவாள நாயுடு :** சென்ற ஜனவரிமீ 26வ புதன் கிழமை ராத்திரி இரண்டு மணிக்கு ராஜாம்பாளைக் காணுமென்ற சமாசாரம் தெரிவித்து அவளைக் கண்டு பிடிக்கச் சொன்னார்கள். அவள் பெட்டியைத் திறந்து பார்த்ததில், கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் முதல் காகிதம் அகப்பட்டது. முதல் நம்பர் காகிதத்திற் குறிப்பிட்ட இடத்தைப் போய்ப் பார்க்கையில் இரண்டாவதாகத் தாக்கல் செய்திருக்கும் கடிதம் அகப்பட்டது. அந்தக் காகிதத்திற் குறிப்பிட்ட இடத்திற்குப் போய்ப் பார்க்கையில் கைதி, தன் மார்பின்பேரில் பிரேதத்தைச் சாய்த்து வைத்துக்கொண்டு அழுவதாகப் பாவனை செய்து கொண்டிருந்தான். அவன் பக்கத்தில் ரத்தந் தோய்ந்த கட்டாரி கிடந்தது. பிரேதத்தை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டுக் கோபாலனை ஸ்டேஷனில் அடைத்து வைக்கச் செய்தேன். கொஞ்ச நேரத்திற்கு அப்பால் கொலை நடந்த இடத்தில் நன்றாய்த் தேடிப் பார்த்ததில், மூன்றாவது நம்பராகத் தாக்கல் செய்திருக்கும் கைக்குட்டை அகப்பட்டது.

**துரைசாமி ஐயங்கார் :** ராஜாம்பாள் இறந்ததற்குக் காரணம் என்ன?

**மணவாள நாயுடு :** டாக்டர்களைக் கேட்டால் விவரமாய்த் தெரியும்.

**துரைசாமி ஐயங்கார் :** வாஸ்தவந்தான்; கோபாலனைச் சிறையில் அடைத்தபோது டாக்டர்கள் அபிப்பிராயத்தைக் கேளாமல்தானே அடைத்தீர்கள்! அப்போது எந்த விதமாய்க் கோபாலன் கொலை செய்திருப்பானென்று நினைத்து அடைத்தீர்கள்?

**மணவாள நாயுடு :** கட்டாரியினால் குத்திக் கொன்றிருக்கலாம் என்று நினைத்து அடைத்தேன்.

**துரைசாமி ஐயங்கார் :** பின்னால் வேறு எந்தக் காரணங்களால் இறந்திருப்பதாகத் தெரியவந்தது?

**மணவாள நாயுடு:** துப்பாக்கியின் குண்டாலும், பாஷாணத்தினுலும், கட்டாரியின் குத்தாலும் இறந்ததாகத் தெரியவந்தது.

**துரைசாமி ஐயங்கார்:** தாங்கள் எத்தனே வருஷமாய்ப் போலீஸ் உத்தியோகத்தில் இருக்கிறீர்கள்?

**மணவாள நாயுடு:** சுமார் இருபத்துமூன்று வருஷமாக இருக்கிறேன்.

**துரைசாமி ஐயங்கார்:** துப்பாக்கியின் குண்டு பாய்ந்திருப்பதற்கும், கட்டாரியின் குத்திற்கும் வித்தியாசம் சுளுவில் தெரியுமா?

**மணவாள நாயுடு:** சாதாரணமாய்த் தெரியும்.

**துரைசாமி ஐயங்கார்:** போலீஸில் இருபத்து மூன்று வருஷம் அநுபோகம் இருப்பதால் தங்களுக்கு மாத்திரம் தெரியுமா? அல்லது துப்பாக்கியே கையாளாத என்னைப் போல் ஒத்தவர்களுக்கும் தெரியுமா?

**மணவாள நாயுடு:** எவருக்கும் எளிதில் தெரியும்.

**துரைசாமி ஐயங்கார்:** சாதாரணமாய் யாரும் கண்டுபிடிக்கக் கூடிய துப்பாக்கிக் குண்டு உடம்பில் பாய்ந்திருக்கும்போது, இருபத்துமூன்று வருஷமாய்ப் போலீஸ் உத்தியோகத்தை மிக்க கியாதியாய் வகித்திருந்த தங்களுக்குத் தெரியாமற்போனது என்ன?

**மணவாள நாயுடு:** இருட்டு நேரம் ஆனதாலும் நெருப்பால் கொளுத்தப்பட்டிருந்ததாலும் வித்தியாசம் கண்டுபிடிக்க முடியவில்லே.

**துரைசாமி ஐயங்கார்:** சரி, கொஞ்ச நேரத்துக்கு அப்பால் தேடினதில் கைக்குட்டை அகப்பட்டது என்றீர்களே! கொஞ்ச நேரம் என்ருல் எவ்வளவு நேரம்?

**மணவாள நாயுடு:** காலே சுமார் பத்து மணிக்கு.

**துரைசாமி ஐயங்கார்:** உடனே ஏன் தேடவில்லே?

**மணவாள நாயுடு:** சாவகாசம் இல்லே.

**துரைசாமி ஐயங்கார்:** இரண்டுமணி முதல் பத்துமணி வரையில் அங்கே யார் இருந்தார்கள்?

**மணவாள நாயுடு:** இரண்டு கான்ஸ்டேபில்கள் பாரா இருந்தார்கள்.

**துரைசாமி ஐயங்கார்:** அவர்கள் பாரா இருந்ததால் தாங்கள் போய்த் திரும்பி வரும் வரையில் அங்கே வேறே ஆட்கள் வர முடியாதே?

**மணவாள நாயுடு:** எப்படி வர முடியும்? எவரையும் உள்ளே விடக்கூடாதென்று கண்டிப்பாய்ச் சொல்லியிருந்தேன்.

**துரைசாமி ஐயங்கார்:** ஆனால் தாங்கள் போய்த் திரும்பி வந்த வரையில் அந்த இடத்திற்கு எவரும் வர வில்லை என்று தாங்கள் சத்தியம் பண்ண முடியுமா?

**மணவாள நாயுடு:** அந்தப் பாராக்காரர் வார்த்தையை நம்புவதாயிருந்தால் எவரும் வரவில்லையென்றே சொல்லவேண்டும்.

**துரைசாமி ஐயங்கார்:** கைக்குட்டையைச் சாம்பலுக்குள்ளிருந்து தாங்கள்தானா எடுத்தீர்கள்?

**மணவாள நாயுடு:** கோவிந்தன் எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தார். நான் அதை வாங்கிக்கொண்டேன்.

**துரைசாமி ஐயங்கார்:** கோவிந்தனை நீங்கள் அழைத்துக்கொண்டு போனீர்களோ?

**மணவாள நாயுடு:** நான் அழைத்துப் போகவில்லை. நான் போவதற்கு முன்னாலேயே தங்களோடு கோவிந்தன் வந்திருந்தார்.

**துரைசாமி ஐயங்கார்:** சற்று நேரத்திற்கு முன்பாக இரண்டு ஜவான்களைக் காவல் வைத்திருந்தீர்களென்றும், ஆகையால் எவரும் உள்ளே போயிருக்கமாட்டார்களென்றும் சொன்னீர்களே!

**மணவாள நாயுடு:** தாங்கள் வந்ததால், தங்களையும் கோவிந்தனையும் விட்டார்கள். தாங்கள் இரண்டு பேர்கள் தவிர வேறே எவரும் வந்திருக்கமாட்டார்களென்று சொன்னேன்.

**துரைசாமி ஐயங்கார்:** தாங்கள் எவரையும் விட வேண்டாமென்று சொல்லியிருக்கும்போது எங்களை விட்டதைப்போல், நல்ல சொக்காய், தலைக்குட்டை போட்டுக்கொண்டு வந்த வேறு மனிதர்களையும் விட்டிருக்கக்கூடு மல்லவா?

**மணவாள நாயுடு:** விட்டதாகத் தெரியவில்லை.

**துரைசாமி ஐயங்கார்:** கொலை செய்வதற்கு என்ன காரணம் இருந்திருக்கும் என்று நினைக்கிறீர்கள்?

**மணவாள நாயுடு:** கோபாலனுடைய சகிக்கக்கூடாத துர்க்குணங்கள் ராஜாம்பாளுக்குத் தெரிந்திருக்கு மென்றும், அதன் பேரில் அவள் கல்யாணஞ் செய்து கொள்ள மாட்டேனென்று சொல்லியிருப்பாளென்றும், அவளை உயிருடன் விட்டால் வெளியே சொல்லிவிடுவா ளென்னும் எண்ணத்துடன் கோபாலன் கொலை செய் திருப்பானென்றும் நினைக்கிறேன்.

**துரைசாமி ஐயங்கார்:** கோபாலன் கெட்டவன் என்ற சங்கதி எப்போது ராஜாம்பாளுக்குத் தெரிந் திருக்கலாமென்று நினைக்கிறீர்கள்?

**மணவாள நாயுடு:** அவள் இறப்பதற்குப் பதினைந்து நாட்களுக்கு முன்னால் அறிந்திருப்பாளென்று நினைக் கிறேன்.

**துரைசாமி ஐயங்கார்:** கோபாலன் மாத்திரம் கொலை செய்திருப்பானா? கூட எவரையாவது சேர்த்துக்கொண்டு கொலை செய்திருப்பானா?

**மணவாள நாயுடு:** கோபாலனுக்கு வேண்டியவர்கள் எவரையாவது சேர்த்துக்கொண்டு வந்திருக்கலாம்.

**துரைசாமி ஐயங்கார்:** அவர்கள் எவரென்று கண்டு பிடித்து விட்டீர்களா?

**மணவாள நாயுடு:** இன்னும் சரியாய்த் துப்புத் துலங்கவில்லை. கூடிய ஜல்தியில் கண்டு பிடிக்க முடியும்.

**துரைசாமி ஐயங்கார்:** கோபாலனிடத்தில் துப்பாக்கி உண்டா?

**மணவாள நாயுடு:** கோபாலனுக்குத் துப்பாக்கி வைத்துக்கொள்ள லைசென்சு இல்லை.

**துரைசாமி ஐயங்கார்:** கோபாலனுடைய வீட்டைச் சோதித்தீர்களே; அதில் விஷமாவது, துப்பாக்கியாவது, குண்டுகளாவது அகப்பட்டனவா?

**மணவாள நாயுடு:** இல்லை.

**துரைசாமி ஐயங்கார்:** விஷத்தைக் கோபாலன் வாங்கினதாகச் சாட்சியம் இருக்கிறதா?

**மணவாள நாயுடு:** இல்லே.

துரைசாமி ஐயங்கார் கேட்டு முடிந்தவுடனே, இரண்டாவது சாட்சியாகிய சாமி நாயுடுவைக் கூப்பிட்டார்கள்.

**பா. கொக்கு துரை:** சாமிநாயுடு, உமக்கு என்ன தெரியும்?

**சாமி நாயுடு:** 'என் தலையை இரண்டு துண்டாக வெட்டிவிட்டாலும் கிழக்கே உதிக்கிற சூரியன் மேற்கே உதித்தாலும் உன்னைக் கல்யாணஞ் செய்துகொள்ளமாட்டேன்' என்று ஜனவரிமீ 26வ புதன்கிழமை ராத்திரி ராஜாம்பாள் சொல்லக் கேட்டேன்.

**பா. கொக்கு துரை:** கூடப் பேசினது யாரென்று சொல்ல முடியுமா?

**சாமி நாயுடு:** கூடப் பேசினவர் மெதுவாகப் பேசினதனால் இன்னாரென்று திட்டமாய்த் தெரியாது.

**பா. கொக்கு துரை:** அப்பால் என்ன நடந்தது?

**சாமி நாயுடு:** ஒரு கதவு திறந்து மூடப்பட்டது; ஐந்து நிமிஷத்திற்கப்பால் குதிரை வண்டி ஒன்று அங்கேயிருந்து விரைவாக ஓடிற்று. பின்னால் பைசிகிள் வண்டி ஏறி யாரோ பின் தொடரக் கண்டேன்.

**பா. கொக்குதுரை:** வண்டியிலும் பைசிகிளிலும் போனவர் இன்னாரென்று சொல்ல முடியுமா?

**சாமி நாயுடு:** முடியாது.

**துரைசாமி ஐயங்கார்:** சாமிநாயுடு, கூடப் பேசினவர் மெதுவாகப் பேசினதனால் இன்னாரென்று திட்டமாய்த் தெரியாது என்றீரே! பேசினதே கேட்கவில்லேயா? அல்லது சத்தம் இன்னாருடையதென்றுதான் கண்டு பிடிக்க முடியவில்லேயா?

**சாமி நாயுடு:** கிசு கிசுவென்று பேசினதால் தெரியவில்லே.

**துரைசாமி ஐயங்கார்:** ராஜாம்பாள் கிசு கிசு வென்று பேசியிருந்தால் அப்படிப் பேசினது ராஜாம்

பாளென்று உம்மால் கண்டு பிடிக்க முடியுமா? முடியாதா?

**சாமி நாயுடு:** முடியும்.

**துரைசாமி ஐயங்கார்:** நல்லது; அப்படியே உமக்கு விசேஷப் பழக்கமுள்ளவர் ஒருவர் பேசியிருந்தால் அவருடைய குரலென்று சொல்ல முடியுமா? முடியாதா?

**சாமி நாயுடு:** முடியும்.

**துரைசாமி ஐயங்கார்:** கோபாலன் உமக்கு விசேஷப் பழக்கம் உடையவனு? இல்லையா?

**சாமி நாயுடு:** பழக்கம் உடையவன்தான்.

**துரைசாமி ஐயங்கார்:** ஆனால் அப்படிக் கிசு கிசு வென்று பேசியது கோபாலனு அல்லவா என்று சொல்ல முடியுமா?

**சாமி நாயுடு:** திட்டமாய்ச் சொல்ல முடியாது.

**துரைசாமி ஐயங்கார்:** கோபாலனுடைய குரலா யிருந்தால் உமக்குத் தெரியும் அல்லவா?

**சாமி நாயுடு:** அநேகமாய்க் கோபாலனுடையதல்ல வென்றே நினைக்கிறேன்.

**பா. கொக்கு துரை:** அநேகமாய்க் கோபாலனுடைய தல்ல என்று நினைக்கிறேன் என்றீரே! கோபாலனுடையது அல்லவென்று நிச்சயமாய்ச் சொல்லுவீரா!

**சாமி நாயுடு:** கோபாலனுடையதா யிருந்தாலும் இருக்கலாம்; ஆனால் அநேகமாய்க் கோபாலனுடைய தல்லவென்றே நினைக்கிறேன்.

உடனே மூன்றுவது சாட்சி நடேச சாஸ்திரி கூப்பிடப் பட்டார்.

**பா. கொக்கு துரை:** உமக்கு இந்தக் கேசில் என்ன தெரியும்?

**நடேச சாஸ்திரி:** ஜனவரிமீ 19உ சென்னைக்கு வந்த ராஜாம்பாள் என் வீட்டிற்கு அன்று மாலை நாலு மணிக்கு வந்தாள். கோபாலனிடத்தில் அநேக துர்க்குணங்களைக் கண்டு பிடித்ததாகவும், ஆகையால், நீலமேக சாஸ்திரி களைக் கல்யாணஞ் செய்துகொள்ளப்போவதாகவும் கல்யாணத்திற்கு முந்தின ராத்திரி கோபாலனைச் சந்தித்

துச் சகலமுஞ் சொல்லிவிட்டு நீலமேக சாஸ்திரிகளைக் கல்யாணஞ் செய்துகொள்வதாகவும் சொன்னாள்.

**துரைசாமி ஐயங்கார்:** நடேச சாஸ்திரிகளே, தாங்கள் காஞ்சீபுரத்திற்கு ஜனவரிமீ 27உ காலை ஒன்பது மணி ரெயிலுக்கு முதல் வகுப்பு வண்டியில் வந்ததாக மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் சொன்னது ஞாபகமிருக்கிறதா?

**நடேச சாஸ்திரி:** மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் சொன்னது என்ன? இப்போதும் அப்படியே சொல்லுகிறேன்.

**துரைசாமி ஐயங்கார்:** உங்களுக்கும் ராஜாம்பாளுக்கும் விரோதமென்றும் அவள் தங்கள் வீட்டிற்கு வருவதில்லையென்றும் சொன்னீர்களே! அப்படியிருக்க அன்று மாத்திரம் எப்படி வந்தாள்?

**நடேச சாஸ்திரி:** ஒருகால் இனி விரோதம் வைக்கக்கூடாதென்று வந்திருப்பாள்.

**துரைசாமி ஐயங்கார் :** அவள் வந்து போனது எவருக்கும் தெரியாதே?

**நடேச சாஸ்திரி:** எவருக்குத் தெரியுமென்று எனக்குத் தெரியாது.

**துரைசாமி ஐயங்கார் :** உமது வேலைக்காரர் கூட அப்போது அங்கே இல்லையோ?

**நடேச சாஸ்திரி:** எல்லோரும் வேலையாய் அப்போது வெளியே போயிருந்ததால் வீட்டில் யாரும் இல்லை.

பிறகு 4-வது சாட்சி காவன்னு துரை கூப்பிடப்பட்டார்.

**பா. கொக்கு துரை :** மிஸ்டர் காவன்னு ! ராஜாம்பாள் உடம்பில் எத்தனை காயங்கள் இருந்தன ! மரணம் என்ன காரணத்தால் சம்பவித்திருக்கும் ?

**காவன்னு துரை :** துப்பாக்கியின் குண்டு பாய்ந்த காயம் ஒன்று, கட்டாரியால் குத்தின காயமொன்று, ஆக இரண்டு காயங்கள் இருந்தன. அவள் இறப்பதற்குச் சுமார் ஐந்து மணி நேரத்திற்கு முன் விஷம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டுமென்றும் அபிப்பிராயப்படுகிறோம்.

**பா. கொக்கு துரை:** என்ன விஷம் என்று கண்டுபிடித்தீர்களா?

**காவன்னு துரை:** ஆம்; அபினித் திராவகம்.

**துரைசாமி ஐயங்கார்:** மேற்சொன்ன மூன்றில் ராஜாம்பாள் எதனுல் இறந்திருப்பாள்?

**காவன்னு துரை:** மூன்றில் ஏதாவது ஒன்றே அவளைக் கொல்லப் போதுமானது.

**துரைசாமி ஐயங்கார்:** துப்பாக்கியாற் சுட்டது முன்னுல் இருக்குமா? கட்டாரியால் குத்தினது முன்னுல் இருக்குமா?

**காவன்னு துரை:** இரண்டும் ஏககாலத்தில் இருக்குமென்று நம்புகிறேம்.

**துரைசாமி ஐயங்கார்:** இவ்விரண்டு வேலையையும் ஒருவன் ஏககாலத்திற் செய்ய முடியுமா?

**காவன்னு துரை:** ஒருவரால் செய்ய முடியவே முடியாது; இருவருடைய வேலை என்பதற்குச் சிறிதாவது சந்தேகம் கிடையாது.

**பா. கொக்கு துரை:** மிஸ்டர் காவன்னு! துப்பாக்கியின் குண்டு பாய்ந்ததும், கட்டாரியால் குத்தப்பட்டதும் ஏககாலத்தில் இருக்குமென்று நிச்சயமாய்ச் சொன்னீர்களே; எப்படி?

**காவன்னு துரை:** துப்பாக்கியின் குண்டு பாய்ந்த உடனேயாவது அல்லது கட்டாரியின் குத்து விழுந்த விநாடியேயாவது பிராணன் போயிருக்குமாதலாலும், பிராணன் போன பிற்பாடு இரண்டில் எந்தக் காயமாவது விழுந்திருந்தால் நன்முய்த் தெரியுமாதலாலும், இரண்டு காயங்களும் பிராணன் போவதற்கு முன்னுல் ஏற்பட்டவை ஆகையாலும், இரண்டு காயங்களும் ஏககாலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டுமென்பதைக் குறித்துச் சிறிதும் சந்தேகம் கிடையாது.

இப்படியே சர்ஜன் பால் துரையும் வாக்குமூலம் கொடுத்தார். அப்பால், 'கைதி பக்கத்தில் சாட்சிகள் இருக்கிறுர்களா?' என்று கேட்க, துரைசாமி ஐயங்கார் சாட்சிகள் இருக்கிறுர்கள் என்று சொல்லி முதல் சாட்சியாகிய சாமிநாத சாஸ்திரிகளை அழைத்தார்.

**துரைசாமி ஐயங்கார்:** சாஸ்திரிகளே! ராஜாம்பாள் ஜனவரிமீ 26உ புதன்கிழமை ராத்திரி கோபாலனைச்

சந்திக்கப் போகும்போது என்ன அபிப்பிராயத்தோடு போனுளென்று தங்களுக்குத் தெரியுமா?

**சாமிநாத சாஸ்திரி :** கோபாலனைக் கல்யாணஞ் செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன் போனுள்.

**துரைசாமி ஐயங்கார் :** அந்த எண்ணத்தோடு போனுளென்று தங்களுக்கு எப்படித் தெரியும்?

**சாமிநாத சாஸ்திரி :** போகும்போது எனக்கு இக் கடிதம் என் மேஜையின் பேரில் வைத்துவிட்டுப் போனுள்; அதை வாசித்துப் பார்த்தால் என்ன எண்ணத்துடன் போனுளென்று நன்ருய் விளங்கும்.

முன்பு குறித்திருக்கும் கடிதத்தைத் துரைசாமி ஐயங்கார் வாசித்துக் காண்பித்து அதைத் தாக்கல் செய்து கொள்ள வேண்டுமென்று சொன்னுர். மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் அக் கடிதத்தைத் தாக்கல் செய்யாததால் இப்போது அதைத் தாக்கல் செய்யக்கூடாதென்று கொக்கு துரை ஆட்சேபித்தார். துரைசாமி ஐயங்கார் கடைசி நிமிஷத்திற்கூடத் தாக்கல் செய்யச் சட்டம் இருக்கிறதென்று சொன்னதன்பேரில் தாக்கல் செய்து கொள்ளப்பட்டது.

**துரைசாமி ஐயங்கார்:** ஜனவரி மீ 19௳ புதன்கிழமை சாயங்காலம் நாலு மணிக்கு ராஜாம்பாள் எங்கே இருந்தாளென்று தங்களுக்குத் தெரியுமா?

**சாமிநாத சாஸ்திரி :** தெரியும்; ஜனவரிமீ 19௳ புதன்கிழமை சாயங்காலம் மூன்றரை மணிமுதல் ஆறுமணி வரையில் டாக்கர் ஷாப்பில் நானும் அவளும் நகை வாங்கிக்கொண் டிருந்தோம்.

**துரைசாமி ஐயங்கார்:** கோபாலனுக்கும் ராஜாம்பாளுக்கும் எப்போதாவது விரோதம் உண்டா?

**சாமிநாத சாஸ்திரி:** விரோதமே கிடையாது. இருவரும் இரண்டு உடம்பும் ஓர் உயிரும் போல் இருந்தார்கள். மேலும் ராஜாம்பாளுக்குத் தீங்கு வருவதாகத் தெரிந்தால் கோபாலன் தன் உயிரைக் கொடுத்தாகிலும் அவளைக் காப்பாற்றியிருப்பானே தவிர அவன் கொன்றிருக்க மாட்டானென்று நான் சத்தியங்கூடச் செய்வேன்.

**பா. கொக்கு துரை:** ஜனவரி மீ 19உ புதன்கிழமை சாயங்காலம் மூன்றரை மணிமுதல் ஆறுமணி வரையில் டாக்கர் ஷாப்பில் நகை வாங்கிக்கொண் டிருந்தோம் என்றீர்களே! தாங்கள் நகை வாங்கினது 19உ புதன்கிழமை தானென்று தங்களுக்கு எப்படித் தெரியும்?

**சாமிநாத சாஸ்திரி:** நான் எப்போதும் டைரி எழுதி வைப்பது வழக்கமாதலால் அந்த டைரியில் இதுவும் எழுதியிருப்பதால் அதைப் பார்த்துச் சொன்னேன்.

**பா. கொக்கு துரை:** இப்போது ராஜாம்பாள் எழுதின கடிதம் ஒன்று கோர்ட்டில் தாக்கல் செய்தீர்களே! அந்தக் கடிதம் எப்போது தங்களுக்கு அகப்பட்டது?

**சாமிநாத சாஸ்திரி:** ராஜாம்பாள் இறந்த மறுநாளே அகப்பட்டது.

**பா. கொக்கு துரை;** அப்போதே அகப்பட்டிருந்தால் உடனே தாங்கள் ஏன் ஆஜர்ப்படுத்தவில்லை ?

**சாமிநாத சாஸ்திரி:** அக் காகிதம் எனக்கு எழுதப் பட்டிருந்ததால், நான் மற்றவர்களுக்குக் காண்பிக்க வேண்டிய பிரமேயம் இல்லையாதலாலும், என் நண்பர் துரைசாமி ஐயங்காரவர்கள் அப்போது கடிதத்தைக் குறித்து வெளியில் பிரஸ்தாபப் படுத்த வேண்டாமென்று சொன்னதனாலும் நான் அப்போது ஆஜர்ப்படுத்தவில்லை.

**பா. கொக்கு துரை:** இன்று சாட்சி சொல்ல வரும்படி தங்களுக்குச் சம்மன் வந்ததா? இல்லாவிட்டால் எப்படி ஆஜரானீர்கள்?

**சாமிநாத சாஸ்திரி:** சம்மன் வரவில்லை. துரைசாமி ஐயங்காரவர்கள் வரச்சொல்லி நேரில் சொன்னதால் வந்தேன்.

இரண்டாவது சாட்சியாகிய டாக்கர் ஷாப்பு குமாஸ்தா சுப்புபிள்ளை கூப்பிடப்பட்டார்.

**துரைசாமி ஐயங்கார்:** தங்களுடைய வேலை என்ன?

**சுப்பு பிள்ளை:** டாக்கர் ஷாப்பிற்கு வரும் காகிதங்களை ரிஜிஸ்டர் செய்வதும், மற்ற வேளைகளில் ஷாப்பிலிருந்து நகைகள் விற்பதும் என்னுடைய வேலை.

**துரைசாமி ஐயங்கார்:** சாமிநாத சாஸ்திரிகளிடமிருந்து ஜனவரி மாதம் டாக்டர் ஷாப்புக்குக் கடிதம் ஏதாவது வந்ததா?

**சுப்பு பிள்ளை:** ஜனவரிமீ 17உ ஒரு கடிதம் வந்தது.

**துரைசாமி ஐயங்கார்:** அதில் என்ன எழுதியிருந்தது?

**சுப்பு பிள்ளை:** ஜனவரிமீ 19உ புதன்கிழமை சாயங்காலம் மூன்றரை மணிக்கு வந்து அவர்கள் ஆர்டர் செய்த மோதிரத்தை வாங்கிப் போவதாகச் சாமிநாத சாஸ்திரிகள் எழுதியிருந்தார்கள்.

**துரைசாமி ஐயங்கார்:** குறிப்பிட்ட நேரத்தில் வந்தார்களா? வந்திருந்தால் சாமிநாத சாஸ்திரிகள் மட்டும் வந்தார்களா? அல்லது கூட யாரையாவது கூட்டிக்கொண்டு வந்தார்களா?

**சுப்பு பிள்ளை:** சாமிநாத சாஸ்திரிகளும், அவர் புத்திரியாகிய ராஜாம்பாளும் வந்தார்கள்.

**துரைசாமி ஐயங்கார்:** எத்தனை மணிக்கு வந்தார்கள்?

**சுப்பு பிள்ளை:** சரியாய் மூன்றரை மணிக்கு வந்தார்கள்.

**துரைசாமி ஐயங்கார்:** எப்போது திரும்பிப் போனார்கள்?

**சுப்பு பிள்ளை:** ஆறு மணிக்குத் திரும்பிப் போனார்கள்.

**துரைசாமி ஐயங்கார்:** ஆனால் மூன்றரை மணி முதல் ஆறுமணி வரையில் உங்கள் ஷாப்பில்தான் இருவரும் இருந்தார்களோ?

**சுப்பு பிள்ளை:** ஆம்; ஷாப்பிலேயே உட்கார்ந்திருந்தார்கள்.

**பா. கொக்கு துரை:** சாமிநாத சாஸ்திரிகளுடன்கூட ராஜாம்பாளும் வந்ததாகச் சொன்னீர்களே; கூட வந்தது ராஜாம்பாள்தான் என்று தங்களுக்கு எப்படித் தெரியும்?

**சுப்பு பிள்ளை:** இப்போது என்னைக் கேட்பது பாரிஸ்டர் கொக்கு துரை என்பது எனக்கு எப்படித் தெரியுமோ, அப்படியே அன்று வந்தது ராஜாம்பாளென்றும் எனக்குத் தெரியும்.

**பா. கொக்கு துரை:** நான் நெடுநாளாக உங்கள் ஷாப்பில் லேவாதேவி செய்துகொண் டிருப்பதால் என்னைத் தெரியும். ராஜாம்பாளை எப்படித் தெரியும்?

**சுப்பு பிள்ளை:** ராஜாம்பாளுக்கு ஐந்து வயசானது முதல் சாமிநாத சாஸ்திரிகள் ராஜாம்பாளைக் கூட அழைத்துக்கொண்டு வந்து அவள் எந்த நகைகளைக் கேட்கிறுளோ அவைகளை வாங்கிக் கொடுப்பது வழக்கம். ராஜாம்பாள் எப்போதும் விலை உயர்ந்த நகைகளை வேண்டாமென்று சொல்லி, சொற்ப விலையுள்ள நகைகளையே சிறு குழந்தை முதலே விரும்பியதால், எங்கள் ஷாப்பில் இருக்கும் ஒவ்வொரு வேலைக்காரருக்கும் ராஜாம்பாளை நன்ருய்த் தெரியும்.

**பா. கொக்கு துரை:** மூன்றரை மணிமுதல் ஆறு மணிவரையில் ஷாப்பில் இருந்ததாகச் சொன்னீர்களே; ஏன் அவ்வளவு நேரம் அவர்கள் அங்கே இருந்தார்கள்?

**சுப்பு பிள்ளை:** மோதிரம் தயாராக அவ்வளவு நேரம் பிடித்தது; இன்னும் ஏன் வீட்டிற்குப் போய்த் திரும்பி வர வேண்டுமென்று அங்கேயே இருந்தார்கள்.

**பா. கொக்கு துரை:** டாக்கர் ஷாப்பைப்போல் சிறந்த பேரெடுத்த வியாபாரிகள், சாமிநாத சாஸ்திரிகள் இரண்டு நாளைக்கு முன்னுலேயே வருவதாகக் குறிப்பிட்டு எழுதி யிருக்கும்போது, அவர் வரும்போது நகை தயார் செய்யாமல் இருந்தார்கள் என்பதை எப்படி நம்பக்கூடும்?

**சுப்பு பிள்ளை:** குறிப்பிட்ட நேரத்தில் கட்டாயமாய்க் கொடுப்பதே எங்கள் ஷாப்பின் வழக்கம். ஆனுல் அவர்கள் கேட்டிருந்தபடி சித்திரவேலை செய்யும் முருகேச பத்தரின் பெண்சாதி அதற்கு முந்தின நாள் இறந்துபோனதால் அவர் வேலைக்கு வரவில்லை. வேறே தகுதியான ஆளைப் பிடித்துச் செய்வதற்குத் தாமதப்பட்டது.

மூன்ருவது சாட்சியாக எழும்பூர் ஸ்டேஷனில் டிக்கட்டுக் கொடுக்கும் முகுந்தராயரைக் கூப்பிட்டார்கள்.

**துரைசாமி ஐயங்கார்:** எழும்பூரிலிருந்து ஜனவரி மீ 27உ காலை ஆறுமணிக்குப் புறப்படும் மெயில் டிரெயினில் காஞ்சீபுரத்திற்கு யாருக்காவது முதல் வகுப்பு டிக்கட்டு கொடுத்தீர்களா?

முகுந்தராயர்: அன்று காஞ்சீபுரத்திற்கு அந்த வண்டியில் பிரயாணஞ் செய்ய யாரும் முதல் வகுப்பு டிக்கட்டு வாங்கவில்லை.

நான்காவது சாட்சியாகிய ஷெல்லி துரை கூப்பிடப் பட்டார்.

**துரைசாமி ஐயங்கார்:** மிஸ்டர் ஷெல்லி, தங்கள் வேலை என்ன?

**ஷெல்லி துரை:** தப்புக் கையெழுத்துக்களா அல்லவா என்று கண்டுபிடிக்கும் வேலை.

**துரைசாமி ஐயங்கார்:** தாங்கள் அந்த வேலையில் தேர்ந்தவர்களா?

**ஷெல்லி துரை:** ஆம்.

ராஜாம்பாளுக்குக் கோபாலனுல் எழுதப்பட்டு முதலாவதாகக் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட கடிதத்தை நியாயாதிபதியிடமிருந்து துரைசாமி ஐயங்கார் வாங்கி ஷெல்லி துரையிடம் கொடுத்துப் பின்வரும் கேள்விகளைக் கேட்டார்.

**துரைசாமி ஐயங்கார்:** மிஸ்டர் ஷெல்லி! அந்தக் கடிதத்தை நன்ருய்ப் பார்த்து அதில் எழுதியிருக்கும் எழுத்துக்களெல்லாம் ஒரே இங்கியால் எழுதப்பட்டிருக்கின்றனவா? அல்லது ஏதாவது மாறுதல் இருக்கிறதா என்று சொல்லுங்கள்.

**ஷெல்லி துரை:** நான் பூதக்கண்ணுடியின் உதவியால் கால்மணி நேரம் பார்த்ததில் ஒரே ஓர் எழுத்து மாத்திரம் வேறு இங்கியால் எழுதப்பட்டதாகத் தெரிகிறது.

**துரைசாமி ஐயங்கார்:** எந்த எழுத்து?

**ஷெல்லி துரை:** 12 மணிக்கு என்று எழுதியிருப்பதில் இரண்டுக்கு முன்னுலிருக்கும் ஒன்று வேறே இங்கியால் எழுதப்பட்டதாகத் தெரிகிறது.

**துரைசாமி ஐயங்கார்:** ஆனுல் முதலில் இரண்டுமணியென்று எழுதப்பட்டிருக்கிறது. அப்பால் அதற்கு முன்னுல் ஒன்றைப் போட்டதால் 12-மணி என்று ஆயிற்ருே?

**ஷெல்லி துரை:** ஆம்.

**பா. கொக்கு துரை:** மிஸ்டர் ஷெல்லி! தாங்கள் இந்த வேலையில் தேர்ந்தவர்கள் என்றீர்களே! ஏதாவது பரீட்சையில் தேறியிருக்கிறீர்களா?

**ஷெல்லி துரை:** நான் பரீட்சையில் தேறவில்லை. எனக்கு அதிக அநுபோகம் இருப்பதால்தான் இந்தியா முழுவதிலும் இப்பேர்ப்பட்ட சந்தேகங்கள் வந்தால் என்னைக் கூப்பிட்டுச் சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்வது வழக்கம்.

**துரைசாமி ஐயங்கார்:** கனம் பொருந்திய நியாயாதிபதியவர்களே! கோபாலன் குற்றவாளி அல்லவென்று பரிஷ்காரமாய் ருஜுப்படுத்தும் சாட்சியங்களைச் சென்னை கோவிந்தன் கண்டுபிடித்திருப்பதாகவும் அந்தச் சாட்சியங்களையெல்லாம் இன்று கொண்டுவருவதாகவும் எழுதியிருக்கிறார். இதுவரையில் வராததால் ஏதோ தடுக்கக் கூடாத அவசரமாகிய காரியம் ஏற்பட்டிருக்குமென்று நம்புகிறேன். தங்களுக்குக் கோவிந்தனுடைய யோக்கியதை தெரிந்திருப்பதால் தகுந்த காரணம் இல்லாமல் அவர் நிற்க மாட்டாரென்று நான் சொல்லாமலே தங்களுக்குத் தெரியும். ஆகையால் தயவுசெய்து இரண்டொரு நாள் இந்தக் கேசை நிறுத்தி வைக்கும்படி தங்களுடைய மேலான கனத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**பா. கொக்கு துரை:** கனம் பொருந்திய நியாயாதிபதியவர்களே! இந்தக் கட்டத்தில் கேசை நிறுத்திவைப்பது நியாயம் அல்ல. இன்றைய தினம் இந்தக் கேஸ் எடுக்கப்படுமென்று நன்குணர்ந்த கோவிந்தன் வாஸ்தவமாகச் சாட்சியங்களைக் கண்டுபிடித்திருந்தால் தமக்கு வர அவகாசம் இல்லாவிட்டாலும் வேறே யாரிடத்திலாவது கொடுத்தனுப்பியிருப்பாரல்லவா? அப்படி அனுப்பாததே போதுமான சாட்சியங்கள் இல்லையென்பதற்கு அடையாளமாய் இருக்கிறது. மேலும் கோபாலன் விஷயத்தில் ஏராளமான பொருளைச் செலவிட அநேகர் தயாராக இருப்பதால் இந்தக் கேசை நிறுத்தவே கூடாதென்றும், அப்படி இல்லையென்று தாங்கள் நிறுத்தினாலும் ஜூரர்

களை வெளியே விடாமல் சரியானபடி பந்தோபஸ்தில் தங்கள் பங்களாவிலேயே வைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். நான் இப்படிச் சொல்லுவது, கனம்பொருந்திய ஜூரர்கள் நியாயந் தப்பி நடப்பார்களென்ற சந்தேகத்தினால் அல்ல. அவர்களுடைய நன்மையைக் கருதியே, அவர்களைக் குறித்துக் கேவலமாகிய ஒரு வார்த்தை வரக்கூடாதென்ற எண்ணத்தினால்தான் இப்படிச் சொல்லுகிறேன்.

**நியாயாதிபதி:** இந்தக் கட்டத்தில் கேசை நிறுத்தி வைக்க எனக்கும் இஷ்டமில்லையாதலால், கொக்கு துரையவர்களே! தாங்கள் தங்களுடைய கேஸின் சாராம்சங்களை எடுத்துக் கூறலாம்.

**பா. கொக்கு துரை:** கனவான்களாகிய ஜூரர்களே! புத்தியிற் சிறந்த தாங்கள் இந்த வழக்கு ஆரம்பமானது முதலே அதிகக் கவனமாய்ச் சாட்சியங்களை யெல்லாம் கேட்டுக்கொண் டிருந்தீர்களாதலால் கைதி குற்றஞ் செய்திருப்பானென்ற தீர்மானத்தைத் தவிர வேறு விதமான தீர்மானத்திற்கு வருவது முடியாத காரியம். இருந்தாலும், நான் சொல்லும் முக்கியமான சில விஷயங்களை மாத்திரம் தயவுகூர்ந்து கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். ராஜாம்பாள் சிறு குழந்தை முதலே நற்குண நற்செய்கைகளிற் சிறந்தவளென்றும், எவரையும் வருத்தத்திற்கு உட்படுத்தினவள் அல்லவென்றும், ஆகையால் அவளுக்கு விரோதிகளே இல்லை என்றும் தெரிகிறது. மேலும், ராஜாம்பாள் கொலைசெய்யப்பட்ட அன்று உலகளந்த பெருமாள் கோவில் தெரு, 25-வது நெம்பர் வீட்டிற்கு ராத்திரி 12 மணிக்கு ராஜாம்பாளை வரச்சொல்லிக் கைதி கடிதம் எழுதியிருக்கிறான். அந்த இடத்தில், ‘என் தலையை இரண்டு துண்டாக வெட்டிவிட்டாலும், கிழக்கே உதிக்கிற சூரியன் மேற்கே உதித்தாலும் உன்னைக் கல்யாணஞ் செய்துகொள்ளமாட்டேன்’ என்று ராஜாம்பாள் சொன்னதைச் சாமி நாயுடு கேட்டார். மேலும் அந்த இடத்தில் தேடிப் பார்த்ததில், ‘மோசம் போனேன்; கோபாலன் என்னைச் சுடலைமாடன் கோவில் தெரு, 29-வது நெம்பர் வீட்டிலுள்ள குதிலில்’ என்று ராஜாம்பாள் கைப்பட

எழுதிய கடிதம் அகப்பட்டுவிட்டது. சுடலைமாடன் கோவில் தெரு, 29-வது நெம்பர் வீட்டில் போய்ப் பார்க்கையில், ராஜாம்பாள் பிணத்தைத் தன் மார்பின்மேல் சாய்த்துக்கொண்டு கோபாலன் உட்கார்ந்திருந்தான். இவ்வளவும் போதாதென்றால், 'கோ' என்னும் எழுத்தை ஓர் ஓரத்தில் எழுதப்பட்ட ரத்தந் தோய்ந்த கைக்குட்டை யொன்று கொலை செய்த இடத்தில் துண்டு துண்டாய்க் கிழித்துச் சாம்பலில் மறைக்கப்பட்டிருந்தது. இத்தனை சாட்சியங்களில் ஏதாவது ஒன்றைக் கொண்டே இதுவரையில் அநேகரைக் குற்றவாளியென்று தீர்மானித்திருக்கிறார்கள். இவ்வளவு சாட்சியங்கள் இருக்கும்போது தாங்கள் வேறுவிதமான அபிப்பிராயத்திற்கு வர முடியாதென்று நான் நிச்சயமாய் நம்புகிறேன்.

**துரைசாமி ஐயங்கார்:** கனவான்களாகிய ஜூரர்களே! என் நண்பர் கொக்கு துரையவர்கள் இப்போது சாமர்த்தியமாகப் பேசிய வார்த்தைகளினால் தாங்கள் ஒருவிதமான அபிப்பிராயத்திற்கு வந்திருக்கமாட்டீர்களென்று நம்புகிறேன். அப்படி உங்களில் எவராவது ஒருவித அபிப்பிராயத்திற்கு வந்திருந்தாலும், அதை மறந்துவிட்டு நான் எடுத்துக்காட்டும் ஒவ்வொரு விஷயத்தையும் நன்றாய்க் கவனித்து, நான் சொல்லுவதில் எது நியாயமென்று தங்களுக்குத் தோன்றுகிறதோ அதை மாத்திரம் எடுத்துக்கொண்டு நியாயமென்று தோன்றாதவைகளைத் தள்ளிவிடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். சாதாரணமாக ஜூரர்கள் கோர்ட்டுகளில் வரும் குளிர்ந்த காற்றினால் உட்கார்ந்தபடியே தூங்கிக்கொண்டிருந்துவிட்டுக் கடைசியில் குற்றவாளியா குற்றவாளியல்லவா என்று கேட்டால் ஜூரர்களின் தலைவராக நியமிக்கப்படுகிறவர் எப்படி அபிப்பிராயங் கொள்ளுகிறாரோ அப்படியே தங்களுடைய அபிப்பிராயமென்று தலையை அசைத்துவிட்டுப் போவது வழக்கமாயிருக்கிறது. ஜூரர்களை நியமிப்பது எதற்காகவென்று நான் சொல்லித் தங்களுக்குத் தெரியவேண்டியதில்லை. இருந்தாலும் ஜூரர்களுடைய கடமைகளையும் அவர்கள் சரியானபடி தங்களுடைய வேலைகளைச் செய்யாவிட்டால் அதனால் ஏற்படும் கேடுகளையும் சொல்லுகிறேன்.

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஐந்துக்களிலெல்லாம் சிறந்த ஜன்மம் மானிடப் பிறவி. ஏனென்ருல், மானிட ஜன்மமாகிய நமக்குத்தான் நன்மை அல்லது தீமையென்று பகுத்தறியும் சக்தியைக் கடவுள் கொடுத்திருக்கிருர். எவனேயோ குற்றவாளியா அல்லவா என்று விசாரணே செய்யும்போது நாம் ஏன் அவ்வளவு சிரத்தையாய்க் கவனிக்கவேண்டும் என்னும் எண்ணம் கொள்ளாமல் நமது சொந்த வேலேயாயிருந்தால் எவ்வளவு ஊக்கத்துடனும் கவனத்துடனும் ஜாக்கிரதையுடனும் பார்ப்போமோ அதைவிட அதிகமாகக் கவனித்து அற்ப விஷயங்களேக்கூடக் கவனித்துப் பார்த்தால்தான் உண்மை இன்னதென்று விளங்கும். ஜூரர்களுடைய பொதுவான வேலேயே அப்படி இருக்க, நம்மைப்போல் உள்ள ஒருவன் கொலே செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கும் போது எவ்வளவு ஜாக்கிரதையாய்க் கவனித்துக் குற்றவாளியா அல்லவா என்று தாங்கள் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது? தாங்கள் கைதியை அநியாயமாய்க் குற்றவாளியென்று சொன்னுல் அதனுல் வரும் பாவங்கள் தங்கள் எல்லோரையும் சேரும். ஆகையால் நன்ருய் ஆய்ந்து ஓய்ந்து பார்த்துத் தீர்மானிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்போது கொலே செய்ததாகச் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கும் கோபாலன் சாமானியமானவன் அல்லன்: நற்குண நற்செய்கைகளில் நிகரற்றவன். சகல சாஸ்திரங்களேயும் படித்தவன். அப்பேர்ப்பட்டவன் கொலே செய்வானு? சாதாரணமான ஒருவன் கொலே செய்வதாயிருந்தால்கூட நிஷ்காரணமாய்க் கொலே செய்ய மாட்டான் அல்லவா? அப்படியிருக்க, நற்குணங்களிற் சிறந்த கோபாலன் கொலேசெய்ததற்குக் காரணம் என்ன இருக்கலாமென்று பாரிஸ்டர் கொக்கு துரையும், மணவாள நாயுடுவும் அபிப்பிராயப்பட்டு ருபிக்க முயன்ருர்களென்றும், அவர்கள் சாட்சியங்களால் ருபித்தார்களா என்றும் சற்றுக் கவனியுங்கள். கோபாலனுடைய சகிக்கக்கூடாத துர்க்குணங்களே ராஜாம்பாள் கண்டுபிடித்ததாகவும், அதனுல் கோபாலனேக் கல்யாணஞ் செய்துகொள்ளக் கூடாதென்னும் எண்ணத்துடன் நீலமேக சாஸ்திரிகளேக்

கல்யாணஞ் செய்துகொள்ள ஒப்புக்கொண்டதாகவும், இனிக் கோபாலனுடைய துர்க்குணங்களை ராஜாம்பாள் வெளியே சொல்லிவிடுவாளென்னும் எண்ணத்துடன் கோபாலன் கொலை செய்திருப்பானென்றும் அபிப்பிராயங்கொண்டு ரூபிக்க முயன்றார்கள். அப்படி ரூபிப்பதற்கு நடேச சாஸ்திரிகளைச் சாட்சியாகக் கூப்பிட்டார்கள். சிறு குழந்தை முதலே நடேச சாஸ்திரிகளுக்கும் ராஜாம்பாளுக்கும் விரோதம் என்று நடேச சாஸ்திரிகளே ஒப்புக் கொண்டார்.

ஜனவரி மீ 19௳ சென்னைக்குப் போன ராஜாம்பாள் நடேச சாஸ்திரிகள் வீட்டிற்கு நாலடித்துப் பத்து நிமிஷத்திற்குப் போனதாகவும், அப்போது அவள் கோபாலனுடைய துர்க்குணங்களைக் கண்டு பிடித்ததால் தான் கோபாலனைக் கல்யாணஞ் செய்துகொள்ளவில்லை என்று சொன்னதாகவும் நடேச சாஸ்திரி சொன்னாரே; அப்படி அவர் சொன்னது முழுதும் புரட்டென்றும் ராஜாம்பாள் நடேச சாஸ்திரிகளின் முகத்தைக்கூடப் பார்த்திருக்க மாட்டாளென்றும் நம்ப இடமிருக்கிறது. எந்த நேரத்தில் இவர் வீட்டிற்கு வந்ததாகச் சொல்லுகிறாரோ அதே நேரத்தில் டாக்கர் ஷாப்பில் நகைகள் வாங்கிக்கொண் டிருந்ததாக நான் ரூபித்து விட்டதால் நடேச சாஸ்திரி சொன்னது சந்தேகம் இல்லாமல் பொய் என்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் ஏற்பட்டுவிட்டது. மேலும் ஜனவரிமீ 27௳ காலை ஆறுமணி ரெயிலில் முதல் வகுப்பு டிக்கட்டு வாங்கிக்கொண்டு வந்ததாக நடேச சாஸ்திரி சொன்னாரே அதுவும் பொய்யென்று ருஜுப் படுத்திவிட்டேன். 27௳ முதல் வகுப்பு வண்டி ஏறி வந்தேனென்று சொன்னதற்கும் நமது கேசுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையென்றாலும் இந்த அற்ப விஷயங்களுக்கெல்லாம் பொய் சொல்லும் ஒருவருடைய வார்த்தையில் எவ்வளவு நம்பிக்கை வைக்கலாமென்று காட்டுவதற்காகவே அது பொய்யென்று ருஜுப்படுத்தினேன். இன்னும் அந்த விஷயத்தைக் குறித்துக் கொஞ்சமாவது சந்தேகம்இருந்தால் ராஜாம்பாள் ஜனவரி மாதம் 26௳ வீட்டை விட்டு வெளியே போகும்போது அவளுடைய தகப்பனுருக்கு எழுதிய கடிதத்தால் பரிஷ்

காரமாய்க் கோபாலனைக் கல்யாணஞ் செய்துகொள்வதற் காகவே போனதாக ஏற்படுகிறது.

கனவான்களே! தன்னைக் கல்யாணஞ் செய்துகொள்ள வேண்டுமென்று விரும்பி வந்த பெண்ணைக் கோபாலன் கொன்றானென்றால் அதை எப்படி நம்பக்கூடும்? கோபாலன் ராஜாம்பாளை இரண்டு மணிக்கு வரச்சொல்லி எழுதியிருந்தான். அந்த இரண்டுக்கு முன்னால் வாஸ்த வத்தில் யார் கொலை செய்தார்களோ அவர்கள் ஒன்றைப் போட்டு இரண்டு மணி என்பதைப் பன்னிரண்டு மணியாக ஆக்கியிருக்கிறார்கள். ஷெல்லி துரையவர்கள் கொடுத்த சாட்சியத்தால் அப்படி மாற்றப்பட்டிருக்கிற தென்று ருஜுவாகி யிருக்கிறது. அப்பால், ‘மோசம் போனேன் கோபாலா, என்னைச் சுடலைமாடன் தெரு, 29-வது நெம்பருள்ள வீட்டில் குதிலில்’ என்று ராஜாம்பாள் எழுதி யிருக்கிறாள். அதைப் பாரிஸ்டர் கொக்கு துரையவர்கள் ‘மோசம் போனேன்; கோபாலன் என்னைச் சுடலைமாடன் கோவில்தெரு, 29-வது நெம்பர் வீட்டில் குதிலில்’ என்று வாசித்தார்கள். ‘கோபால[redacted]’ என்பதில் கடைசியிலுள்ள எழுத்துத் தெரியாததால் அவருக்கு எப்படிச் சொன்னால் அநுகூலமோ அப்படி, ‘கோபாலன்’ என்று வாசித்துவிட்டார்.

அது ‘கோபாலா’ என்று இருந்திருக்கும். ‘கோபாலா’ என்று போட்டு வாசித்தால் என்ன ஆகிறது பாருங்கள். ‘மோசம் போனேன்; கோபாலா, என்னைச் சுடலைமாடன் தெரு***’’ என்றால் அர்த்தம் எப்படி மாறிவிடுகிறது பார்த்தீர்களா! கனவான்களே! முந்தின காரியாதி களையும் பிந்தின காரியாதிகளையும் யோசித்தால் நான் எப்படி வாசித்தேனோ அப்படியே இருந்திருக்குமென்று தான் தாங்கள் நினைப்பீர்களல்லாது பாரிஸ்டர் கொக்கு துரை வாசித்ததைப் போல் இருக்காதென்று நம்ப ஏது இருக்கிறது. அப்படி இல்லையென்று சற்றுச் சந்தேகம் இருந்தாலும், அந்தச் சந்தேகத்தினால் ஏற்படும் அநு கூலம் கைதிக்குத்தான் சேரும். உலகளந்த பெருமாள் கோவில் தெரு, 25-ம் நெம்பர் வீட்டில் ராஜாம்பா ளோடு பேசினது அநேகமாய்க் கோபாலன் அல்ல வென்றே நினைக்கிறேனென்று சாமி நாயுடு சொன்னாரே!

ராஜாம்பாள் குரலைக் கண்டுபிடித்தவர் கோபாலனுடைய குரலாயிருந்தால்அதையும் கண்டுபிடித்திருப்பாரல்லவா? ஆகையால் சாமி நாயுடுவுக்கு நன்ருய்த் தெரியாத ஒருவர் கொலை செய்ததாக ஏற்படுகிறதல்லவா?

கனவான்களே! கொலை செய்தவன் கொலை செய்த உடனே ஓடிப்போவாஞ? அல்லது உட்கார்ந்துகொண்டு பிணத்தை எடுத்துத் தன் மார்பின்மேல் சாய்த்துக் கொண்டு அழுதுகொண் டிருப்பாஞ? இதைச் சற்று யோசித்துப் பாருங்கள். தான் கொலை செய்திருந்தால் அந்தப் பிணத்தின் சமீபத்தில் இருக்கவே கொலை செய்தவனுக்குச் சாத்தியமாகாதே. அப்படியிருக்க, கொலை செய்தவன் பிணத்தை எப்படித் தன் மார்பின்மேல் சாய்த்து வைத்துக்கொண்டு உட்கார்ந்திருப்பான்?

அப்பால் அஸிஸ்டன்ட் சர்ஜன் காவன்ஞ துரையினுடைய வாக்கு மூலத்தாலும், சர்ஜன் பால் துரையின் வாக்குமூலத்தாலும் என்ன ஏற்படுகிறது? கட்டாரியால் குத்தின காயம் ஒன்று; துப்பாக்கியின் குண்டு பாய்ந்த காயம் ஒன்று; ஆக இரண்டு காயங்கள் இருந்ததாகவும் இரண்டும் ஏக காலத்தில் ஏற்பட்ட காயங்களென்றும், இருவரால் ஏற்பட்ட காயங்களென்றும் திட்டமாய்ச் சொன்ஞர்களே! ராஜாம்பாள் இறப்பதற்குச் சுமார் ஐந்துமணி நேரத்திற்கு முன்ஞல் விஷம் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் சொன்ஞர்களே! கோபாலனுக்குத் துப்பாக்கி வைத்துக்கொள்ள லைசென்ஸ் கிடையாதென்றும், கோபாலனுடைய வீட்டைச் சோதித்ததிலும் துப்பாக்கியாவது, குண்டுகளாவது, விஷமாவது அகப்படவில்லையென்றும் மணவாள நாயுடு அவர்கள் சொன்ஞர்களே! கோபாலன் விஷம் வாங்கிஞனென்ருவது, அல்லது கட்டாரி கோபாலனுடையதென்ருவது அல்லது கோபாலனுக்குச் சொந்தத் துப்பாக்கியில்லாததால் வேறே யாரிடமிருந்தாவது துப்பாக்கி இரவல் வாங்கிஞனென்ருவது ருஜுப்படுத்தவில்லை. ஆகவே, கோபாலன் கொலை செய்திருப்பானென்பதை ருஜுப்படுத்துவதற்கு முக்கியமாகிய விஷயங்களில் ஒன்ருவது ருஜுப்படுத்தப்படவில்லை.

எல்லாவற்றிற்கும் மேலாக என் நண்பர் கொக்கு துரையவர்கள் 'கோ' என்னும் எழுத்தை ஒரு மூலையில் எழுதப்பட்ட சித்திர வேலை செய்த கைக்குட்டையொன்று ரத்தந் தோய்ந்து சாம்பலில் மறைக்கப்பட்டிருந்ததென்றும், அது கோபாலனுடையதென்றும், எல்லாச் சாட்சியங்களுக்கும் மேலாகக் கோபாலன்தான் கொலைசெய்தான் என்பதற்கு அதுவே முக்கிய சாட்சியமென்றும் வற்புறுத்திக் கூறினுரே! மணவாள நாயுடு ராஜாம்பாள் பெட்டியைச் சோதிக்கையில் கோபாலனுடைய சித்திர வேலைசெய்த அநேகம் கைக்குட்டைகள் அவள் பெட்டியில் இருந்தனவே; அப்படியிருக்கக் கோபாலன்பேரில் இருக்கும் அதிகமாகிய பிரியத்தால் கோபாலனைக் கல்யாணஞ்செய்து கொள்ளப் போகும்போது அவனுடைய கைக்குட்டையை அவள் எடுத்துக்கொண்டு போயிருப்பாள். அவளைக் கொன்றவர்கள் அவளிடம் இருந்த கைக்குட்டையால் தங்கள் கையிலிருந்த ரத்தத்தைத் துடைத்துவிட்டு அதைச் சாம்பலுக்குள் மறைத்து வைத்திருக்கலாம். இதில் என்ன சாட்சியம் இருக்கிறதென்று எனது நண்பர் அவ்வளவு வற்புறுத்திச் சொன்னுரென்று எனக்குத் தெரியவில்லை. கனவான்களே! என் நண்பர் பிரமாதமாய் எடுத்துச் சொல்லிய ஒவ்வொரு விஷயத்தையும் கண்டித்து, நான் தங்களுக்குத் திருப்தியாகும்படி சரியான முகாந்தரங்களால் கோபாலன் கொலை செய்திருக்கமாட்டானென்று ருஜுப்படுத்தி விட்டபடியால் தாங்கள் கோபாலன் குற்றவாளியல்லவென்று சொல்வதைத் தவிர வேறுவிதமான அபிப்பிராயத்திற்கு வருவது கூடாத காரியமென்று நம்புகிறேன். பிரபுக்களே! நான் சொன்ன ஒவ்வொரு விஷயத்தையும் சீர்தூக்கிப் பார்த்தால் நான் நினைக்கிறபடியே தாங்களும் கோபாலனைக் குற்றவாளியல்லவென்றே நினைப்பீர்களென்பதிற் கிஞ்சித்தேனும் சந்தேகம் கிடையாது.''

இவ்வாறு சொல்லிவிட்டுத் துரைசாமி ஐயங்கார் உட்கார்ந்துவிட்டார். உடனே பாரிஸ்டர் கொக்கு துரை எழுந்து, தாம் முன் சொன்ன விஷயங்களையே மறுபடியும் வற்புறுத்திக் கூறி, துரைசாமி ஐயங்காரவர்களின் சாதுர்யமான வார்த்தைகளைக் கேட்டு ஜூரர்கள் ஏமாந்து

போகக்கூடாதென்றும், சாட்சியங்களின் சாராம்சங்களைக் கொண்டுதான் தீர்மானஞ் செய்ய வேண்டுமென்றும் சொல்லி உட்கார்ந்தார். உடனே நியாயாதிபதியவர்கள் இரண்டு கட்சியிலுமுள்ள சங்கதிகளையும் சாங்கோபாங்கமாய் ஜூரர்களுக்கு எடுத்துக் காட்டினதன்றி, ஜூரர்கள் மற்றவர்கள் சொல்வதைக் கண்டு யாதொரு விதமான அபிப்பிராயமும் கொள்ளக்கூடாதென்றும், ஒவ்வொரு விஷயத்தையும் தாங்களே ஆராய்ந்து பார்த்து நியாயமான விஷயங்களைக் கவனித்து அவர்கள் மனச்சாட்சிக்கு விரோதம் இல்லாமல் ஒவ்வொருவரும் அவரவர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை மற்றவர்களிடஞ் சொல்லி நிவர்த்தி செய்துகொண்டு எவ்விதமான தீர்மானத்திற்கு வந்தார்களோ அதைச் சொல்லச் சொல்லியும், இதில் தீர்மானிக்கவேண்டிய விஷயங்கள் அநேகம் இருப்பதால் அவர்களுக்கு யோசனை செய்ய எவ்வளவு நேரம் வேண்டுமோ அவ்வளவு நேரம் கொடுப்பதாகச் சொல்லியும் அவர்களை உள்ளே அனுப்பினர். ஜூரர்களும் யோசனை செய்யவேண்டிய விஷயங்கள் அநேகம் இருப்பதால் குறைந்தது ஒரு மணி நேரமாவது பிடிக்குமென்று சொல்லி உள்ளே போனார்கள். இந்த ஒரு மணி நேரம் வரையில் ஏன் வீணை உட்கார்ந்திருக்கவேண்டுமென்று எல்லாரும் எழுந்து வெளியே போனார்கள். நடேச சாஸ்திரிகளும் லோகசுந்தரியும் எழுந்து லோகசுந்தரி இறங்கியிருக்கும் ஜாகைக்குப் போய்ப் பின்வருமாறு பேசிக்கொண்டார்கள்.

**லோகசுந்தரி:** சாஸ்திரிகளே! இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் கோபாலனுடைய கதி தீர்மானமாகி விடும். தாங்கள் ஆதிமுதல் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்தீர்களே! ஜூரர்கள் கோபாலனைக் குற்றவாளியென்று சொல்லுவார்களா? அல்லது குற்றவாளி அல்லவென்று விடுதலை செய்துவிடுவார்களா? சொல்லுங்கள் பார்ப்போம்.

**நடேச சாஸ்திரி:** சுவரின்மேல் இருக்கும் பூனை இந்தப் பக்கம் குதித்தாலும் குதிக்கும்; அந்தப் பக்கம் குதித்தாலும் குதிக்கும். நாம் எப்படிச் சொல்லுவது? இந்தப் பாழும் துரைசாமி ஐயங்கார் கோபாலனுக்கு அநுசரணையாக வாதிக்க வந்ததில் இவ்வளவு தூரம்

சந்தேகிக்கும்படி நேரிட்டது. இன்னும் வேறே எவராவது வந்திருந்தால் சந்தேகிக்க வேண்டிய பிரமேயமே கிடையாது.

**லோகசுந்தரி:** தங்களுடைய சாட்சியம் முழுவதையும் பொய்யென்று ருஜுப்படுத்தி விட்டாரே! அதனால் தங்களுக்கு ஏதாவது கெடுதல் உண்டாகுமோ? அன்றே தாங்கள் முதல் வகுப்பு வண்டியில் ஜனவரி௴ 27௳ வந்தீர்களா என்று இரண்டு மூன்று தரம் வற்புறுத்திக் கேட்கையில் ஏதோ காரணத்தால்தான் அப்படிக் கேட்கிறார்கள் என்றேனே; தாங்கள், வக்கீல்கள் ஏதாவது கேட்டுத் தீர வேண்டுமே, அதற்காகக் கேட்டார் என்றீர்களே. கடைசியாக எப்படிக் கொண்டுவந்து மடக்கிவிட்டார். பார்த்தீர்களா?

**நடேச சாஸ்திரி:** இதற்கெல்லாம் யார் பயப்படுகிறார்கள்? அந்தக் கிழட்டுப் பிணம் சாமிநாத சாஸ்திரி ராஜாம்பாள் எழுதிய கடிதத்தைக் குறித்து இதுவரையில் ஒன்றும் சொல்லாமல் இருந்து கடைசியில் என் கழுத்தைப் பிடித்ததைப்போல் பிடித்துவிட்டார். எப்படியானால் என்ன? நாம்தாம் கூடிய ஜல்தியில் இந்தப் பாழும் ஊரை விட்டுக் கப்பலேறி யாருக்கும் தெரியாமல் சிங்கப்பூர் போகவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டிருக்கிறோமே.

**லோகசுந்தரி:** எல்லாவற்றிற்கும் மேலாக எனக்கு ஒரு சங்கதிதான் பயமாயிருக்கிறது. சென்னையிலிருந்து வந்த கோவிந்தன், கோபாலன் குற்றவாளி அல்லவென்று திட்டமாய்க் காட்டும் சாட்சியங்களைக் கண்டுபிடித்திருக்கிறதாகத் துரைசாமி ஐயங்காருக்குக் கடிதம் எழுதினதாக அவர் இன்று கோர்ட்டில் சொன்னாரே. அதைக் குறித்துத் தங்களுக்கு என்ன தோன்றுகிறது?

**நடேச சாஸ்திரி:** அதெல்லாம் பொய்யென்றே நினைக்கிறேன். கண்டு பிடித்திருந்தால் சாட்சியங்களை வைத்துக்கொண்டு சும்மா இருப்பானா? அவன் வேறே வேலையாய் அலைந்துகொண்டு திரிகிறான். துரைசாமி ஐயங்காரைச் சற்றுத் திருப்திசெய்வதற்காக அப்படி எழுதியிருப்பான்.

**லோகசுந்தரி:** கோவிந்தன் பொய் சொல்கிறவன் அல்லவென்று எல்லாரும் சொல்லுகிறார்களே. மேலும் எவரும் வராத என் படுக்கை அறைக்குள் மேலுக்குத் தெரியாத ஓர் ரகசியமான அறையில் என்னைத் தவிர வேறே எவராலும் திறக்க முடியாத ஒரு பெட்டியில் வைத்திருந்த சில முக்கியமாகிய கடிதங்களைக் காணோம். அவைகள் மாயமாய்ப் போன விதம் எனக்குத் தெரியவில்லை.

**நடேச சாஸ்திரி:** இவ்வளவு பந்தோபஸ்தாய் வைத்திருந்த கடிதங்களை எவரால் எடுக்க முடியும்? நீயே மறந்து போய் எங்கேயாவது வைத்திருப்பாய். உனக்கு இப்போது இருக்கப்பட்ட காபுராவில் எங்கே வைத்தாயென்பதை அறியாமல் இப்படித் திண்டாடுகிறாய்போல் இருக்கிறது. அதைக் குறித்து இப்போது யோசனை என்னத்திற்கு?

**லோகசுந்தரி:** இல்லை, ஒருகால் அவைகள் கோவிந்தன் கையில் அகப்பட்டு விட்டனவோ என்னவோ என்றுதான் சந்தேகித்தேன்.

**நடேச சாஸ்திரி:** வெட்டிக் காரியாதிகளைப் பேசிக்கொண்டிருப்பதில் உபயோகமென்ன?

**லோகசுந்தரி:** ஆனால் எதைக் குறித்துப் பேசவேண்டுமென்கிறீர்கள்?

**நடேச சாஸ்திரி:** நமது காரியங்களைக் குறித்துத்தான் பேசவேண்டும். லோகசுந்தரி, இனி என்னைக் கல்யாணஞ் செய்துகொள்வதற்கு யாதொரு ஆட்சேபமும் இல்லையே!

**லோகசுந்தரி:** ஆக்கப் பொறுத்தது ஆறப் பொறுக்காதா? இன்னும் கோபாலனுடைய சங்கதி தீர்மானமாகவில்லையே! கிணற்று ஜலத்தை வெள்ளங் கொண்டு போகுமா? என்றைக்குக் கோபாலனைத் தூக்குப் போடுகிறார்களோ அதே நேரத்தில் நாம் கல்யாணஞ் செய்து கொள்வோம். அதற்குக் கொஞ்சமாவது ஆட்சேபம் இல்லை.

உடனே இருவருமாகக் கோர்ட்டுக்குப் போனார்கள். இதே சமயத்தில் சாமிநாத சாஸ்திரிகளும் துரைசாமி ஐயங்காரும் கோபாலன் குற்றவாளி அல்லவென்று கட்

டாயமாய் வந்து ரூபிக்கிறேனென்ற கோவிந்தன் வராத காரணம் தெரியவில்லையே என்று யோசனை செய்து கொண்டிருந்தார்கள். குறிப்பிட்ட ஒரு மணி நேரம் ஆனவுடனே, எல்லோரும் அவரவர்கள் இடங்களில் வந்து அமர்ந்தார்கள். நியாயாதிபதி துரையவர்களும் வந்து அவர் ஸ்தானத்தில் உட்கார்ந்தார்; ஜூரர்களும் யோசனை முடிந்து வந்து சேர்ந்தார்கள். எல்லோரும் ஜூரர்கள் என்ன சொல்லப் போகிறார்களோ என்று அவர்கள் முகத்தையே பார்த்துக்கொண் டிருந்தார்கள். எல்லாருக்கும்மேல் கோபாலன் அதிக ஆவலுடன் அவர்களையே பார்த்துக்கொண் டிருந்தான்.

**நியாயாதிபதி:** ஜூரர்களாகிய கனவான்களே! தாங்கள் எல்லோரும் ஒருவிதமான தீர்மானத்திற்கு வந்து விட்டீர்களா? அல்லது இன்னும் யோசனையில்தான் இருக்கிறீர்களா?

**ஜூரர்களின் தலைவர்:** தீர்மானித்துவிட்டோம்.

**நியாயாதிபதி:** கைதி குற்றவாளியா? குற்றவாளியல்லவா?

**ஜூரர்களின் தலைவர்:** குற்றவா****

ஜூரர்கள் குற்றவாளியா அல்லவா என்று சொல்லுவதற்குள் கோவிந்தன் தலையிலும் உடம்பிலும் ரத்தம் ஒழுகிக்கொண்டே இருக்கத் தலைவிரி கோலமாய்க் கோர்ட்டுக்குள் ஓடிவந்தார். இவரைக் கண்டவுடனே ஜூரர்களின் தலைவர் தீர்மானம் சொல்லாமல் சும்மா இருந்தார். கோவிந்தன் துரைசாமி ஐயங்காரிடம் ஓடிவந்து அவருக்கு மாத்திரம் கேட்கும்படி கிசுகிசுவென்று ஏதோ ரகசியமாய்ச் சொன்னார். உடனே துரைசாமி ஐயங்காரவர்களும் ஒரு துண்டுக் கடிதத்தில் சில சமாசாரங்களை எழுதி நியாயாதிபதியிடம் கொடுத்தார். அவர் வாசித்துப் பார்த்துவிட்டு ஜூரர்களிடம் கொடுத்தார். இதற்குள்ளாகக் கட்டாயமாய்க் கோபாலனைத் தண்டித்து விடுவார்களென்று எண்ணிக்கொண் டிருந்த மணவாள நாயுடுவும் பாரிஸ்டர் கொக்கு துரையும் கிசுகிசுவென்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

**துரைசாமி ஐயங்கார்:** மாட்சிமை தாங்கிய நியாயாதிபதி யவர்களே! ஜூரர்களாகிய கனவான்களே! கோபாலன் குற்றவாளியல்லவென்று பரிஷ்காரமாய் ருஜூப்படுத்தும் சாட்சி இப்போது தயாராயிருப்பதால் அந்தச் சாட்சியை விசாரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

**பா. கொக்கு துரை:** கேசு பூராவாய் விசாரிக்கப்பட்டுச் சகல காரியங்களும் முடிந்து ஜூரர்களின் அபிப்பிராயம் பாதி சொல்லிவிட்ட பிற்பாடு சாட்சியங்களை விசாரிப்பதை நான் பாரிஸ்டராகி இதுவரையிற் பார்த்ததுமில்லை, கேட்டதுமில்லை, வாசித்ததுமில்லை; ஆகையால் இப்படிச் செய்வது சட்டவிரோதமென்றும், அப்படிச் செய்யக்கூடாதென்றும் நான் ஆட்சேபிக்கிறேன்.

**நியாயாதிபதி:** மிஸ்டர் கொக்கு துரையவர்களே! இப்போது இருக்கும் சாட்சியம் இப்பேர்ப்பட்டதென்று தெரிந்தால் தாங்கள் ஆட்சேபிக்கமாட்டீர்கள். துரைசாமி ஐயங்காரவர்களே! தங்கள் சாட்சியைக் கொண்டு வாருங்கள்.

உடனே துரைசாமி ஐயங்கார், சாட்சி ராஜாம்பாள் என்று கூப்பிடு என்றார். சாட்சி ராஜாம்பாள் என்று கூப்பிட்டவுடனே, இராஜாம்பாள் அதிகமாக மெலிந்து அழுக்கு வஸ்திரம் கட்டினபடியே கோர்ட்டில் ஆஜரானாள். இறந்துபோன இராஜாம்பாள் உயிர்பெற்றுச் சாட்சி சொல்ல வந்தவுடனே அங்கே இருந்தவர்கள் எல்லோரும், 'இவள் ராஜாம்பாள்தானா? அல்லது ராஜாம்பாளின் பிசாசோ?' என்று சந்தேகித்தார்கள். சாமிநாத சாஸ்திரி ஓடிவந்து இராஜாம்பாளைக் கட்டிக் கொண்டார். கைதியாயிருந்த கோபாலனும் ஒரே குதியாய்க் குதித்து இராஜாம்பாளை வந்து கட்டிக்கொண்டு ஓவென்று அழுதான். கோபாலனைக் காவல் காத்திருந்த போலீஸ்காரரும் கைதி போய்விட்டானே என்பதைக் கவனித்து அப்போதே தடுக்காமல் மயக்கங் கொண்டவர்களைப்போல் சும்மாயிருந்து அப்பால் போய் அவனைக் கூட்டிவந்து கைதி இருக்கவேண்டிய இடத்தில் வைத்தார்கள். மணவாள நாயுடு பைத்தியக்காரனைப்போல் ஒன்றும் தோன்றாமல் மேலும் கீழுமாகப் பார்த்துக்கொண்டிருந்தார். பக்கத்து நாற்காலிகளில் அதிக உல்லாசமாய்

வீற்றிருந்த நடேச சாஸ்திரிகளும் லோகசுந்தரியும் இது கனவோ அல்லது நினைவோ என்று சந்தேகித்து ஒருவரை ஒருவர் கேட்டுக் கனவுமல்ல, நினைவுமல்லவென்றும், வாஸ்தவமாகவே ராஜாம்பாள்தான் உயிருடன் வந்து விட்டாளென்றும் அறிந்தவுடனே எழுந்து வெளியே போகப் புறப்பட்டார்கள்.

உடுப்புப் போடாத இரண்டு போலீஸ்காரர் கேஸ் முடிகிறவரையில் அவர்களைக் கோர்ட்டைவிட்டு வெளியே போகாதபடி பார்த்துக்கொள்ளும்படி நியாயாதிபதி உத்தரவு செய்திருப்பதாகச் சொன்னார்கள். நடேச சாஸ்திரிகள் அப்பேர்ப்பட்ட உத்தரவைக் காண்பித்தாலொழியத் தாங்கள் வெளியே போவதாகவும், அவர்களைப் போகக் கூடாதென்று தடுப்பதற்கு யாருக்கும் அதிகாரம் கிடையாதென்றும் சொன்னார். அவர்களுடைய வார்த்தையை மீறிப் போவதாயிருந்தால் இருவருக்கும் உடனே விலங்குகள் மாட்டிப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோக உத்தரவாயிருக்கிறதென்று போலீஸ்காரர் சொன்னவுடனே ஒன்றும் பேசாமல் இருவரும் அவரவர்களிடத்தில் உட்கார்ந்தார்கள்.

**துரைசாமி ஐயங்கார்:** ராஜாம்பாள்! ஜனவரி மீ 26௳ ராத்திரி நடந்த சமாசாரங்களைச் சொல்லு.

**இராஜாம்பாள்:** அன்று ராத்திரி பத்து மணிக்கு என் தகப்பனாருக்கு ஒரு காகிதம் எழுதி அவர் மேஜையின் மேல் வைத்துவிட்டு ராத்திரிப் பன்னிரண்டு மணிக்குக் கோபாலனைச் சந்திப்பதற்காக உலகளந்த பெருமாள் கோவில் தெரு, 25-வது நெம்பர் வீட்டிற்குச் சென்றேன். அங்கே போய்ப் பார்க்கையில் கோபாலனைக் காணோம். வேறே யாரோ ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவர் என்னைக் கண்டவுடனே எழுந்து ஓடி வந்து என் கைகள் இரண்டையும் பலமாய்ப் பிடித்துக்கொண்டு அவரைக் கல்யாணஞ் செய்துகொள்ளச் சொல்லி வேண்டிக்கொண்டார். கிழக்கே உதிக்கிற சூரியன் மேற்கே உதித்தாலும் கோபாலனைத் தவிர வேறு ஒருவரையும் கல்யாணஞ் செய்துகொள்ள மாட்டேனென்றும் அதைவிடப் பிராணனையாவது இழந்துவிடுவேனென்றும் கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டேன். அவர் பல வகையில் என்னை வேண்

டிக் கேட்டும் நான் அவரைக் கல்யாணஞ் செய்துகொள் ளச் சம்மதிக்காததால் அதிக கோபத்துடன் எழுந்து கதவை மூடிக்கொண்டு வெளியே போனார்.

அங்கே போனதும் நான் அவரைக் கல்யாணஞ் செய் துகொள்ளமாட்டேனென்று ஒரே பிடியாய்ப் பிடிப்பதால் சுடலை மாடன் தெரு, 29-வது நம்பருள்ள வீட்டின் குதி லில் கொண்டுபோய் என்னை அடைத்துச் சாப்பாடு தண் ணீர் கொடுக்காமல் போட்டுவைத்தால், இரண்டு மூன்று தினங்களில் வழிக்கு வந்துவிடுவேனென்றும், கோபாலன் இரண்டு மணிக்கு வரச்சொல்லி எழுதியிருந்த கடிதம் அவர்கள் கையில் அகப்பட்டதால் இரண்டுக்கு முன்னால் ஒன்றைப் போட்டுப் பன்னிரண்டு மணியென்று ஆக்கிய தால் இவ்வளவு சுளுவில் அவர்கள் கையில் நான் அகப் பட்டேனென்றும் பேசிக்கொண்டார்கள்; இதைக் கேட்ட வுடனே ஒரு சிறு துண்டுக் கடுதாசியில், 'மோசம் போனேன் கோபாலா, என்னைச் சுடலைமாடன் கோவில் தெரு, 29-வது நம்பர் வீட்டிலுள்ள குதிலில்' என்று எழுதி, அப்பால், 'என்னைக் கொண்டுபோய் அன்னந் தண் ணீர் இல்லாமல் அடைக்கப் போகிறார்கள்' என்று எழுது வதற்குள் ஒருவர் திடீரென்று கதவைத் திறந்து உள்ளே வந்து ஏதோ ஒருமாதிரி வாசனையுள்ள ஒரு துணியை என் முகத்தில் வைத்து அமுக்கிப் பிடித்தார்.

இரண்டொரு நிமிஷங்களில் ஒருவித மயக்கம் உண் டாகிவிட்டதால் அப்பால் என்ன நடந்ததென்று எனக்குத் தெரியாது. அப்பால் கண்விழித்துப் பார்க்கையில் மினுக்கு மினுக்கென்று விளக்கு எரிந்துகொண் டிருக்கும் ஒரு குதி லில் என்னைப் படுக்க வைத்திருந்ததாகத் தெரிந்து சட் டென்று எழுந்தேன். கதவிலுள்ள சந்தின் வழியாய்ப் பக்கத்தில் வெளிச்சமுள்ள ஓர் அறை தெரிந்தது. அங்கே யார் இருக்கிறார்களென்று பார்க்கையில் நான் இதுவரை யில் பார்த்திராத ஒரு பெண் மெதுவாக என்னை அடைத் திருக்கும் அறையின் வாசலுக்கு நேராக வந்துகொண் டிருந்தாள். அவளுக்குப் பின்னாலிருந்த திரையிலிருந்து யாரோ ஒருவன் கட்டாரியால் அவளைக் குத்தவும் அதே சமயத்தில் என்னைக் கல்யாணஞ் செய்துகொள்ளச் சொல் லிக் கட்டாயப்படுத்தினவர் கைத்துப்பாக்கியால் அவளைச்

சுடவும் கண்டேன். கட்டாரியின் குத்தும், துப்பாக்கியின் குண்டும் அவள்மேல் விழவே வேரறுந்த மரம்போல் திடீரென்று அவள் கீழே சாய்ந்துவிட்டாள். உடனே அங்கே எரிந்துகொண் டிருந்த விளக்கு நிறுத்தப்பட்டு ஒரே இருட்டாய் இருந்தது. கொஞ்ச நேரத்துக்கு அப்பால் விளக்கு மறுபடியும் கொளுத்தப்பட்டது. அப்போது கட்டாரியால் குத்தினவன் அங்கே இறந்துபோயிருந்த பெண்ணை நெருப்பால் கொளுத்திவிட்டு என்னை அடைத்திருக்கும் அறையின் கதவைத் திறந்து நான் கூச்சல் போட்டால் உடனே குத்திக் கொன்றுபோடுவதாகச் சொல்லி என்னை மோட்டார் வண்டியில் ஏறும்படி செய்ததன்றி, கத்தியையும் காண்பித்துப் பயமுறுத்தினதனுல்,, நான் பேசாமல் மௌனமாயிருந்தேன். சுமார் ஒரு மணி நேரம் மோட்டார் வண்டியில் பிரயாணஞ் செய்த பிற்பாடு வண்டி எனக்குத் தெரியாத ஒரு சந்தில் நின்றது. என்னை வண்டியிலிருந்து இறங்கச் சொல்லிப் பூமிக்குள் இருக்கும் ஓர் அறையில் போட்டு மூடிவிட்டார்கள். அது முதல் இன்று வரையில் வேளைக்கு வேளை ரொட்டியும் பாலும் மாத்திரம் கொடுத்து வந்தார்கள். நேற்று ராத்திரிப் பெய்த பெரிய மழையினுல் என்னை அடைத்திருந்த அறையில் நிமிஷத்திற்கு நிமிஷம் தண்ணீர் பெருகிக் கழுத்து வரைக்கும் தண்ணீர் வந்துவிட்டது. என்னுல் ஆன வரையில் சத்தம் போட்டுப் பார்த்தும் எவரும் ஏனென்று கேட்கவில்லை. தண்ணீரில் மூழ்கிச் சாகவேண்டுமென்ற பிராப்தம் இருக்கிறதுபோல் இருக்கிறது என்று எண்ணிக் கடவுளைத் தியானித்துக்கொண்டே இருந்தேன். நிமிஷத்துக்கு நிமிஷம் தண்ணீர் மேலே ஏறி மூச்சு விட முடியாமல் பிரக்ஞை தப்பிப் போய்விட்டது. அப்பால் கண் விழித்துப் பார்க்கையில் மேலெல்லாம் ரத்தம் ஒழுகிக் கொண்டிருக்கும் இப் புண்ணிய புருஷர் (கோவிந்தன்) என்னை மேலே தூக்கிப் பிராணன் வருவதற்கு உண்டாகிய ஏற்பாடுகள் செய்துகொண் டிருக்கக் கண்டேன். மெதுவாகக் கண்விழித்துப் பார்த்து நான் உயிருடன் இருக்கிறேனே என்று அவரைக் கேட்டதில் அவர் உயிருடன்தான் இருக்கிறேனென்றும், எனது அந்தரங்கப் பிரியனுகிய கோபாலன் என்னைக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்

டப்பட்டு இன்றுதான் கடைசி விசாரணையில் இருக்கிறு ரென்றும் உடனே வந்து நான் சாட்சி சொல்லாவிட்டால் மரண தண்டனை விதித்து விடுவார்களென்றும் ஆகையால் உடனே இங்கே வர வேண்டுமென்றும் சொன்னர். இதைக் கேட்டவுடனே இங்கே ஜல்தியாக வந்து சேரவேண்டு மென்ற எண்ணம் எனக்கிருந்தாலும் அவர் காயங்களுக்கு வைத்தியம் செய்துகொண்டு அப்பாற் போகலாமென்று என்னுற் கூடியவரையிற் சொல்லியும் அவர் கேளாததால் மோட்டார் வண்டியில் ஏறி இவ்விடம் வந்து சேர்ந்தோம்.

இராஜாம்பாள் அடைந்த கஷ்ட நிஷ்டூரங்களைச் சொல்லக் கேட்டவர்களில் நடேச சாஸ்திரி, லோகசுந்தரி, மணவாள நாயுடு ஆகிய இம் மூன்று பேர்களைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் சகிக்க முடியாமல் அழுதார்கள்.

**துரைசாமி ஐயங்கார்:** ஜனவரிமீ 26வ ராத்திரி உல களந்த பெருமாள் கோவில் தெருவில் போய்ப் பார்த்த போது கோபாலனைக் காணுமென்றும், வேறே எவரோ உட்கார்ந்திருந்ததாகவும் சொன்னுயே. அவர் இன்னு ரென்று உனக்குத் தெரியுமா? தெரியாதா?

**இராஜாம்பாள்:** அந்தக் கேள்விக்கு ஜவாப்புச் சொல்ல என்னுல் முடியாது.

**துரைசாமி ஐயங்கார்:** உன்னுல் சொல்ல முடியா தென்ருல் உனக்குத் தெரிந்து சொல்லமாட்டேன் என்கிருயா, அல்லது அந்த ஆளையே இதுவரையில் நீ பார்த்ததில்லையா?

**இராஜாம்பாள்:** நான் பார்த்து அநேக வருஷங்கள் இருக்கலாம்.

**துரைசாமி ஐயங்கார்:** போகட்டும்; அநேக வருஷங் களுக்கு முன்னுலாவது பார்த்திருக்கிருயல்லவா? ஆகையால் இன்னுரென்று உனக்குத் தெரியுமென்று ஏற்படுகிறது.

**இராஜாம்பாள்:** எனக்குத் தெரியுமென்றே வைத்துக் கொள்வோம். எனக்குச் சொல்ல இஷ்டமில்லை.

**துரைசாமி ஐயங்கார்:** ராஜாம்பாள்! நீ சிறுபிள்ளை யானதால் நியாய ஸ்தலங்களில் இப்படிப் பேசுவதால் வரும் கெடுதியை அறியமாட்டாய். தாயாயிருந்தாலும் பிள்ளையாயிருந்தாலும் உள்ளதை உள்ளபடி சொல்லி

விடவேண்டியது. இல்லாவிட்டால் குற்றஞ் செய்தவர்களை நீ மறைக்கப் பார்த்தாயென்று உன்மேலும் குற்றம் ஏற்படும். மேலும் நீ சொல்லாவிட்டாலும் அங்கே இருந்தது யாரென்று எங்களுக்குத் தெரியாதென்று நீ எண்ணுவது புத்தியீனம். பூமிக்குள் இருக்கும் அறையில் தண்ணீரில் மூழ்கியிருந்த உன்னைக் கண்டுபிடித்த கோவிந்தனுக்கு இது ஒரு கஷ்டமா? மேலும் நாங்கள் எல்லோரும் நீ இறந்து போய்விட்டாயென்று எண்ணி உன்னைக் கொன்றது யாரென்று கண்டுபிடிக்க முடியாமல் விழித்துக்கொண்டிருக்கையில் நீ உயிருடன் இருக்கிறுயென்பதை அறிந்து தேடிக் கண்டுபிடித்திருக்கும்போது முன்னுல் நடந்த சமாசாரங்களையெல்லாம் கூட இருந்து பார்த்ததைப்போல் அறியாவிட்டால் எப்படிப் பின்னுல் நடந்த சங்கதிகளை அறியக்கூடும்? ஆகையால் நீ பந்து என்ற தாட்சிண்யத்தால் சொல்லாவிட்டாலும் கொஞ்ச நேரத்திற்குள் இன்னுரென்ற சங்கதி வெளிக்கு வந்துவிடும். ஆகையால் நீ சொல்லிவிடுவதே உத்தமம்.

**இராஜாம்பாள்:** நான் கூடச் சேர்ந்து மறைக்கப் பார்த்தேன் என்ற குற்றம் என்மேல் ஏற்பட்டாலும் அங்கே இருந்தது இன்னுரென்று நான் சொல்லமாட்டேன்.

**துரைசாமி ஐயங்கார்:** கனம் பொருந்திய நியாயாதிபதியவர்களே! கோபாலன் கொன்றுனென்ற ராஜாம்பாளே உயிருடன் வந்துவிட்டதால், கோபாலன்பேரில் இருக்கும் குற்றம் நீங்கிவிட்டது. அதுவும் போதாதென்றுல் ராஜாம்பாள் சொன்ன விருத்தாந்தங்களிலிருந்து கோபாலன் பன்னிரண்டு மணிக்கு அந்த இடத்திற்கே வரவில்லை என்று பரிஷ்காரமாய் ஏற்படுகிறது. கொலைசெய்தவர்கள் இன்னுரென்றும் கொலை செய்யப்பட்ட பெண் இன்னுரென்றும் கண்டுபிடிக்க வேண்டியது மிகவும் கியாதிபெற்ற இன்ஸ்பெக்டர் மணவாள நாயுடு அவர்களுடைய வேலை. கோபாலன் குற்றவாளியா குற்றவாளியல்லவா என்று ஜூரர்கள் கண்டுபிடிக்க வேண்டிய பிரமேயம் இல்லாவிட்டாலும் மாமூலாய்க் கேட்பதுபோல் அவர்களைக் கேட்டுக் கோபாலனை விடுதலை செய்யவேண்டியது தங்கள் கடமை.

உடனே நியாயாதிபதி புன்சிரிப்புச் சிரித்துக் கொண்டே, "கோபாலன் குற்றவாளியா? அல்லது குற்ற வாளி அல்லவா?" என்று ஜூரர்களைக் கேட்க அவர்கள், கோபாலன் குற்றவாளி யல்லவென்று சொன்னதன்றிக் கோபாலனைப்போல் யோக்கியன் அகப்படுவது மகா துர்லப மென்றும் சொன்னார்கள். நியாயாதிபதியும் ஜூரர்கள் சொன்னபடியே சொன்னவுடனே, கோபாலனும் இரா ஜாம்பாளும் வண்டி ஏறி வீட்டிற்குப் போய்விட்டார்கள். இறந்து போனதாக எண்ணியிருந்த தன் ஏக புத்திரி உயி ருடன் இருப்பதாக அப்போதுதான் தெரிந்ததால் அவ ளுடன் பேசச் சாமிநாத சாஸ்திரி அதிக ஆசைப்பட்டாலும் இராஜாம்பாளும் கோபாலனும் அதிகக் கஷ்டப்பட்டவர் களாதலால் அவர்கள் இஷ்டப்படியே ஒருவரை யொருவர் கேட்கவேண்டிய சமாசாரங்களைக் கேட்டுச் சந்தோஷமாக இருக்கட்டுமென்று நினைத்துக்கொண்டு தாமும் கூடப் போகாமல் கோர்ட்டிலேயே இருந்தார். நியாயாதிபதி எழுந்திருக்குமுன் வக்கீல் துரைசாமி ஐயங்கார் தப்புச் சாட்சி சொன்னதற்காகச் சாமி நாயுடுவை மறுபடியும் விசாரிக்க வேண்டுமென்று உத்தரவு கேட்டார். அப்படியே நியாயாதிபதி யவர்கள் அநுமதி கொடுக்கச் சாமிநாயுடு கூப்பிடப்பட்டார்.

**துரைசாமி ஐயங்கார்:** சாமிநாயுடவர்களே! தாங் கள் உலகளந்த பெருமாள் கோவில் தெரு, 25-ம் நெம்பர் வீட்டில் ஜனவரி மீ 26வ ராத்திரி ராஜாம்பாள் என்ன சொல்லக் கேட்டேன் என்றீர்கள்?

**சாமி நாயுடு:** 'என் தலையை இரண்டு துண்டாக வெட்டிவிட்டாலும் கிழக்கே உதிக்கிற சூரியன் மேற்கே உதித்தாலும் உன்னைக் கல்யாணஞ் செய்துகொள்ள மாட்டேன்' என்று சொல்லக் கேட்டேன் என்றேன்.

**துரைசாமி ஐயங்கார்:** இப்போது ராஜாம்பாள் என்ன சொன்னதாகச் சொன்னாள்?

**சாமி நாயுடு:** என் தலையை இரண்டு துண்டாக வெட்டிவிட்டாலும் கிழக்கே உதிக்கிற சூரியன் மேற்கே உதித்தாலும் **கோபாலனைத்** தவிர வேறே யாரையும்

கல்யாணஞ் செய்துகொள்ளமாட்டேனென்று சொன்ன தாகச் சொன்னுள்.

**துரைசாமி ஐயங்கார்:** தாங்கள் சொன்னதற்கும் ராஜாம்பாள் சொன்னதற்கும் இருக்கும் பேதம் இன்னதென்று தங்களுக்குத் தெரியுமா? தெரிந்தால் ஏன் அப்படிச் சொன்னீர்கள்?

**சாமி நாயுடு:** ராஜாம்பாள் சொன்னபடிதான் நான் முதலில் மணவாள நாயுடு அவர்களிடம் சொன்னேன். அப்படிச் சொன்னுல் நான் கொலை செய்ததாக என்மேல் குற்றஞ் சாட்டி ஜெயிலில் அடைத்துப் போடுவதாகச் சொல்லிப் பயமுறுத்தி இப்படிச் சொல்லும்படி சொன்னுர். அப்போதுகூட நான் சொல்லமாட்டேனென்று சொன்னேன். உடனே என்னைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டுபோய்ப் பூட்ஸ் காலால் உதைத்தார். அந்த உதையால் என் பற்களில் ஒன்றுகூட விழுந்துவிட்டது. அப்பால் அவரால் ஆன வரையில் கையாலும் காலாலும் புடைத்ததன்றிப் பக்கத்தில் இருந்த கான்ஸ்டேபில்களையும்விட்டு அடிக்கச்சொன்னுர். இந்த அடிகளைப் பொறுக்க முடியாமல் அவர்கள் சொல்வதைப்போல் சொல்வதாக ஒப்புக்கொண்டு அப்படியே சொன்னேன்.

**நியாயாதிபதி:** மணவாள நாயுடுவும் கான்ஸ்டேபில்களும் உம்மை அடித்ததற்கு உமக்குச் சாட்சி இருக்கிறதா?

**சாமி நாயுடு:** 'திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை' என்பதைப்போல் அவர்கள் அடித்ததற்குக் கடவுள் தான் சாட்சி. ராத்திரிப் பன்னிரண்டு மணிக்குமேல் போலீஸ் ஸ்டேஷனில் கொண்டுபோய் அடைத்துவிட்டு நையப் புடைக்கும்போது போலீஸ் வீரரைத் தவிர வேறே யார் சாட்சி இருக்கிறுர்கள்? நான் பட்ட உதைகளை இப்போது சொன்னதற்கே இனி என்ன அநுபவிக்கப்போகிறேனே?

**நியாயாதிபதி:** நீர் கட்டாயத்தின்பேரில் அப்படிச் சொன்னேனென்று சொன்னதால் உமது பேரில் தயவு

வைத்து ஐம்பது ரூபாய் அபராதம் விதித்தோம். அபராதம் கொடுக்காவிட்டால் ஒரு மாதம் கடின காவல்.

இப்படிக் கோர்ட்டில் விசாரணை நடந்துகொண்டிருக்கையில் இன்ஸ்பெக்டர் மணவாள நாயுடு எழுந்து கோவிந்தன்இருக்கும் இடத்திற்குப் போய்க் கோவிந்தன் கைகள் இரண்டையும் பிடித்துக்கொண்டு பின் வருமாறு சொன்னார்.

மணவாள நாயுடு: தங்கள் சாமர்த்தியத்தை நன்றாய் அறியாத நான் முதலில் தங்களிடம் சபதஞ்செய்தேன். நீங்கள் அவைகளையெல்லாம் பாராட்டாமல் கொலை செய்யப்பட்டது யாரென்றும் கொலை செய்தவர்கள் இன்னாரென்றும் சொல்வதன்றித் தாங்கள் கண்டுபிடித்திருக்கும் சாட்சியங்களையும் தயவு செய்து என்னிடம் சொல்லவேண்டும்.

**கோவிந்தன்:** நாயுடவர்களே! தாங்கள் அன்று சொன்ன வார்த்தைகளால் எனக்குச் சிறிதாகிலும் வருத்தமே கிடையாது. ஏனென்றால், எந்தக் கேசுக்கு நான் போனாலும் அந்தக் கேசில் சம்பந்தப்பட்ட போலீஸ்காரர் என்னைத் திட்டுவதே வழக்கம். தாங்கள் அவ்வளவு ஆவலாய்க் கேட்பதால் எனக்குச் சொல்வதில் யாதொரு ஆட்சேபமும் இல்லை.

மணவாள நாயுடுவை நடேச சாஸ்திரிகளும் லோகசுந்தரியும் இருக்கும் இடத்திற்கு அழைத்துக்கொண்டு போய் வைத்துக்கொண்டு நடேச சாஸ்திரியைப் பார்த்துக் கோவிந்தன் பின்வருமாறு சொன்னார்.

**கோவிந்தன்:** சாஸ்திரிகளே! தாங்கள் காணமற்போன சென்னைத் தாசி பாலாம்பாளைக் கண்டுபிடிக்கச் சொன்னீர்களே! பூராவாய் அறிந்த பிற்பாடுதான் சொல்வதாகச் சொன்னேன் அல்லவா? சுடலைமாடன் கோவில் தெரு, 29-வது நெம்பர் வீட்டில் ஜனவரிமீ 26வ ராத்திரி, கொலை செய்யப்பட்டவள்தான் தங்களுடைய பிரியமான தாசி பாலாம்பாள்; கொலைசெய்தவர்கள் தாங்கள் ஒன்று; ஷோக் நரசிம்மலு நாயுடு இரண்டு; தங்கள் சமீபத்தில் உட்கார்ந்திருக்கும் லோகசுந்தரி மூன்று.

இப்படிச் சொல்லிப் பக்கத்தில் வாரன்டு வைத்துக் காத்துக்கொண்டிருந்த இரண்டு கான்ஸ்டேபில்களையும் கூப்பிட்டு நடேச சாஸ்திரியையும் லோககசுந்தரியையும் பிடித்துக்கொண்டு போகும்படி சொன்னார்.

அன்று ராத்திரி எட்டு மணிக்குத் துரைசாமி ஐயங்காரவர்களும் மணவாள நாயுடுவும் சாமிநாத சாஸ்திரிகளும் கோபாலனும் இராஜாம்பாளும் ஒன்று சேர்ந்து கோவிந்தன் எப்படி இராஜாம்பாள் உயிருடன் இருக்கிறாளென்று தெரிந்து அவள் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்தாரென்பதையும், கொலை செய்யப்பட்டது தாசி பாலாம்பாளென்றும் கொலை செய்தவர்கள் நடேசனும் ஷோக் நரசிம்மலு நாயுடுவும் லோககசுந்தரியுமென்றும் கண்டு பிடித்த விவரங்களைச் சொல்லவேண்டுமென்றும் வேண்டிக்கொண்டார்கள். அவரும் சொல்வதாகச் சம்மதித்துப் பின்வருமாறு சொல்ல ஆரம்பித்தார்.

## 14. கோவிந்தன் விவரித்துச் சொல்லல்

**கோவிந்தன்:** கொலை செய்யப்பட்ட இடத்தைப் போய்ப் பார்த்தவுடனே அங்கே அபூர்வமாகிய மஞ்சள் ரோஜாப் புஷ்பத்தின் ஐந்து இதழ்கள் சிந்திக் கிடந்தன. அவைகளைக் கண்டவுடனே மஞ்சள் ரோஜாப் புஷ்பம் காஞ்சீபுரத்திலாவது காஞ்சீபுரத்திற்குச் சமீபமாயுள்ள ஊர்களிலாவது கிடையாது என்று எனக்குத் திட்டமாய்த் தெரியுமாதலால், கொஞ்ச தூரத்திலுள்ள ஊரிலிருந்து அந்தப் புஷ்பத்தை வைத்துக்கொண்டு வந்த யாரோ ஒருவர் கொலை செய்திருக்கவேண்டும்; அல்லது கொலை செய்வதற்கு ஒத்தாசையாவது செய்திருக்கவேண்டுமென்றும் அது இன்னாரென்று கண்டுபிடிக்க வேண்டுமென்றும் எழுதிக்கொண்டேன். அப்பால் உங்கள் யாருக்குந் தெரியாமல் கொலை செய்யப்பட்ட பிரேதத்தைப் போய் பார்த்தேன். பிரேதத்தைக் கண்டவுடனே கட்டாரியின் குத்தால் மாத்திரம் இறக்கவில்லையென்றும், துப்பாக்கியின் குண்டும் பாய்ந்திருக்கிறதென்றும் தெரிந்து, இரண்டு பேராவது கொலை

செய்திருக்க வேண்டுமென்பதைக் கண்டுகொண்டேன். அப்பால் யோசனைசெய்து பார்த்ததில் இருவரும், ஒருவர் கொன்றது ஒருவருக்குத் தெரியாமல் கொன்றிருக்க வேண்டுமென்றும் ஊகித்துக்கொண்டேன்.

**மணவாள நாயுடு:** இருவரும் சேர்ந்து வரவில்லை என்று எப்படி ஊகித்தீர்கள்?

**கோவிந்தன்:** கட்டாரியால் வலது பக்கத்திலிருந்து குத்தப்பட்டிருப்பதாலும், துப்பாக்கியால் இடது பக்கத்திலிருந்து சுடப்பட்டிருப்பதாலும், இருவரும் ஒன்று சேர்ந்து கொலைசெய்திருந்தால் கட்டாரியாலாவது மாத்திரம் குத்தியிருப்பார்கள்; அல்லது துப்பாக்கியாலாவது மாத்திரம் சுட்டிருப்பார்களாதலாலும், இரண்டும் செய்திருப்பதால் ஒருவரை ஒருவர் அறியாமல் செய்திருப்பார்களென்றும் ஊகித்தேன். மேலும் இரண்டு காயங்களும் ஏக காலத்தில் ஏற்பட்டதாகத் தெரிந்ததாலும் ஒருவர் வலது பக்கத்திலும் மற்றொருவர் இடது பக்கத்திலும் இருந்திருப்பதாலும் ஒருகால் துப்பாக்கியின் குண்டு அவள்மேல் படாவிட்டால் மற்றொரு பக்கத்தில் இருப்பவர்மேல் படுவதற்கு ஹேது இருக்குமாதலாலும், இருவரும் கலந்து பேசிக் கொண்டு செய்தால் குண்டு குறி தப்பினால் எதிரில் இருப்பவர்மேல் படுமென்று தெரியுமாதலாலும் அப்படி எதிரிலிருந்து குத்தச் சம்மதிக்க மாட்டார்கள் அல்லவா? அப்படி ஒருவருக்கொருவர் எதிரிலிருந்து குத்தினதாகவும் சுட்டதாகவும் தெரிகிறதால் ஒருவருக்கொருவர் தாக்கல் இல்லாமல் செய்ததாக ஏற்படுகிறது. ஆகவே ஒருவருக்கொருவர் தாக்கல் இல்லாமல் இரண்டு பேர் செய்தார்களென்று ஊகித்து அந்த இரண்டு பேர் இன்னாரென்று கண்டுபிடிக்க வேண்டியிருந்தது.

அப்பால் பிரேதத்தை அதிக ஜாக்கிரதையாகப் பார்த்தேன். பதின்மூன்று வயதுள்ள பெண்ணின் பிரேதமாயிருக்காதென்று உடனே அறிந்துகொண்டு, டாக்டர்களிடம் கொலை செய்யப்பட்ட பெண்ணின் வயது என்ன இருக்கலாமென்று நன்றாய்ப் பார்த்துச் சொல்லும்படி கேட்டேன். அவர்கள் நன்றாய்ச் சோதனை செய்து பதினாறு அல்லது பதினேழு வயது இருக்கலாமென்று

சொன்னார்கள். டாக்டர்களுக்கு ராஜாம்பாளின் வயது பதின்மூன்றென்று தெரியாதாதலால் ஒருகால் ராஜாம் பாளுக்குப் பதினாறு அல்லது பதினேழு வயது இருக்கலா மென்று எண்ணியிருப்பார்கள். மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் டாக்டர்களை வயது என்ன இருக்குமென்று துரைசாமி ஐயங்கார் கேட்டதற்கு, டாக்டர்கள் பதினாறு வயது இருக் கலாமென்று சொன்னபோது, மணவாள நாயுடவர்கள், 'என்னடா டாக்டர்கள் இப்படிச் சொல்லுகிறார்களே! இதன் உண்மையை ஆராய்வோம்' என்று யோசனை செய்யாமல் தெரியாத்தனத்தினால் டாக்டர்கள் அப்படிச் சொல்லுகிறார்களென்று நினைத்தார். நீலமேக சாஸ்திரி களும் மணவாள நாயுடவர்களும் பாரிஸ்டர் கொக்கு துரை யவர்களும் சிரித்தார்கள். அப்பால் பிரேதத்தை நன் றாய்ச் சோதனை செய்ததில் அவள் இடது கையில், 'பா' என்னும் எழுத்து, பச்சை குத்தப்பட்டிருந்தது. கையெல் லாம் சுடப்பட்டிருந்ததால் நன்றாய்ப் பார்த்த பிற் பாடுதான் தெரிந்தது. 'பா' என்னும் எழுத்து முத லில் எழுதப்பட்டிருந்ததால் கொலை செய்யப்பட்ட பெண்ணின் பேர் பாகீரதி, பார்வதி, பாலாமணி, பாக்கியம் அல்லது, 'பா' என்னும் எழுத்தில் ஆரம்பிக் கும் பேர்களில் ஒன்றாயிருக்கவேண்டுமென்றும், அவள் அந்த இடத்திற்கு வந்த காரணத்தையும் அவள் இன்னா ளென்பதையும் அறியவேண்டுமென்றும் யோசனை செய்து கொண்டு ராஜாம்பாளைத் தவிர அந்த ஊரில் வேறே எவராவது காணாமற் போயிருக்கிறார்களா என்று என் னால் கூடியவரையில் விசாரித்தேன். எவரும் காணாமல் போனதாகப் பிரஸ்தாபம் வராததால் வெளி ஊரிலுள்ள வர்களில் எவரோ காணாமல் போயிருக்க வேண்டு மென்று நிச்சயித்துக்கொண்டு எப்படியாவது சில தினங் களில் காணாமற் போனவர் இன்னாரென்று வெளிவரு மென்று எண்ணிக்கொண்டேன். ஆகவே கொலை செய் யப்பட்டது ராஜாம்பாள் அல்லவென்று திட்டமாய்த் தெரிந்தவுடனே, 'மோசம் போனேன் கோபாலா, சுடலை மாடன் கோவில் தெரு, 29-வது நெம்பர் வீட்டிலுள்ள குதிலில்' என்று ராஜாம்பாள் எழுதியிருந்ததால் அந்தக் குதிலில் போய் பார்த்தேன். அங்கே, 'ந' என்

னும் எழுத்து மூலையில் எழுதப்பட்ட கைக்குட்டையொன்று மயக்கத்தைக் கொடுக்கும் குளோரபாரம் என்னும் திராவகத்தில் முக்கிக் கிடந்தது. அதைப் பார்த்தவுடனே, 'ந' என்னும் எழுத்தில் ஆரம்பிக்கும் பேரையுடைய எவரோ ஒருவர் ராஜாம்பாளுக்கு மயக்கமுண்டாகும்படி செய்து எங்கேயோ கொண்டுபோய் ஒளித்து வைத்திருக்கலாமென்று ஊகித்தேன்.

**மணவாள நாயுடு:** தாங்கள் இந்த விவரங்களைக் கண்டுபிடித்தவுடனே என்னிடம் சொல்லியிருந்தால் இத்தனை நாட்கள் கோபாலன் சிறையில் இருக்கமாட்டானே! தாங்கள் ஏன் அப்போதே என்னிடம் சொல்லவில்லை?

**கோவிந்தன்:** நான் உடனே உங்களிடம் சொல்லாததற்குக் காரணம் இரண்டு: ராஜாம்பாளைக் கொண்டுபோய் ஒளித்து வைத்திருந்தவர்களுக்கு அவள் உயிருடன் இருக்கிற சமாசாரம் நமக்குத் தெரியுமென்று தெரிந்தால் அவளை உடனே கொலையாவது செய்து போடுவார்கள்; அல்லது நம்மால் கண்டு பிடிக்க முடியாத இடத்திலாவது கொண்டுபோய் ஒளித்து வைத்துவிடுவார்கள். ஆதலால் அவள் உயிருடன் இருக்கிற சங்கதி நமக்குத் தெரியாதென்று நினைத்துக்கொண் டிருக்கட்டுமென்பது ஒன்று; இரண்டாவது: சகிக்கக் கூடாத கோபாலனுடைய துர்க்குணத்தால் ராஜாம்பாள் கோபாலனைக் கல்யாணஞ் செய்துகொள்ள மாட்டேனென்று சொன்னதாகவும் அந்தக் காரணத்தாலேயே கோபாலன் கொலை செய்திருப்பானென்றும், ஒன்றும் தெரியாதபோதே தாங்கள் கோர்ட்டில் சொன்னீர்களே! இதைத் தங்களிடம் அப்போதே சொல்லியிருந்தால் கொலை செய்யப்பட்ட பெண்ணைக் கோபாலன் ரகசியமாய் வைத்திருந்ததாகவும் அந்த விவரம் ராஜாம்பாளுக்குத் தெரிந்து அவளைக் கூட்டிக் கொண்டு வந்து கோபாலனிடத்தில் ரூபிக்க வந்ததாகவும், ரூபித்த பிற்பாடு கோபாலனைக் கல்யாணஞ் செய்துகொள்ள மாட்டேனென்று ராஜாம்பாள் சொன்னதன் பேரில் அவன் வைத்திருந்த பெண்ணைக் கொன்றுவிட்டு ராஜாம்பாளை எங்கேயோ ஒளித்து வைத்திருக்கிறானென்றும், ஒளித்து வைத்திருக்கும் இடத்

தைச் சொல்லச்சொல்லிக் கோபாலனுக்குப் போலீஸ் மரியாதைகள் ஒவ்வொர் ராத்திரியும் செய்வீர்களென்றும், நான் தங்களிடம் சொல்வதால் கோபாலனுக்குப் பிரதிகூலம் உண்டாகுமே தவிர அநுகூலம் உண்டாகாதென்றும் எனக்கு நன்ருய்த் தெரியுமாகையால்தான் சொல்லவில்லை. லோகசுந்தரிக்கும் கோபாலனுக்கும் நடந்த சம்பாஷணையிலிருந்து லோகசுந்தரி இதில் சம்பந்தப் பட்டிருக்கவேண்டுமென்று ஊகித்தேன். ராஜாம்பாளை அன்று ராத்திரி 2 மணிக்கு வரச்சொல்லிக் கோபாலன் எழுதினதாகத் திட்டமாய்ச் சொன்னதாலும் கடிதத்தைப் பார்க்கையில் 12 மணி என்று எழுதியிருந்ததாலும், இரண்டுக்கு முன்ஞல் ஒன்றை யாரோ போட்டார்களென்று ஏற்பட்டது. யாரிடத்தில் அந்தக் கடிதத்தைக் கொடுத்தனுப்பினுனென்று கோபாலனைக் கேட்டதற்குத் தன் வேலைக்காரனுகிய முருகனிடத்தில் கொடுத்தனுப்பினதாகவும், முருகன் அன்றே ரஜா வாங்கிக் கொண்டு வெளியூருக்குப் போனதாகவும் கோபாலன் சொன்னுன்.

முருகன் வாஸ்தவத்தில் ஊருக்குப் போனுனு இல்லையாவென்று கண்டறிய வேண்டுமென்று விசாரித்ததில், அவன் ஊருக்குப் போகவில்லையென்றும், அவன் கூத்தியாராகிய ருக்மிணியின் வீட்டில் ஒளிந்திருப்பதாகவும், சாமியார்போல் வேஷம் போட்டு அறிந்தேன். அப்பால் போலீஸ்காரனைப்போல் வேஷம் போட்டுக் கொண்டு போய் அவன் பேரில் வாரன்டு கொண்டுவந்திருப்பதாகவும், உண்மையைச் சொன்னுல் அவனைக் காப்பாற்றுவதாயும், இல்லாவிட்டால் மாட்டி விடுவதாயும், நயத்திலும் பயத்திலும் சொன்னதன் பேரில் அவன் ராஜாம்பாள் வீட்டிற்குக் கோபாலன் கொடுத்த கடிதத்தைக் கொண்டு போகையில் லோகசுந்தரி கூப்பிட்டு அவனுக்கு ஐந்நூறு ரூபாய் கொடுத்து அக் கடிதத்தை வாசித்துப் பார்த்துவிட்டு உள்ளே கொண்டு போய் ஒரு நிமிஷத்திற்குள் மறுபடியும் கடிதத்தைத் திருப்பிக் கொடுத்து ராஜாம்பாளிடம் கொடுத்துவிடச் சொன்னதன்றி ஊருக்குப் போகவேண்டுமென்று பொய்த் தந்தி காண்பித்துக் கோபாலனிடம் ரஜா வாங்கிக்

கொண்டு போய் ருக்மிணி வீட்டில் மறைந்திருக்கும் படி அவனிடம் சொன்னதாகவும் அப்படி அவன் வெளியே வாராமல் இருக்கும் ஒவ்வொரு நாளைக்கும் ஒவ்வொரு ரூபாய் வீதம் வாரத்திற்கு ஒரு முறை ஏழு ரூபாய் அனுப்புவதாகவும், அவள் சொன்ன பிற்பாடுதான் வெளியே வரவேண்டுமென்று சொல்லியிருப்பதாகவும் சொன்னான்.

நான் அவனைக் கண்டு கேட்ட விவரத்தை லோக சுந்தரியிடம் சொல்லாமல் அவள் வாரத்திற்கு ஒரு தரம் கொடுக்கும் ரூபாய் ஏழையும் வாங்கிக்கொண் டிருக்கும்படி சொன்னதன்றி நான் கண்டு கேட்ட விவரங்களை அவளிடம் சொன்னால் அவளையும் கொலைக் கேசில் சம்பந்தப்படுத்தி ஜெயிலில் அடைத்துவிடுவே னென்று பயமுறுத்திவிட்டு வந்தேன். மறுநாள் காலை யில் குடுகுடுப்பை வேஷம் போட்டு லோகசுந்தரியின் படுக்கையறையைச் சோதித்து, அதிலிருந்து கோபால னிடமிருந்து காணமற் போன கடிதத்தையும், நடேச சாஸ்திரிகளிடமிருந்து லோகசுந்தரிக்கு வந்த தந்தி ஒன்றையும் கடிதம் ஒன்றையும் தேடி எடுத்தேன். நடேசனுடைய தந்தியால் லோகசுந்தரியும் நடேசனும் முன்னால் சந்தித்ததாகவும், நடேசனிடமிருந்து வந்த கடிதத்தால் அவர்கள் இருவரும் சதியாலோசனை செய் திருப்பதாகவும், இதை நிறைவேற்ற நடேசன் கொலை நடந்த அன்று ராத்திரி பன்னிரண்டு மணிக்குக் காஞ்சீ புரம் வந்ததாகவும் ஏற்பட்டது. அப்பால் சென்னைக்குப் போய் நடேசன் விருந்துக்குப் போயிருந்த இன்சால் வென்ட் கோவிந்த முதலியார் வீட்டில் விசாரித்ததில் விருந்துக்கு வந்தவர்களுள் நடேச சாஸ்திரிகள்தாம் மஞ்சள் ரோஜாப் புஷ்பம் வைத்துக்கொண்டு வந்தா ரென்றும், அன்று ராத்திரி பத்தரை மணி வரையில் அங்கே இருந்தாரென்றும் தெரிய வந்தது. 'மோட்டார் வண்டி ஏறி வருகிறேன்' என்று லோகசுந்தரிக்கு நடேச சாஸ்திரிகள் எழுதியிருந்ததால் சென்னையில் மோட் டார் வண்டி வைத்திருக்கும் ஒவ்வொருவரையும் விசா ரணை செய்ததில் குடிக்கூலிக்கு மோட்டார்வண்டி கொடுக்கும் ஒருவரிடமிருந்து நடேச சாஸ்திரி வண்டி

வாங்கி வந்ததாகத் தெரிந்து, அந்த வண்டிக்காரன் எங்கே என்று விசாரித்ததில் அவன் வேலூருக்குப் போயிருப்பதாகத் தெரிந்தது.

உடனே வேலூருக்குப் போக வேண்டுமென்று பிரயத்தனம் செய்துகொண் டிருக்கையில் நடேச சாஸ்திரி என்னைத் தேடி வந்தார். அவர் வந்த காரணம் என்ன வென்று கேட்டதில் தாசி பாலாம்பாளை அதற்கு முந்தின நாள் ராத்திரியிலிருந்து காணோம் என்றும், அவளைக் கண்டுபிடித்தால் சரியான வெகுமதி கொடுப்பதாகவும் சொன்னார். பாலாம்பாளைக் காணோமென்று அவர் சொன்னவுடனே, 'பா' என்னும் எழுத்தைக் கையில் எழுதப்பட்டவள் காஞ்சீபுரத்தில் இறந்து போயிருந்ததால் அநேகமாய் இறந்தது தாசி பாலாம்பாள்தானென்று நிச்சயித்துக்கொண்டு, அதன் உண்மையை ஆராய்வதற் காக நடேச சாஸ்திரிகளுடன் பாலாம்பாள் வீட்டிற்குப் போனேன். அங்கே போனவுடன் தாய்க்கிழவி நடேச சாஸ்திரிகள் இருக்கிற வரையில் உண்மை சொல்ல மாட்டாளென்று எண்ணிக்கொண்டு, அவரைத் தந்தி மூலமாய் ஒருகால் பாலாம்பாள் காஞ்சீபுரம் போயிருக் கிறாளா என்று அவருடைய இஷ்டர்கள் காஞ்சீபுரத்தில் யாராவது இருந்தால் கேட்டு வரும்படி அனுப்பிவிட்டுத் தாய்க்கிழவியிடம் பாலாம்பாள் ஜனவரி மீ 26ௗ சாயங் காலம் போனாளென்று சொன்னவுடனே அவள் உள்ளதை உள்ளபடி ஒப்புக்கொண்டாள்.

பாலாம்பாள் கைப்பெட்டியைத் தேடியதில் மை ஒத்தும் கடிதம் ஒன்று அகப்பட்டது. அதைத் திருப்பி வைத்து விளக்கு வெளிச்சத்திற் பார்த்ததில், 'லோக சுந்தரி, காஞ்சீபுரம்' என்று எழுதியிருந்தது. ஆகவே பாலாம்பாள் லோகசுந்தரியின் வீட்டிற்குத்தான் போயிருப்பாளென்று தெரிந்து, லோகசுந்தரியின் வேலைக் காரியை நயத்திலும் பயத்திலும் கேட்டதில் பாலாம்பாள் வந்தது வாஸ்தவமென்றும், லோகசுந்தரியின் வீட்டில் சாப்பிட்டுவிட்டுப் போய்விட்டாளென்றும் தெரியவந்தது. நான் கேட்டதாக யாரிடமும் சொல்லவேண்டாமென்று சொல்லி அவளுக்கு ஐந்நூறு ரூபாய் கொடுத்துவிட்டுக் காஞ்சீபுரத்திலுள்ள மருந்து ஷாப்புகளில் ஜனவரிமீ 26ௗ

யாராவது அபினித் திராவகம் வாங்கினார்களா என்று விசாரித்ததில், பல் வலிக்காக லோகசுந்தரி மூன்று கடைகளில் அபினித் திராவகம் வாங்கி யிருப்பதாகத் தெரிந்து கொண்டேன். உடனே காஞ்சீபுரத்தில் கொலைசெய்யப் பட்டவள் பாலாம்பாள்தான் என்று நிச்சயித்துக்கொண்டு அவளுக்கு விரோதி யாராவது இருக்கிறார்களா என்று கேட்டதில் ஷோக் நரசிம்மலு நாயுடுதான் விரோதியென்று தெரிய வந்தது. 'ந' என்னும் எழுத்தை ஒரு மூலையில் எழுதப்பட்ட கைக்குட்டை சுடலைமாடன் கோவில் தெரு, 29-ம் நெம்பர் வீட்டிலுள்ள குதிலில் கிடந்த தால், நரசிம்மலு நாயுடு பாலாம்பாளைக் கொல்லுவதற் காக அவள் பின்னாலேயே போயிருக்கலா மென்றும், அங்கே கொல்லுவதற்குச் சமயம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போது நடேச சாஸ்திரி ராஜாம்பாளைக் கொண்டு வந்து குதிலில் வைத்துவிட்டு வெளியே போன உடனே ராஜாம்பாளை விடுதலை செய்வதற்காகக் காத் துக்கொண்டிருந்த பாலாம்பாள் மெதுவாகப் போயிருக்க லாமென்றும், அப்போது நரசிம்மலு நாயுடு கட்டாரியால் குத்தியிருக்கலாமென்றும், அதே சமயத்தில் நாம் உள்ளே விட்டு விட்டு வந்த ராஜாம்பாள் வெளியே வந்துவிட்டாள் என்ற எண்ணத்துடன் நடேச சாஸ்திரி துப்பாக்கியால் சுட்டிருக்கலாமென்றும் ஊகித்தேன். நடேச சாஸ்திரிக ளிடம் இருக்கும் கைத்துப்பாக்கியின் குண்டும் பாலாம் பாளைச் சுட்ட குண்டும் ஒரே மாதிரியானதாலும், நடேச சாஸ்திரி அந்தச் சமயத்தில் அங்கே இருந்திருப்பதாலும் அவர்தாம் சுட்டிருப்பாரென்பதற்குக் கிஞ்சித்தேனும் சந்தேகமில்லை. ஆகவே பாலாம்பாளைக் கொன்ற மூன்று பேர்கள் இன்னாரென்று எனக்கு நிச்சயமாகிவிட்டது. ராஜாம்பாள் எங்கே அடைக்கப்பட்டிருக்கிறாளென்ற சமாசாரம் மாத்திரம் எனக்குத் தெரியவில்லை.

அன்று முதல் மாறு வேஷம் போட்டுக்கொண்டு ஷோக் நரசிம்மலு நாயுடு எங்கே போகிறானோ அங்கெல் லாம் அவனுடனேயே திரிய ஆரம்பித்தேன். வேலூருக்குப் போய் மோட்டார் வண்டி ஓட்டுகிறவனைக் கண்டுபிடித்து வரும்படி எனக்கு நம்பிக்கையுள்ள ஒருவனை அனுப்பிக் கண்டுபிடிக்க முயன்றதில் அவன் அகப்படவில்லை.

பதினைந்து தினங்கள் நரசிம்மலு நாயுடுவுடன் சுற்றினதில் பதினைந்தாவது நாள் ராத்திரி சுமார் பன்னிரண்டு மணிக்குக் கொள்ளிக்கண்ணன் என்னும் பிரபல போக்கிரி ஒருவன் மெதுவாக நரசிம்மலு நாயுடுவண்டை வந்து தன் கூத்தியாராகிய பாவாடை என்பவள் ராஜாம்பாளை அடைத்து வைத்திருப்பதற்கு ஆட்சேபிப்பதாகவும், ஆகையால் கூடிய ஜல்தியில் வேறு ஏற்பாடு செய்து ராஜாம்பாளை அழைத்துக்கொண்டு போகும்படியும் சொன்னான். நரசிம்மலுநாயுடு உடனே நூறுரூபாய் கொடுத்து இன்னும் சில தினங்கள் மாத்திரம் ராஜாம்பாளை அந்த இடத்திலேயே வைத்திருக்கும்படி வேண்டிக்கொண்டார். அவன் சம்மதிக்காதவனைப்போல் பாவனை செய்துகொண்டு போனான்.

உடனே நரசிம்மலு நாயுடுவை விட்டுவிட்டுக் கொள்ளிக்கண்ணனின் கூத்தியாராகிய பாவாடை என்பவள் எங்கேயிருக்கிறாளென்று என்னால் ஆனவரையில் விசாரித்தும், கொள்ளிக்கண்ணனுக்குப் பயந்துகொண்டு யாரும் சொல்லவில்லை. நேற்றைய தினம் சிந்தாதிரிப்பேட்டையில் போய்த் தெய்வானுகூலமாய் அவளையே பார்த்துப் பாவாடை யென்பவளைத் தெரியுமா என்று கேட்டேன். அவள், தன் பேர்தான் பாவாடை என்று சொல்லி என்னத்திற்காகக் கேட்கிறீரென்று கேட்டாள். இதற்குள்ளாக எதிரிலிருந்த கள்ளுக்கடையில் குடித்துக்கொண் டிருந்த கொள்ளிக்கண்ணன் யாருடன் சல்லாபமாய் விளையாடுகிறாயென்று சொல்லி அவளை அடிக்க வந்தான். நான் அவள்மேல் அடி விழாதபடி தடுக்கவே என்னை அடிக்க வந்தான்; என்மேல் அடி விழாதபடி தடுத்துக்கொண்டு அவனைத் திருப்பி அடிக்கவே அவன் அடிபொறுக்கமாட்டாமல் கீழே விழுந்துவிட்டான். இதற்குள்ளாகக் கொள்ளிக்கண்ணனின் சீஷனாகிய அமாவாசை என்பவன் ஓடிவந்து உன்னால் அல்லவா என் வாத்தியாருக்கு அடிவிழுந்ததென்று கையிலுள்ள பேனாக்கத்தியால் பாவாடையை மார்பில் குத்திவிட்டான். அவள் கீழே விழுந்துவிட்டாள். அவள் காயங்கள் எப்படியிருக்கின்றன என்று நான் பார்த்துக் கொண்டிருக்கையில் கொள்ளிக்கண்ணனும் அமாவாசையும் ஓடிவிட்டார்கள். உடனே பாவாடை என்பவளை ஆஸ்

பத்திரிக்குக் கொண்டுபோய் டாக்டர்களிடம் கேட்டதில் அவளுக்கு விழுந்திருக்கும் காயம் மிகவும் கொடூரமாகிய தால் அவளுக்குப் பிரக்ஞை வருவதே மகா கஷ்டமென்றும் ஒருகால் பிரக்ஞை வந்தாலும், அப்படிப் பிரக்ஞை வரக் குறைந்தது ஒரு வாரம் பிடிக்குமென்றும் சொன்னார்கள்.

ஆகையால் அவள் மூலமாய் ராஜாம்பாளை ஒளித்து வைத்திருக்கும் இடத்தைக் காண்பது முடியாதென்று கண்டுகொண்டு பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டிடம் போய்ச் சகலமும் சொல்லி நடேச சாஸ்திரிகள் பேரிலும், லோக சுந்தரியின் பேரிலும், ஷோக் நரசிம்மலு நாயுடுவின் பேரிலும் பாலாம்பாளின் கொலைக்காக வாரன்டும், கொள்ளிக்கண்ணன் பேரிலும் அமாவாசையின்பேரிலும் ராஜாம்பாளைப் பலவந்தப்படுத்தி ஒளித்து வைத் திருப்பதற்காக வாரன்டும் பெற்றுக்கொண்டு வரும்படி என் ஆட்களில் ஒருவனை அனுப்பிவிட்டு நான் நரசிம் மலு நாயுடு வீட்டண்டை போய்க் காத்திருந்தேன். நான் போன கொஞ்ச நேரத்திற்கப்பால் கொள்ளிக்கண்ணனும் அமாவாசையும் வந்து கிளி கூப்பிடுவதைப்போல் நாலு அல்லது ஐந்து தரம் கூவினார்கள். உடனே நரசிம்மலு நாயுடு எழுந்துவந்து என்ன சங்கதியென்று கேட்டார். அவர்கள் நடந்த விருத்தாந்தங்களைச் சொல்லித் தாங்கள் உடனே எங்கேயாவது ஓடிப் போய்விடவேண்டுமென்று சொன்னதன்னியில் இனி ராஜாம்பாளுக்கு ரொட்டி, பால் முதலாகியது கொடுப்பதை நரசிம்மலுநாயுடு செய்ய வேண்டுமே தவிர அவர்களால் முடியாதென்றும் சொன் னார்கள். நாயுடு கூடியவரையில் அவர்களைப் பயப்படா மல் இருக்கும்படி சொல்லியும் கேளாததால் இனி ஆக வேண்டிய காரியாதிகளைத் தாமே பார்த்துக்கொள்ளு வதாகச் சொல்லி அவர்களுக்கு ஐம்பது ரூபாய் கொடுத்து அனுப்பிவிட்டார். நரசிம்மலு நாயுடு எந்த நேரத்தில் எழுந்து ராஜாம்பாள் இருக்கும் இடம் போவாரோ என்ற சங்கதி எனக்குத் தெரியாததலால் கொஞ்சங்கூடக் கண் மூடாமல் நேற்று ராத்திரி பூராவாய் விழித்துக்கொண்டு அதிக ஜாக்கிரதையாயிருந்தேன். இன்று காலையில் விடிந்த பிற்பாடு 12-மணி வரையில் நாயுடு வெளியே வரவில்லை. அப்பால் ஒரு சிறு மூட்டையைக் காகிதத்தில் சுற்றிக்

கொண்டு வந்தார். நான் அவருக்குத் தெரியாமல் பின்னு லேயே போனேன்.

நேற்றுப் பெய்த பெரிய மழையால் கூவம் ஆற்றில் தண்ணீர் ஜாஸ்தியாகப் போனதால் கரைகள் புரண்டு தெருவெல்லாம் தண்ணீராகவே இருந்தது. நாயுடு சிந்தா திரிப்பேட்டைப் பறைச்சேரியில் நான்காவது சந்தில் புகுந்து ஒரு சிறு குடிசையின் உள்ளே போனூர். நானும் கூடவே புகுந்தேன். அநேக தரம் பின்னுல் யாராவது வரு கிறுர்களா என்று அவர் திரும்பிப் பார்க்கையிலெல்லாம் நான் மறைந்துகொண்டதால் யாரும் பார்க்கவில்லை என்று எண்ணிக்கொண்டு உள்ளே புகுந்தார். வாசலுக் குள் நான் போனவுடனே பக்கத்தில் காலடிச் சத்தம் கேட்ட தால் சட்டென்று திரும்பிப் பார்த்தார். உள்ளே வந்தது அந்நியனென்று தெரிந்தவுடனே கையிலிருந்த தடியால் என்னை ஓர் அடி அடித்தார். அந்த அடியைப் பட்டுக் கொண்டு நான் தயாராய் வைத்திருந்த விலங்குகளை அவர் கைககளிலும் காலிலும் மாட்டிவிட்டேன். இதற் குள்ளாகப் பின்னுல் யாரோ ஓடிவந்ததாகத் தெரிந்தது. நான் திரும்பிப் பார்க்குமுன் கொள்ளிக்கண்ணனும் அமா வாசையும் ஒருவன் கத்தியும் ஒருவன் தடியும் வைத்துக் கொண்டு வந்து எதிர்த்தார்கள். உடனே என் சாமர்த்தி யத்தால் மேலே எகிறி அப்பால் குதித்தேன். அப்படிக் குதித்தும் கத்தியின் குத்து முகத்திலும் கம்பின் அடி முதுகிலும் பட்டது. உடனே என் ஜேப்பிலிருந்த கைத் துப்பாக்கியால் இருவரையும் முழங்காலின் கீழே சுட்டேன். ஒவ்வொருவருடைய கால்களிலும் கைத்துப்பாக்கியின் குண்டு பாயவே இருவரும் கீழே விழுந்துவிட்டார்கள்.

உடனே அபாயமென்று காட்டும் போலீஸ் ஊதுகுழ லால் ஊதிவிட்டுப் பூமியிலுள்ள கதவைத் தூக்கிப் பார்த்த போது ராஜாம்பாள் தலைமயிர் மாத்திரம் மேலே தெரி யவும் உடம்பெல்லாம் தண்ணீரில் மூழ்கி யிருக்கவும் கண்டு உடனே அவளை மேலே தூக்கி என் தலையில் வைத்து விசையாகப் பத்துச் சுற்றுகள் சுற்றிவிட்டுப் பார்த்ததில் மெதுவாக மயிரிழைபோல் மூச்சு ஓடிக் கொண்டிருந்தது. அப்பால் வேண்டிய சிகிச்சைகள் செய்து பிராணன் வரும்படி செய்தேன். இதற்குள்ளாகக்

கைத்துப்பாக்கியால் சுட்ட சத்தத்தையும் ஊதின சத்தத்தையும் கேட்டு மூன்று போலீஸ்காரர்கள் ஓடிவந்தார்கள். அவர்களில் ஒருவனை அனுப்பித் தயார் செய்து வைத்திருந்த வாரன்டுகளைக் கொண்டுவரச் சொல்லி நரசிம்மலு நாயுடுவையும் கொள்ளிக்கண்ணனையும் அமாவாசையையும் பிடித்துக்கொண்டு போகச் சொல்லிவிட்டு, இன்னொரு கான்ஸ்டேபிலை அனுப்பிக் குடிக்கூலி மோட்டார் வண்டி கொண்டுவரச் சொல்லி லோகசுந்தரியையும் நடேச சாஸ்திரிகளையும் வாரன்டில் பிடிப்பதற்காக அழைத்துவரச் சொன்னபடி வந்திருந்த இரண்டு கான்ஸ்டேபில்களையும் அழைத்துக்கொண்டு காலதாமதஞ் செய்யாமல் நானும் ராஜாம்பாளும் செஷன்ஸ் கோர்ட்டுக்கு வந்து சேர்ந்தோம். இன்னும் இதில் ஏதாவது சந்தேகங்கள் இருந்து கேட்டால் அவைகளை நிவர்த்தி செய்வதில் யாதோர் ஆட்சேபமும் இல்லை.

கோவிந்தன் இவ்வாறு சொல்லி முடித்தார்.

முற்றும்

———

## 15. கல்யாணம்

அப்பொழுது, 'அவசரம், உடனே கோபாலன் கையில் கொடுப்பது' என்று எழுதிய கடிதம் ஒன்றை ஒருவன் கொண்டு வந்து கொடுத்தான். அதைக் கோபாலன் எல்லோருக்கும் கேட்கும்படி வாசித்தான்.

என் பிரியமுள்ள கோபாலா! ராஜாம்பாள்! என்னை நீங்கள் உயிருடன் பார்க்க விரும்பினால் இக் கடிதம் கண்டவுடனே புறப்பட்டு வரவும். தாமதித்து வந்தால் என் பிரேதத்தைத்தான் பார்ப்பீர்கள். என் அந்திய காலத்தில் உங்களிடம் இரண்டொரு வார்த்தை பேசிவிட்டுப் பிராணனைவிட விரும்பும் அபாக்கியவதி லோக சுந்தரி.

என்ன சமாசாரமென்று கடிதம் கொண்டுவந்தவனைக் கேட்டதில் லோகசுந்தரி விஷம் சாப்பிட்டதாகவும் கொஞ்ச நேரத்தில் இறந்து போவாளென்று டாக்டர் சொன்னதாகவும் சொன்னான்.

உடனே கோபாலனும் ராஜாம்பாளும் போய் லோக சுந்தரியைச் சந்தித்தார்கள்.

லோகசுந்தரி அவர்களை வருத்தப்படவேண்டா மென்று சொல்லி தனக்குக் கோபலன் பேரிலிருக்கும் பிரியத்தால்தான் இவ்வளவும் செய்ததாகவும் சகலமும் மாஜிஸ்டிரேட்டிடம் ஒப்புக்கொண்டதாகவும் தன் சொத்துப் பூராவையும் அவர்கள் இருவர் பேருக்கும் உயில் எழுதி வைத்திருப்பதாகவும் சொன்னவுடனே கோபாலன்பேரில் ஒரு கையும் ராஜாம்பாள்பேரில் ஒரு கையும் வைத்தபடியே அவர்கள் இருவரும் சுகமாக வாழ வேண்டுமென்று சொன்ன உடனே லோகசுந்தரியின் பிராணன் போய்விட்டது.

உடனே பக்கத்திலிருந்த டாக்டர் பிரேதத்தை மெது வாகப் படுக்க வைத்துவிட்டு அவர்களை வீட்டிற்குப் போகச் சொன்னார். அவர்கள் மிகவும் வருத்தத்துடன் போய் அங்கிருந்தவர்களுக்குச் சமாசாரம் தெரிவித்

தார்கள். நடேச சாஸ்திரிகளையும் வேஷக் நரசிம்மலு நாயுடுவையும் செஷன்ஸ் கோர்ட்டில் விசாரணை செய்து இருவரையும் தூக்குப் போடும்படி உத்தரவாயிற்று. கொள்ளிக் கண்ணனுக்கும் அமாவாசைக்கும் இரண்டு வருஷம் கடின காவல் சிக்ஷை விதிக்கப்பட்டது.

இன்ஸ்பெக்டர் மணவாள நாயுடு அவர்கள் பேரிலும் சப்மாஜிஸ்திரேட் நீலமேக சாஸ்திரிகள் பேரிலும் டஜன் கணக்காய் லஞ்சம் வாங்கின கேஸ்கள் வந்து விசாரணை செய்ததில் வாஸ்தவம் என்று ருசுவானதால் இருவருக்கும் ஐந்தைந்து வருடங்கள் கடின காவல் சிக்ஷை விதித்தார்கள். தரகர் ராமண்ணு வீட்டில் திருடர் புகுந்து பணம் வைத்திருக்கும் இடத்தைச் சொல்லச்சொல்லி அடித்தும் அவர் சொல்லாததால் அவர் கண்கள் இரண்டையும் தோண்டிவிட்டு அவர் சேர்த்து வைத்திருந்த சொத்துப் பூராவையும் கொள்ளை கொண்டு போனார்கள்.

லோகசுந்தரி சொத்துப் பூராவையும் செலவிட்டு அன்னதான சமாஜம் ஒன்று கட்டிக் கூன், குருடு, நொண்டி முதலிய ஏழைகளுக்கு இப்பொழுது அன்னம் கொடுத்து வருகிறார்கள். இப்படிச் சாப்பிடுகிறவர்களில் ராமண்ணுவும் ஒருவர். சாமிநாத சாஸ்திரிகளின் மனைவியாகிய கனகவல்லி தன் தம்பிக்கு நேரிட்ட கெடுதியைக் கேட்டது முதல் புத்தி சுவாதீனம் இல்லாமல் பிதற்றிக் கொண்டு வீட்டிலேயே இருக்கிறாள். ராஜாம்பாளைக் கண்டுபிடித்து உயிருடன் கொண்டுவந்ததற்காகவும், கோபாலன் கொலை செய்யவில்லை என்று ரூபித்ததற்காகவும், கோவிந்தனுக்குச் சாமிநாத சாஸ்திரிகள் லக்ஷ ரூபாய் இனாமளித்ததல்லாமல் ராஜாம்பாளுக்குப் பிறக்கும் முதல் ஆண் பிள்ளைக்குக் கோவிந்தன் என்று பேர் வைப்பதாகவும் சொன்னார்.

ஆவணி மாதம் பத்தொன்பதாம் தேதி ஆதிவாரமும் சித்திரநக்ஷத்திரமும் கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை மூன்றுக்குமேல் ஒன்பதுக்குள்ளாகக் கன்னிகா லக்கினத்தில் கச்சேரி முதலிய படா

டோபங்கள் செய்யாமல் வைதிகச் சடங்குகளெல்லாம் சரிவரச் செய்து கோபாலனுக்கும் ராஜாம்பாளுக்கும் கல்யாணம் ஆயிற்று.

இப்பொழுது இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் பெற்று நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பொருந்தி வாழ்கிறார்கள். சாமிநாத சாஸ்திரிகள் பேரன் பேத்திகளை வைத்து விளையாடிக்கொண்டு சௌக்கியமாய் இருக்கிறார்.

முற்றும்

அடுத்து வெளிவரும் இதே ஆசிரியரின்

# இரண்டு துப்பறியும் நாவல்கள்

## ராஜாம்பாள்

அழகும் பணமும் நிரம்பப் பெற்றவள் ராஜாம்பாள். அவளை அடைந்து செல்வத்தை அநுபவிக்கச் சூழ்ச்சி செய்கிறான் ஒருவன். அவனுடைய திட்டத்தில் ஒரு பெண் கொல்லப்படுகிறாள். ராஜாம்பாளா, அல்லது வேறு யார் என்று திகைப்பு ஏற்படுகிறது.

எதிரியின் சூழ்ச்சிகளை அம்பலப்படுத்தி நிரபராதியைத் துப்பறியும் கோவிந்தன் விடுவிக்கும் சாகசச் செயல்கள் நிறைந்தது.

விலை ரூ. 2

## விஜயராகவன்

துப்பாக்கியைக் காட்டிப் பதின்மூன்று வயதுப் பெண் ஒருத்தி கிறிஸ்துவப் பாதிரிகளை விரட்டுகிறாள். கட்டுப்பட்டு, துப்பாக்கி ஏந்திச் சுடத் தயாராக நிற்கும் இரண்டு முரடர்களிடமிருந்து வெகு சாகஸமாகத் துப்பறியும் கோவிந்தன் தப்புகிறார். பணக்காரச் சிறுவன் ஒருவனுக்கு மயக்க மூட்டிக் காலையும் கையையும் கட்டித் தூக்கிச் சென்று, துப்பாக்கி முனையில் சில கடிதங்களில் கையெழுத்து வாங்கிவிடுகிறார்கள். இந்தச் சிக்கல்களின் வரலாறும் முடிவும் ரஸமாகப் பின்னிய நாவல்

விலை ரூ. 2